உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

## திருவியலூர் உய்யவந்த தேவநாயனார்

*அருளிய*

# திருவுந்தியார்

---------

### செய்யுள் - 1
**கலித்தாழிசை**

### கடவுளாகிய பரமாசாரியார்

(சிவபெருமானே குருவாய் வருதல்)

அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற.

**கருத்துக்கள்**

1. *கடவுள் ஒருவர் உண்டு.*
2. *அவரே ஆசாரியராக வருவர்.*
3. *பக்குவிகட்குத் தாமாகவே அருள்புரிவர்.*

**தெளிவுரை**

*மக்களாகப் பிறந்துள்ள நாமனைவரும்* **கடவுள் ஒருவர் உண்டு** *என்னும் கொள்கையையே முதற்கண் உறுதியாகக் கொள்ளவேண்டும். இதனைத் துணை நூல்களாகிய தருக்கம் முதலியவற்றால் ஆராய்ந்து கொண்டாலும் சரியே; அல்லது, ஆன்றோர் சொல்லினை நம்பி ஏற்றுக்கொள்ளினும் சரியே. எவ்வாற்றானும், மக்களாவார்க்கு இன்றியமையாமல் வேண்டுவது கடவுட் கொள்கையாம். இக் கொள்கையை விளக்குதற்கே* **மெய்கண்ட தேவர்** *தமது சிவஞான போத நூலில்*

அகளம் - அருவம். உயிர்க்குயிராய் நின்று அறிவிக்கும் பேரறிவு. சகளம் - உருவம். குருவாகி வந்து அறிவிக்கின்ற திருமேனி. அப்பொருள் - சிவபெருமான். உந்தி பறத்தல் என்பது இளமகளிர் விளையாட்டு வகைகளுள் ஒன்று.

*பிரமாணம், இலக்கணம் என்ற இரு வழிகளால் சாதிக்கலுற்றனர். ஒரு பொருளின் உண்மையை ஐயம்தீர அறிவதற்கான வழிகள் இரண்டேயாகும். ஒன்று அனுமானத்தால் அறிவதாகும். இரண்டாவது இலக்கணத்தால் அறிவதாகும். புகையால் தீயை ஊகித்தறிவது* **அனுமானம்** *எனப்படும். இது பிரமாண நெறி. வெப்பத்தால் தீயை உணர்ந்தறிவது* **இலக்கணம்** *எனப்படும். இஃது இலக்கண நெறியாம். இவ்விரு வழிகளாலும் ஒரு பொருளை அறிந்த பிறகு ஐயம் ஏற்பட இடமே இராது. அறிவும் உறுதிப்படும். இவ்விரண்டு வகையாலும் ஒரு பொருளை அறிந்தவர்கள் தமது அனுபவத்தைப் பிறர்பொருட்டுக் கூறியருளுவர். இவர்களுடைய வாசகமும் மேற்கூறிய பிரமாணங்களைப் போன்றே கொள்ளத் தக்கனவாகும். இந்த ஆப்த வாசகம்* **சுருதிப்** *பிரமாணம் எனப்படும். எனவே, ஒரு பொருளின் உண்மையை நாம் ஆராய்ச்சியாலாவது, தன்னுணர்வாலாவது, நம்பிக்கையினாலாவது கொள்ள வேண்டுவதே முறைமையாகும். இவற்றுள் நம்பிக்கை* **மார்க்கம்** *எளிமையானது. இந்த நெறியை நமக்குப் புலப்படுத்துவனவே ஞான நூல்கள். இவை நம் ஆன்ம ஈடேற்றத்துக்கான எல்லாச் செய்திகளையுங் கூறுவதால்* **சாத்திர நூல்கள்** *என்றும் சாற்றப்படும். இவ்வழியில் சித்தாந்த சைவ சாத்திர நூல்களாகத் தமிழில் உள்ளவை பதினான்காகும். அவை,*

1. **திருவுந்தியார்**
2. *திருக்களிற்றுப்படியார்*
3. *சிவஞானபோதம்*
4. *சிவஞான சித்தியார்*
5. *இருபா இருபஃது*
6. *உண்மை விளக்கம்*
7. *சிவப்பிரகாசம்*
8. *திருவருட் பயன்*
9. *வினாவெண்பா*
10. *போற்றிப்பஃறொடை*
11. *கொடிக்கவி*
12. *நெஞ்சுவிடுதூது*
13. *உண்மை நெறி விளக்கம்*
14. *சங்கற்ப நிராகரணம் என்பனவாம்.*

*இந்நூல்களை அருளியவர்கள் யாவரும் அனுபூதிமான்களாவர். ஆதலால், இவர்கள் கூறுவனவற்றை முழுதும் நம்பி நடப்பதே நல்லது. அவ்வகையில், இத்திருவுந்தியார் நூல் முதலில் எடுத்துக் கூறவந்த செய்திகள் இம் முதற்கலித்தாழிசையில் தரப்படுகின்றன. இனி இனிய அவ் வாசகங்களைக் காண்போம்.*

## கடவுள் – அப்பொருள்

**கடவுள்** ஒருவர் உண்டு. அவர் நித்தியமான பொருளாவர். மக்கள் நம்பும் மற்றப் பொருள்கள் யாவும் அழிவுடையன. இந்த உலகின் இன்ப வாழ்க்கைக்குச் செல்வப் பொருளையே யாவரும் விரும்புகின்றனர். “பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை” என்பது தமிழ்மறை முடிபு. ஆனால், எந்த ஒரு பொருள் தான் அழியாத தன்மையுடையதாய்ப் “பொருளல்லாதவரையும் பொருளாகச் செய்ய வல்லதோ” அதுவே மெய்ப்பொருள் ஆகும். ஆதலின், கடவுளுக்குப் **பொருள்** என்பதே பொதுவான பொருத்தமுள்ள பெயராகும். பொருள் என்னும் இப்பெயரால் கடவுளுக்குரிய ஆண், பெண் பாகுபாடு அற்றுள்ள நிலையையும், ஒரு கொள்கையினருக்கே உரியதல்லாத நிலையையும் நாம் அறியலாம். இந்தப் பொருள் அல்லாத மற்றவை யாவும் **மருள்** என்னத்தக்க இழிவுடையனவே. இம்மை வாழ்வுக்குச் செல்வமாகிய பொருள் தேவைப்படுவது போலவே உயிரின் நிலைத்த மறுமை வாழ்வுக்குக் கடவுள் என்கிற பொருள் மிகவும் அவசியமானதாகும். சாதாரணப் பொருளினிடத்தே யாவருக்கும் ஆசை இயல்பிலே இருப்பது போலக் கடவுட் பொருளிடத்தேயும் இயல்பிலே உயிருக்கு **அன்பு** உளவாதல் வேண்டும். மெய்ப் பொருளாகிய தெய்வப் பொருள் என்பது மாயையாலியன்ற நமது மனம் வாக்குக் காயங்கட்கு எட்டாதது. ஏனெனில், அது மாயைக்கு அப்பாற்பட்டதாகும். மாயையாலியன்ற கருவி கரணங்கள் மாயையாலியன்ற பொருளையே அறியும். மாயைக்கு அப்பாற்பட்டதை அறியமாட்டா. கடவுள் (சிவம்) மாயைக்கு அப்பாற்பட்ட பொருள் - சிந்தையும் செல்லாச் சேட்சியன் - என நமக்கு அறிவுறுத்தக் கருதியே இப்பாடலில் கடவுளை **அப்பொருள்** என்றார் ஆசிரியர். அகரம் சேய்மைச் சுட்டாதலின் கடவுளை மாயாதீதன் என்று நாமறிதல் தகும். மற்றும், அகரம் பிரசித்திச் சுட்டாகவும் வருமியல்புடையதாதலால் கடவுள் யாவரினும் மேலாய பொருள் என்பதும், தனக்கு ஒப்பில்லாப் பொருள் என்பதும் தேறப்படும். எனவே, **அப்பொருள்** என்னும் பிரயோகத்தால் கடவுள் மாயைக்கு அப்பாற்பட்டவன் என்பதும், ஈடும் எடுப்பு மற்றவன் என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளமை காணலாம். இங்ஙனமன்றியும்,

உமாபதி சிவாசாரியர் அருளிச் செய்துள்ள ‘பதி முது நிலை‘யில் கூறப்பட்டுள்ள வண்ணம் கடவுள், ‘அகரம் என்கிற உயிர்போன்ற பொருள்’ எனவும் அறிதல் கூடும். அகரம் போன்ற பொருள் அப்பொருள் எனப்பட்டதெனக் கொள்ளலும் பொருந்தும். **அகரம்** நாத மாத்திரையாய், விகாரமில்லதாய், ஏனைய உயிரும் மெய்யுமாகிய எழுத்துகட்கு உள்ளீடாய் அவற்றை இயக்குவதாய் விளங்குவது என்பது எழுத்தறிவார் இயம்பும் உண்மை. அவ்வாறே, இறைப்பொருளும் நாதத்துவமுடையதாய், நிருவிகாரியாய், எல்லா உயிர்கட்கும் அவற்றின் உடம்புகட்கும் உள்ளீடாயிருப்பதென நாம் உணரலாம். “அகரமுதல எழுத்தெல்லாம்” எனவும், “அகர உயிர்போல் அறிவாகி எங்கும் - நிகரில் இறை நிற்கும் நிறைந்து” எனவும் பெரியோர்கள் அருளியுள்ள உபதேயமும் இதனை

*வலியுறுத்தும். இதனாலும் உந்தியார், கடவுளை* **அப்பொருள்** *(அகரம் போன்ற பொருள்) என நாம் கருதியுணரும் வண்ணம் கட்டுரைத்துள்ளது என்னலாம். மற்றும்,*

**அப்பொருள்** *என்றமையால் கடவுட் பொருள்* **ஒன்றாயிருப்பது, வேறாயிருப்பது, உடனாயிருப்பது** *என்பனவும் உணரப்படும்.* **அகரம்** *பல்வேறு வகைப்பட்ட ஒலியையும் அகப்படுத்திக்கொண்டு அகத்தே எப்போதும் இயங்கிக் கொண்டிருப்பதாகும். இதனால் ஒன்றாயிருப்பதாகும். மற்ற எழுத்துக்களின் வேறாய் நிற்றலால் வேறாயிருப்பதுமாகும். ஏனைய எழுத்தொலிகளுடன் கலந்து நிற்பதால் உடனாயிருப்பதுமாம். இவ்விதமே, கடவுளும் (சிவமும்) உடலுயிர் போல்* **ஒன்றாகவும்,** *கண்ணும் அருக்கனும்போல் ஜீவான்மாக்களின்* **வேறாகவும்,** *கண்ணொளியும் ஆன்ம போதமும் போல் எவ்வுயிரிடத்தும் கலந்து* **உடனாகவும்** *விளங்குவதாகிய பொருளாம். மேலும்,*

*அநுபூதிமான்களாகிய சிவயோகிகள் கடவுட் பொருளை அவனருளில் அழுந்தி அனுபவிக்கும் இயல்புடையவராதலால், அவர்கள் தமக்குள் கடவுட் பொருளைப் பற்றிப் பேசப் புகுகையில் கட்டற்ற சுட்டற்ற கடவுளை* **அப்பொருள்** *என்றே குறிப்பது இயல்பு. இப் பொருளில் அகரம் நெஞ்சறிசுட்டு என்னும் இலக்கணமுடையதாகும். உய்யவந்தார் சிறந்த அனுபூதியாராதலின் இங்ஙனம் கடவுளை நெஞ்சறி சுட்டாகக் கருதி* **அப்பொருள்** *என்றாராகலும் கூடும்.*

*இதுகாறும் கூறியவாற்றால், கடவுள் ஓர்* **உண்மைப் பொருள்** *என்பதும்,* **மாயாதீதப் பொருள்** *என்பதும்,* **நாதத்துவமும் நிர்விகாரமும் உள்ளீடாயிருப்பதும்** *கொண்ட பொருள் என்பதும்,* **ஒன்றாயும், வேறாயும், உடனாயும்,** *மன்னும் பொருள் என்பதும்,* **சித்தத்தே தித்திப்பது** *என்பதும் நாம் உணரலாம். இங்ஙனம் பல்வகைக் கருத்துக்களும் தொட்டனைத் தூறும் மணற்கேணி போல் தோன்றும் வண்ணம் நம் நாயனார் கடவுட் பொருளைப்* **பொதுப்பட அப்பொருள்** *எனக் குறித்துள்ள நயம் எண்ணி எண்ணி மகிழ்தற்குரிய ஒன்றாம்.*

### கடவுள் – யாரும் அறிவரிது

*மக்கள் அறிவு சிற்றறிவாகும். ஒரு பொருளைச் சுட்டு அறிவது சிற்றறிவின் ஓரியல்பு. மற்றும் அறிவிக்க அறிவதே இதனியல்பாகும். முற்றறிவு இறையியல்பு. சிற்றறிவு முற்றறிவை அறிவது இயற்கையுமன்று. கேவல நிலையில் உயிரின் அறிவு தொழிற்படுவதே இல்லை. பெத்த நிலையில் ஏகதேசப்பட்டு மயங்கியும் மறந்தும் அறிகின்றது. முத்தி நிலையிலும் அறிவிக்க அறிந்தழுந்துவதே உயிரியல்பாம். எத்தேவராலும் கடவுட் பொருள் அறியப்படுவதன்று. பிரமனும் திருமாலும் முடியும் அடியும் தேடி அறியாத வரலாறு அறிவரிதாம் தன்மையையே புலப்படுத்துவது. எத் தேவராலும் அறியஅரும் பொருள் அப்பொருள் என்பதைப்*

"பூமன்னு நான்முகத்தோன் புத்தேளிர் ஆங்கவர்கோன் - மாமன்னு சோதி மணிமார்பன்... போதத்தால் ஆமளவும் தேட அளவிறந்த அப்பாலைச் சேம ஒளி" என்னும் போற்றிப்பஃறொடை நூற் செய்தியாலும் அறியலாகும். இங்ஙனம் நம்மினும் பெருந்திறம் படைத்தவர்களாலேயே அப்பொருள் அறியவாராதது என்றமையால் சிற்றறிவுடைய நம்மால் அறியப்படும் பொருளன்று சிவம் என்பது தெளியப்படும். அநாதியே நிர்மலமாய்த் தன்னைக் கூடினவர்களாலும் கூடாதவர்களாலும் அறிதற்கரிய பரிபூரணமானது அப்பொருள் எனவும், யோக பாவனை முதலிய சாதனைகட்கும் எட்டாதது எனவும், அவனருளே கண்ணாகக் கொண்டு காணவல்லது எனவும், பிரிந்து நின்று அறியுமியல்பினதன்று எனவும், **அனுபவித்தற்குரியதேயன்றி அறிதற்கோ ஆராய்தற்கோ உரிய பொருளன்று** எனவும் நாம் தெரிதற் பொருட்டாகவே **"யாரும் அறிவரிது"** என்றுள்ளார் இப்பாடலில் ஆசிரியர். மற்றும், ஆன்மாவானது தனது அறிவால் சிவப் பொருளை அறிதற்கு, அப்பொருள் ஆன்மாவுக்கு வேறன்று. ஆன்மா தூலசித்தும், சிவம் சூக்கும சித்துமா யிருத்தலின் சூக்குமசித்துள் தூலசித்து அடங்கி நிற்றலின் ஆன்மாவின் அறிவினால் அப்பொருள் அறியப்படமாட்டாது. மேலும் **அரிது** என்ற சொல் வழக்கால் பாச, பசுஞான அறிவு கடந்து அருள் ஞானத்தால் சிவப்பொருள், கண்ணொளியானது தனக்குக் காட்டிக் கொண்டிருக்கும் ஆன்மாவை அறியமாட்டா தனுபவித்தல்போல அனுபவிக்கப்படும் இயல்பினதென நாம் உணரல் வேண்டும். இதனால் முற்றறிவுத் தன்மை சிவப்பொருட்கன்றிப் பிற எவ்வுயிர்க்கும் இலதென்பது பெறப்படும்.

### கடவுள் – அகளமாயது

இப்பிறப்பில் நாம் இன்பதுன்பக் கட்டுக்குட்பட்டிருக்கிறோம். கேவல நிலையிலும் மூலமலக் கட்டுக்குட்பட்டுக்கிடந்தோம். நமக்குக் கேவல சகலங்களில் துன்பம் உள்ளது. துன்பம் என்பது விருப்பு வெறுப்பின் பயனாகும். விருப்பு வெறுப்புக்கள் மலத்தால் விளைவன. ஆதலின் நமதுயிரை மலக்கட்டு பந்தித்துள்ளது. நாம் அடைந்துள்ள பிறப்பே நமக்கு மலபந்தம் உள்ளதென்பதை நிதரிசனப்படுத்துகின்றது. நமக்கு வேண்டுவது துன்பக் கலப்பில்லாத இன்பமேயாகும். இவ்வின்ப நிலையமே இறைவன். துன்பம் பந்தம். இன்பமே பந்தமின்மை. இறைவன் இன்பமயனாதலால் பந்தமில்லாதவன். இப்படியொரு பொருள் ஆனந்த மயமானதாக இல்லாவிடில் நம் கதிதான் என்னாவது? இறைவனை எய்தப் பெறுதலே இன்பத்துக்கு நெறி. இறைப்பொருள் யார்க்கும் கட்டுப்பட்டதன்று. எவர்க்கும் அடிமையல்லாதது. ஆதலால், இன்பப் பேற்றுக்குக் கட்டின்மையே உபாயம் என்பது போதரும். **"தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரன் -** நற்சங்க வெண்குழை ஓர் காதிற் கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க் கொய்மலர்ச் சேவடி இணையே குறுகினோம்" ஆகலின், "**இன்பமே** எந்நாளும் துன்பமில்லை" எனத் திருநாவுக்கரையர் திருப்பாட்டும் இது கூறுவது காணலாம். இதனால் கடவுட் பொருள் அநாதியே நின்மலமான பொருள் என

நாம் தெரிதல் வேண்டும். இங்ஙனம் கட்டற்ற பொருளாகச் சிவம் விளங்குவதை **'அகள மாய்'** என்றார் இப் பாடலில். சிறைப்பட்டுக் கிடப்பவனைச் சிறைக்கு வெளியே உள்ள சுதந்தரமுடையவனே விடுவித்தற்காவன செய்ய இயலும். சுதந்தரமுடையானால் தரப்படுவதே விடுதலை. சுதந்தர வீனம் கட்டுடைமைக்கு அறிகுறியாகும். நமக்கு வேண்டுவது துன்ப விடுதலை. ஆதலால், சுதந்தரமுடைய - கட்டற்ற - சிவமே இதனை நமக்கு நல்கற்பாலன். எனவே பந்தமின்மையும் அப்பொருட்குரியதொரு இலக்கணமாம். இதனையே **அகளமாய்** எனும் சொல் தெரிவிக்கின்றது.

இறைப்பொருட்குரிய மூன்று **சொரூப இலக்கணங்கள்** சத்து, சித்து, ஆனந்தம் என்பன. இவற்றுள், **அப்பொருள்** என்ற சொல் **சித்துத்** தன்மையை உணர்த்தும். **யாரும் அறிவரிது** என்னும் சொற்றொடர் **சித்துத்** தன்மையைத் தெரிவிப்பதாகும். **அகளமாய்** என்னும் சொல் **ஆனந்த** இயல்பினை அறிவிப்பது. இம்மூன்றும் கொண்டதே பரிபூரணப் பொருள். நாம் **ஆனந்த நிலை** அடைதலையே இப்பிறவியில் முடிந்த நோக்கமாகக் கொள்ளுதல் வேண்டும். ஆதலால் அதற்கேற்றதான **அகளமாய்** என்ற சொல்லால் இந்நூலை இவ்வாசிரியர் தொடங்கியுள்ளார். ஆனந்தத்தினும் சிறந்த மங்கலம் பிறிதில்லை என்பது தெளியத் தெரிந்ததே. இதனால், இச்சொல்லே இவ்வனுபூதிப் பனுவலுக்கு ஏற்ற மங்கல மொழியாயிற்றென விளங்குகின்றது. இதுகாறும் இம் முதல் பாடலின் முதல்வரியான "**அகளமாய் யாரும் அறிவரிது அப்பொருள்**" என்ற வாசகத்தே அடங்கியுள்ள அருங் கருத்துக்கள் ஒருவாறு கூறப்பட்டன. மற்றும் பல ஞான நுண் கருத்துக்களையும் இத் தொடர் விரிக்கவல்ல பெருமை சான்றது. இத்தொடர்ப் பொருள் உலகின் எம்மதத்துக்கும் பொதுப்பட அமைந்துள்ளமை காணலாம். இதனால் **சைவ சித்தாந்தம்** எல்லாச் சித்தாந்தங்கட்கும் மேலானதென்பதேயல்லாது பொதுமை வாய்ந்தது என்பதும் தெரிந்து களிகூரலாகும். இனி இப்பாடல் எடுத்துரைக்கும் இரண்டாம் செய்தியைக் காண்போம்.

### சகளமாய் வந்தது – (ஆசாரிய நிலை)

உயிர்கள் (சீவர்கள்) மூவகையிற் கூறப்படுவர். அவர்களாவர் விஞ்ஞானகலர் - பிரளயாகலர் - **சகலர்** எனப்படுவர். இம் மூவகையினரும் மேற் கூறப்பட்ட பரம்பொருளாகிய சிவத்தின் திருவருளினாலன்றி இன்பநிலை எய்தார். இவர்களுள் மக்கட் பிறப்பெய்தியுள்ள நாமெல்லாரும் சகலர் ஆவோம். **சகலர்** எனப்படும் நாமும் துன்பம் ஒழிந்து இன்பம் அடைய உரிமை உடையோம். இந்த உரிமை மட்டில் நமக்குள்ளதே யன்றி அதனை அடைதற்கான ஞானம் நம்பால் இலது. இந்த ஞானம் நமக்குச் சிவத்தால் அருளப்படல் வேண்டும். ஆதலால், மேற்சொல்லப்பட்ட அப்பரம்பொருள் ஒரு திருமேனி தாங்கி எழுந்தருளவேண்டியுள்ளது. நம்முடைய பிறவித் துன்பத்தை நீக்குவதே இங்ஙனம்

எழுந்தருள்வதன் நோக்கமாகும். நமக்கு உதவி புரிதற்கென எழுந்தருளுகையில் நம்போலவே மானிடத் திருமேனி தாங்கி எழுந்தருளுதல் நிகழ்கின்றது. மிருகங்களைப் பிடித்துப் பழக்கக் கருதுபவர் அந்த அந்த விதமான பார்வை மிருகங் கொண்டே பிடிப்பர். இதுவே இதற்கு **உபாயம்**. இவ்வாறே சிவ பரம்பொருள் தனது சத்தியால் (திருவருளால்) மானிடத் திருவுருவை இடங்கொண்டு வெளிப்பட்டு ஆட்கொள்ளும். இங்ஙனம் எழுந்தருளுபவரையே **உபாய குரு** என்கிறோம். இங்ஙனமல்லாமல் சாத்திரங்களைக் கற்றாலே போதும் என்பது பொருந்தாது. **சாத்திரங்கள் நமக்கு ஆராய்ச்சியறிவையே விளைக்கும். அநுபவ ஞானத்தைத் தரமாட்டா**. சாத்திரம் விளைப்பதை அபர ஞானம் என்பர். சாத்திர மூலமாய் ஏற்படவேண்டிய **அனுபவ ஞானம் குருமுகமாகவே** - தீட்சை முறையிலே - ஏற்படவேண்டும். குருமுகமாக ஏற்படாத சாத்திர அறிவு, கடலில் உள்ள உப்பு நீரைப் போன்றதாகும். இந்த உவர் நீரை எவ்வளவு தான் பருகினாலும் தாகம் தணியாது. இதே உவர்நீர் மேகத்தின் வழியாகத் தரப்பட்டால் சுத்த நீராகிச் சிறிதளவு பருகின மாத்திரத்தில் தாகம் விரைவில் தணிந்து குளிர்ச்சி உண்டாகிறது. இவ்வாறே சுத்த ஞானத்தினை - பதி ஞானத்தினை - ஒளிருமாறு நமக்குச் செய்ய வல்லவன் ஆசாரியன் ஒருவனே ஆவன். நாம் நேரில் கண்டு ஒழுகுதற்கு ஏற்றவாறு தானே நடந்து காட்டுபவனே ஆசாரியன் எனப்படுவான். ஒழுக்கத்தினும் உயிருக்கு உயர்வு தருவது எதுவுமில்லை. ஆதலால், ஆசாரியனினும் ஆன்மாவுக்கு இதஞ் செய்பவன் யாருமில்லை. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்" என்பது ஓர் அரசர் கூற்று. இத்தகைய ஞானாசாரியனாக - ஞான மூர்த்தியாக - ஞானத்தின் திருவுருவாக - இறைவனே (சிவமே) தன் திருவருளால் திருமேனி தாங்கி வந்து தீட்சித்து அநுக்கிரகிக்கின்றான் என்பதை நமக்குத் தெரிவித்தற்பொருட்டே **"அப்பொருள் சகளமாய் வந்தது"** என ஆசிரியர் கூறலுற்றார். இதனால் **குருவே சிவம்; சிவமே குரு** என்பது உணரப்படும். **"உயிருக்குச் சற்குருவாய் வருவது அரனே"** என்பது போதம். இதனாலேயே மெய்ஞ்ஞானத் தவமுடையோர் குருவரவினையே எதிர்நோக்கி உருகுகின்றார். தாமரை மலர் சூரியன் வரவையே நோக்குகிறது. உதயங்கண்டு மலர்கிறது. மயில், மேகத்தையே நோக்குகிறது. காண்கிறது; களிக்கிறது; ஆடுகிறது. இவ்வாறே நாம் - நமதுணர்வு - குருதிருவருளையே நோக்கிக் கிடக்க வேண்டும். அங்ஙனமிருப்பின் **அப்பொருள் சகளமாய் வந்தருள்புரியும்**. வரும் என்னாமல் **வந்தது** என்றமையால் **வருதல் ஒருதலை** என்பது தெளிவாம். அநுபவ முறையில் கூறுதலால் இவ்வாறு இறந்தகாலத்தால் மொழிந்தார் எனலுமாம்.

### தானாகத் தந்தது – (குருவருள்)

மாயா தீதனான சிவபரம்பொருள் சகலராகிய நாம் ஈடேறும் பொருட்டுக் குருமூர்த்தமாக எழுந்தருளுதல் இதுகாறும் கூறப்பட்டது. இனி, அங்ஙனம்

*எழுந்தருளிய அப்பரம்பொருள் நம்மனோர்க்கு எவ்வகையில் உபகரிக்கின்ற தென்பதை அறிவோம்.*

*நம்முடைய உயிர் மூலமலமென்னும் ஆணவ மலத்தால் கட்டுப்பட்டுள்ளது. பிறகு மாயா படலத்தால் மறைக்கப்பட்டும் உள்ளது. இவற்றோடு பல் பிறவிகளாலும் செய்வகையாற் கூடிய சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்கிற கர்மச் சுழலிலும் உழலுகின்றது. இவற்றையெல்லாம் ஆன்மாவுக்கு முதற்கண் உணர்த்தியாக வேண்டியுள்ளது. நீக்கும் வழிகளைச் சோதித்து நீக்கவேண்டியுள்ளது. அதாவது தீட்சையினாலே சஞ்சிதத்தை ஒழிக்கவேண்டியுள்ளது; பிராரத்தத்தைப் புசித்துத் தொலையச் செய்யவேண்டியுள்ளது; அதில் அழுந்தாதபடி வழி காட்ட வேண்டியுள்ளது. ஆகாமியம் ஏறா வண்ணம் நிறுத்தவேண்டியுள்ளது. மாயா படலத்தை உரிக்கவேண்டியுள்ளது. மூலமாகிய விலங்கினை அறுத்து விடுவிக்கவேண்டியுள்ளது. அருளாகிய அமுதத்தைப் புசிப்பிக்க வேண்டியுள்ளது. தனது திருவடியிலே கூட்டி இரண்டற நிற்கச் செய்ய வேண்டியுள்ளது. இவ்வளவும், சரியையாதிகள் முற்றி இருவினையொப்பு முதலாம் தகுதி எய்திய மாத்திரத்தே அப் பரம்பொருள் குருவடிவோடு எழுந்தருளித் தாமாகவே செய்தருளுகின்றது. எனவே பக்குவத்தை எதிர்நோக்கியிருப்பது இறைவன் கருத்தென்பது வெளிப்படை. வயதுத் தகுதி அடைந்து விட்ட தன் மகனுக்குத் தந்தையாவான் தன் சொத்துக்களை அறிவித்து எழுதிவைக்கிறான். குழந்தைப் பருவமாயிருப்பின் அங்ஙனம் செய்யமாட்டான். எழுதி வைப்பினும், குழந்தை அவ்வுதவியை உணராது. பொருட்பேறு ஒருவேளை குழந்தைக்கே ஆபத்து விளைத்தலுங் கூடும். இவ்வாறே நமது பக்குவங்கண்டு வெளிப்பட்டுத் தீட்சை செய்தருளுபவர் குருவே ஆவர். நாம் பக்குவிகளாக ஆவதை எப்போதும் அப்பொருள் எதிர்பார்த்த வண்ணம் உள்ளது.* ***பக்குவ முதிர்வில் தானாகவே*** *நாம் அழைக்கவும் அடையவும் வேண்டாமலே எழுந்தருளிக் கடைக்கணிக்கின்றது. நாம் இருவினையொப்பு முதலிய பக்குவம் பெற்றால் போதும். உடனே அப்பொருள் குரு வடிவோடு எழுந்தருளி நம்மீது அன்புவைத்து, ஞான தீட்சைகளை முறையே புரிந்து, மும்மல நீக்கி, நமது ஆன்ம உண்மையை உணர்த்தி, சுதந்தரக் குறைவை அறிவித்து, பதிஞானமூட்டி, பிரபஞ்சத்தை மறப்பித்து, சிவ சொரூபப் பிரகாசம் உண்டாக்கியருளும். அதிட்டான முறையும் இங்ஙனமே நிகழ்வதாகும். மார்ச்சால நியாயம் எனப்படுவது இத் திறமேயாகும். ஆனது பற்றியே ஆசிரியர்,* ***"தானாகத் தந்தது"*** *என்று குறிப்பிட்டுக் கூறியுள்ளார். அருபரத்தொருவன் அவனியில் வந்து குருபரனாகும் கொள்கை இதுவேயாம்.*

*எனவே, இத் திருவுந்தியாரின் முதற் பாடலால்*

***1. கடவுள் ஒருவர் உண்டு. 2. அவரே குரு மூர்த்தமாக வந்து அருள் செய்வார் 3. நமது பக்குவங்கண்டு தானாகவே உபகரிக்கின்றார்*** *என்ற இம் மூன்று அநுபவ*

*ரீதியான உபதேசங்களை நம்பொருட்டு அருளிச் செய்துள்ளார் என நாம் தெரிதலும் தெளிதலும் தக்கதாகும்.*

*இனி, இத்திருவுந்தியார் முதற்பாடலோடு* ***திருமூலர்*** *அருளிச் செய்த* ***திருமந்திர*** *நூலின் உபதேசப்பகுதியில் உள்ள முதற் பாடலாகிய-*

"விண்ணின் **றிழிந்து** வினைக்கீடாய் **மெய்கொண்டு**
தண்ணின்ற **தாளைத்** தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் **றுருக்கி**யொ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் **களிம்பறுத் தானே"**

*என்னும் இதன் கருத்தை ஒப்புக் காண்டல் நல்லது. மற்றும்,* ***'சொல்லார்ந்த சற்குரு சுத்த சிவமே"*** *என்பதும், 'நாதன் உருவா யருளாவிடில் ஓர வொண்ணாதே" என்பதுமாய மந்திர வாசகங்களும் இவ்வாய்மையுரைப்பனவே ஆகும்.* ***உபதேசம் என்னும் சொல்லே, இறைவன் நம் பக்கல் வந்து உண்மை காட்டல் என்று பொருள் படுவதாகும்.*** *ஆதலால்,* ***திருவுந்தியார் நூற்பாடல்கள் யாவும் உபதேசங்களேயாகும்.*** *இவ்வுபதேச நெறியொழுகல் நம் கடன்.* ***அருபரத்துக் குருதிருவடி யருள்புரிக!*** *இந்தத் திருவுந்தியார்ப் பாடலுடன் ஒத்த கருத்துடைய திருக்களிற்றுப்படியார் செய்யுள்கள் 4, 5.*

### செய்யுள் - 2

## வாதனைப்பாடு

(உலகப் பற்றை விடல்)

பழக்கந் தவிரப் பழகுவ தன்றி
யுழப்புவ தென்பெணே உந்தீபற
ஒருபொரு ளாலேஎன் றுந்தீபற.

**கருத்துக்கள்**

1. ***இந்திரியப் பற்று இயல்பை விடுகை.***
2. ***திருவருளிலே அடங்கியொழுகப் பண்ணுகை.***

---

உழப்புவது - கிடைத்தற்கரிய அருட்செல்வம் கைகூடியும் அதனை ஏற்று அதன் வழிநிற்காமல் அலைக்கழிக்கப்படுவது. பெண்ணே என்ற சொல் பெணே எனக் குறுகி நின்றது.

## தெளிவுரை

**பிரபஞ்ச வாதனை விடுதல் – பழக்கம் தவிரப் பழகுதல்**

*உயிர்கட்கு நாயகன் சிவன். அவரே நம்மை நடத்தும் தலைவர். ஆதலால் அவரே நம் கணவர். அவர் ஒருவரே ஆண். நாமெல்லாம் பெண்கள். அவரே நம்மை வழிகாட்டி நடத்துபவர். அவர் கட்டளையே வேதாகமங்கள். அவ்வழியே நாம் ஒழுக வேண்டும். இவ்வாறு நமக்கு நிலைத்த தலைவராய், ஒப்பற்ற கணவராய் இருப்பவரை நாம் உணராதவர்களாயுள்ளோம். ஒரு **பெண்,** தான் பிறந்த வீட்டில் எவ்வளவு சுக நிலையில் வளர்ந்தாலும் அஃது அவட்குச் சதமான இடமாகாது. "வெள்ளி விதைத்துப் பொன்னே விளைப்பினும் வேண்டேன் பிறந்தகத் தீண்டிய வாழ்வே" என்பதே நற்பெண்டிர் நடத்தை. நல்ல பெண்ணாவாள் பக்குவ காலம் வரையில் பிறந்த வீட்டிலேயே இருந்து வளர்ந்தாலும், பருவமுற்றது முதல் தகுந்த தலைவனையே மருவி வாழ விரும்புவாள். அதன் பொருட்டுப் பல அவத்தைகட்கும் உள்ளாவாள். தனக்கு முன்னம் விருப்பமுடையனவாயிருந்த யாவற்றையும் நீப்பாள். தன்னையே தலைவற்கு விருப்புடைப் பொருளாக்க விரும்புவாள். உற்ற தோழியின் துணையினை நாடி அவள் குறிப்பித்த வழியொழுகுவாள். இவை யாவும் சிறந்த தலைவியின் பண்பொழுக்கம். இங்ஙனமே, நாமும் ஒரு பெண்போன்ற நிலையினராகி, ஆசாரியன் அருள் வழியொழுகி, நம் நாயகரான சிவபரம்பொருளை அடைந்திடல் வேண்டும். இக்கருத்தை நமக்கு நினைவூட்டும் பொருட்டே ''**பெண்ணே**'' என்று முன்னிலைப்படுத்தி இப்பாடல் கூறப்பட்டுள்ளது. "பெண்ணே" என்ற சொல் "பெணே" எனக்குறுகி நின்றது தொகுத்தல் விகாரம். அகப்பொருளிலக்கண நுணுக்கங்களை நன்கறிந்தோர் இந்த முன்னிலையின் நயங்களை அறிந்து இரசிப்பர். அல்லாமலும், ''பெண்ணறிவென்பது பேதைமைத்தே" என்பது ஒரு பழமொழி. வேடர் வீட்டிலகப்பட்டு வளர நேர்ந்த அரசகுமரனை யொப்பத் தன் உண்மை அறியாமலே தடுமாறுவது பேதைமை ஆகும். நாம், இவ்வாறே ஐந்து புலன்களாகிய வேடர் வசப்பட்டுத் தந்தையாகிய பரமனை அறியாமலும், அறிய முயலாமலும் அவதியுட்பட்டு உழல்கின்றோம். இந்த **அறியாமையை நம் நெஞ்சம் பெற்றிருத்தலால்** நெஞ்சைப் **பெண்ணே** என்றார் எனினும் ஆம். நமக்குத் தந்தையாவான் சிவம் என்பதை நாம் அறிய வேண்டும் என்பதை நினைவூட்டும் பொருட்டும் இங்ஙனம் **பெண்ணே** என முறைப் பெயரிட்டுப் புலப்படுத்தினார் ஆசிரியர் எனலும் கூடும். "தந்தை.... ஆவானும் குரு" என்ற பாடற் கருத்தும் சிந்திக்கத்தக்கதாகும்.*

*ஆன்மாக்களாகிய நமக்குக் **கேவலநிலை, சகலநிலை, சுத்தநிலை** என்ற மூன்று நிலைகள் உண்டு. இவற்றுள் சுத்தநிலை என்பது முத்திப் பேற்று நிலையாகும். எஞ்சிய இரண்டும் நாம் பழகிய - பழகிவரும் நிலைகளாகும். இவற்றுள் **கேவல நிலை**யாவது, நமது ஆன்மா ஆதியில் ஆணவத்தால் முற்றும் கட்டுண்டு அறிவு செயல்களற்றுக் கிடந்த **அநாதிநிலை**யாகும். இவ்வாறு காரிட்ட ஆணவக்*

கருவறையில் அறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போல் கட்டுண்டு நாம் கிடந்த நிலை **உணர்தர வாராப் பழக்கநிலை** எனப்படும். இதனைச் சித்தியார், "அறிவிலன் அமூர்த்தன்....." எனத் தொடங்கும் பாடலானே உணர்த்தும். அறிவு முதலியன பிண்டமாய்த் தொழிற்படுவதேயன்றிப் பகுத்துத் தொழிற்படுவதற்கான கருவிகள் இல்லா நிலை எனவும், உடம்பு இல்லாமல், கலை முதலிய தத்துவங்களுடன் கூடி அறிதலின்றித் தருமம் முதலிய எட்டுப் புத்தியின் குணம் இல்லாமல், மனம் முதலிய கருவி இல்லாது, இச்சையாதி மூன்றுமின்றி, சுதந்தரமில்லாமல், போகக் கொள்கை இல்லாமே, சரீரத் தோற்றக் கேடின்றி, ஏகதேசியாயின்றி, ஆணவமல மாத்திரையாய் வியாபித்து நிற்கும் நிலை எனவும் இக் கேவலநிலை வகுத்துரைக்கப்படும். இதனைப் **பிறவிக் குருட்டுநிலை** என்று உவமித்துரைப்பர் பெரியோர்.

மேற்சொல்லப்பட்ட கேவல நிலையை அடுத்து நாம் பழகும் நிலை **சகலநிலை** எனப்படும். இந்த நிலை, சிவத்தின் அருள்தன்மையால் நமக்குச் சிறிதளவு அறிவு விளக்கம் ஏற்படும் பொருட்டு அமைவது. இஃது உடம்போடு கூடிய நிலை. கலாதி தத்துவங்களுடன் கூடியது. இச்சை, அறிவு, செயல் மூன்றும் பொருந்தப் பெற்றது. மன முதலிய கருவிக் கூட்டுறவுடையது. சப்தம் முதலான பொருள் விருப்பமாகிய போகப் பழக்கம் கொண்டது. பிறப்பு இறப்புக்களில் மாறி மாறிப் புகுவது. ஏகதேசியாயிருப்பது. இந்த நிலை, முத்திப் பேற்றினை நாம் எய்தும் பொருட்டு இறைவனால் உபகரிக்கப்படுவது. இதனைக் கொண்டே தத்துவங்கள் யாவற்றையும் இன்ன தன்மையன என அனுபவ மூலமாக உணர்ந்து அவற்றின் நிலையாமை கண்டு தெளிவடைய வேண்டியுள்ளது. ஆனால், இந்தக் கருவிக் கூட்ட நிலையைக் கொண்டு பேரின்ப நுகர்ச்சிக்கு ஆவன அறியப் பயன்படுத்தாமல், தருப்பை கொய்யத் தரப்பட்ட கத்தியைக் கொண்டு பசுவின் வாலை அறுத்து மகிழ்வது போலவும், தன் கைவிரலைச் சீவித் துன்புறுவது போலவும் சிற்றின்ப துன்பங்கட் காவனவே ஆற்றி ஆற்றி ஆகாமியம் பெருகச் செய்து சஞ்சிதத்தை வளர்த்திப் பிராரத்துவங்கட்கு இடஞ்செய்து சுவர்க்க நரக வாதனைகளையே நாமனுபவித்துப் பழகுகிறோம். தொட்டிலாட்டம் போலவும், காற்றாடி போலவும் திரும்பத் திரும்பப் பிறப் பிறப்பென்னும் கழியுட்பட்டுத் தடுமாறி வருவதும் போவதுமாக உழன்று கொண்டே காலத்தைக் கருத்தின்றிக் கடத்துகின்றோம். இவ்வாறு, வெளிச்சம் கையிலிருந்தும் கண்ணில்லாமையால் வழியறியாதுழல்வது போல, நாம் இந்தச் சகலநிலையை வினையொழிவு, பிறப்பொழிவுகட்குப் பயன்படுத்தாமல் வினை பெருக்குவதற்கும் பிறப்புப் பல்குவதற்கும் பயன்படுத்துகின்ற நம் அறியாமையை எண்ணி எண்ணி, "உம்மை நிரயத்து வீழ்வர்கொல் என்றஞ்சிப் பரிவதும் சான்றோர் கடன்" என்பதற்கிணங்க நம் உய்யவந்த தேவநாயனார் இரங்கிய உளத்தினராகி, **உழப்புவது ஏன்?** என்று கேட்டு அங்கலாய்க்கிறார். இத்தகைய பிறவிக்கேதுவான பழக்கம் விடத் தகுவதென நமக்குணர்த்தற் பொருட்டுப் '**பழக்கம் தவிரப் பழகுவது**' என்றும் வழி கூறுகிறார்.

இதுகாறும் கூறியவதனால், நாம் இறையருளால் நமக்கெய்திய சிற்றறிவைக் கொண்டு, மேலும் வினை பெருக்கிப் பிறப்பு - இறப்புகட்கே ஆளாகிக் கழியாமல், பந்த நிவிர்த்திக்கே பாடுபட வேண்டும் என்பதை அறியலாகும்.

மேலும், **பழகுவது** என்றமையால், இங்ஙனம் தத்துவங்களைமுறையே களைந்து தன்னுண்மை தெரியப்பெற்று உபாய குருவினாலே இரட்சிக்கப்பட்டும், பெருங்காயப் பாண்டம் போலவும், குலாலன் திகிரி போலவும் பழைய வாதங்கள் மீளவும் வந்து தாக்கும். அங்ஙனம் அவை தாக்குங்கால் பண்டைப் பழக்கத்தால் நெஞ்சம் திரும்பவும் புலன்வழியே போகக்கூடும். பிறவிக் குருடனாகப்பிறந்த ஒருவன், நீண்டநாள் வரையில் கோல் கண்ணாகவும் பிறர் துணையாகவும் தடவித்தடவிச் சென்று பழகநேருகிறான். திடீரென்று வல்லான் ஒருவன் அவனுக்குக் கண்களைத் தெரியப் பண்ணுகிறான். அநேகங்காலம் அந்தகார வாசம்செய்த அக்குருடன் உடனே மருட்சியடைகிறான். பழம் பழக்கத்தால் வழியைக் குழியாகவும், குழியை வழியாகவும் மருண்டு காண்கிறான். எதிர்வந்தாரை யாவர் எனக் கேட்டும் நிற்கிறான். இவ்வாறே சற்குரு கடாட்சம் பெற்றவர்க்கும் நிகழ்கிறது. அப்போதெல்லாம் எச்சரிக்கையாக ஒழுகி ஒழுகிப் பலகால் பழக வேண்டியுள்ளது. அங்ஙனம் பலமுறை பயின்றாலல்லது பழைய வாதனைப் பழக்கம் அகல்வது அரிது. குருவருள் பெற்றபின்னர் பழைய வாசனை தாக்கா திருத்தற்பொருட்டே தங்கள் அறிவு இச்சை செயல்களைச் சதா நன்னெறியில் பழக்கிக் கொண்டே இருக்கவேண்டும். இதனைச் சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரம் விவரிக்கின்றது. தங்கள் **அறிவு** மலங்கழுவுதலிலும், **இச்சை** அன்பர் கூட்டுறவிலும், சிவாலயத்தையும், அடியார் திருவேடத்தையும், சிவமெனவே வழிபடுதலில் **செயலைத்** தொழிற்படுத்தலிலும் உடம்போடு கூடியிருக்கும் வரையில் பழகவேண்டு மென்பதே இச்சூத்திரம் வகுப்பது. இதனாலேயே இப்பாடலிலும் **பழகுவது அன்றி உழப்புவது ஏன்?** என்றார் ஆசிரியர்.

### ஒரு பொருளாலே என்று உந்தீபற

தத்துவங்களை மெய்யல்ல எனவும், நாமல்ல எனவும், கண்டபின்னர், இருவினைகளையும் ஒரு நிகராகக் கருதும் இருவினையொப்பும், மலபரிபாகமும், பழக வேண்டும். இதனால் நிகழ்வது சத்திநிபாதம் அல்லது குருவருள். இக்குருவருளால் **யாவும் சிவன் செயல்** என அறியப்படும். “அவனன்றி ஓர் அணுவும் அசையாது'' என்ற எண்ணம் திண்ணமுற வேண்டும். இதற்காக நாம் பிராரத்தகன்மம் அனுபவிக்கும்போதே அதனில் ஒத்துண்ணாவாறு ஒழுகிப் பழகவேண்டும். இந்த எண்ணமும் தற்போதத்தால் அமையாது. எதுவும் அவனருளாலே நமது நன்மை கருதி நடைபெறுகின்றன என்ற உறுதிப்பாடு இப்பழக்கத்தை வலுச்செய்யும். இவ்வுறுதிக் கண் கொண்டு நோக்கினால் மேற்கண்ட உண்மை தெற்றென விளங்கும். “நீர் வழிப்படும் புணைபோல் **ஆருயிர்**

**முறை வழிப்படூஉம்** என்பது திறவோர் காட்சியின் தெளிந்தனம்'' எனப் புறநானூற்றிலும் இக்கருத்துக் காணப்படும். “நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே'' என்பது மணிவாசகம். “தெளிந்த மனமுடையவன் துக்கிப்பதில்லை; ஆசைப்படுவதில்லை; எல்லா உயிர்களிடத்தும் சமமானவனாய் **என்னிடத்து** ஒப்புயர்வற்ற பக்தியை அடைகிறான்” என்னும் கீதை நூலின் 18-ஆம் அத்தியாயத்து 54-ஆம் சுலோக வசனமும் ஈங்கு ஒப்புக் காணத் தகுவதே. எல்லாம் **ஒரு பொருளாலே** என்பதன் கருத்து இதுவாம். இதனையே திருவருளே கண்ணாகக் காணுதல் என்பர். **எல்லாம் சிவனருள் என்று அத் திருவருளில் அழுந்திக் கிடத்தலே பழைய வாதனையாகிய வேதனைத் தாக்கினை முறியடிக்கும் உபாயமாகும்**. இந்த அருள் தாகமே முத்திக்கு முதல். இவ்வருளிலே அழுந்தியமைதலே இம்மையிற் காணும் பேரின்பம். அருளில் (அதாவது) ஒரு பொருளிலே (சிவத்திலே) அடங்கி அடிமையாய் நிற்றலே **தெளிவுக் காட்சி** எனவும்படும். **இறைபணி நிற்றல்** எனவும் இஃதுரைக்கப்படும். இங்ஙனம் ஒரு பொருளிலே அனவரதமும், வாதனைப்பட்டுக் கிடப்பதே முறைமை என்பதே இப் பாடற் கருத்தாகும்.

"முப்பது மாறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்குச்
செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்(து)
அப்பரி சாக அமர்ந்திருந் தாரே”

என்பது திருமந்திரம். இவற்றால், நாம் சிவத்தை நாயகராகக் கொண்டு அவரடியடைதலையே பயனாகக் கொண்டு, இருவினையொப்பு முதலிய வழிகளால் பழைய பழக்க வாதனை ஒழியப் பெற்றுத் திருவருளே களைகண் எனக் கிடத்தல் வேண்டும் என்பது புலப்படும். இதுவே சுத்தநிலை எனப்படும் முத்திநிலைக்கான உபாயமாம். இப் பாடலால் பிரபஞ்ச வாதனை விடுதற்குரிய உபாயம் புலனுறுத்தப்பட்டது.

இங்ஙனம் முதலிரண்டு பாடல்களிலே உய்ய வந்த தேவர் நமக்குச் சிவத்தின் இருப்பையும், அப்பொருள் குருவாகி வருவதையும், நமக்கு உபதேசிப்பதையும், அந் நெறியே பற்றுக்கோடாகக் கொண்டு பழைய புன்னெறியினை நாம் விட்டொழிக்க வேண்டுமென்பதையும், அப்பொருளாலே எல்லாம் நிகழ்கின்றன எனத் தெளிந்து உடம்பில் உயிரிருக்குந்தனையும் ஒழுகவேண்டும் என்பதையும் தெளிவுறுத்தியுள்ளார். இதற்குமேல் புன்னெறி நீக்கி நன்னெறி நிற்பார் அடையும் நற்பேறு இன்னதென எடுத்துரைக்கப் புகுகின்றார். அதனை வரும் மூன்றாம் பாடல் காட்டும். தொடர்புடைய களிற்றுச் செய்யுள்கள் 6, 7.

## செய்யுள் - 3

## உபாயப் பயன்

(சிவநெறிகளில் நிற்பதன் பயன்)

கண்டத்தைக் கொண்டு கரும முடித்தவர்
பிண்டத்தில் வாராரென் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. *கருமம் முடிக்கை*
2. *பிறப்பு இறப்பு அறுகை*

### தெளிவுரை

**கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்**

*கண்ட + அத்தைக் கொண்டே = கண்டத்தைக் கொண்டே - அவனருளே கண்ணாகக் கண்ட அந்த பரம்பொருளைக் கொண்டே என்பது பொருள்.*

*நாம் சிவத்தைக் கண்ணால் காண்டல் அரிது. அங்ஙனம் அரிய பொருளாகச் சிவம் இருப்பினும், நம்மால் உணரப்படத் தக்க பொருளேயாம். நெருப்பினைத் தனித்ததொரு பொருளாகக் காண்டல் இயலாது. ஆனால், அஃது இருப்புக்கோல் முதலிய பொருளைப் பற்றி ஒளிர்கையில் அவ்வப்பொருளுருவாகக் காண்கிறோம். கோலிற் பற்றிய தீயானது, தீயினாலாகும் எக்காரியத்தையும் செய்யப் பயன்படுகின்றது. அதுபோலவே, இந்தச் சகல நிலையில் (அல்லது) பெத்த நிலையில் சிவத்தைச் சுட்டியறிதல் இயலாது. சிவம், சுட்டியறியப்படும் ஏகதேசப் பொருளன்று. மாயைக்குட்பட்டவையே ஏகதேசத் தன்மை உடையவை. மாயைக்கு அப்பாற்பட்டதே ஞானம். ஞானமயமானவை சுட்டியறியப்படும் இயல்பற்றவையாம். சிவம் ஞான மயமானது. ஆதலால், சுட்டியறியப்படுவதன்று. இஃது இயற்கையே. சிவம் சுட்டப்படும் பொருளன்றாயினும் நம் ஆன்மாவுடன் ஒற்றுமைப்பட்டுள்ளது. எப்போது இந்த ஆன்மாவுக்குப் பக்குவ நிலை நேருமோ என்று எதிர்நோக்கிய வண்ணம் உள்ளது. அப் பக்குவநிலை ஆன்மாவுக்கு ஏற்பட்டதுமே* ***ஆசாரியக் கோலத்துடன்*** *- மானிடத் திருமேனியுடன் - கட்புலனாகின்றது. நீருக்குள் உள்ள நிழல்போல் ஆன்மாவினிடம் பொருந்தியிருந்தும் வெளிப்படாதிருந்த சிவபெருமான், ஆசாரிய மூர்த்தமாகிப் பக்குவப்பட்ட சகலன்முன் காணப்படுகின்றான். இங்ஙனம் அவன் வெளிப்படுமது கருணை மிகுதியால் நிகழ்வதாகும். இவ்வாறு வெளிப்பட்ட ஆசாரியனால்* ***'உடம்பு ஆன்மா அன்று'*** *என்னும் தத்துவம் உபதேசிக்கப்படுகின்றது. அவ்வுபதேசக்*

கண்கொண்டு காண்கையில், இதுகாறும் 'நான்' என்று கருதப்பட்டு நின்ற உடம்பு ஆன்மா அன்றென்னும் உண்மை விளங்கும். இங்ஙனமே எவ்வெவற்றை ஆன்மா என எண்ணி மயங்கினோமோ அவ்வவையும் ஆன்மாவின் வேறுபட்ட கருவிகள் என்ற உண்மை திண்மைப்படும். மற்றும், அக்குரு திருவருளால் விளையும் அநுபவத்தால் உடம்பை வேறென்று அறிவிக்க அறிந்த ஆன்மாவாகிய தன்னையும் உணரலாகிறது உயிர். இனி, ஆன்மாவுக்குள்ளும் உள்ள நித்தியப்பொருள் எது என்ற ஒன்றே அறியப்பட இருப்பது. ஆனால், ஒரு சிலர் ஆன்மாவை அறிந்து அநுபவிப்பதோடு அமைதி பெற்றுவிடுவர். **அவ்வகையோர் அநுபவிப்பது ஆன்மானந்தமேயாகும். அதுவே பிரம்மானந்தமாகிவிடாது**. இவ்விடத்தே சித்தாந்த சைவம் மிக நல்ல முறையில் எச்சரிக்கை செய்திருப்பது கருத்துட்கொள்ளத் தகுவதாகும். **பசு, பாசப் பொருளறிவோடு நின்றுவிடுவதே ஆன்மானந்தம்**. இவற்றின் மேலான **பதிப்பொருளையறிந்து ஒன்றுபடுவதே நித்தியானந்தம்** எனப்படும். எனவே, பதி-பாசம்-பசு எனப்படும் முப்பொருளையும் அவற்றின் இயல்களையும் காணும் பெற்றி சதாசாரியரால் உண்டாவதாகும். இம்முப்பொருள் உண்மையறிதலே மெய்ஞ்ஞானமாம். இதனையே, **கண்டத்தைக் கொண்டு** எனச் சுருங்கவுரைத்துள்ளார் ஆசிரியர். முத்திப் பேறடைதற்கு முதற்படியாக வேண்டற்பாலது இம் முப்பொருளுண்மை யுணர்வே என்பது இதுகாறுங் கூறியவாற்றால் அறியலாம். **முத்தி வீட்டின் அடிநிலை** இதுவே.

இங்ஙனம், உபதேச வாயிலாகவும், நூல் வாயிலாகவும் - அநுபவ வாயிலாகவும் - மற்றும் பல்வகையாகவும் நமக்கு அருள்புரிதற் கெழுந்தருளி **வந்த ஆசாரியரைக் கொண்டே** நாம் வீடு பேற்றுக்குத் தடையாயுள்ள **கருமத்தை** - பாசத்தை ஒழிக்கவேண்டும். உணவைக் கொண்டே பசியை நீக்க முயல்வது போல்வது இச்செயல். உணவு, பசிப்பிணி மருத்துவராகிய உபகாரியால் உதவப்படுகின்றது. இவ்வாறே திருவருள் - தீட்சை - பவப்பிணி மருத்துவராகிய ஆசாரியரால் அருளப்படுகின்றது. உணவை உண்டால் பசி தீரும். ஆசாரியரைக் கண்டால் பவம் ஒழியும். கருமத்துக்கு வேறு பெயர் **வினை** என்பது. வினை மூவகைப்படும். அவை, **ஆகாமியம் - பிராரத்தம் - சஞ்சிதம்** என்பன. ஆகாமியம் என்பது நல்வினை தீவினை முயற்சியே. விதையை நிலத்திலிடுவது போன்றது ஆகாமியம். சஞ்சிதமாவது முயற்சி பலனுக்கு வராமல் கட்டுப்பட்டிருப்பதாகும். இது விதைத்தவன் பலன் காணும் வரை பூமியில் விதைகள் தங்கியிருப்பதை நிகர்க்கும். பலன் அநுபவத்துக்கு வருதலே பிராரத்தம் எனப்படும். எனவே, முயற்சி - முயற்சித்தொகை - முயற்சி யநுபவம் என மூன்று வகையாகிக் கன்மம் நிற்பது தெரியலாம். ''மேலைக்கு வித்துமாகி'' என்னும் சித்தியார்ப் பாடல் இதனை உணர்த்தும். இனிப் பிராரத்தம் பயனுக்கு வருகையில் ஆதி தெய்விகம்

*முதலியவகைப்பட்டுப் பலனூட்டும். ஆகாமியத்திலிருந்து சஞ்சிதம் ஏற, சஞ்சிதத்திலிருந்து பிராரத்தம்வர, பிராரத்துவப் பழக்கத்திலிருந்து ஆகாமியம் விளைய இங்ஙனம் இந்தக்* **கன்மசக்கரம்** *சுழன்றுகொண்டேயிருந்து சாதி, ஆயுள் முதலியவற்றிற்குக் காரணமாகிப் பிறப்புகளை மாறிமாறி உண்டாக்கும் வண்ணம் செய்துகொண்டிருக்கும். ஆகவே, இக் கன்மசக்கரத்தை நிறுத்துதல் - கன்ம சாகரத்தை வற்றச்செய்தல் - கன்ம வித்தினை வறுத்து விடுதல் -* **கருமம் முடித்தல்** *எனப்படும். இக் கரும முடிவை ஆசாரியனுடைய அருளால் அடைய முயல வேண்டும். ஆசாரியராக மேலே சொன்னவண்ணம் காட்சி தந்தவரை நாம் சிக்கெனப்பற்றிக் கொண்டால் - கிடந்தால் - அவர், தீட்சையால் அத்துவ சோதனை பண்ணிச் சஞ்சிதத்தை வறுத்த வித்துப்போல ஆக்கிப் போக்கிவிடுவார். பிறகு, இச் சஞ்சிதத்துக்கு உற்பத்தியாயுள்ள ஆகாமியத்தை அவ்வாசாரியர் கட்டளை வழியிலே நடத்தலால் நிறுத்திவிடலாம். எடுத்துள்ள இந்த உடம்பின் அனுபவத்தோடு பிராரத்துவம் கழிந்தொழியும். இதன்மேல் வினை என்பதே இராது. பிராரத்துவம் கொடுமை காட்டாது கழிதற் பொருட்டாகவே அடியார் கூட்டுறவு முதலிய உபாயங்கள் வகுக்கப்பட்டுள. இவ்வழிகளிலே ஒழுகுதலால் பிராரத்துவக் கொடுமையும் தணியும். மேல்வினைக்கு இடஞ்செயாதடங்கும். இவ்வளவே கருமமுடிவு எனப்படுவது. இவ்வாறே மூவகைக் கருமங்களையும் ஆசாரியர் திருவருளாலே போக்குதலே கருமம் கழித்தல் ஆகும். இங்ஙனம் முயன்றோரே,* **கருமம் முடித்தவர்** *ஆவர் என்பது இப்பாடல். பிறப்பறுகைக்கு வேண்டுவது கருமக்கழிவேயாம். இக்கருமத் தொடர்பற்றார் பிறப்பின் தொடர்பும் அற்றவராவர். அவர்கள் திரும்பவும்* **தாயின் கருப்பத்தை அடையார்.** *ஆதலால்* **பிண்டத்தில்வாரார்** *என்றார். இதனால், ஆன்மா, உடலுக்குட்பட்டுப் பழகும் சரீரவாதனை தீரப்பெறும் எனல் பெறப்படும். இதுவே* **பாச நீக்க வழிகளைக்** *கூறியவாறாம்.*

**பிறப்பிறப்பின்மை**

*குருதிருவருள் வழிநின்று வினையொழியப் பெற்றவர்கள் மெய்யுணர்வுடையவர்களாகிறார்கள். இவர்களை நூலில்* **கலியாணர்கள்** *என்பர். அதாவது,* **எப்போதும் தங்கள் சித்தம் சிவத்தின் வழியே நிற்கப் பெற்றவர்கள் என்பதாகும்.** *சூரியனிடம் இருட்டு அணுகாமைபோன்று இத்தகையோர்பால் கன்மம் தாக்குவதில்லை. இவர்கள் சிவத்தின் திருவருளிலே அழுந்தப்பெற்றவராவர். அருளில் அழுந்தியபோது ஆன்மா சுத்தப்படுகிறது. ஞான வியாபகமுறுகிறது. ஆன்மா பாசத்துட்படும்போது அசுத்தப்படுகிறது. அறிவு குறையப்பெறுகிறது. பாசத்துட்பட்டால் ஆசைகள் அதிகப்படும். துன்பங்கள் பலவாகும். பாசநீக்கம்*

*பெற்றபின் ஆசைகளறும். சிவப்பேறு ஒன்றே விரும்புதல் நிகழும். இதனாலேயே, "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றது வேண்டாமை வேண்ட வரும்" என்றார் திருவள்ளுவர். பாசம் அறுதலேயன்றிப் பாசப்பற்றும் அறுதலே அவா அறுத்தல் எனப்படும். நமக்குப் பிறக்கும்போது பல துன்பங்கள் ஏற்படுகின்றன. அவற்றை மறந்துவிடுகிறோம். வாழ்க்கையின்போது பற்பல இன்னல்கள் அடைகிறோம்; வருந்துகிறோம். துன்பம் தொலைந்து இன்பம் வேண்டுமென்று எண்ணுகிறோம். மரணத்தின் போதும் வேதனை உண்டு. அதை இறுதியில் அடைகிறோம். பரிகாரம் தேட முடிவதில்லை. மரணத்தை நினைக்கும்போது யார்க்கும் நெஞ்சம் 'பகீர்' என்கிறது. "இறப்பதனுக்கு என்கடவேன்" என்பர் பெரியோர். இறைவனோடு ஒன்றுபட்டுத் துன்பமின்றி இன்பத்தே ஆழ்ந்திருப்பதாயின் பிறப்புவரினும் துன்பமில்லை என்பர் மேலோர். "மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்பர் அருளில் அழுந்தியவர். ஆதலால், நமக்கு இறவாமையும், இனிப்பிறவாமையும் வேண்டுவனவாகும். ஆசாரியன் அருளுக்கு இலக்காவதால் இறப்பும் பிறப்பும் அறுகின்றன. இதனின் மேற்பட்ட இன்பம் வேறில்லை. இதுவே வீடுபேறு எனப்படும். இதனாலேயே ஆசிரியர் முடிந்தபயன் கூறுமுகமாகப்* **பிறப்பிறப்பில்லை** *என்றார். இதுவே இப்பிறவியின் பயன். குறிக்கோளும் இதுவே. இச்செய்யுளில் இந்நூலுக்குப் பயன் கூறப்பட்டுள்ளமை தெரியலாகும்.*

*இந்த மூன்று செய்யுட்களாலும், கடவுள் (சிவம்) ஆசாரியக் கோலத்துடன் எழுந்தருளித் தீட்சையாதிய செய்து ஆன்மாவுக்கு (நமக்கு) அருளுமாறு கூறப்படுகின்றது. நாம் பிரபஞ்ச வாதனை தவிர்த்து அக்குருவருள் வழி ஒழுகின் இம்மைக்கண் வினையொழிவும் சீவன்முத்தி நிலையும், மறுமைக்கண் சிவப்பேறும் எய்துதல் திண்ணம் என அறியலாகும். அநுபூதிமான்கள் அருளிச்செய்யும் இதற்குமேல் பிரமாணம் தேவையின்றாம். குருவருள் புரிக!*

*இப்பாடலின்கண் பாசநீக்கமும் சிவப்பேறும் (பிறவாமையும்) கூறப்பட்டிருப்பது திருமந்திரத்து உபதேசப் பகுதியின் இரண்டாம் செய்யுட் செய்தியை நினைவூட்டும். அத்திருமந்திர உபதேசப் பாடல் இதுவாம்.*

"களிம்பறுத் தானெங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தானருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
**பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே"**

*பளிங்கிற் பவளம் பதித்தல் சிவானந்த அனுபவம் உணர்த்துவதாகும். தொடர்புடைய களிறு 8.*

## செய்யுள் - 4

## சிவானந்த நிலை

(பேரின்பப் பெருநிலை)

எங்ங னிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்
அங்ங னிருந்ததென் றுந்தீபற
அறியு மறிவதன் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. *சிவபோகம் சொல்ல ஒண்ணாதது*
2. *அது ஆன்மபோதத்துக்குட்படாதது.*

### தெளிவுரை

**எவ்வண்ணம் சொல்லுகேன்.**

*குருவின் திருவருளால் அடியேன் பெற்ற பேரின்பப் பெருநிலை எத்தன்மையதாய் இருக்கும் என்று எப்படிச் சொல்ல முடியும்? அதுபோல இருந்தது, இதுபோல இருந்தது என்று எப்படிச் சொல்ல இயலும்? அதற்கு உவமை கூறுவதற்கு வேறு எந்தப் பொருளும் இல்லை; அதற்கு அதுவே உவமையாகும். எந்தப் பொருளையும்* ***சுட்டறிவினாலேயே அறியும் இயல்புடைய உயிருக்கு பேரின்பப் பெருநிலையின் இயல்பை எந்தச் சொல்லாலும் சொல்லி விளக்க முடியாது. அதனை அனுபவித்து மட்டும் தான் உணர முடியும்.***

**"முகத்தில் கண் கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்தில் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தினைச் சொல்லெனில் சொல்லுமா றெங்ஙனே"**

*என்று திருமந்திரமும்,*

**"அன்றுமுதல் ஆரேனும் ஆளாய் உடனாகிச்
சென்றவர்க்கும் இன்னதெனச் சென்றதிலை – இன்றிதனை
இவ்வா றிருந்ததென் றெவ்வண்ண சொல்லுகேன்
அவ் வாறிருந்தது"**

*என்று களிறும் (9) இக்கருத்தை நிலை நாட்டுகின்றன.*

*நமக்கு வேண்டுவது பேரின்பமே. அது சிவபோகம் அல்லது சிவானந்தநிலை எனப்படும். இந்த உலகில் உடல் மூலமாக அனுபவிப்பது* ***சிற்றின்பம்*** *ஆகும்.*

*இவ்வுலகில் சிவயோகத் தமர்ந்துள்ள பிராரத்துவ நிலைக்கண் சிவனருளே கண்ணாகக் காணும்போதும், பிறப்பொழிந்த பின்னரும் பெறுவது* **பேரின்பம்** *ஆகும். சகலாவத்தையில் நம் ஆன்ம அறிவு மாயைவசப்பட்டு ஏகதேசப்படுவதால் பேரின்ப உணர்ச்சியை அனுபவிக்க இயலாது. அறிவு வியாபகப்படும் நிலையே பேரின்பநிலை. அது மாயைவசமான முப்பத்தாறு தத்தவங்களையும் கடந்து பரநாதத்துக்கு அப்பாற்பட்ட கனகவெளியிலே ஆன்மா அழுந்தியனுபவிப்பதாகும். இதனை முடிவிலாச் சிவபோகம் என்பர். தத்துவங் கடந்த செப்பொணா நிலையினை அடைந்தோர் எங்ஙனமிருப்பர் என்பதைத் திருமூலர், "முப்பது மாறும் படிமுத்தி ஏணியாய் - ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்குச் -* **செப்ப அரிய** *சிவங்கண்டு தான்தெளிந் - தப்பரிசாக அமர்ந்திருந்தாரே" எனக் கூறுதலாற் காணலாம். இதன்கண்* **செப்ப அரிய** *எனவும்,* **அப்பரிசாக அமர்ந்திருந்தார்** *எனவும் கூறியுள்ள செய்திகளுடன் உந்தியார்க் கருத்தும் ஒன்றுபட்டியல்வது தெரியலாம். இந்தப் பேரின்பமே அழியா இன்பம். இந்தச் சிவசாயுச்சியத்தை அடைவது தான் பிறப்பின் நோக்கம். இந்த இன்பத்தினை இன்னவாறிருப்பதென யாவராலும் சொல்ல முடியாது. யாவற்றினும் மேம்பட்ட இன்பம் என்று மட்டுமே சொல்லலாகும். சிற்றின்பத்தையே அகப்பொருள் (மனத்தால் உணரப்படும் இன்பு) என்ற பெயரால் இலக்கணம் சொல்லுகிறது. இதனால் சிற்றின்பே வெளியிட்டுக் கூறொணாதது என்பது கருத்தாம். இதனினும் சிறந்ததும், தனக்குமேல் சிறந்ததொன்றில்லாததுமான பேரின்பத்தைச் 'சொல்லொணா நிலையது' எனக் கூறுதல் மிகையாகாது. 'சொல்லுவதறியேன் வாழி' என்பதே சுகாதீத அனுபவிகள் வாசகம். இத்தகையோர் இவ்வுலகிடை நிலவுமளவும் சிவ சித்தர்களாக வாழ்வர். இவர்கள் மனவெளி பரவெளியோடு விரவும். இவர்களன்பு சிவனன்பினுளடங்கும். இவர்களான்மவொளி அருளொளியிலமுந்தும். இது அனுபவமேயாகுமன்றி உரைக்க இயலாதது. ஆன்மா, தான் என்றொரு முதல் காணப்படாமல் யாவும் சிவமாகக் காண்டலே இந்த நிலையாகும். முத்தி நிலையில் ஆன்மா, சிவனேயாய் ஒற்றுமைப்பட்டு ஏகனாகி இறைப்பணி நிற்றல் வேண்டும் என்பர் ஞானியர். இந்த நிலையில் யான், எனது என்ற தற்போதமிராது. ஆன்மா, சிவத்தினது திருவடி வியாபகத்துள் வியாப்பியமாய்க் கடல்புக்க நதியென அடங்கி நிற்கும். சிவ ரூபத்துடனே வேறற நிற்கும் ஐக்கியம் இது. ஆதலால் இப்பரம சுகம் வாக்கால் உரைக்க வாராது. அனுபவம் உரைப்பரிதாம் இயல்புடையது. இச் சுகத்துக்கு ஒப்பும் இல்லை. ஆதலால் உவமித்தும் சொல்ல இயலாது. இது அளவு காட்டிக் கூறப்படுந் தன்மையதுமன்று. இதனால்தான் போலும் 'வீட்டியல்பு தமிழிற் கூறார்' என இலக்கண உரையாளர் கூறினர். எனினும், கோவையார் ஒருவாறு உவமித்துரைப்பது காணலாம். அது வருமாறு:-*

*"நல்வினைத் தெய்வம் தலைவியைக் களவின்கண் கூட்ட. அமுதமும் அதனிடம் மறைந்துநின்ற சுவையும் போல, என்நெஞ்சம் இவளிடம் ஒடுங்க, யான் என்பதொரு*

தன்மை காணாதொழிய. இருவருள்ளங்களும் **ஒருவேம்** ஆமாறு கரப்ப, **அவ்வொருவேம் ஆகிய ஏகாந்தத்தின் கண் புணர்ந்த புணர்ச்சிப் பேரின்பவெள்ளம் எவராலும் அறியக்கூடாதது"** என்னும் பொருள்பட மாணிக்கவாசக சுவாமிகள், "சொற்பாலமுதிவள் யான்சுவை என்னத் துணிந்திங்ஙனே நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று நானிவ ளாம்பகுதிப் பொற்பார் அறிவார்" - என முத்தியின்பை உவமைப் படுத்துமாற்றால் ஒருவாறுணரலாகும். அன்றியும் இப்பெருமான், 'புணர்ந்தால் புணருந்தொறும் பெரும் போகம் பின்னும் புதிதாய் வளர்கின்றதே' என்றருளியமையும் எண்ணுதற்குரியதாம். ஆசானாகி இறைவனே அருள் புரிதலால் அவனருளே கண்ணாகக் கொண்டு அவனுட்பட்டு அழுந்துமின்பம் எவராலும் இயம்ப இயலாதென்பது தேற்றம். இதனையே நம் இப்பாடல். **'எங்ஙன் இருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்'** என வெளியிடுகின்றது.

என்றாலும், உரைத்தே தீர வேண்டுமாயின் ஒருவாறு இப் பின்வரு முறையிற் கூறலாகும். அதாவது, இருவினைஒப்புத் துலைபோல் **ஒத்து,** மலபரிபாகம் **பிறந்து,** திருவருட் பதிவு எனப்படும் தேசிகருடைய திருவடியை அடைய**ப்பெற்று**, சிவ சொரூபத்தைய **முணர்ந்து,** இரண்டறக் **கூடி,** பரமானந்த விளைவு**ட்பட்டு**, அப்பரம சுகவாரியில் **அழுந்திய** காலத்து ஒருவனுக்கு எப்படியிருக்குமோ அப்படியிருப்பதென ஒருவாறு கூறலாகும். இதனாலேயே இப்பாடலுள் **'அங்ஙன் இருந்ததென்று சொல்லுகேன்'** என்றார் ஆசிரியர்.

### அறியும் அறிவதன்று

ஞானம் மூன்று வகைப்படும். அவை **பாசஞானம், பசுஞானம், பதிஞானம்** என்பன. பாச ஞானம் என்பது பாசமாகிய கருவிகள் துணையாக ஆன்மாவிடத்து நிகழும் ஏகதேச ஞானமாம். இக்குறைபாடிருத்தலால் இப்பாச அறிவு பரம சுகத்தை அறிய இயலாது. பசுஞானமென்பது தற்போத முனைப்பால் ஆன்மாவிடத்து நிகழும் ஞானமாம். இது துணையின்றி அறியமுடியாத குறைபாடும் கொண்டது. ஆதலால், பசுஞானத்தாலும் சிவபோகம் அறியப்படாது. குருவருள் அல்லது சிவஞானம் அல்லது பதிஞானம் முற்றறிவுத் திறம்கொண்டது. இது சிவம் காட்டக்காணும் இயல்பினது. ஏகதேசமும் தற்போதமும் ஒழிந்த நிலைமையது. ஆதலால் இத்திருவடி ஞானத்தால் அழுந்தியபடியே அழுந்தியறிதல் நிகழும். பிரிந்து நின்று அறியா நிலைமையது இது. இதனால், பாச பசுஞானமெனப்படும் ஆன்ம ஞானத்தால் இப்பரமானந்தம் அறிந்து கூடவும் உரைக்கவும் தக்கதன்றென உணரலாம். இதுபற்றியே பரபோகம் **அறியும் அறிவதன்று** என்றனர் ஆசிரியர்.

இதனால் ஈறிலாப் பெரும் பதங்கடந்த இவ்வின்பினை நாம் ஒவ்வொருவரும் அடைந்து அனுபவிக்கும் உரிமைப்பாடு உடையோம் என்பதை உணர்ந்து நன்னெறி

*யொழுகிக் குருவருளை எதிர்பார்த்து வாழ வேண்டும் எனத் தேறலாம். பரம சுகமதனை ஏக நாயகனருளால் பெறுவோமாக! களிறு 9, 10.*

### செய்யுள் - 5

### சிவத்தின் பிறப்பறு நிலை

ஏகனு மாகி யநேகனு மானவன்
நாதனு மானானென் றுந்தீபற
நம்மையே யாண்டானென் றுந்தீபற.

**கருத்துக்கள்**

1. ***கடவுள் ஒன்றாய்ப் பலவாய் உயிர்க்குயிராய் இருத்தல்.***
2. ***குருவாய் அருளல்.***

**தெளிவுரை**

**ஏகனுமாகி அநேகனுமாகி நாதனுமாதல்**

*ஏகன் - ஒருவன் என்னும் ஒருவன். தனக்குவமை இல்லாதவன்.*

*அநேகன் - எண்ணில்லாத பல உயிர்களோடு கலந்து உயிர்க்கு உயிராகவும் இருப்பதால் அநேகன்*

*ஒரு பெரிய தேரைச் செய்தற்குப் பலர் வேண்டியுள்ளனர். அவ்வாறு பலர்கூடி ஒரு விசித்திரமான தேரைச் செய்தாலும், அவர் யாவரும் ஒருவன் ஆணை வழி நின்றே செய்வர். அங்ஙனம் அவர்கள் யாவரையும் ஏவுபவனே கருத்தா எனப்படுவன். இங்ஙனம் முதன்மையான காரணனாக இருப்பவன்* **ஒருவனே.** *இந்த ஒருவனே போலும் சிவமே உயிர்கள் முத்தியடைதற் பொருட்டுக்கலந்து நின்று உபகரிக்க வேண்டியுள்ளது. இந்தக்கலப்பு, உடம்பும் உயிரும் ஒன்றாய்க் கலந்துள்ளமை போன்றதாகும். உடம்பின் பெயர்கொண்டு அழைத்தபோது உயிர் "என்னை?" என்று கேட்டதற்குக் காரணம் ஆன்மாவானது உடம்பெனவும் தானெனவும் வேற்றுமை பாராட்டாது அபேதமாய் நிற்பதேயாகும். இவ்வாறே சிவபெருமானும் ஆன்மாக்கள் பலவற்றினும் வேறுபடாமல் பலவாய் இயைந்து நிற்பர். இதனால், சிவபெருமான், ஆன்மாவாகவும் அதனின் வேறாகவும் நிற்குமியல்பினர் எனத்தெரியலாம். இஃது அப்பொருட்குள்ளதோ ரிலக்கணமாகும். ஆன்மாவுக்கு இங்ஙனம் நிற்கும் தன்மை இலது. சார்ந்ததன் வண்ணமாய் நிற்றலே*

இதனியல்பு. இறைவனின் ஒன்றாந்தன்மையைச் சுருதியும், **ஏகம்** என்று கூறித் தெரிவிக்கின்றது. “சத்தாகிய **ஒருவரையே** இந்திரன், மித்திரன், வருணன், அக்நி, அழகிய திவ்ய கருடன் என்று அநேக பிரகாரமாக அந்தணர் கூறுகின்றார்” என்று இருக்கு வேதம் கூறுகின்றதென்பர். இதனால், இறைவன் அநாதியே ஆன்மாவைக் கூடிப் பிரிதற்கரியனாய், அறிதற்கரியனாய் உளன் என்பது கருத்தாம். இங்ஙனம் சிவம் நிற்றல் நமது மலத்தைப் பரிபாகப்படுத்தும் பொருட்டேயாம். “ஒன்றென்றது ஒன்றே காண் **ஒன்றேபதி**” என்பது போதம். இங்ஙனம் சொல்லுவதன் கருத்து பிரமப்பொருள் ஒன்றில்லையாயின் ஒரு பொருளுமில்லை என்பதாம். இரண்டாவதாகிய பசுப்பொருள் இல்லை என்பது பொருளாகாது என்ப. அகர ஒலியின்றேல் ஏனைய அக்கரங்கள் இயங்கா. இவ்வாறே பிரமப்பொருள் இன்றேல் எப்பொருளும் இயங்கா: பிரமப்பொருளிருத்தலினால் எல்லாப் பொருள்களும் இயங்குகின்றன. இதனால் பதிப்பொருளைவிட்டுப் பசுப்பொருள் தனித்து நில்லாமையாகிய அனுபவம் காணலாகும். இதனால் உயிர்களின் **நிலைத்தல் தன்மை** ஏற்படுகின்றது.

பின்னும், இறைவன் உயிர்கட்கு **நல்லுணர்வு கொளுத்தி** நடத்த வேண்டியுள்ளான். இதற்காக அவன் **பொருள்தன்மை** பற்றிப் பல்வேறு பொருட்களாகவும் காணப்படுகிறான். சூரியன், கண்ணுக்குள் உள்ள ஒளியாயிருத்தலேயன்றிக் கண்வேறு தான் வேறாகவும் விளங்குகிறான். இதுபோல்வதே **வேறாய்** நிற்கும் இயல்பு. மற்றும் அகர உயிர் ஒன்றே ஏனைய எழுத்துக்களை இயக்கித் தான் தனித்து நிற்றல்போல, இறைவன் எப்பொருளையும் இயக்குகின்றான். சேதன அசேதனப் பிரபஞ்சங்கட்குப் பிராணன் சிவம். அவரையின்றி அவற்றின் இயக்கம் நிகழாது. ஆன்மாக்கள் சிவனில் வியாப்பியமாயிருப்பன. இங்ஙனம் இறைவன் எல்லாமாய் அல்லவுமாய் இருத்தலால் நமது கன்மங்கட்கு ஏற்றவண்ணம் உபகரிக்க முடிகின்றது. இந்த உதவியால் நமது கன்மம் பக்குவப்படுகின்றது. இப்பக்குவ முறையினால் நமக்கு அநுபவ அறிவு உண்டாகிறது. இதுவே இறைவனின் **வேறாய்ப் பலவாய் நிற்றல் நிலை** எனப்படும். இது தெரிவிக்கவே **அநேகனும் ஆனவன்** என்கிறார் ஆசிரியர்.

இவ்வாறு கலப்பால் ஒன்றாயும், பொருள்தன்மையால் வேறாயும் அதாவது அநேகனாகியும் நம்மை நிலைக்கச்செய்தும் அறிவுபெறச் செய்தும் உடலுயிர் போன்றும், கண்ணுங் கதிரோனும் போன்றும் உதவி செய்வதே அல்லாமல், **உயிர்க்குயிராதல்** என்னும் தன்மையால் கண்ணொளியும் ஆன்மபோதமும்போல **உடனும் ஆய் நம்மைச் செலுத்தியும் உபகரிக்கின்றான்** இறைவன். கண்ணுக்குக் காணும் தன்மையாகிய ஒளி இருப்பினும், ஆன்மபோதம் உடனாகிநின்று செலுத்தினாலன்றிப் பொருள்களை அறிதல் நிகழாது. அதுபோலவே, சிவம் உயிர்க்குயிராய் நின்று செலுத்தினாலன்றி ஆன்மஞானம் விளையாது. ஆன்மஞானமின்றேல், பதிஞானத்துக்கு வழியே இல்லையாய்விடும்.

பொருள்களைக் காணமாட்டாக்கண் இருந்தென்ன பயன்? ''தெரியும்விழி இலார்க்கு ஏது விளக்கு?" என்பது நன்னெறி. இங்ஙனம், இறைவன் **ஏகனாய்** இருந்து உயிர்களை நிலைக்கச்செய்தும், **அநேகனாகி** நின்று அறிவு கொளுவியும், **நாதனாகி** நின்று செலுத்தியும் உதவுவதையே இப்பாடலின் முதற்பகுதி தெரிவிப்பதாகும். **நாதனுமானான்** என்பதால் செலுத்துமுபகாரம் தெரிவிக்கப் படுகின்றதென்க. இதனையே தன்மையுமாய், முன்னிலையுமாய், ஆசாரியனுமாய் வந்த திறமெனக் கூறுவர். அநாதியே கூடிப்பிரியாமை ஒன்றென்பதாகும். நமது கன்மத்துக்கேற்ப உபகரித்தற்பொருட்டு அவன், அவள், அது என்று நிற்றல் பலவாய் நிற்பதாகும். இதனால் கன்ம ஒப்பும் மலபரிபாகமும் நிகழ்கின்றன. இந்தப்பக்குவ அவதரத்திலே ஆசாரியனுமாகி (நாதனுமாகி) ஆள்வது உடனாய் நிற்பதெனப்படும்.

மேற்சொல்லப்பட்ட இம்மூன்று நிலைகளையும், அரக்கினோடு செறிந்த கற்பொடிபோல ஒன்றாய் ஒருங்கியைந்து நீக்கமின்றி யிருப்பதென உவமித்தும் கூறுவர். **"எட்டுத்திசை தானாய், வேறாய், உடனானா**னிடம் வீழிம்மிழலையே" என்ற திருப்பாட்டும் இச்செய்தி தருவதே. இவ்வாறு **அபேதம், பேதம், உடனாதல்** என்னும் மூவகை இயல்பும்கொண்ட பொருள் பொருந்தியதே **அத்துவிதம்** என்னும்சொல். அத்துவிதம் என்னும் சொல்லுக்குப் பலபடியாகப் பொருள் கொள்வர் சமயவாதியர். அபேதப் பொருள்கொள்வர் மாயாவாதிகள். பேதப்பொருள் கொள்வர் மாத்துவர். பேதாபேதப் பொருளுரைப்பர் பாஞ்சராத்திரிகள். இவர்கள் முறையே பொன்னும் ஆபரணமும் - இருளும் வெளியும் - சொல்லும் பொருளும் - என்னும் உவமைகளைக் கையாள்வர். இம்மூன்றுமாய் நிற்பதே இயல்பு என்பதே சித்தாந்தசைவக் கொள்கையாகும். மேற்சொல்லப்பட்ட இவ்வெல்லாம் அடங்கவே இவ்வுந்தியார்ச் செய்யுள் **"ஏகனுமாகி".... நாதனுமானான்"** எனலுற்றதென்க.

## நம்மையே ஆண்டவன்

உயிர்களோடு உயிர்களின் நலம் கருதி அத்துவிதமாய் நிற்கும் பரமன், தனது பேரருள் தன்மையால் மிகவும் **இழிந்த** நிலையில் உள்ள சகலராகிய நம்மை ஆசானாகி வந்து ஆட்கொள்ளுதலும் புரிகிறான். **நம்மினும் உயர்ந்தோர் பிரளயாகலரும் விஞ்ஞானகலரும் ஆவர்**. அவரவரையும் சிவமே ஏற்றவகைகளால் ஆட்கொள்ளுகின்றான். தாழ்ந்த நிலை உடைய நம்மை ஆட்கொள்ளுதலால் பேரருளுடையவன் இறைவன் என்ப புலப்படும். இங்ஙனம், இறைவன் உதவி புரியாக்கால், உயிர்கள் விடுதலையே அடைய வழியிலாமல் சுவர்க்க நரகங்களிலும் ஈண்டும் சென்று உழன்று பிறந்து சுழலவேண்டி வரும். நமது பக்குவங்கண்டு பரமாசாரியனாகி உணர்த்துவது பெருமான் பொறுப்பு. உணர்த்தும்போது

---

| | | |
|---|---|---|
| விஞ்ஞான கலர் | - | ஒரு மலமுடையவர் |
| பிரளயாகலர் | - | இரு மலமுடையவர் |
| சகலர் | - | மும்மலமுடையவர் |

*தீட்சையால் உணர்த்துவன். தீட்சைகளில் வகைகள் உள. சகலராகிய நமக்குப் பெருமான் புரிவது **சாதார தீட்சை** எனப்படும். குருமூர்த்தியை ஆதாரமாகக் கொண்டு இவ்வுலகின்கண் இறைவன் தீட்சிப்பதால் இது சாதார தீக்கை எனப்படும். இங்ஙனம் குருவாகித் தீட்சித்து நம்மை ஆட்கொள்ளுவதால் இப்பாடலில் **நம்மையே ஆண்டான்** என்றனர் ஆசிரியர். இங்ஙனம் இறைவன், பெறுதற்கரிய திருவடியை அருளி அடிமை கொள்வதனால் இறைவன் ஆண்டானாகவும், நாம் அடிமையாகவும் நிற்கும் முறைமை விளங்கும். "என்று நீ அன்று **நான் உன்னடிமை** அல்லவோ" என்பது தாயுமானார் வாக்கு.*

**"இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி**
**குருவென வந்து குணம்பல நீக்கித்**
**தருமெனு ஞானத்தால் தன்செய லற்றால்**
**திரிமலம் தீர்ந்து சிவனவ னாமே"**

*என்பது திருமந்திர உபதேசம். களிறு 11 ஆம் பாடலையும் ஒப்பிட்டு நோக்கலாம்.*

### செய்யுள் - 6

## தம்பிரானார் பாரம்

(எல்லாம் சிவன் செயல்)

நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்னாதன்
தன்செயல் தானேஎன் றுந்தீபற
தன்னையே தந்தானென் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. ***எல்லாம் சிவன்செயலாதல் (ஆன்ம சுபாவம் அறுகை)***
2. ***சிவம் தன்னையே தருதல்.***

### தெளிவுரை

*இச்செயல் நமது என்றும், இதனை நாமே செய்தோம் என்றும், தன் முனைப்போடு செயல்படும் உயிர்கள், அப்பழக்கத்தை ஒழித்து யான் எனது என்னும் செருக்கை அறுத்தபின் எல்லாம் சிவன் செயல் என்ற உண்மை விளங்கும்.*

| | | | |
|---|---|---|---|
| யான் | - அகங்காரம் | - கல்விச் செருக்கு | - பிரம குணம் |
| எனது | - மமகாரம் | - செல்வச் செருக்கு | - மால் குணம் |

***தன்முனைப்பு அற்ற அவ்வுயிர்க்கு இறைவன் தன்னையே கொடையாகத் தந்தருளுவான்.***

*நுணுகிப் பார்த்தால் உலகில் நமக்கு ஏற்படுகிற துன்பங்கள் எல்லாம் யான் என்றும், எனது என்றும் தன்முனைப்போடு நாம் செயல்படுவதனால் விளைகின்றன என்பது புலப்படும். எனதென்னும் உணர்வைக் கூட ஓரளவு வென்றுவிடலாம். ஆனால் யானென்னும் உணர்வு எளிதில் நீங்குவதில்லை. அதனை நீக்குவதற்காக முயலும் போது கூட 'யான் இம்முயற்சியைச் செய்கிறேன்' என்ற உணர்வே தலைதூக்குகிறது. அந்த உணர்வுமற்ற, எல்லாம் இறைவனின் ஆணைப்படி நடக்கிறது. நம் செயலாவது யாதொன்றுமில்லை என்று தெளிகிற உணர்வு மிகக் கடினமான பயிற்சிக்குப் பின்னரே வரும். அதுவும் பயின்று கொள்ளப்படாமல், உறங்குகிறவன் கையிலிருந்த பொருள் தானே நழுவுவது போல் நிகழவேண்டும். இத்தகைய பக்குவமுடையார்க்கு இறைவன் தன்னையே அருட்கொடையாக வழங்கிவிடுகிறான்.*

*பதினோராம் திருமுறையில், நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்த விநாயகர் திரு இரட்டை மணிமாலையில் இதனை*

> *"என்னை நினைந்தடிமை கொண்டென் இடர் கெடுத்துத்*
> *தன்னை நினையத் தருகின்றான்"*

*என்று குறிப்பிடுகிறார். உயிர்களுக்குப் பெறத்தகும் பேறு இனி இதன் மேல் உண்டோ?*

**நம் செயல் அற்று இந்த நாம் அற்றபின் நாதன் தன்செயல்தானே.**

*இதன் முன்னர்க் கூறியவண்ணம் இறைவன், குருமூர்த்தியை ஆதாரமாகக் கொண்டு நமக்குரிய தீட்சை வகையால் நம்மை ஆட்கொண்ட பின்னர் நமது நிலை எங்ஙனமிருக்கும் என்பதே இனி நாம் அறிய நிற்பது. அதனை இப்பாடல் பகருகின்றது.*

*இருளில் உள்ள பொருளை அறிந்து கொள்வதற்கு விளக்கின் உதவி கண்ணுக்கு வேண்டியுள்ளது. ஆற்றை அல்லது கடலைக் கடப்பதற்குத் தெப்பம் அல்லது கப்பல் வேண்டியுள்ளது. வழுக்கு நிலத்தில் நடந்து கரையேறுதற்கு ஊன்றுகோல் தேவையாக உள்ளது. இவ்வாறே நாம் நம்மைப்பற்றிய அறியாமை நீங்கி, இவ்வுலக வாழ்க்கைப் பாதையில் இடரின்றி நடந்து,* ***பிறப்பு இறப்பு என்னும் கடலைக் கடந்து இறையடி என்னும் முத்தியங் கரை சேர்தற்குச் சிற்சில கருவிகள் தேவையாக உள்ளன. இந்தக் கருவிகளுக்குத் தத்துவங்கள் என்பது பெயர்.*** *இவை நீண்ட காலம் இருந்து நமக்குத் துணை புரிதலால் இப்பெயர் பெற்றன. இத்தகைய தத்துவங்களைச் சிவம் நமக்காகப் பிரேரிக்கின்றது. அவனது ஆற்றலாகிய சிற்சத்தி*

வழி நின்று அவ்வாணையாகிய பற்பல சத்திகள், ஆக்கி நமக்கு ஏற்பத் தத்துவக் கூட்டுறவு செய்கின்றன. இத்தத்துவங்கள் யாவும் நம்முடைய விருப்பு உணர்வு தொழில்களுக்கு ஏற்ற வண்ணம் இணங்கியும் வணங்கியும் வயப்பட்டும் வயப்படுத்தியும் இயங்கி இயங்கிப் பயன்பட்டு நமக்கு நல்ல திடமான நல் உணர்வையும் நல்விருப்பத்தையும், நற்செயலையும் மேற்கொள்ளும் பழக்கத்தை (பண்பாட்டினை) அளிக்கின்றன.

எவரும் இருளிலுள்ள பொருள்களைத் தேடி எடுத்துக்கொண்டபின் விளக்கை அவித்துவிடுதல் இயல்பே. ஆற்றைக் கடந்த பிறகு அதுவரையில் நீந்துதற்குப் பயன்பட்ட தெப்பக் கட்டையை யாரும் சுமந்துசெல்ல மாட்டார்கள். வழுக்கு நிலத்தைக் கடந்தபின்னர் இனி வழுக்கிடமில்லையென அறிந்தவர் ஊன்றுகோலை எடுத்தேகார். அவ்வழி வருவார்க்குதவுமாறு போட்டுவிடுவர். **இவ்வாறே தத்துவங்களின்பாலும் நாம் நடந்துகொள்ள வேண்டியுள்ளது. சார்பு உணர்ந்த பின்னர் சார்பு கெட ஒழுகுதலே முறை.** பெரும்பாலும் நாம் நம்மைச் சார்ந்துள்ள சுற்றத்தையும் பொருளாதியவற்றையுமே பெரிதும் நம்பி அவைமயமாக நாம் நடந்துகொள்ளுகிறோம். ஆனால் மெய்யுணர்வு தோன்றியதும் அச்சுற்றமும் பொருளும் நாமல்லோமென அநுபவ வாயிலால் அறிகிறோம். அவற்றிற்பற்று அறுகிறோம். இதுவே துறவு எனப்படும் நிலை. அப்பால் நமதுடம்பையே நாம் என எண்ணுகின்றோம். பின்னர், உபதேசத்தால் வரும் கேட்டல், சிந்தித்தல் தெளிதல்களால் உடம்பு வேறு நாம் வேறு என்ற முடிபுக்கு வந்து முன்பிருந்த **தேஹோஹம் பாவனை**யை விடுகிறோம். இப்படியே படிப்படியாக ஒவ்வொன்றின் அநித்தியத்தையும் அறிய அறியத் தத்துவங்களே நாம் என்றிருந்த எல்லையை நீங்கிப் பகிர்முக ஆய்வினை விட்டொழித்து உள் முகப்பட நேருகிறோம். இதனையே, “பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவற் படிவழி சென்று சென்று ஏறிச் சிந்தையும் தானும் கலந்ததோர் கலவி” என்பர் கருவூர்த் தேவர். இங்ஙனம் உள்முகப் பட்ட பின்னர் சிவத்தினது திருவருளால் ஆன்மாவே நாம் என அறிய நேரும். இதற்கு **ஆன்மோஹம்** என்று பெயர். இதுவும் ஜீவபோதத்தின் நிகழ்வுதான். அதாவது சுட்டறிவின் திறனேயாகும். இந்த ஆன்ம தரிசன பாவனை இனிப்பாயிருப்பதுதான். ஆதலால், இதனைக் கடக்க உள்ளம் இலகுவில் எழாது. நாளைக்கு வரும் பலாப்பழத்தைவிட இன்றைக்குக் கிடைத்துள்ள களாப்பழமே மேல் என்ற பழமொழிப்படி நிகழும் இச்செயல். இந்த நிலையையும் கடக்கவேண்டும். இதனைக் கடத்தற்கு நம்மை நாமே முற்றிலும் மறக்க வேண்டும். “நன்றல்லது அன்றே மறப்பது நன்று”. அதாவது, யாதும் நம் செயலன்று; எல்லாம் திருவருட் செயல் என்ற எண்ணத்தில் நிலைத்திடவேண்டும். இதற்கு **அருளைப் பற்றுதல்** என்பது பெயர். இதன் பிறகு இவ்வருளிலேயே அழுந்திவிட வேண்டும். இந்த நிலையில் தற்போதம் என்பதே தோன்றாது. இது சுலப சாத்தியமன்று. இதனாலேயே “தன்னிழப்பை என்ன கற்றுச் சாதிப்பன்” என்றனர் திறவோர். திருவருளில் நாம் அழுந்த அழுந்த நாமே அருளின் வயத்தராகிவிடுகிறோம்.

*வண்டிக்குள் தூங்குபவன் வண்டி போகும் இடத்துக்கே போய்ச் சேருகிறான். ஆதலால், அருள் எப்படி நடத்துகிறதோ அப்படியப்படியெல்லாம் நம் செயல்களும் அமையும். இதனைச் சீவகரணம் சிவகரணமாம் தன்மை என்பர். வெள்ளத்தே செல்லும் துரும்புபோலச் சுவாதந்தரியம் முழுதும் (அதாவது மலம் தாரகமாக இருந்த தன்மை முழுதும்) கழலப்பெற்று நம் செயலற்றுச் சிவம் தாரகமாம் தன்மை எய்துவோம். நமது ஆன்மா, மலம் அல்லது சிவம் என்ற இரண்டில் ஒன்றைத் தாரகமாகக் கொண்டே இருக்கும் இயல்பினது. மலம் தாரகமாயிருப்பதை விடுத்துச் சிவம் தாரகமாக ஆக்குவதே மேற்சொன்ன முறை. விட்டத்தைச் சங்கிலியால் பற்றித் தொங்கியாடிக் கொண்டிருந்த ஊஞ்சல், கயிறற்றுத் தரையில் விழுந்து ஆட்டம் ஓய்ந்துவிடுதலை அறிவோம். அவ்வாறே நம் ஆன்மா, மலம் தாரகமாகக் கொண்டு தத்துவக் கருவிகளின் வழியே ஜீவபோத முனைப்பால் ஒழுகுமாயின் பிறப்பிறப்பு அடையும். அவ்வாறன்றிச் சிவம் தாரகமாகக் கொண்டு கருவிக் கூட்டுறவற்றுச் சீவபோதம் ஒழியப் பெற்றால் சிவபோத வழியே செல்லுகின்ற நிலை எய்தும். இதுவே உண்மைச் சீவன் முத்தியாம். சித்தம் சிவன்பாலமையப்பெற்ற சித்தர் இத்தகையார் ஆவர். இவ்வாறன்றிக் காய சித்திக்குழைத்துத் தேக நிலை பெற்றவர் - வச்சிரதேகம் பெற்றவர் - உண்மைச் சித்தராகார். எனினும், இவர்க்கும் இவரெய்திய நிலைக்கேற்பப் பெருமை உண்டு. ஆயினும், முற்சொன்ன நிலையினரே சகச நிட்டாபரர் ஆவர். இந்த நிலையை நாம் அடையவேண்டும். இதனை அறிவிக்கவே ஆசிரியர்* ***"நம் செயலற்று"*** *எனக் கூறிப் போந்தனர்.*

*இங்ஙனம், திருவருளில் அழுந்தப்பெற்றாரைப் பிரபஞ்சம் தாக்காது. ஒளியினிடம் இருள் போரிட முடியாது; ஓடி ஒளியும். பிரபஞ்சத்தாக்கின்மையால் வினை ஏற வழி இல்லை. இறைபணியிலேயே வழுவாது நிற்றல் நிகழும். சமயக் குரவர்கள், நாயன்மார்கள் யாவரும் இங்ஙனம் தூய நிலைப்பட்டோரேயாவர்.* ***நம்பணி என ஒன்றின்றி எல்லாம் அரன்பணியாம். இதனைச் சிவோகம் பாவனை என்பர்****. இது சதா நிகழ நிகழச் சிந்தை ஓய்ந்துபோம். விருப்பு வெறுப்பு இரா. இராப்பகலற்ற இடம் என இந்நிலை ஓதப்படும். இந்நிலையில் நான், தான் என்ற எண்ணமிராது. சிவவியாபகத்துள் ஆன்மா அடங்கிவிடும். இதனையே ஆசிரியர்* ***"இந்த நாம் அற்ற பின்"*** *என்கிறார் இப்பாட்டில்.*

*இங்ஙனம் சிவ வியாபகத்துட்பட்ட பின்னர் ஆன்மாவுக்குச் செயலற்று விடுகிறது. அதாவது நாம் செய்கிறோமென்ற முனைப்பே இருப்பதில்லை. எரியுட்பட்ட துரும்புபோல ஏகமாகி நிற்பதாகும் இந்நிலை. இதுபற்றியே ஆசிரியர்* ***"நாதன்தன் செயல் தானே"*** *என்றுள்ளார். பேய் பிடிக்கப்பட்டார் செயலெல்லாம் பேயின் செயலே யாதல் யாவரும் அறிவர். பேய்பிடியுண்டார்க்குச் செயலறிவு அப்போது தலைப்பட்டு நிற்பதில்லையாம். இதுபோன்ற நிலையே* ***"எல்லாம் சிவன் செயல்"*** *என்றிருக்கும் நிலை. "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு*

*நாயகமே"; "என்னதோ இங்கதிகாரம்" எனவரூஉம் ஆன்றோர் வாசகங்கள் இந்நிலை உணர்த்துவனவே யாகும்.*

*ஞானத்தாலே சிவனைக் கூடிச் சிவமாயிருக்கும்* ***சிவயோகிகளைப்பற்றித் 'திருக்களிற்றுப்படியார்'*** *நூலில் 11, 12 ஆம் பாடல்களில் படித்தறிதல் கூடும். திருவுந்தியார்க்கு விளக்கமே திருக்களிற்றுப் படியார் நூலாகும். திருக்களிற்றுப்படியார் நூலினையும் இங்ஙனம் விரித்தல் விருப்பத்தால் இந்நூற் செய்திகளை ஈண்டைக்கு விளக்கிக் கூறவில்லை.*

**தன்னையே தந்தான் என்றுந்தீபற.**

*மேற்சொன்ன விதமாக ஒருவன், தத்துவங் கழன்று, உடம்புணர்வற்று, ஆன்மபோதம் சீவியாது, அருளின் அழுந்தி, தன்னை மறந்து, தலைவன் திருவடி வியாபத்துள் நிலைத்து விட்டால். (அதாவது)* ***துரிய அருள் நிலையை*** *அடைந்துவிட்டால் சிவம் உடனே தன்னையே அவனுக்குத் தந்தளிக்கிறது. "கொண்டது என் தன்னை; தந்தது உன் தன்னை" என்பது அனுபவ வாசகம். நாம், நம்மையே சிவத்துக்கு அர்ப்பணித்து விடவேண்டும். இதுவே மேலான தியாகம்.* ***இப்படித் தன்னையே ஒருவன் சிவத்துக்குரிமையாக்கி விட்டால் சிவமும் வேறுவகைக் கைம்மாறு புரிந்தால் ஈடாகாமை கருதித் தன்னையே அவனுக்குந்தந்தளிக்கின்றான். நாம், நம்மையே சிவத்துக்களிக்காமல், வேறுபொருட்களை அர்ப்பணித்தால், சிவமும் தம்மையே நமக்களிக்காமல் வேறு பயன்களை நமக்களிப்பான்.*** *அதாவது, உண்மை முத்தி நிலை தாராமல் பத முத்திநிலையே அருளுவன் என்பதாம். சார்ந்தாரைத் தக்கவாறு காத்தல் சிவத்தின் நடுவு நிலைப்பண்பாகும். இதனால், ஒருவன், தன்னையே சிவத்துக்களித்து விட்டால் சிவமும் தன்னையே (வேறு அற்பப் பொருட்களை - போகத்தை அளிக்காமல்) அவனுக்குக் கொடுத்துவிடுகிறான் என்பதை உணரலாம். இங்ஙனம் சிவனருள் பெற்றாராலேயே எந்தச் சமயமும் சரிவுநிலை எய்தும்போது கெட்டொழியாமல் அற்புத நிகழ்ச்சி மூலம் தலைநிமிர்த்தப்படுகின்றதென்னலாம். (இங்ஙனமாவோர் நம் சமயத்தே இச்சமயத்தே தோன்றச் சிவமருள்க!) இவற்றையெல்லாம் உள்ளத்துக் கொண்டே திருவுந்தியார் ஆசிரியர்,* ***"தன்னையே தந்தான் என்றுந்தீபற"*** *என முடித்துரைக்கலாயினர். இங்ஙனம் தம்பாரம் அறப்பெற்றவர் தாமரைஇலைத் தண்ணீர்போல் இவ்வுலகில் பிராரத்துவம் மெலிந்தொழியும்வரை வாழ்வாராவர். இவர்தம் இம்மைவினை உடற்புசிப்பாகி ஒழியும். உயிர்ப்புசிப்பாகி மறு பிறவிக்கு ஏதுவாகாது. சார்ந்ததன் வண்ணத்தது ஆன்ம இயல்பு. அசத்தோடு சாரின் (ஐம்புலங்களோடுசாரின்) அசத்தாம். சத்தாகிய சிவத்தோடு சாரின் சிவமாம். ஆகவே சதசத்தாமியல்பினது ஆன்மா என்பது தெரியலாம். இவ்வுண்மையை நாம் ஐயமற உணர்ந்து திருவருள் வழி யொழுகி அனைத்தையும் காணவேண்டும். இதுவே பாச நீக்கம் பண்ணுமாறு. பாசநீக்கமே இம்மைக்கண் முதற்பேறு. இதுகுறித்தே, "அல்லல் என் செய்யும் அருவினை என் செய்யும் - தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என் செய்யும்" என்றனர் வாகீசரும். விசாரமற்ற தூக்கம் என்பது*

*இதுவே. தூங்காமல் தூங்கும் சோம்பர்நிலை - சுகநிலை - என்றும் இது புகலப்படும். "ஓங்குணர்வில் உள்ளடங்கி உள்ளத்தில் இன்பொடுங்கத் - தூங்குவர் மற்றே துண்டு சொல்" என்பதே இன்ப நிலை என்பதாம். இத்தகை இன்பமுண்டு வாழ்தலன்றே மானிடப் பிறப்பின் பயனாகும்!*

*இதுகாறும் கூறியவாற்றால்* ***சிவமே முதற்பொருள் எனவும், அப்பொருளே ஆசானாகவருவது எனவும், அவ்வாசான் உபதேசவழியே நாம் ஒழுக வேண்டுமெனவும், அதனால் சிவனருள் கிட்டுமெனவும், இதுவே பாசநீக்கமும் சிவப்பேறும் எய்து நெறியெனவும் சித்தாந்தங் கூறும் சைவத் திறன் இதுதான் எனவும் ஐயம் திரிபற உணரலாகும்.*** *இதனோடு,*

**"வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச்**
**சுத்தத் துரியம் பிறந்து துடக்கற்று**
**ஒத்துப் புலனுயிர் ஒன்றா யுடம்பொடு**
**செத்திட் டிருப்பர் சிவயோ கியர்களே"**

*என்ற திருமந்திரப் பாடலை ஒப்பிட்டுக் காண்க! களிறு 12, 13.*

### செய்யுள் - 7

## ஏகீபாவ உபாயம்

(சிவபெருமானுக்கு உடனாய் நிற்பதற்கு உபாயம்)

உள்ளம் உருகில் உடனாவ ரல்லது
தெள்ள அரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வரென் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. *பரமுத்தி நிலையினும் உள்ளம் உருகுதல் வேண்டுகை.*
2. *ஞானச் செல்வம்.*

### தெளிவுரை

### உள்ளம் உருகில் உடனாவர் அல்லது தெள்ள அரியர்

*சீவபோதம் முழுதும் கெட்டுச் சிவபோதமாதல் நல்லது என்னும் உணர்வு தோன்றிய பிறகு, அங்ஙனம் ஆகிய அவ்வொன்றுபட்டு சிவானந்த நிலையிலேயே*

*நிலைத்தற்குரிய உபாயம் யாது என்ற விசாரணை எழும். அவ்விசாரணைக்குரிய விடையினை இன்னதென இவ்வேழாம் பாடலால் ஆசிரியர் உணர்த்துகின்றார். இவ்வுணர்வுநெறி நிற்றலே பரமுத்தி நிலை என்னும் சிவானந்தானுபவச் செல்வமாகும். இச்செல்வத்தின் மேலானதொரு செல்வமில்லை. இதனையே* **சிறப்பு** *என்னும் பெயரால் நீதிநூல் கூறும்.*

*பூமியிலிருந்து உலோகங்கள் கிடைக்கின்றன. அந்த உலோகங்களில்* **பொன்** *சிறந்ததாக மதிக்கப்படுகின்றது. அதன் அருமைப்பாடும், நயப்பும் இந்தப் பெருமைக்குக் காரணங்களாகும். இரும்பு முதலியவைகளும் உபயோகமுள்ள உலோகங்களே. அவைகளும் ஒவ்வொரு காரியத்துக்குப் பயன்படுகின்றன. ஆனால் மக்களை, அணியவைத்து அழகுறுத்திப் பிறரால் மதிக்கப்படச் செய்வதில் பொன்னே முதன்மை வகிக்கிறது. நவரத்தினங்களும் இவ்விஷயத்தில் பொன்னோடு ஒன்றுபட்டு நிற்றலையும் நாம் காணலாம். எனினும், பொன்னானது பூமியினின்றும் எடுக்கப்பட்ட நிலையிலே மக்களால் அணியப்படுவதில்லை; அணியவும் இயலாது. அதனைச் சுத்தம் செய்து அதன் மாற்றினை உயர்த்தவேண்டியுள்ளது. இதற்கு மேற்குறித்த பொன் உருகித்தீர வேண்டியுள்ளது. உருகிய பொன் தான் எந்த ஆபரணத்தைச் செய்வதற்கும் ஏற்றதாகிறது. உருகுவதனால் பொன்னானது களிம்பகன்று மாற்றுயர்ந்து சிறந்த ஆபரணமாகச் சமைந்து மதிக்கப்படுகின்றது. முன்பே ஒருவித ஆபரணமாக அமைந்துள்ள பொன்கூடப் பிறிதொரு சிறந்த ஆபரணமாக மாறவேண்டின் உருகியே தீரவேண்டியுள்ளது. “சுடினும் செம்பொன் தன் ஒளி கெடாது” என்பது வெற்றிவேற்கைப் பாட்டு. மிக உயர்ந்த நயப்புற்ற பொன் இழைப்பு வேலைக்கும் பயன்படுகிறது. எனவே,* **பொன்னுக்குத் தூய்மையும் உருகிய நிலையுமே உயர்வாம் என்பது தெரியலாம்***.*

*பூமியில் பலவகையான ஜீவராசிகள் வாழ்கின்றன. அந்தச் சீவராசிகளில் மனிதன் சிறந்தவன். மனிதனுக்கு இந்தப்பெருமை அவனுடைய அந்தக் கரண விசேடத்தால் அமைந்ததாகும். அந்தக் கரணங்களுள் ஒன்றே சித்தம். அதனைப் பொதுப்பட உள்ளம் எனவும் அழைப்பதுண்டு. உள்ளம், புருடதத்துவமாம் தன்மை என்றும் கூறுப. அந்தக் கரணங்களுள் சித்தம் இது. “யாதாகற் பாற்று” எனச் சிந்தித்து அறியும். மனம் அதனை அஃது ஆமோ அன்றோ எனச் சங்கற்ப விகற்பம் செய்யும். அகங்காரம் இன்னதெனத் துணிதற்கெழும். புத்தி இன்னதென நிச்சயித்தறியும். அந்தக் கரணங்களால் அறியப்படுவன மானதக் காட்சி எனப்படும். எண்ணம் கடலலைபோல ஆன்மாவை வந்தடையும். வெளியுலகின் நிகழ்வுகள் படிப்படியாக நெஞ்சினுள் புகுந்து உள்ளத்தைக் கலக்குமாயின் உள்ளம் உலகமயமாகிறது. இங்ஙனம் உலக நடப்புகளில் அழுந்துமாயின் சித்த விகாரக் கலக்கமே விளையும். தெளிவு உண்டாகாது. உள்ளம் மாசுபடுகிறது. தெய்வத்தைக் கருதவொட்டாமல் அல்லும் பகலும் உலகாயதமாகவே ஆன்மா காலந்தள்ள நேரிடும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல், அகந்தையாதியவை குடிகொண்டு மனிதர்*

அடையவேண்டிய தெய்வ நலத்தைக் குலைத்துவிடும். மனிதன் சுயநலப் பேயாகவும் மிருகமாகவும், மாறி மடியலாகிறான். இதனால் தெய்வக் காட்சிக்கான வாய்ப்பில்லாதுபோகிறது. ஆதலால், இத்தகைய அழிவுபாட்டையும் ஆபத்தையும் தடுத்துக்கொள்வதற்காகவே அந்தக் கரணங்கள் உதவப்பட்டுள்ளன என்ற உணர்ச்சியை நாம் முதலில் அடையவேண்டும். பின்னர், அவற்றை அகமுகப்படுத்தித் தன்னையும் தலைவனையும் அறியும் நெறியிலே நடத்தவேண்டும். **ஆலயங்கள், விக்கிரகங்கள், ஆன்மநூல்கள், மடாலயங்கள், ஆசாரியர்கள், அடியார்கள்,** அவர்களின் **திருவேடங்கள் ஆகிய இவ்வெல்லாக் காட்சிகளும் மனத்தே தெய்வ சிந்தனை உருவாவதற்காகவே ஆன்றோர்களால் அமைக்கப்பட்டுள**. இவ்வுபாயங்களால் “தெய்வம் என்பதோர் சித்தம்” உண்டாகும். இந்தத் திசையில் மனம் தினம் திரும்பி நோக்குமாயின் அதுவே சுத்த நிலை அரும்பியதற்கு அறிகுறியாகும். இந்தச் சுத்தநிலையே உயிர்நிலை அல்லது அன்பின் ஆரம்பநிலை. “அன்பின் வழியது உயிர்நிலை” என்பது தமிழ்மறை. இவ்வன்புக்குரிய பெயரே **இச்சை** என்பது. இவ்விச்சை தோன்றத் தொடங்கலும், தோன்றிப் பின் மறைதலும், இடையிட்டுத் தோன்றுதலும், இடையீடின்றி நிலைத்தலும் எனப் பல திறப்படும். இவற்றுள் இடையறா நிலையதே சிறப்புடையது. மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்று நான்கு நிலையாக அன்பு கூறப்படும். மந்ததர அன்பெனப்படுவது உலகப்பற்று முக்காற்பாகமும் கடவுட் பற்றுக் காற்பாகமுமாக அமைவதாகும். மந்த அன்பாவது, உலகப்பற்றும் கடவுட்பற்றும் பாதிபாதியாக அமைவது. தீவிர அன்பாவது, உலகப் பற்றுக் காற்பாகமும் கடவுட்பற்று முக்காற்பாகமும் ஆதல். தீவிரதர அன்பாவது, உலகப் பற்று அறவே இன்றி முழுதும் கடவுட் பற்றாகவே இருப்பது. இவ்வன்பில்லாரைச் ‘சிறப்பில்லார்’ எனவும் கூறுவர். இடையறா அன்பு நிலையில் அன்பு செய்யும் உயிரும், அன்பும், அன்பு செய்யப்படும் கடவுளும் அத்துவிதமாயிருக்கும். இதனாலேயே ‘அன்பே சிவம்’ எனப்பட்டது. தீவிரதர அன்பைப் பித்து என்றும் சொல்வர். இஃதுடையார் தன்னை மறந்திருத்தலின் பித்தர் எனப்படுவர். இவ்விடையீடில்லாச் சிறப்பெனப்படும் அன்பு பரமுத்தி நிலையிலும் நிகழ்வது. இதனை அயரா அன்பு, இறவாத இன்ப அன்பு, பெரிய அன்பு, தலையன்பு, பராபக்தி என்றெல்லாம் பலபடச் சொல்வதுண்டு. கண்ணப்பதேவர் அன்பு இந்நிலைப்பட்ட அன்பேயாம்.

கணவன்மாரிடத்து இச்சை செலுத்தும் வகைகளால் மகளிர், கடையன்புடையர் - இடையன்புடையர் - தலையன்புடையர் என மூவகையாகப் பிரிக்கப்படுவர். இவர்களுள் தலையன்புடை மகளிரே சிறப்புடையர். இவர்கள் தன்னாமங் கெட்டுத் தலைவன் தாள் தலைப்பட்டோராவர். அதுபோலவே, இறைவன் அருளியுள்ள நன்றிகளை நினைந்து நினைந்து நன்றி மறவாமை நிகழ நிகழ அன்பும் பிறைமதி யெனத் தோன்றி வளர்ந்து முழுமைப்படும். இம் முழுத்த பேரன்பு சிவானந்தப் பேற்றை விளைப்பது. இந்த நிலையினரே **பரமுத்தி நிலையினர்** எனப்படுவர். இங்குக் கூறப்படும் இப்பரமுத்தி நிலையானது, நிர்க்குணப் பிரமநிலை

- அதிகார முத்தி நிலை - போகமுத்தி நிலை - இலய முத்தி நிலை ஆகிய இவற்றின் மேலானது. இதுவே சிவானந்தானுப நிலை ஆகும். சீவன் முத்திகளுள் பரமுத்தி நிலையே முந்தத் தோன்றுவது. உடம்போடிருக்கையிலேயே பரமுத்தி நிலையனுபவம் தொடங்கிவிடும். உடம்பு நீங்கிய பின்னர் உண்மை முத்தியாவது இதுவே. உயிர் நீங்குந்தனையும் சீவன் முத்திநிலை நிகழும். பரம்பொருளை அன்பினாலன்றி அறிதலாகாது. "உள்ளூறும் அன்பர் மனத்தர்" எனவும், "ஊறி ஊறி உருகும் என் உள்ளமே" எனவும், "உள்ளத்தில் தெளிகின்ற அன்பின் மெய்ம்மை உருவினையும், அவ்வன்பின் உள்ளே மன்னும் வெள்ளச் செஞ்சடைக் கற்றை விமலரையும்" எனவும் போந்த திருவாக்குக்கள் அன்பின் விளையும் ஆனந்த நிலை காட்டும். இத்தகை இடையறா அன்புநெறியில் நாம் ஈடுபடுவோமாயின் அவ்வன்பு வளர்மதி என வளர்ந்து மல இருளை ஓட்டும். அதாவது, அன்பின் வண்ணத்தராகிய சிவமே இங்ஙனம் செய்தருளுகிறார் என்பதாம். இத்தகைப் பேரன்புடைப் பரமுத்தி நிலையினரை மற்றையோர் அறிய இயலாது. சூரியன் ஒளியோடு விளங்கினாலும் கண்ணில்லாதவர்க்குக் கதிரோன் காட்சி இன்றாகும். கண்ணுடையோரே காண்பர். பொன் உருகினாலன்றி மாசு நீங்காது. ஒளி பெறாது. நற்பணியாகாது. அதுபோலவே உள்ளம் உருகினாலல்லது பாசமகலாது. பூரண அறிவு விளையாது. ஆனந்த அமைதி அமையாது. பொன், தட்டான் வசப்பட்டு நெருப்பினால் உருகி உயர்வுறுகிறது. உயிர், இறை வசப்பட்டு அவனருளால் உருகி ஆனந்தமடையும். இதுவே **அயரா அன்பு நெறி**. இக்கருத்தெல்லாம் பொருந்துமாறு இப்பாட்டில் உள்ள **'உள்ளம் உருகில் அல்லது தெள்ள அரியர்'** என்ற இடம் விளங்குகிறது என்னலாம்.

இவ்வாறு உருகிய உள்ளத்தராயபோது சீவர்கள் நிருவிகாரிகளாவர். குளிகையினாலே களிம்பு நீங்கப் பெற்ற செம்பு மாற்றுயர்ந்து பொன்னாவதுபோல அக்கினி கலந்த மெழுகென உருகிப் பேரன்பு கூர்ந்து கரையழிந்திருந்த நிலையினரும் ஆன்ம சொரூபம் மறைந்து சிவனென நிற்பர். இந்நிலையில் சிவமும் பிரிப்பின்றி நிற்கும். இவரும் சிவமெனத் தாமெனப் பிரிப்பறச் சுகிப்பர். ஆதலால், இந்த ஆனந்த நிலையினை உந்தியார் நூலில் **"உடனாவர்"** என்று குறித்தாராவர்.

போதம் - அறிவு; அது ஆன்மபோதம் சிவபோதம் என இரு திறப்படும். இவற்றுள் ஆன்மபோதம் அறிவிக்க அறிவது. ஆதலால் சிற்றறிவு ஆகும். சிவபோதம் அறிவிக்கும் திறத்தது. ஆகையாற் பேரறிவு ஆகும். கண்ணின்கண்ணும் ஒளி உள்ளது. சூரியனிடமும் ஒளி உள்ளது. கண்ணொளி காட்டக் காண்பது. சூரியனொளி காணச் செய்வது. சூரியனொளியின்றேல் கண்ணொளி காணும் திறமுடையதாகாது. அதுபோல் இறையின் அறிவால் நமது அறிவு விரிவடையும். இறையனுபவ நிலையினை எய்தும். இங்ஙனமன்றி வேறு எவ்வகையாலும் சிவசொரூபம் எய்தலரிது. ஆதலின், **தெள்ள அரியர்** என்றார் ஆசிரியர்.

## சிற்பரச் செல்வர் (சிற்பரச் செல்வம் சிவஞானம்)

*இவ்வுலக வாழ்க்கைக்கும் செல்வமே இன்றியமையாதது. "நடுவணது எய்த இருதலையும் எய்தும்'' என்பது செல்வத்தின் சிறப்பினைக் கூறுவதாகும். செல்வத்துட் செல்வம் அருட்செல்வம் எனப்படும். ''அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை'' என்பர். அவ்வருளால் விளைவதே பேரின்பம். இதுவே பெரும்பேறு. இது* **சிவப்பேறு** *எனவும் படும். சிவமே பெரும் செல்வம். சிவனே பெருஞ் செல்வர். சிவபோகமே இப் பேற்றின் பயன். முத்தி என்பதும் இதுவே. முத்தி,* **பரமுத்தி - சீவன்முத்தி** *என இருதிறப்படும். பரமுத்தியாவது, பரனாகவே பேதமற நின்று பாசத்தை விடுதல். சீவன் முத்தியாவது சீவனாகி நின்றும் சிவானுபவ மேலீட்டால் பாசத்தை விடுதல். அதாவது, சீவத் தன்மையைச் செய்வதாகிய பாசத்தை இழந்து நிற்றலாம். பரமுத்திக்கு விதேக முத்தி என்பதும் பெயராகும். சீவன் முத்தி நிலை காயமொடு மாயும். அப்போது உடம்பு தோன்றாது. சிவம் தோன்றும். அப்போது முதல்வன் முன்பு போலவே, உயிருடன் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்பன். முத்தியில் உயிரின் அறிவோடு கலந்துநின்று, வேறாய் நிற்றல் பற்றிச் சிவபோகமாய் விளங்கித் தோன்றி, உடனாய் நிற்றல்பற்றி அச்சிவபோகத்தை உயிரின் அறிவோடு உடன் நின்று அறிவன். இங்ஙனம் போகமாய் விளையும் பொற்பினனையன்றி முத்திக்கு வேறு உபகாரி எவருமிலராதலின் சிவத்தைச்* **சிற்பரச் செல்வர்** *என்றார் ஆசிரியர். சிவத்தை எய்தினோரும் மேலான ஞானபரானந்த செல்வம் எய்தி நிற்போரேயாவர். பெத்தத்தில் விடய போகமாகவும், முத்தியில் சிவபோகமாகவும் விளங்குகின்றான் இறைவன். இங்குப் பரபோக நிலை பேசப்படுதலின்* **சிற்பரச் செல்வர்** *என்றார். "பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தார் பரமே பார்த்திருப்பார்; பதார்த்தங்கள் பாரார்" என்பதன் கருத்தும் இச்செய்யுட் கருத்துக்குப் பொருந்துவதாகும்.*

*சிற்பரம் - சிதம்பரம்; சித் - ஞானம்; பரம் - பெருவெளி. சிற்பரச்செல்வர் - ஞானப்பெருவெளியாகிய முழு நிறைவினைப் பெறுவர்.*

**"போதந்தரும் எங்கள் புண்ணிய நந்தியை**
**போதந் தனில்வைத்துப் புண்ணியராயினோர்**
**நாத னடத்தானயனங் களிகூர**
**வேதந் துதித்திடப் போயடைந்தார் விண்ணே"**

*என்னும் திருமந்திரக் கருத்தும் இவ்வுந்தியார்ப் பாடலொடு ஒப்பிட்டுக் காணத் தக்கதாகும். "உள்ளம் உருகில் உடனாவர்" (2-111-4) என்னும் சம்பந்தர் வாக்கும் நினைவுகூர்வதாகும். களிறு 14-21.*

## செய்யுள் - 8

## யோக உபாயம்

(சிவனோடு கூடி நிற்றற்கு உபாயம்)

ஆதாரத் தாலே நிராதாரத்தே சென்று
மீதானத் தேசெல்க உந்தீபற
விமலற் கிடமதென் றுந்தீபற.

### கருத்துக்கள்

*1. ஆதாரயோகம்*
*2. நிராதாரயோகம்*
*3. மீதான நிலை*
*4. விமல நிலை*

### தெளிவுரை

*மூலாதாரம் உள்ளிட்ட உடலிலுள்ள ஆறு ஆதாரங்களைப் பற்றிச் செய்வது ஆதாரயோகம்.*

*நிராதார யோகம் - ஆதாரப் பற்றின்றிச் செய்வது.*

*இதன் முன்னர் உள்ள ஏழு செய்யுட்களாலும், நாம் பாச நீக்கம் பெற்றுச் சிவப்பேறடைதற்கான உபாயம் இயற்கையான சுத்த சைவ நெறியிலே கூறப்பட்டது.* ***இவ்வழி அரசவீதி போல்வதாகும். இரதமே செல்லக்கூடியது அரச வீதியாம்.*** *கடவுள் உண்டென்ற நம்பிக்கை கொண்டு அப்பொருளே ஆசாரியராக வந்தருளுகின்றதெனத் துணியவேண்டும். பிறகு குருவருளிய உபதேச நெறியே ஒழுகி வினையொழிவு செய்ய வேண்டும். வினை அறுதலால் பிறப்பு ஒழிந்துபோகும். இப்பிறப் பிறப்பற்ற நிலையே சிவபோக நிலையாகும். இதன் ஆனந்த இயல்பு வாயால் சொல்லுந் தரத்ததன்று. நம்பொருட்டே கடவுள் (சிவம்) ஒன்றாய் வேறாய் உடனாய் மன்னி உபகரிக்கின்றான். ஆதலால், எல்லாம் சிவன் செயல் என எண்ணி யொழுக வேண்டும். இத்தகைய பரமுத்தி நிலை சித்தத்தை உருக்குவதால் வருவது. இந்தப் பரமுத்தி அநுபவப் பேறுதான் சிறந்த செல்வம். இதனினும் சிறந்த பேறு வேறு இலது. ஆதலால், இப்பேறு எய்தியவரே ஞானச் செல்வராவர்.* ***இதுதான் இந்த ஏழு பாட்டுகளாலும் கூறப்பட்ட முறை. இந்த நிலை எய்தப் பெறாவிடில் அடியோடு கிட்டாதென விட்டுக் கெட்டுவிடக் கூடாதென்பது நம் நாயனார் எண்ணம். எவ்வழியினாலும் மக்கள் பேரின்பப் பெரும்பேறு அடையவேண்டும் என்பதே இவர்தம் திரு அருட் கருத்து.*** *ஆதலால், வேறேயும் ஒருபாயம் இனி வகுத்துக் கூறலுறுகின்றார் ஆசிரியர். எவ்வாறேனும் மக்கள் யாவரும் உய்யவந்த தெய்வத் தன்மையுடையாரிவர் எனக் கருதியே இவர்தம் திருப்பெயர்* ***உய்யவந்த***

**தேவ நாயனார்** என்று வழங்கப்பட்டதுபோலும்! இனி இவர் அருளிய அடுத்த உபாயங் காண்போம்.

### ஆதார – நிராதார – மீதான – விமல நிலைகள்

ஆதாரம் - உடலிலுள்ள மூலாதாரம் முதலான ஆறு ஆதாரங்கள்

நிராதாரம் - ஆதாரங்களைக் கடந்த நிலை

மீதானம் - மேலான நிலை

விமலர் - மலங்களைக் கடந்தவர் - சிவபெருமான்.

முரட்டுக் குதிரையைக் கடிவாளம் போட்டு அடக்கவேண்டும். பிறகு அதனை அதற்கென்றமைந்த சிறு வண்டியில் பூட்டி ஓட்டிப் பழக்கவேண்டும். அப்பால் அழகிய வண்டியில் கட்டிப் பலரும் அமர விரும்புமிடத்துக்கு ஓட்டிச் செல்லலாம். அதுவும் பழகியபின் நம் விருப்பப்படி நாம் விரும்புமிடம் நம்மை ஏற்றிக்கொண்டோ, இழுத்துக்கொண்டோ கொண்டுபோய்ச் சேர்க்கும். இதுபோல உள்ளதே நமது **மனம்**. இந்த மனத்தை வசஞ் செய்து விட்டால் முத்தியடைதல் எளிது. மனம் எளிதில் அடங்காது. "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது" என்பர் தாயுமானார். ஆனால், எப்படியாவது ஓடும் மனத்தை ஒடுக்கியே தீரவேண்டியுள்ளது. இதற்காகவே அட்டாங்க யோகம் வகுக்கப்பட்டுள்ளது. **யோகம் என்றசொல் தொடர்பு செய்வதெனப் பொருள்படும்**. ஒருசிலர் இந்திரியம் பொருளொடு ஒன்றுதலே யோகம் என்பர். வேறுசிலர் சிந்தனை உயிரோடு அடைதல் யோகம் என்பர். மற்றும் சிலர் பிராணன் அபானனோடு கலத்தல் யோகம் என்பர். இங்ஙனமெல்லாம் செய்வது உண்மையாக அந்தமில் யோகமாகாது. **நற்சீவன் பரத்துடன் அடைவதே உண்மை யோகமாகும்** "பயில் புறக்கரணம் அனைத்தையும் விளங்கும் உட்கரணத் திடைப்படுத்தி - மயர்வறு மனனைப்புற்கல னிடத்தி லொடுக்கி மேல்வயங்கு சட்பாவம் - இயல் தரு சடூரமீகோச மோராறு மியைந்திடாப் **புற்கலன் தன்னை** - உயர்வுற வுயர்ந்த **பரம் பொருளதனில் கூட்டுதல் யோக** மென்றுரைப்பார்" எனக் காசி கண்டம் யோக இயல்பினை நவிலுதல் காணலாம். **குதிரைக்குக் கடிவாளம் போன்று மனத்தை அடக்குவதற்குச் சுவாசம் தரப்பட்டுள்ளது**. "திரி தருவளியை யடக்கினல்லாது மனநிலை பெறாதால்" என்பர் பெரியோர். இவ்வாறு மனத்தை அடக்கப் பயில்வது **கிரியா யோகம்** எனப்படும். இக்கிரியாயோகம் **இயம** முதலாகச் **சமாதி** ஈறாக எட்டுறுப்புக் கொண்டதாகும் இப்பயிற்சியால் மனம், புறம், போகா தடங்கி ஒரு குறியில் நின்று பாவித்து மூர்த்தியாகிய தோற்றமும், சிந்தித்தலாகிய தொழிலும், சிந்திக்கின்ற தானும் பேதமறக் கலந்து நிற்கும் நிலை எய்தும். மேற்கூறிய இந்த எட்டும் சரியை, கிரியை, **யோகம்** என்பவற்றுள் கிரியையினைச் சாரும். இதனைத் **தோழநெறி** அல்லது சன்மார்க்கம் என்பர். சற்புத்திர மார்க்கம் முதலிய நான்கில் மூன்றாவது தோழ நெறியாகும். சுந்தரர் நெறி இதனை உணர்த்துவதாகும்.

| | | |
|---|---|---|
| **யோகத்தில்** | சரியை | இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் |
| | கிரியை | பிரத்தியாகாரம், தாரணை |
| | யோகம் | தியானம் |
| | ஞானம் | சமாதி |

*சரியை, கிரியை, யோகமென்னும் மூன்றும் ஞானத்தை விளைக்கும். ஞானமே முத்திக்கு ஏது. ஆதலால் ஞானத்துக்கு நேரே காணப்படும் இந்த யோகம் தவயோகம் எனப்படும். தவயோகம் சாலம்பம், நிராலம்பம் என இரண்டு வகைப்படும். அவற்றுள் சாலம்பம் என்பது வடிவத்தைப் பற்றிச் செய்வது. உபாசனை போல்வதிதுவென்பர். நிராலம்பம் அகண்டாகார சோதி பற்றிச்செய்வது.* **சாலம்பம்** *எனப்படுவதே* **ஆதார யோகமாம்.** *ஆலம்பம் என்பது ஆதாரமாம். நிராலம்பம் என்பது நிராதார யோகமாம். ஆதார யோகப் பயிற்சியால் நிராதார யோகப் பயிற்சி கைவரும். நிராதார யோகம் ஞான யோகமாம்.*

*ஆதாரங்கள் ஆறாம். அவை.* **மூலாதாரம் - சுவாதிட்டானம் - மணிபூரகம் - அனாகதம் - விசுத்தி - ஆக்கினை** *என்பன. மூலாதாரம் குதத்துக்கு இரண்டங்குலமேலது. வடிவம் முக்கோணம். நான்கிதழ்த் தாமரை. நான்கு அக்ஷரங்கள். தேவதை* **விநாயகர்.** *மேற்சொன்னவாறு இந்தத் தேவதையில் மனம் லயித்துத் தன்னை மறத்தல் முதற்படியாம். சுவாதிட்டானத்தானம் இலிங்க மூலம், வடிவம் ஆறுகோணம், ஆறிதழ்த் தாமரை, ஆறு அக்கரங்கள். தேவதை* **பிரமதேவர்.** *முன் சொன்னவாறே இத்தேவதையில் மனலயமடைதல் இரண்டாம்படியாம். மணிபூரகத்தானம் நாபி, வடிவு, மூன்று வட்டம், பத்திதழ்த் தாமரை, பத்து அக்கரங்கள்,* **தேவதை விஷ்ணு.** *அனாகதத்துக்குத் தானம் இருதய கமலம். வடிவு முக்கோணம். பன்னீரிதழ்த் தாமரை. பன்னிரண்டக்கரங்கள்.* **தேவதை உருத்திரன்.** *விசுத்திக்குத் தானம் கண்டம். வடிவு அறுகோணம். பதினாறிதழ்த் தாமரை. பதினாறு அக்கரங்கள்.* **தேவதை மகேசுவரன்.** *ஆக்கினைக்குத் தானம் புருவநடு, இரண்டிதழ்த் தாமரை. இரண்டு அக்கரங்கள். அதி* **தேவதை சதாசிவர்.** *மேல் இரண்டாம் படிக்குக் கூறியவாறே ஒவ்வொரு படியிலும் பழகுதல் வேண்டும். அந்தந்தத் தேவதை மயமாகத் தானாகும் பழக்கம் இதனால் சித்திக்கும். இது நாத வடிவாக விளங்கும் குண்டலினி சத்தி சொரூபம் அல்லது அசபா சத்தி சிவசொரூபமாய் நிற்கும் முறையெனப்படும். இந்தப் பழக்கம் கைவரப் பெற்றாலன்றி அகண்டாகார சோதியில் மனோலயமடைதல் இயலாது. ஆதலால் நாயனார்* **நிராலம்ப யோகத்துக்கு மூலமாய் நிற்பது சாலம்ப யோகம்** *என்பார்.* **“ஆதாரத்தாலே சென்று”** *எனக் கூறியுள்ளார். இதன் பின்னர், அசபையுடன் சென்றணைந்து பிரமரந்திரத்துள்ள ஆயிரம் இதழ்த் தாமரையை மலர்த்தி ஆங்குள்ள சந்திர மண்டலத்தை மூலாக்கினியினால் இளக்கி உடலில் அமுதம் நிரம்பத் தியான நிலையில் இருக்க நேரும். இங்குக் காண்பது பூரணப் பிரகாசமாம். இதனைச் சுந்தரச் சோதி என்பர். எனவே* **தேவதைகளைத் தியானித்துச் சமாதியடைதல் ஆதாரயோகமாயிற்று.**

இங்ஙனம் தேவதாத்தியான சமாதிநிலை கைவந்த பின்னர் நிகழ்வது ஆன்ம சொரூபம். இங்கு ஆன்ம போதநிலை நிகழ்வது. தேக முதலிய வாதனைகளில்லை. எந்த ஆதாரத்தையும் பற்றாமல் கேவலம் **ஆன்ம சொரூபயமயமாகச் சமாதி எய்துதலால்** இந்நிலை **நிராதார யோகம்** எனப்படும். அதாவது இங்கு அறிவு மட்டிலே சேட்டிப்பதாகும் என்ப. இதுவும் ஓர் இன்ப நிலைதான். என்றாலும் இதற்கு மேலும் உள்ள ஆனந்த நிலையை அடைவதே உண்மை முத்தியாகும். நிராதார யோகநிலைப் பழக்கம், "என்னில் யாரும் எனக்கினியாரிலை" என்ற கூற்றின் உண்மையை அநுபவத்தால் படிப்படியாக உணரவைத்து ஆன்மாவுக்கும் உள்ளீடாய் இருக்கும் சிவத்தை அதன் சொரூபத்தையுணர்ந்தழுந்தி யதீத நிலைப்படுமாறு கூட்டுவிக்கும். அதாவது "என்னிலும் எனக்கு இனியான் ஒருவன் உளன்" என்ற திருவருள் நிலைக்கு ஏற்றுவிக்கும் என்பதாம். சுருங்கக்கூறின், ஞானபூசைக்குரியவனாக்கும். இதுவே சன்மார்க்க நிலை எனவும் படும். இது சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று நிலைகளினும் மேம்பட்டதாதலின் இதனை **"மீதானத்தே செல்க"** எனக் கூறியுள்ளார் ஆசிரியர். ஒருசிலர் ஆத்மானந்தமே முத்திப்பேறெனக் கொண்டு ஆத்ம சொரூபத்துக்கான நிராதார யோகமே சாலும் என்பாராதலால், அதனினும் மேம்பட்ட சன்மார்க்க நிலைக்குச் செல்லுக என ஆணையிடலாயினர் ஆசிரியர். ஞானமே சிறந்த உபாயமாகும். இதனால் இறைவனுடைய தடத்தலக்கணம் அறியப்பட்டுப்பின் சொரூப இலக்கணத்தை உணர்ந் தந்தநிலையிலழுந்தல் நிகழும். சிவ சொரூபத்தில் அழுந்துவதே **சிவயோகம்** எனப்படும். இதன் விளைவே சிவபோகமாம்.

இந்தச் சிவபோகத்தை அடைதலே முடிந்த நிலையாம். இந் **நன்னெறி** யாதென்பதும் காண்போம். எல்லாக் கலைகளையும், கருமகாண்டங்களையும், சமய சாத்திரங்களையும் கற்று, ஆராய்ந்து அவை பல வழிகளை மயங்கக் கூறுதலைக் கண்டு கழித்துவிடவேண்டும். பின்னர், இவற்றின் மேலான தெளிவுடைய செய்திகளான பதி - பசு - பாசங்களின் தடத்த இலக்கணங்களையும், அவற்றுள் பசு - பாசங்கள் நீங்கிய பதியின் சொரூப இலக்கணத்தையும் தெரிவிக்கின்ற ஞானசாத்திரங்களைத் தானாகக் கற்கவேண்டும். "கற்க-கசடற-கற்பவை" என்பதன் கருத்து இதுவே. பின்னர் ஆசிரியரிடத்துக் கேட்டுச் சிந்தித்தல்வேண்டும். அங்ஙனம் சிந்திக்கும்போது காண்பான் - காட்சி - காணப்படும்பொருள் பற்றிய சவிகற்ப ஞானத்தைக் கடக்கவேண்டும். பிறகு அத்துவிதமாய் இயைந்த அகண்டாகார சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமானிடம் நிருவிகற்ப ஞானத்தால் வழிபட வேண்டும். இது அறிவுத் தொழில் மாத்திரையால் நிகழ்வதாகும். சிவத்தினது அருவம் - உருவம் - அருவுருவம் என்ற மூன்று திருமேனிக்கும் மேலான சொரூபத் திருமேனியிடமாக நிகழ்த்தப்பட வேண்டும். இதுவே **ஞான மார்க்கமாகும்.** இந்தச் சிவசாயுச்சியமாகிய பரமுத்தித்தானமே **''விமலற்கு இடம் அது''** என்ற சொற்றொடரால் இங்குக் குறிக்கப்பட்டுள்ளது. இச் சத்திய நெறியில் ஆராய்ச்சி அடங்கி அநுபவமே அமைகிறது. இவ்வனுபவம் ஞானாசாரியராலே குறிக்கப்படும்

*அநுபவமேயாகும். இதுதான் நின்மல சிவனைக் கூடத்தக்க இடமாம். இதுவே தெளிவாம்.*

*இவ்வாறு இந்தச் செய்யுளில் யோக நிலைகள் சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை காணலாம். ஞானாசாரிய மூர்த்தமாகச் சிவம் அருள்புரிவது* ***சாதாரம்*** *எனப்படும் என்பது முன்பே கூறப்பட்டுள்ளது. இச் சிவபோகம் சித்தியாரில் "அறியாமை அறிவகற்றி" என்ற செய்யுளில் கூறப்படுதல் காணலாம்.*

**"நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி**
**உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்**
**பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்**
**சிற்றம்பல மென்று தேர்ந்துகொண்டேனே"**

*முதலாய திருமந்திர மொழிகள் இவ்வுந்தியார்க் கருத்துக்குதவுவனவாம். களிறு 22*

## செய்யுள் - 9

## ஆதாரயோகப் பயன்

ஆக்கிலங் கேயுண்டாய் அல்லதங் கில்லையாய்ப்
பார்க்கிற் பரமதன் றுந்தீபற
பாவனைக் கெய்தாதென் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. ***ஆதாரயோக தேவதைகள் போக பதங்களே தரும்.***
2. ***சிவம் பாவனைக்கு எட்டாதது.***

### தெளிவுரை

***ஆதாரயோகம்,*** *நிராதார யோகத்துக்கு அடிப்படையாக உள்ள பயிற்சியேயாகும். வானத்தே உள்ள கண்ணுக்குத் தெரியாத நட்சத்திரத்தைக் கிட்டத்தே தெரியும் மரக்கிளையொன்றைக் காட்டி அதன் வழியே தெரிவிப்பது போலவே, பரமுத்தியடைவது எளிதன்றாதலால் அதனை அடையச் செய்வதற்கு உபாயமாக ஆதாரயோகம் கூறப்படுகிறது. ஆதாரயோகப் பயிற்சி முழுதும் தற்போதத்தோடு செய்யப்படுவது. மூலாதாரம் முதல் பிரமரந்திரம் ஈறாக உள்ள ஆதாரங்களிலே அந்தந்த இடத்துக்குரிய தேவதைகளைத் தியானிக்க*

வேண்டியுள்ளது. இந்தத் தியானம் தற்போதத்துடனே நிகழ்வதாகும். **தியானிக்கும்போது அந்த அந்தத் தானத்தில் தேவதைகள் உளவாகக் காணப்படும்.** அந்த அந்தத் தேவதைகளும் அவ்வவற்றுக்குரிய பயன்களையே தரவல்லன. இவை அண்டத்துக்கு உட்பட்ட பதங்களேயாகும். பரிபூரண சாயுச்சியத்தைத் தரும் வன்மை இத்தேவதைகட்கு இல்லை. தியானிக்காதபோது இத்தேவதைகள் இலவாகின்றன. ஆன்மபோதம் அதோமுகமாகவே சீவிப்பதாம். இப்போதம் கற்பிக்குமவையெல்லாம் மாயாரூபமே. சிவரூபம் மாயா ரூபமன்று. மேற்சொல்லப்பட்ட தேவதைகளைப் போலப் பாவனைக்கு எட்டுவதன்று சிவ சொரூபம். ஆகையால் ஆதாரயோகப் பயன் சிவ சொரூபமன்று என்று தெரிவிக்க வேண்டிய **"ஆக்கில் அங்கே உண்டாய் அல்லது அங்கு இல்லை ஆய்"** என இச் செய்யுளில் உரைக்கப்பட்டது. இதனால் ஆதாரயோகப் பயன் யாவும், தவப் பயனாகி ஞானத்துக்கு வழி செய்யும் எனத் தெரியலாகும். அதாவது, தவப்பயனில்லையாயின் குருவருதல் இல்லை. குருவினாலேயே ஞானம் நிகழும். எனவே ஞானம் நிகழ்தற்குச் சரியையாதிகள் முதற் காரணமும் குருதுணைக் காரணமுமாம். ஆதாரயோகமும் சரியையாதியான யோகத்துள் கிரியாயோகம் எனப்படும். **யோகத்தின் பயன் சாரூபமாகும். சிவ சாயுச்சியமே மேலானது.** இந்த ஆதாரயோகம் அதனைத் தாராமையால் **"பார்க்கில் பரமதன்று"** எனப் பாடல் கூறுகின்றது. பார்க்கின் - ஆராய்ந்து பார்த்தல். பரமது அன்று - சார்பினால் தோன்றுவது அன்று. பரம் - சார்பு.

பாவனைக்குக் காரணமாயிருப்பது மனம். அதாவது சீவபோதம். பாவனைகள் நான்கு வகைப்படும். எந்தவிதப் பாவனையிலும் தற்போதம் முனைத்தே நிற்கும். பாவனை கடந்த பொருளே சிவம். ஆதலால், சிவம், தற்போதத்தோடு கூடியதான எந்தப் பாவனைக்கும் எட்டாது. அண்டத்துக்குட்பட்ட தேவதைகளே பாவனைக்கு எய்துபவை. ஆதாரயோகம் பாவனையோடு கூடியதொன்று. ஆகையால் சாயுச்சியம் அல்லது சிவனடியடைதல் இந்த யோகத்தால் இயல்வதென்று என்பார். **"பாவனைக்கு எய்தாது"** எனவும் இச் செய்யுட்கண் கூறியருளினர் ஆசிரியர். யோகநூலார் கூறும் பாவனை - கருவிகளோடு கூடி நின்று பாவித்தல் - கருவிகளை நீங்கி நின்று பாவித்தல் - இவ்விருவகையுமின்றிப் பாவித்தல் - எட்டாப் பொருளை எட்டியதாகப் பாவித்தல் என்பனவாம். இவ்வித பாவனைகளால் முறையே அசத்தாகிய சுட்டுப் பொருளும் - துரியாதீத கேவல அவத்தையும் - சூனியப் பொருளும் - போலிப் பாவனையுமே அறியப்படுவன. முதற்பொருள் அவனது திருவருளாலேதான் பாவிக்கப்படவேண்டும். அத்திருவருளே குருவருளென்க. "பாவனை இறந்து நின்று பாவிக்கப் படுவதாகும் பரம்பரன் அருளினாலே" என்பது சித்தியார். ''பாவிக்கின் மனாதிவேண்டும்'' என்ற சிவப்பிரகாசப் பாடலும் இஃதுணர்த்தும். **"யோக நிர்வாணமே உற்ற பரோதயம்"** என்பது திருமந்திரம். களிறு 23, 24.

### செய்யுள் - 10

### சுத்த நிராதார யோகத் தியல்பு

அஞ்சே யஞ்சாக அறிவே அறிவாகத்
துஞ்சா திருந்துணர்ந் துந்தீபற
துய்ய பொருளீதென் றுந்தீபற.

**கருத்துக்கள்**

1. ***பஞ்ச பூதங்களின் பரிணாமமாகிய அண்டம், பிண்டம் இவற்றின் நீங்கித் தன்னை அறிதல்.***
2. ***சிவத்தைப் பற்றுதல்.***
3. ***கேவல சகலத்தில் தாக்காதிருத்தல்.***

**தெளிவுரை**

*சிவயநம என்னும் அஞ்சு எழுத்தே, இறை, அருள், உயிர், மறைப்பாற்றல், மலம் என்று ஐந்து பொருள்களாக உள்ளது என்னும் திருவருள் ஞானமே, உனக்கு அறிவாகக் கொண்டு, மலவாதனையால் மயங்காமல் இருந்து, சிவபரம் பொருளை இடைவிடாது தியானித்து இருப்பாயாக. அந்நிலையில் தூய்மையே வடிவாகிய சிவபெருமான் இவனே என்பதை நீ உள்ளவாறு உணர்வாயாக.*

| | |
|---|---|
| *சி - சிவம்* | *நமசிவய - தூல ஐந்தெழுத்து* |
| *வ - சத்தி* | *சிவயநம - சூக்கும ,,* |
| *ய - உயிர்* | *சிவயசிவ - அதிசூக்கும ,,* |
| *ந - மறைப்பாற்றல் (திரோதான சத்தி)* | *சிவசிவ - காரண ,,* |
| *ம - மலம்* | *சிவ - விட்டுவிடாத ,,* |
| | *சி - நாயோட்டு மந்திரம்* |

*அஞ்சு - திருவைந்தெழுத்து*
*அஞ்சு ஆக - அஞ்சு பதங்களாக*
*அறிவே அறிவாக - திருவருள் கண்டு கொண்டு காண்பது*
*துஞ்சாது இருத்தல் - மறவாமல் இருத்தல் என்றும் பொருள் கூறலாம்.*

*'இருந்துணர்ந்து' என்னும் பாடம், இந்நூலில் கொள்ளப்பட்டுள்ளது. 'உணர்ந்திருந்து' என்றும் பாடம் உண்டு. ஆயினும் பொருள் மாறுபாடு இல்லை. 'துஞ்சாது இருந்து' என்னும் தொடருக்கு, 'மல இருளில் பட்டு மயங்காது இருந்து' என்று பொருள் கூறுவாரும் உளர். (களிறு 25).*

*உலகம் வேறு; ஆன்மா வேறு. உடம்பு வேறு; ஆன்மா வேறு. உலகத்தையே ஆன்மாவாகக் கருதுதல் மிகவும் மடமையாம். உடம்பை ஆன்மாவுக்கு*

இருப்பிடமாகக் கருதாமல் ஆன்மாவாகவே கருதுதல் பெருவழக்காக உள்ளது. உலகம் எப்படி நமக்கு அந்நியமாகக் காணப்படுகிறதோ அப்படியே உடம்பும் நமக்கு வேறானதே. உடம்பு சடப்பொருள். அதற்கு அறிவு இச்சை செயல்கள் இல்லை. அறிவு முதலிய மூன்றுமுடைய பொருள் ஆன்மாவேயாம். உயிர், கண்ணாற் காணப்படும் பொருளன்று. காணப்படும் **உடம்பின் போக்குவரத்தாகிய காரியத்தைக்கொண்டு காரணமாகிய உயிர் உண்டென நிச்சயிக்கப்படுகின்றது**. உலகின்மேல் வைத்துப் பதிப்பொருள் உண்டென்று கருதப்படுகிறது. உடம்பின்மேல் வைத்துப் பசுப்பொருளுண்மை கருதப்படும். சமயவாதிகள் பற்பலர் பற்பலவாறாக உயிருண்மை பற்றி மயங்கிக் கூறுவர். சூனியமே ஆன்மாவெனவும், தேகமே ஆன்மா எனவும், இந்திரியமே ஆன்மா எனவும், அந்தக் கரணமே ஆன்மா எனவும், சூக்கும தேகமே ஆன்மா எனவும், பிராணனே ஆன்மா எனவும், விஞ்ஞானமே ஆன்மா எனவும், யாவுங் கூடிய சமுதாயமே ஆன்மா எனவும் இவ்வாறு எட்டுவிதமாக மயங்குவதுண்டு. அவற்றையெல்லாம் ஞானநூற் கல்வி கேள்விகளால் ஆய்ந்து தெளிதல் வேண்டும். அங்ஙனம் தெளியுங்கால் ஆன்மா மேற்சொல்லப்பட்டவையன்றென விளங்கும். அப்போது குரு திருவருளால் அந்த ஆன்மாவினைப் பற்றிய உண்மையை பஞ்சாக்கர உபதேச மூலமாகத் தெள்ளென அனுபவ முறையால் தெரியலாகும். இங்ஙனம் தெளிந்தபோது ஆன்மாவினது இச்சை யாதி மூன்றும் தற்போத ஒழிவு பெற்றுச் சிவத்தினது இச்சையாதிகளுள் ஒன்றும், இங்ஙனம் ஒன்றுபடுதலால் அநாதி காலமாக ஆன்மாவினுக்குள் மறைந்து நின்று காத்துவந்த சிவம் இவனைக் கவர்ந்துகொண்டு தானே ஆன்மாவாக நின்று நடத்தும். இதுவே சிவத்தோடு இரண்டறக் கூடுகிற வழியாகும். இதனையே, "**அஞ்சே அஞ்சாக அறிவே அறிவாகத் துஞ்சாதிருந்துணர்**" என்றார் ஆசிரியர். இங்ஙனம் ஆன்மாவுக்குள் சிவம் மறைந்திருந்த வண்ணம், **சிவத்தினுள் ஆன்மா அடங்கி நிற்றலே நிராதார யோகமெனப்படும்**. ஆன்மாவினையே ஆதாரமாகக் கொள்ளாமல் சிவமே ஆதாரமாகக் கொண்டு அங்ஙனம் கொள்ளுமறிவும் மறைந்து விடுவதே இந்த வழியாகும். இங்ஙனமின்றி ஆன்மானந்தத்தே அழுந்தித் தற்போதம் ஜீவித்தே சுகிப்பதும், காயத்தையே சித்திசெய்து ஜீவிப்பதுமாகிய இவையெல்லாம் பகைவழிகளாகும். இந்த உண்மை தீட்சையிலே ஆசாரியனால் ஐந்தெழுத்தில் நிற்குமுறை கூறி அனுபவரீதியாகும்படி உபதேசிக்கப்படுகின்றது. இதுவே ஓரூருக்குச் செல்லும் பழக்கமுடையவரும் ஆப்தரும் காட்டிவிட்ட நல்லவழி போல்வது. இக்குறித்த வழிச் செல்லாமல் பக்க வழியாய்க் கவர்த்த வழிகளிலே சென்றால் (அதாவது) ஒற்றையடிப் பாதையாகிய குறுக்கு வழியே சென்றால் கள்ளர் முதலியவர்களால் கூறையாதிய பறிக்கப்பட்டு விதனப்பட நேரும். இந்தப் பக்கவழியே படராமல் இராச வீதியாகவே சென்றால் வியாகூலம் அடையாமல் ஊரடைந்து வீடடைந்து தன் கோட்பாடு முடித்துக் கொள்ளலாம். இம்மாதிரியே நிராதார யோகம் மேற்கொள்வோர், குருவின் உபதேசவழி நின்று சிவ சொரூபத்திலே இரண்டறக் கலத்தலாகிய மயக்க விகற்பமற்றதும், கேவல சகலத்திலே தாக்காததும், சனன மரணத்துக்கு ஏதுவில்லாததுமான வழியிலே சிவத்தினது உணர்வே கண்ணாகக் கொண்டிருக்க வேண்டும் என நாமறிதல் தக்கது.

*இவ்வாறு ஒன்றுபட்டொழுகும் இந்த நெறியே வேதங்களிலும் ஆகமங்களிலும் கூறப்படுவது எனத் தெளிதலே உண்மை நிட்டையாகும். ஆதலால், ஆசிரியர், “**துய்ய பொருள் ஈது**” என்று முடித்துக் கூறியுள்ளார். மற்றும் இக் கருத்துடன்*

**“விஞ்ஞானத் தோர்க்கு ஆணவமே மிகுதனு;**
**தஞ்ஞானத் தோர்க்குத் தனுமாயை தானென்ப!**
**அஞ்ஞானத் தோர்க்குக் கன்மம் தனுவாகும்;**
**மெய்ஞ்ஞானத் தோர்க்குச் சிவதனு மேவுமே”**

*என்பனவாதிய திருமந்திரக் கருத்துக்களை ஒப்பிட்டுக் காண்டலும் தகும். களிறு 25.*

### செய்யுள் - 11

## தற்போதத்தின் இழிபு

தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரன்
நோக்கின் குழையும் என்றுந்தீபற
நோக்காமல் நோக்க என்றுந்தீபற.

### கருத்துக்கள்

1. ***தற்போதம் இரண்டுபட்ட தன்மையது.*** *(தற்போதம் - தனதறிவு)*
2. ***சிவம் தற்போதத்துக்கு எட்டாதது.***
3. ***தற்போதம் இழந்தால் சிவசொரூபியாகலாம்.***

### தெளிவுரை

| | |
|---|---|
| *தாக்குதல்* | *- எல்லாப் பொருள்களிலுந் தோய்ந்து ஒன்றாய்ப் பிரிவற நிற்றல்.* |
| *தாக்காது நிற்றல்* | *- அவற்றின் தன்மை தனக்கு எய்தலின்றித் தன்னியல்பு குறையாமல் தனித்து நிற்றல்.* |
| *தற்பரம்* | *- தனக்குத்தானே பரம் - தனக்குவமையில்லாத சிவபெருமான்.* |
| *நோக்குதல்* | *- யான் ஆராய்கின்றேன் என்னும் உயிர் முனைப்புடன் ஆராய்ந்து காணப்புக முயற்சித்தல்.* |

*நோக்காமல் நோக்குதல்* - *நோக்குதற் கருத்தா தானே என்னும் எண்ணத்தை விட்டு அவனருளே கண்ணாகக் கொண்டு பார்த்தல்.*

*குழைதல்* - *உருவறச் சிதைதல் - புலப்படாது மறைதல்.*

*தற்போதம்* - *தன்னறிவு - சிற்றறிவு.*

*சிவபரம்பொருள் ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்கும் பெருந்தகைமை உடையது. எப்பொருளிலும் கலந்து நிற்கும் அந்த மெய்ப்பொருள் எதனாலும் தொடக்குறுவதில்லை. தன்னை நோக்கிச் சரண் புகுவார்க்கு அப்பரம்பொருள் குழைந்து அருள்பாலிக்கும். இவ்வாறு நோக்கும் உயிர்கள் தன் முனைப்போடு தன் அறிவால் நோக்காது அவன் அருளே கண்ணாகக் காணில் உடனே இரங்கி அருளும்.*

*"எவ்வெவர் தன்மையும் தன் வயிற்படுத்துத் தானே ஆகிய தயாபரன்" என்று மாணிக்கவாசகர் அருளிச் செய்கிறார். உலகத்துப் பொருள்களில் அணுத்தோறும் கலந்து நின்றாலும் அக்கலப்பினால் பாதிக்கப்படாமல் நிற்கின்ற இயல்பினை உடையவன் இறைவன். அவன் எங்கோ தொலைதூரத்தில் இல்லை. நம்மோடு மிக அருகே யாவற்றிலும் கலந்து நிற்கிறான். இத்தகைய தன்மை உடையவன் ஏன் உயிர்களால் அறிய முடியாமல் இருக்கிறான் என்று வினவில், நான் அறிகிறேன் என்ற முனைப்போடு அறிய முற்படும்போது அவன் எட்டாப் பொருளாயும் திருவருள் வழியே தேடுவார்க்கு எட்டும் பொருளாயும் விளங்குகின்றான்.*

**தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரன்**

*இறைவன் ஆன்மாவுடன் கூடி ஆன்மாவாய் நிற்பன். அங்ஙனம் நில்லாவிடில் உயிர் எதனையும் விரும்பி அறிந்து அனுபவியாது.* ***ஆன்மா இறைவனுக்குச் சூக்கும சரீரம்*** *என்றும் கூறுவர். ஆன்மாவைச் செலுத்துதற்கு இறைவன் இங்ஙனம் இருந்தே தீரவேண்டும். இறைவனுடைய வியாபகத்தன்மைக்கும் இங்ஙனமிருத்தல் வேண்டுவதாகும். இறைவன் உயிருடன் அத்துவிதமாய் நிற்கின்றான் என்பதன் கருத்தும் இதுவே. உயிர்கள் நிலைத்து அறிந்து அனுபவித்தற் பொருட்டே இறைவன் உயிருடன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் தாக்கியும் தாக்காத தன்மையில் நிற்கிறான்.* ***"பண்ணிசை - பரிதிமதி - திலதயிலம்*** *என மூன்றுவமைகள் ஒன்றாய் நிற்றற்கும்;* ***தீயிரும்பு - பாணியுப்பு - விண்அநிலம்*** *என மூன்றுவமைகள் வேறாய் நிற்றற்கும்;* ***உடல் உயிர் - நீர் நிழல் - உள்ளிப் பளிங்கு - பகல் விளக்கு - பால் நீர் - கண் இரவி - உணர்வு ஒளி"*** *என ஏழுவமைகள் உடனாய் நிற்றற்கும் நூல்களில் கூறப்படும். இவ்வளவு ஒன்றுபட்டிருப்பினும் உயிர் செய்யும் வினைப் பயன்கள் இறைவனை அடைய மாட்டா. தாமரையிலையில் தண்ணீர் ஒட்டுவதில்லை என்பது யாவரும் அறிவர். உயிருக்கே மல பந்தம் உண்டு.*

இறைவனுக்குப் பந்தமென்பதே இல்லை. உயிர்களின் மலம் நீங்கும்பொருட்டு வினைப் பயன்களை உயிர்கட்கு இறைவன் ஊட்டியருளுவன். தான் அனுபவியான். உயிர்களிடம் முதல்வன் சங்கற்ப மாத்திரையில் கருத்தாவாகவுள்ளான். ஆதலால் உயிர்கள் அடையும் வேறுபாடு முதல்வனை அடையாது. சூரியன், ஒளியோடு பிரிப்பில்லாமல் நின்று கண்ணுக்குப் பலவேறு வகைப்படக் காணும் தொழில் செய்தாலும் விகாரத்தை அடையமாட்டான். அவ்வாறே இறைவன் அருளோடு பிரிப்பின்றி நின்று உயிருக்குப் பல்வேறு வகைப்பட அறிவு நிகழும்படிச் செய்தாலும் விகாரம் எய்தான். இறைவன் வியாபக அறிவுடையவன்; யாவற்றையும் ஒருங்கே அறிந்து நிற்பன். ஏகதேசமாய்ப் பகுத்தறிதல் இறைவனுக்கில்லை. ஆகையால் பாசம் சிவத்தைத் தாக்காது. இங்ஙனம் அறிந்தாங்கறியும் தன்மையுடைமையின் இறைவன் சர்வ வியாபகனாகித் தற்பரன் எனப்படுவன். அரசற்கு மேல் அதிகாரி இல்லாமைபோல இறைவற்கு மேம்பட்டாரிலர். இவையாவும் தெரிதரு மாறு **“தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரன்”** என இறைநிலையினைத் திருவுந்தியார் ஆசிரியர் ஈண்டுக் குறிக்கலாயினர். தற்பரன் - உயிர்களின் அறிவு இச்சை செயல்களுக்கு எட்டாத நிலையில் - வியாபித்து நிற்கும் இறைவனைக் குறிக்கும்.

சிவபோகம் என்பது ஆன்மாவின் அறிவிச்சை செயல்கள் சிவத்தினது அறிவிச்சை செயல்களோடு ஒன்றுபடுதலாம். இது இரண்டு பொருள்கள் ஒன்றாம் தன்மையுணர்த்துவது. இந்நிலையில் உயிருக்குத் தனித்து நின்றறியும் தன்மை இராது. அனுபவித்தல் ஒன்றே நிகழும். அதாவது சிவம் காணுகிறது என்பது கருத்தாம். பெத்த நிலையில் சிவம் உயிருக்குக் காட்டுதல் உதவி புரிகிறது. முத்திநிலையில் காணுதலைச் செய்கின்றது. ஆதலால், இந்நிலையில் உயிர்வேறு இறைவேறு என்ற பிரிப்பு இல்லை. அவ்வாறின்றி ஜீவபோதம் தலைப்பட்டுப் பிரித்துக்காண நேருமாயின் சிவம் உயிர்களால் அறியப்பட இயலாது. ஆதலால், **“நோக்கின் குழையும்”** என்றார்.

இதனால் நாம் சிவ போகத்து ஒன்றுபடுதல் வேண்டுமாயின், இறைவன் உயிர்களிடம் தாக்கியும் தாக்காமல் இருப்பதுபோல் நோக்கியும் நோக்காமல் ஒழுகவேண்டும். சிவம் உயிராகியே நின்ற முறைமை போல் உயிரும் தன்னைத் தோற்றாமல் சிவ சொரூபம் தானாகவே நிற்கவேண்டும். இதுவே பரிபூரண பரமானந்த சொரூப நிலை எனப்படும். ஜீவனுடைய அறிவு சிவத்தினுடைய அறிவோடு கலந்து நிற்றலே **“நோக்காமல் நோக்க”** எனப்பட்டது. இங்ஙனம் ஒன்றுபடு நிலைமையே குரு உபதேசத்தால் அறியப்படுவதாகும்.

**“மலமில்லை மாசில்லை மானாபி மானம்**
**குலமில்லை கொள்ளும் குணங்களு மில்லை**
**நலமில்லை நந்தியை ஞானத் தினாலே**
**பலமன்னி அன்பிற் பதித்து வைப்போர்க்கே”**

**"நினைப்பும் மறப்பும் இலாதவர் நெஞ்சம்
வினைப்பற் றறுக்கும் விமலன் இருக்கும்;
வினைப்பற் றறுக்கும் விமலனைத் தேடி
நினைக்கப் பெறிலவன் நீளியன் ஆமே"**

*என்னும் திருமந்திரப் பாடல்களின் கருத்துக்களை இவ்வுந்தியார்க் கருத்துக்களுடன் ஒப்பு நோக்குதலும் கூடும். களிறு 26.*

### செய்யுள் - 12

### ஞான குருவின் மேன்மை

மூலை இருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியர் என் றுந்தீபற
தவத்தின் தலைவர் என் றுந்தீபற.

**கருத்துக்கள்**

1. ***தற்போதம் நீக்கி உபகரிப்பவர் உபாயகுரு.***
2. ***வரங்களைத் தருபவரும் குருவே.***

**தெளிவுரை**

*மூலை - உயிரின் கேவலநிலை; முற்றம் - சகல நிலை.*

*உயிர் மூன்று நிலைகளை உடையது. இந்த மூன்று நிலைகளும் முறையே கேவலம், சகலம், சுத்தம் என்று கூறப்படும்.* **கேவல நிலையிலே** *உயிர் ஆணவ மறைப்பால் மூடப்பட்டுக் கருவி கரணங்கள் இன்றி அறிவு, விழைவு, ஆற்றல்கள் அற்றுக் கிடக்கும். அதற்குத் தன்னைப் பிணித்துள்ள தளையும் தெரியாது. தனது இழிநிலையும் தெரியாது. தானாக முயன்று தளையிலிருந்து விடுபடவும் அதற்கு வலிமையில்லை.*

*இந்த நிலையில் அவற்றுக்குப் பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண் கருவி கரணங்களைத் தந்து உடல், கருவி, உலகம் நுகர்ச்சிப் பொருள் ஆகியவற்றை இறைவன் கூட்டுகிறான். இவ்வாறு அருள்பாலிப்பது, அவற்றின் மீது இறைவன் கொண்ட பெருங்கருணையாலேயன்றிப் பிறிதில்லை. இந்த நிலை* **சகல நிலை** *என்று கூறப்படும். இத்தகைய சகல நிலையிலே மாறி மாறிப் பிறந்து இன்பத்*

*துன்பங்களை நுகர்ந்து உயிர் பக்குவம் பெறுகிறது. பக்குவம் அடைந்த உயிர்களுக்கு இறைவனே ஞானக் குரவனாக எழுந்தருளி அவற்றைத் தனது அருள் வழியிலே விடுதலை பெற்ற பேரின்ப நிலையிலே உலவவிடுகிறான். இதுவே* ***சுத்தநிலை*** *எனப்படும்.*

*ஒருவன், தன்னை அழகுபடுத்தும் நவரத்தினங்களை வாங்க எண்ணுவானாயின் தானே நேரிற் கண்டு கொண்டுவருவதில்லை. இரத்தினத்தின் தன்மைகளான நன்மை தீமைகளொன்றும் தானறியாதபடியினால், இரத்தினப் பரீட்சை அறிந்தாரொருவரை நாடித் துணைக்கொண்டு நல்லரத்தின இயல்பறிந்து கொண்டு பூண்பர். இவ்வாறே சிவத்தியல்பினை முற்ற அநுபவித்து ஞானமயமாயுள்ள குருவின் துணையின்றி யாரும் சிவபோகம் பெற இயலாதென்பதை அறியலாம். கிணற்றுள் வீழ்ந்து தவிக்கும் ஒருவனைக் கரையில் நின்று வேடிக்கை பார்ப்போரும் கனிவு கொள்வோரும் கரையேற்றிவிடல் முடியாது. கிணற்றுள் குதித்து நீந்தித் தன்னோடணைத்து மேலுக்குக் கொண்டுவரும் திறமுடையவனே கரையேற்ற முடியுமென்பதை யாவரும் அறிவர். இங்ஙனமே பாசத்துள் அழுந்தி வேதனைப்படும் ஒருவரை, அப்பாசமறப் பெற்ற உபாயமறிந்த ஞானகுருவே கரைசேர்க்க இயலும். தண்ணீராலன்றிப் பிற எந்தப் பானத்தாலும் தாகம் நீங்காது. உணவினாலன்றிப் பசி தணியாது. ஒளியினாலன்றி இருள் நீங்காது. இவ்வாறே ஞானத்தினாலன்றிப் பிறவி நீங்காது. தாக உணர்ச்சியே தண்ணீரை நாடச்செய்யும். பசியுண்மையே அன்னத்தைத் தேடச்செய்யும். இருளிற்படும் துன்பவுணர்வே ஒளியை அடையத் தூண்டும். இவ்வாறே நாமும் நம்முடைய தற்போதிருக்கும் துன்ப நிலையை யறியவேண்டும். நம்மை யார்எனவும் அறியவேண்டும். நமக்கு உண்மைத் தாரகம் யாதெனத் தெரிதல் வேண்டும். மலமாகிய தாரகத்தை விடுத்துச் சிவமாகிய தாரகத்தை அடைவதற்கான உபாயத்தை உணர வேண்டும். இவையெல்லாம் நமக்கு அறியச் செய்பவரே சற்குருவாவார். ஆதலால், அவரது பெருமை போற்றப்படவேண்டுமெனல் இன்றியமையாத ஒன்றாம். அங்ஙனம் அவரது பெருமையறிந்து போற்றாதார் மிகவும் மூடர் எனப்படுவர். இதனைத் திருமந்திரம், "சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய்து - அத்தனை நல்கருள் காணா* ***அதிமூடர்*** *- பொய்த்தகு கண்ணால் நமரென்பர்;* ***புண்ணியர்-*** *அத்தன் இவன் என்று அடிபணிவாரே" என்னும் பாடல் உணர்த்தும்.*

*விரிந்த அறிவுக்குரியது ஆன்மா. இவ் விரிவினை மறைத்துச் சுருங்கவைத்திருப்பது மலம். இம்மறைப்பினை ஒழிப்பதற்குரிய உபாயமாக வந்தது நம் மானிடப் பிறப்பு. படிப்படியாக விளக்கம் செய்வதற்குப் பிறப்புப் பயன்படுவது. இப்பிறப்பு, விருப்பு வெறுப்புக்களால் விளையும் கருமத்துக்கேற்ப இறைவனால் ஆக்கியளிக்கப்படுவது. இச் சகலநிலையில் அறிவு சிறிதளவு விளக்கம் பெறுகிறது. இதனால், பிறப்பு நீங்கவேண்டுமென்ற எண்ணம் உதிக்கும். இவ்வெண்ணத்தின் காரணமாகச் சரியை, கிரியை, யோகங்களை மேற்கொள்ள நேரும். இங்ஙனம் ஒவ்வொன்றாகப் பல பிறவிகளில் செய்யப்படுவது* ***தவம்*** *எனப்படும். இந்தத்*

*தவத்துக்கு முறையே சாலோக - சாமீப சாரூபங்களாகிய பதமுத்தியே பயனாகும். திரும்பவும் பிறப்பெடுத்து ஆசையறுத்து உண்மை ஞானத்தைப் பெறும் எண்ணம் உண்டாகும். இங்ஙனம் சரியையாதி மூன்றும் ஞானத்துக்கு வழி காட்டுவதால் இவற்றினைத் தவம் (புண்ணியம்) என்பர். இவ்வாறன்றி ஒரு சிலர் வேள்வி முதலியவற்றைத் தவநெறியென்பர். இவை யாவும் அழிதல் தன்மையுள்ள காமியப் பயன்களையே தருவன. தத்துவ ஞானத்தைப் பயவா. ஆகையால், வேள்வியாகிய கிரியைகளையும் இவை தரும் பயனையும் "பசித்துண்டு பின்னும் பசித்தலுக்கு" ஒப்பிட்டுரைப்பர் ஞானியர்.*

*ஆன்மாக்கள் எப்போதுமே சிவத்துக்கு அடிமைப்பட்டுக் கிடப்பனவாம். ஆதலால், சிவத்தை விட்டுப் பிரிதல் என்பது ஆன்மாவுக்கு ஒருபோதும் இல்லை. ஆனால் **சிவத்தை அறியாமல் ஒன்றியிருத்தல் பொதுவான அடிமைத் தன்மையாம்**. இதனால் முதல்வன் அருள்வழி நிகழும் பாசத்துக்கும் அடிமைப்பட்டுக் கிடக்க நேரிடுகிறது. **சிறப்பான அடிமைத் தன்மை என்பது முதல்வனை அறிந்து முதல்வனுக்கு மட்டில் அடிமையாகிப் பாசத்துக்கு அடிமையாகாதிருத்தலாம்**. குடிமகனை அரசன் நேரே அறிந்திருப்பது போல்வது இச் சிறப்படிமை. இக் கருத்துக்களைத் திருநாவுக்கரசு சுவாமிகளும் ''என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான் - தன்னை நானும் முன் ஏதும் அறிந்திலன் - என்னைத் தன்னடியானென் றறிந்தபின் - தன்னை நானும் பிரானென்று அறிந்தேனே" என்றருளியவாற்றால் தெரியலாகும்.*

*இது சிவயோக நெறியினை அறிவுறுத்திய குருவின் பெருமையினை வியந்து போற்றுகின்றது.*

*அன்னையின் வயிறு, ஐம்பொறிகள், நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் ஆகிய உணர்வு நிலைகள் முதலிய மூலைகளிலேயுண்டான இருளினாலே மறைந்து நினைப்பும் மறப்பும் உடையராய்ச் சுகதுக்கங்களாகிய மயக்கத்தில் அழுந்தின ஆன்மாக்களைக் கீழ்நோக்கின உணர்வையொழித்துப் பேரின்பத்தில் அழுந்தும்படி கூட்டுவித்த அருட்குருவானவர் மிகவும் அளவிடப்படாத பெருமையினையுடைய இறைவனாவர்; பண்டை நற்றவத்தின் பயனாக ஆன்மாவை மெய்யுணர்வளித்து ஆட்கொள்ள எழுந்தருளிய முதல்வர் என்றுணர்வாயாக என்றவாறு.*

*''மாதாவிடத்துண்டான சுரோணிதத்தினிலே பிதாவினிடத்துண்டாகிய சுக்கிலம் பவளப் பையில் முத்தை வைத்தாற்போலப்படுகிற நாளில் சீவனானது, பிராணவாயு வாகனமாகவும், மனம் வழியாகவும், சிவனுடைய ஆஞ்ஞையாலே (ஆணையாலே) சென்று, சுக்கில சுரோணிதத்தின் தலையிலே பதிந்து, கன்மத்துக்கீடாக மூன்றரைக்கோடி யுரோமத்துவாரமும், எழுபத்தீராயிரம் நாடியும், வாயுவிற்பிரதானமான தசவாயுவும், நவத்துவாரமும், எண்ணுடம்பும் ஏழுதாதுவும் ஆறாதாரமும் ஐந்துபொறியும் நாலுகரணமும் மூன்று மண்டலமும் இரண்டு*

வினையும் எனப் பெயர் பெற்று, இவற்றை ஒன்றெனப் போர்த்த புறத்தோலுமாக ரூபிகரித்து (உருவு கொண்டு) பிராரத்தமளவுந் தன்னுடைய தேகத்தில் உந்திச் சக்கரத்தின் மேலே, கிடந்து, ஆறுமாத முதல் உந்திநாளத்தாலே மாதாவினிடத்திலே அன்னரசமுங்கொண்டு, அவ்வன்னரசத்தின் மிகுதியாலே சுழுமுனை நாடி அடைபட்டு இடையும் பிங்கலையுந்திறந்து, பிராண வாயு புகுந்து மேல்நோக்கி, நாசித்துவாரங்களாலே விட்ட எழுத்தாலே நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்தறு நூறு சுவாச உச்சாரணந்தோன்றி, முப்பத்திரண்டு நூறாயிரத்து நாற்பதினாயிரம் உருச் சென்றவாறே உதரகன்மந்தொலைந்து மாதாவிடத்துண்டான பிராண வாயுவிலே தம்பிரானுடைய காருண்ணியத்தாலே சத்தி அதிட்டித்துக் கொண்டு, இந்தச் சத்திபலத்துடனே வாயுவானது பிரஞ்ஞையை (உணர்வினை)ப் பூமியிலே பதிவிக்கவேண்டிப் பிரஞ்ஞாபத்திய மென்னும் பெயர்பெற்று, இவனுடைய போதம்போலத் தேகமுங் கீழ்நோக்கி விழும்படி தன்னுடைய பலத்தாலே தலைகீழாகத்தள்ளிப் பூமியில் வந்தபின்பு, (தேகத்துக்கு அடுத்த கன்மங்களாலே புசிப்புக்களைக் கருதி) இந்திரியங்களாகிய மூலைகளிலேயிருந்து விடயங்களைப் புசித்துப் புசிப்பொழிந்தால், இவனுடைய போதமானது கீழ்நோக்கிச் சாக்கிரமுதல் அதீதம் அளவாக அவத்தைகளுக்கடுத்த தானங்களாகிய மூலைகளிலே அடைந்தும், இப்படி இரவுபகல் இந்த மூலைகளிலுண்டான இருளினாலே மறைந்து விகற்பித்து மயங்கியும் இப்படிப் பொய்ப்பிரகாசமான சுகதுக்கங்களில் அழுந்தாமல் கீழ்நோக்கிய போதத்தை ஒழித்து, உண்மையை யுணர்த்தி, மேலாகிய பிரகாசமான பரமாகாச வெளியிலே விழித்துப் பரபோகத்தில் அழுந்தும்படி கூட்டுவித்த உபாயகுரு மிகவும் அளவிடப்படாத பெருமையையுடைய தம்பிரானாவார். அரிய தவத்திலே நின்று வழிபட்டவர்க்கு வேண்டும் வரங்களைக் கொடுக்கவல்ல கர்த்தாவுமாவார்" எனத் தில்லைச் சிற்றம்பலவர் இத்திருவுந்தியாருக்கு எழுதிய விளக்கவுரை உணர்ந்து இன்புறத்தகுவதாகும். **"தத்துவங்களாகிய மூலைகளிலே கிடந்த ஆன்மாக்களைச் சிவாநுபவமாகிய முற்றத்திலே கொண்டுவந்து விட்டவர் மிகவும் பெரியவர்;** அந்தப் பெரியவருந் தவத்தினாலே காணப்பட்ட பெரியவர்" எனச் சுருக்கமுந்தெளிவு முடையதாக அமைந்தது இதன் பழையவுரையாகும்.

இவ்வாறு மூலையில் அடைபட்டுக் கிடந்த நம்மை நாம் முற்பிறவிகளிலே செய்திருந்த சரியையாதி மூன்று வகைத் தவத்தின் பக்குவம் நோக்கி ஞான நெறியிலே செலுத்த இறைவன் முற்படுகிறான். அங்ஙனம் முற்படும்போது நமது இருவினை ஒப்பு - மல பரிபாக நிலை கண்டு குருவடிவாக வந்தருள் செய்கிறான். வீடுபேற்றுக்குச் சிறந்த சாதனம் ஞானமேயாதலால், இந்த ஞானாமுதம் இறைவனருளால் ஊட்டப்படுகிறது. இது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் முதலிய முறையில் தீக்கையாதி செய்யப்பட்டு ஞான குருவினால் அருளப்படுகின்றது. ஞானாசிரியர் உபதேசத்தைக் கேட்டலும், சூரிய சந்நிதியில் சூரியகாந்தக் கல்லினிடத்து நெருப்பு விளங்கித் தோன்றுதல்போல் நிருவிகற்ப விளக்கம் ஏற்படும். இதன்பின்னர் விளைவது சிந்தித்தல் எனப்படும் நிட்டை

*விருப்பம். ஓடும் பொன்னும் ஒக்க நோக்கும் நிலை இதனால் வருவதாகும். அதாவது, தன்னையும் தலைவனையும் காணும்நிலை ஏற்படுவதாகும். இது சவிகற்ப நிருவிகற்பமற்ற இடைப்பட்ட நிலை எனப்படும். இதன் பின்னர் நிகழ்வது தெளிதல் ஞானமாகும். இது அன்பின் விளைவாகும். இதனால், ஒன்றிலும் பற்றிலனாய் எக்காலத்தும் எப்பொருளிடத்தும் நிறைந்து தோன்றும் நிலை உணரப்படும். இது நிராதார நிலை எனவும் புகலப்படும். இதன் பிறகு நிட்டையாகிய ஞானம் நிகழும். இந்நிலையில் ஏக தேசப்பட்டிருக்கும் நிலை உயிருக்கு இல்லையாய் ஒழியும். கரணவயப்படுதல் இராது. இறை வியாபகத்தில் கலப்புண்டாம். சீவன் முத்திநிலை ஏற்படும். வாசனா மலம் இடையிடையே வந்து தாக்கும்போதெல்லாம் குருவாகிய சிவத்தையே கருதுதலும் அவ் வாசனா மலமும் நீங்கும். பிறகு, அழுக்கு நீங்கியபோது ஆடையினது வெண்மை ஆடை முழுதும் விளங்கினாற்போல் உடம்பு நீங்கிய பரமுத்தி நிலையில் தமது வியாபகம் முழுதும் அறிவு விளங்கப்பெற்று முதல்வனோடு ஒத்து நிற்பர். இத்தகையான ஜீவன் முத்திநிலையே கவலையற்ற நிலையாகும். இதனையே திருவள்ளுவரும், ''தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால் - **மனக்கவலை மாற்றல்** அரிது" என எதிர்மறை முகத்தால் வலியுறுத்திக் கூறலுற்றார். இவர்கள் எப்போதும் இறை திருவடியை விட்டுப் பிரியார். இவர்கட்கு வினை இல்லை; வினைப் பயனில்லை; சமயாசாரம் முதலியவை இல்லை. இவர்கள் பாலரைப் போலவும் - பித்தரைப் போலவும் - பேய் பிடியுண்டவர் போலவும் ஒழுகுவர். அதாவது, இவர்கள் பாலரைப் போல் எத்தொழிலையும் பயன்கருதாது செய்தலால் **மாயா மல நீக்கம்** பெற்றிருப்பர்; பித்தரைப் போல் விருப்பு வெறுப்பின்றித் தொழிலைச் செய்தலால் **கன்ம மல நீக்க**முடையவராவர்; பேய்ப் பிடியுண்டவர் தம்மையே மறந்து தொழில் செய்வராதலால் **ஆணவ மல நீக்கமும்** பெற்றவராவர். "பால ருன்மத்தர் பிசாசரில் எனவும்" என்பது சங்கற்ப நிராகரணம். **இந்த நிலையானது விரிந்த பரமானந்த நிலையாம். இது குருவருளால் வருவதென்பது மேலே சொல்லப்பட்டது**. இங்ஙனம் சிறந்த சீவன் முத்த நிலையில் நம்மை ஆழ்த்துவது குரு திருவருளாதலால் சற்குருவினை, ''**முற்றத்தே விட்டவர்**'' எனவும், ''**சாலப் பெரியர்**'' எனவும் குறித்தருளினர் ஆசிரியர். இந்த ஞானமூர்த்தி சிவமேயாதலால் **சாலப் பெரியர்** என்றார். இவரது திருவருளுக்கு முற்றும் இலக்கானவர்கள் ஏது தொழிலைப் புரியினும் இறை திருவடியைவிட்டு நீங்கார். இவர்கட்கு இன்பதுன்ப உணர்வில்லை. வாயுவானது மென்மையான தென்றலாக வீசினாலும், வன்மையான சூறாவளியாக வீசினாலும் ஆகாயத்தைவிட்டு நீங்காது. இதுபோன்றதே சீவன்முத்தர் இயல்பு. இவர்களே "ஞாயிறு எங்கு எழினும் என்" என்றிருப்பர்.*

*மேற்சொல்லப்பட்ட முறையில் சரியையாதி மூன்றும் முற்றிய தவத்தால் ஞானமார்க்கத்தே கேட்டலாதி முறைகளில் சற்குரு அருளால் நிலைக்கப் பெற்றவர் அரிய தவத்தில் நிலைக்கப்பெற்றவராவர். இவர்கட்குத் தம்மை வழிபட்டார்க்கு வேண்டும் வரங்களைத்தரும் தலைமையும் உண்டாம். "வேண்டிய வேண்டியாங்கு*

*எய்தலால் செய்தவம் ஈண்டு முயலப்படும்” என்பர் தமிழ் மறையவர். இங்ஙனம், நம்பியவரை நல்வழிப்படுத்திச் சீவன் முத்தராகச் செய்து நிறை மொழி மாந்தராகவும் ஆக்கும் பெருஞ் சிறப்பு ஞானாசாரியருக்கன்றி வேறெவர்க்கும் இலதாம்.*

**“துரியங்கள் மூன்றும் கடந்தொளிர் சோதி**
**அரிய பரசிவம் யாவையுமாகி**
**விரிவு குவிவற விட்ட நிலத்தே**
**பெரிய குருபதம் பேசஒண்ணாதே”**

*எனத் திருமூலர் ஞானகுருவின் பெருமை புலப்பட ஓதுதல் இவ்வுந்தியார்ப் பாடலொடு பொருத்திக் காண்டற் குதவுவதாகும். சற்குரு திருவடியே துணை புரிக! களிறு 27, 28.*

### செய்யுள் – 13

### ஜீவபோதக் கரைவு - சிவரூபம்

(சிவம் விளங்குமிடம்)

ஒட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற் றிடம்சிவ முந்தீபற
தேடும் இடமதன் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. *சிவரூபப் பிராப்தி*
2. *ஆன்மபோத இழிபு.*

### தெளிவுரை

#### ஒட்டற்று நின்ற உணர்வு

*ஒட்டற்று என்பது ஓடிஓடிப் பலபொருளும் பற்றி ஒன்றிலும் படியாது நிற்கும் உணர்வினைக் குறிக்கிறது. நின்ற இடமென்பது அத்தகைய ஓட்டத்தைத் தவிர்த்துத் திருவருளில் நிலைத்த இடத்தைக் குறிக்கிறது. முட்டுதல் - நேர்படுதல். தேட்டற்ற இடம் - சலனம் தவிர்த்து நிற்கின்ற நிலை.*

*ஆன்மா, அறிவடைதற்காகவே இப் பிறப்பினை அடைந்துள்ளது. ஆன்மாவுக்குப் பிரபஞ்ச அறிவை விளைப்பனவே ஐம்பொறிகள். ஆனால் ஆன்மா,*

சிவரூபமடைவதற்கு இந்த ஐம்பொறியுணர்வு பயன்படாது. சிவரூபமடைதற்கு வேண்டுவது தத்துவ ஞானம். ஆன்மாவுக்குள்ளது வியாபக அறிவு. இவ்வியாபகம் ஐம்பொறியுணர்வெனப்படும் ஏகதேச உணர்வினால் தடைப்பட்டு மறைந்துள்ளது. ஐம்பொறிகட்குச் சிவரூபக் காட்சி எய்துவிக்கும் பக்குவமில்லை. அந்தப் பக்குவம் ஆன்ம ஞானத்துக்கே உள்ளது. இப் பக்குவநிலை ஞான குருவினால் தெளிவுறுத்தப் படுகின்றது. அங்ஙனம் பக்குவம் பெற்ற உயிர், முதல்வனுடைய அருள்வழி நின்று அவனது காணுமுபகாரத்தோடு ஒன்றுபடுகின்றது. சிற்றின்பினைப் பக்குவமுள்ள தலைவர்களறிவர். பக்குவ மெய்தாத கன்னிகை அறியப் பெறாள். இவ்வாறே அதிதீவிரப் பக்குவர்கள் குருவருளாகிய முதல்வன் திருவருளைப் பெறுவர். அங்ஙனம் பெற்றதும் ஐம்பொறியுணர்வாகிய பொருள்பற்று நீங்கப்பெற்றுத் தம்மையும் தலைவனையும் அறிந்து இன்புறுவர். படிகம் பல நிறங்களால் மயங்குகிறது; தன்னொளியிழந்து காண்கிறது. ஆன்மாவானது படிகம் போன்று சார்ந்ததன் வண்ணமாக நிற்பது. தனித்துச் சார்பின்றி நிற்றல் ஆன்மாவுக்கு இயல்பன்று. படிகத்தினிடம் பதிந்த பல்வேறு வகைப்பட்ட நிறங்கள், அந்தப் பளிங்கொளியைக் கீழ்ப்படுத்தித் தங்கள் தங்கள் நிறங்களையே காட்டி நிற்கும். இவ்வாறே ஆன்மாவினிடத்தே கருவியாய் உள்ள ஐம்பொறிகளும் ஆன்ம சொரூபத்தைக் கீழ்ப்படுத்தித் தத்தம் விடயங்களையே காட்டி நிற்கின்றன. இதனால் ஆன்மா ஐயுணர்வுகளான் மயங்கித் தன்னை யுணருவதில்லை. "ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே" என்பது தமிழ் மறை. ஆதலால், ஆன்மாவுக்கு ஆன்ம சொரூபம் எது என்பதை உணர்த்தவேண்டியுள்ளது. இதனைக் குரு நிறைவேற்றி வைக்கிறார். சார்ந்த இந்திரியங்களின் தன்மையே தன்னிடம் விளங்க நிற்பது ஆன்மாவின் **பொது இயல்பு**. இந்திரியங்களைத் தன்னின் வேறெனத் தெளிதல் ஆன்மாவின் **சிறப்பியல்**பாம். இச் சிறப்பியல்பே, ஆன்மா சிவமாகிய சத்துக்கு அடிமை என்ற உணர்வைத் தரும். **அடிமைத் தன்மை** என்பது, தனக்கென ஒரு செயலுமில்லாமல் கருத்தாவின் அருள்வழியிலே அடங்கி நிற்பதாகும். ஆன்மாவின் இந்தச் சிறப்பியல்வே இங்கு **ஒட்டற்று நின்ற உணர்வு** எனப்படுவதாம். ஐம்புல அறிவுபோலப் பலப்பலவிடயங் களிடத்து ஓடும் தன்மை இச் சிறப்பியல்புக்கு இலது. மற்றும் இச்சிறப்பியல்பு கருவிகளைக் கழித்துத் தள்ளிய பிறகு, கழிக்க முடியாததாயிருக்கும் ஓரிடத்தை எய்தும். ஆதலால் **நின்ற உணர்வு** என்றார். இதனைத் திருக்குறள் **சார்புணர்ந்து** எனத் தெரிவிக்கின்றது. கருவிக் கழிவுகளின் பின்னர் ஆன்மாவானது உடனாய் நிற்கும் சிவத்துடன் கலந்து வியாப்பியமாய் அடங்கி நின்று சிவனருளால் சிவானந்தத்தை அனுபவிக்கும்.

ஆன்மா, இந்திரியங்கள் தானல்லவெனவும், இந்திரியங்களால் தனக்கு ஆகக் கூடியது ஒன்றுமில்லை எனவும் சற்குருவால் உணர்தலும் இவ்வுணர்வே காரணமாகித் தனக்கு ஆதாரமான முதல்வனுடைய திருவடியை அணையும். "ஊசற் கயிறற்றால் தாய் தரையேயாம் துணையான்" எனச் சிவஞானபோதத்து எட்டாம்

*சூத்திரம் நான்காம் அதிகரணம் கூறும் உவமை கருதத்தக்கதாம். மற்றும் அணைகட்டித் தேக்கிவைக்கப்பட்ட செழும்புனல் அணை முறிந்தால் கடலின்கண் முடுகிச் சென்று அதனுளடங்கும். இவ்வாறே பாசஞானத்தடை நீங்கியதும் சிவத்தின் சீபாதத்தை அணையும். இதனை இவ்வுந்தியார்ப் பாடலில்* **பதிமுட்டித் தேட்டற்ற இடம் சிவம்** *என்று கூறியுள்ளனர் ஆசிரியர். மலசத்தியோடு கூடிக் கேவலத்தைப் பொருந்திய உயிர் மலசத்தியின் கேட்டினால் திரும்பக் கருவிகளில் மீளும். ஆனால், சிவசத்திக்குக் கேடின்மையால் அச்சிவசத்தியைக் கூடிய உயிர் கருவிகளின் மீளுவதில்லையாம். முதல்வனுடைய கலப்பினால் உயிருணர்வு சிவமாகும். இதன்மேல் தேடி அடைய வேண்டிய இடம் வேறிலது. ஆதலால் இதுவே தேட்டற்ற இடமாகிய சிவமாம். ஆன்மா, சிவஞான ஐக்கியத்தாலே கூடினோமென்ற விகாரமும் எய்தாது ஜீவபோதம் கரைந்து* **சிவரூபமாம்**. *தேட்டற்ற இடம் - சலனம் தவிர்த்து நிற்கின்ற நிலை.*

*இவ்வாறன்றி, ஆன்மா கருவிகளோடு கூடிய ஏகதேச அறிவுடையதாய்ச் சிவத்தைக் காணமுயலுமாயின் சிவசொரூப மாதல் ஒருபோதும் இயலாது. ஆதலால் இப்பாடற்கண்,* **"தேடும் இடமதன்று"** *என்று வலியுறுத்தியுள்ளார் ஆசிரியர். இதுகாறும் கூறியவாற்றால்,* **குருவால் ஞானம் தோன்றும் எனவும், அந்த ஞானத்தால் ஐம்புல அறிவு அகன்று மெய்யுணர்வுண்டாகுமெனவும், இம் மெய்யுணர்வினால் சிவரூபம் காட்சிப்படும் எனவும் கூறியருளியமை தேறலாகும்.** *இதனை,*

**"ஆமா றறிந்தேன் அகத்தின் அரும்பொருள்**
**போமாறறிந்தேன் புகுமாறு மீதென்றே**
**ஏமாப்ப தில்லை இனியோ ரிடமில்லை**
**நாமா முதல்வனும் நானெனல் ஆமே"**

*என்னும் மந்திர மொழியாலும் காணலாகும். இதனால் சீவபோதக்கரைவு சிவபோத நிறைவெனப்படும் என்க. களிறு 29.*

## செய்யுள் - 14

## அருட்சத்திப் பிரகாசம்

கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி
உடந்தை யுடனேநின்று உந்தீபற
உன்னையே கண்டதென் றுந்தீபற.

**கருத்துக்கள்**

1. ***அநாதியான அருட்சத்திப் பிரகாசமாய் நிற்றல்.***
2. ***சிவம் கிருகித்தல்.***

**தெளிவுரை**

*முதல்வன் உயிர்களோடு எப்போதுமே கலந்துள்ளான். ஆன்மாக்கள் முதல்வனை விட்டு எப்போதும் தனித்திருத்தல் இயலாது. கேவலாவத்தையில் ஆணவ மல மறைப்பால் முதல்வன் கலப்பினை அறிய முடியவில்லை. சகலாவத்தையில் உயிரறிவு ஏகதேசப்படுதலால் தெரிவதில்லை. சுத்தத்தில் ஜீவபோதக் கரைவால் அறிதல் நிகழாது. ஆனால் இந்த நிலைமையை அறிவதுதான் எப்படி என்ற வினா எழுதல் இயல்பே. இந்தப் பிரிவற்ற நிலையைக் குருவே தெரிவிக்கின்றான். பிறகுதான் ஆன்மா இவ்வுண்மையை உணருகின்றது. இங்கேயும் குரு திருவருளே பெரிதும் உபகாரப்படுதல் தெரியலாம்.*

***முதல்வன் எங்கும் நிறைந்தவன். இதுவே வியாபகம் எனப்படும்.*** *இந்த வியாபகத்துள் எல்லாம் வியாப்பியமாம்.* ***எனவே உயிர்களும் வியாப்பியமே.*** *மற்றும் உயிர்கள் கேவலத்தே கல்போற் கிடந்தபோது, தாம் கட்டற்று அருளிலமுழ்ந்தி நித்திய இன்பம் அனுபவிக்கும் உரிமையுடையோம் எனத் தாமாகவே தெரிந்துகொள்ளும் ஆற்றுலற்றுக் கிடக்கும். அவற்றிற்கு உள்ளும் புறம்புமிருந்து தூண்டுதல் காட்டுதல்களைச் செய்யவேண்டியுள்ளது. தத்துவங்களெல்லாம் சடப்பொருள்கள். உயிர்களோ அறிவற்ற நிலையிலுள்ளன. பின் எவர்தாம் மேற்குறித்த வண்ணம் செய்ய இயலும்? ஆதலால், இறைவனே தமது பரம கருணையினால் உயிர்க்குயிராய் (ஞான மயமாய்) இருந்தும், வெளியே பொருட்களுள் தங்கியும் செலுத்துகிறான். எனவே,* ***சிவபெருமான்,*** *உயிர்களிடத்தே கலப்பினால் உடலும் உயிரும்போல் ஒன்றாய், பொருளின் தன்மையால் கண்ணும் சூரியனும் போல, அவ்வுயிர்களின் வேறுமாய்,* ***உயிர்க்குயிராதல்*** *தன்மையால் கண்ணொளியும் ஆன்ம போதமும் போல அவ்வுயிர்களோடு உடனுமாய், அவ்வவ்வுயிர்களிடத்து மேலாய் நிற்பதாகிய* ***சத்தி****ரூபமாயும், அச்சக்தியினால் கூட்டுவிக்கின்ற இருவினைகளுக்கேற்ப எண்ணிறந்த அவ்வுயிர்கள் ஐந்தொழிலிற்பட்டுச் செல்லுங்கால் அவ்வைந்தொழில் நடாத்துவதாகிய பதிரூபமாயும், சக்தி பதிரூபங்களின் வேறாயும், அத்தன்மைகளோடு பிரிப்பின்றியும் எவ்விடத்தும் தானே சுயம்பிரகாசமாம் இயல்புடையனாய் நிற்பன்.*

*இவ்வாறு, உயிர்கள் பற்றற்ற நிலையை அடைய உபகாரமாய் நிற்கும் ஆணையாகிய சிற்சத்தியில் பிரிப்பின்றிச் சமவேதமாகிய திரோதான சத்தி*

*வடிவாகவும் ஆணை செலுத்துதலிற் சிற்சத்தி (அருட்சத்தி)யாகவும் முதல்வன் நடத்துவதை நாம் முதற்கண் அறிந்தாலன்றி நமது ஜீவ போதம் அடங்காது. ஆதலால், ஆன்மாவினை அநாதியே பொருந்தி உடன் போதுகின்ற அருளாகிய சிவசத்தியை ஆசாரியன் தனது கடாட்சத்தால் முதலில் நம்மிடம் பிரகாசிப்பிக்கின்றான். அவ்வருட் சத்தியின் ஆணை வழியே செல்லுதலே* **ஞானம்** *எனப்படும். அந்த ஞானமயமாக நம்மை ஆக்கி நடக்க வைத்தருளுகின்றான் ஆசாரியனே ஆவன். இந்த உபாயத்தை நமக்குக் குருவே தெரிவித்தலையும் அவ்வழியே நாம் ஒழுக வேண்டுமென்பதையும் விளக்கும் பொருட்டாகவே இப்பாடலில்,* **கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி உடந்தை உடனே நின்று** *என்று கூறப்பட்டது.* **அநாதியாகக் கூடியிருத்தலைக் கிடந்த என்ற சொல்** *உணர்த்தும்.* **கிழவி என்பது உரிமைப்பட்டவள். பழமையானவள் எனப்பொருள் பட்டு** *அருளாகிய சிவசத்தியைத் தெரிவிப்பதாம். நமக்கு ஆசாரியன் மெய்யுணர்வு கொளுத்தச் செய்யும் தீட்சையாதிய செயல்* **கிள்ளி எழுப்பி** *எனக் குறிக்கப்பட்டது. நாம் அவ்வருள் வழியே நிற்றல் வேண்டுமென்பதை* **உடந்தையுடனே நின்று** *என்பது அறிவிக்கிறது. இதுவே, ஞானோபதேசத்தின் பின்னர் நாம் ஒழுக வேண்டிய முறைமையாகும்.*

*இவ்வாறு திருவருள் ஞானவழியிலேயே தற்போதம் சிறிதுமற்று நாம் நடப்போமாயின் சிவம் நம்மை முற்றிலும் ஆட்படுத்திக்கொள்ளும். எனவே காணும் உபகாரத்தை அனவரதம் நமக்கு அருளிச் செய்கின்றதென்பது கருத்தாம். இப்பாடலில்* **உன்னையே கண்டது** *என்ற சொற்றொடரால் இஃது உணர்த்தப்படுதலை நாமறிதல் கூடும். எனவே, இப்பாடலில் சிவம், தாயருள் கொண்டு நம்மறிவை விரிவுறுத்தித் தந்தையாகி யாட்கொண்டின்பம் செய்கின்ற திறத்தை ஆசாரியனாலடையப் பெறுகிறோம் என்பது தெரிவிக்கப் படுகின்றதென்னலாம். இதனால் குருவழி நிற்றலே சிவப்பேறென்பது பெறப்படும்.*

**"தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"**

*என்ற திருமந்திரப்பாடல் சமாதி நிலையைத் தெளியச் செய்யுமாறு கூறுதல் இவ்வுந்தியார்ப்பாடற் கருத்தோடு பொருந்தும் என்னலாம். களிறு 30.*

## செய்யுள் - 15

## பற்றறுகை

பற்றை அறுப்பதோர் பற்றினைப் பற்றிலப்
பற்றை அறுப்பரென் றுந்தீபற
பாவிக்க வாராரென் றுந்தீபற.

**சூர்ணிகை**

1. ***பற்றறுக்கும் உபாயமறிதல்.***
2. ***போலி பாவனை பயனின்மையாதல்.***

**தெளிவுரை**

*"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு" (350)*

*என்ற திருக்குறளுடன் ஒப்பிட்டு உணர வேண்டும்.*

| | | |
|---|---|---|
| *முதலிலுள்ள "பற்று"* | - | *உடல் கருவி முதலிய எனது என்னும் புறப்பற்று.* |
| *பற்றையறுப்பதோர் பற்று* | - | *எல்லாவற்றுக்கும் பற்றுக்கோடாகிய திருவருள்.* |
| *அப்பற்று* | - | *''திருவருளைப்பற்றினேன் யான்'' என எண்ணும் உயிருணர்வாகிய, 'யான்' என்னும் அகப்பற்று.* |
| *பாவித்தல்* | - | *மனத்தாற் கற்பித்துக் காண முயலுதல்.* |

*நம்மனோர்க்குத் துன்பம் தரும் முதல் எதிரியாயிருப்பது நமது ஆசையே. எந்த ஒன்றைப் பற்றிய ஆசையை நீக்குகிறோமோ அந்த ஒன்றைப் பற்றிய துன்பம் உடனே நீக்கப்படுவது உறுதி.* ***நம்மால் நீக்குதற்கு மிகவும் அருமையாக உள்ள ஆசைத் தன்மைக்குப் பற்று என்பது பெயர். அதாவது, ஒரு பொருளை நாம் இழந்த பின்னரும் அதன் மீது விருப்பம் நீங்கப் பெறாமையே பற்று எனப்படும்.*** *மெய்யுணர்வு தோன்றிவிட்டதற்குப் பயன் பற்றறுகை தான். ஆனது பற்றியே, "மெய்யுணர்வு" என்ற அதிகாரத்துக்குப் பின்னர், "அவா அறுத்தல்" என்ற அதிகாரம் திருக்குறளில் அமைக்கப்பட்டுள்ளது. பற்றறுகையில் பயன் வீடு பேறென்பது எல்லாச் சமயத்தார்க்கும் முடிந்த உடன்பாடாகும். "அற்றது பற்றெனில் உற்றது*

*வீடு உயிர்” என்பது பெரியோர் கூற்று. “பசை அற்றால் அன்றே அப்போதே வீடு; அதுவே வீடு; வீடாமே” எனப் பற்றறுகைப் பயன் முக்காலும் உறுதியாய்க் கூறப்படுதல் காணத் தக்கதே. நம் கையை விட்டு ஒரு பொருள் நீங்கிய பிறகும், “போனால் துயர் போச்சு; போ” என்று சும்மா இருக்கவிடாமல், நம்முடைய மனமானது அவ்விழந்த பொருளையே எண்ணி எண்ணி இனைகின்றது. இத்தகைய விருப்பே - விடா விருப்பே - பற்றெனப்படுவது. இந்த விடாவிருப்புக்கே* **அவா** *என்பது பெயர். இது பிறப்பின் வித்தெனப்படுவது. ஆதலால், இந்தப் பற்றின் பற்றினை அறவே ஒழிப்பதே பற்றறுகையாம்.*

*இந்தப் பற்றுடைமை பொதுவாக இருவகைப்படும். ஒன்று அகப்பற்று; பிறிதொன்று புறப்பற்று. நான் - அகங்காரம் - அகப்பற்று. எனது - மமகாரம் - புறப்பற்று. இவற்றுள்* **புறப்பற்றினை** *முதலில் நீக்க ஊக்கமுறல் வேண்டும். பழங்களைக் கொண்டுள்ள ஒரு மரத்தினை எல்லாப் பக்கங்களிலும் சுற்றிக் கொண்டிருக்கும் முட்புதர்களை வெட்டிக் களைந்தால்தான், அம்மரத்தின் பழங்களை ஏறிப் பறித்துண்டு சுவைத்தின்புற இயலும். அவ்வாறே, புறப்பற்றுக் களையப்பட்டாலன்றி அகப்பற்றகற்றும் உரம் உண்டாகாது. புறப்பற்று என்பது இரண்டு பிரிவில் அடங்கும். அவை, உயிர்ச்சார்பும் பொருட்சார்புமாம். மனைவி, மக்கள் முதலிய புறத்துயிர்கள் பால் விருப்புக் கொள்வது உயிர்ச் சார்பாகும். நிலம், இராச்சியம், முதலியவைபால் விருப்புக் கொள்வதே பொருட் சார்பெனப்படும். இனி,* **அகப்பற்**றெனப்படுவது *தன்னுயிர்மேல் பற்றுகையாம். முதிர்ந்த வயதுடையவர்க்கும் மரணத்தின்மீது விருப்பமிருப்பதில்லை. தன்னுயிர்மேல் பற்றிருத்தல் பிற உயிர்களை வதைக்கவும், இடஞ்செய்தல் காண்கிறோம்.* **அகப்புறப் பற்**றெனவும் *ஒன்று பேசப்படுவதுண்டு. அது, மேலே சொன்ன உள்ளும் புறம்புமாகிய இருவகைத் தொடர்புங் கொண்டது. உடம்பின்மேல் ஒருவற்கு விருப்பமிருப்பதும், புகழ்மேல் ஆசையிருப்பதும் இதனைச் சாரும் என்பர். “யாக்கை நிலையாமை” முதலிய அதிகாரங்கள் நீதி நூல்களில் இடம் பெற்றிருத்தலே உடற் பற்றிருத்தலை உறுதி செய்யும். புகழில் விருப்பற்றவர் எவர்தாம் உளர்? என்றாலும் புகழ் விருப்பும் விடத் தகுவதே. இது விடுதற்கரியவற்றுள் ஒன்றாம். “நாமே மறைந்துபோன பின்னர், நம்புகழும் பெயரும் இருந்து என்ன சாதித்து விடப் போகின்றன” என்பது ஞானிகளின் வாசகம். ஆனது பற்றியே உத்தரவேதத்திலும் இல்லற இயலின் ஈற்றில்* **புகழ்** *என்னும் அதிகாரத்தை இம்மைப் பயன் கூறுமுகமாக அமைத்த திருவள்ளுவர், அதனையடுத்துத் துறவற இயலைத் தொடங்குவதன் மூலமாகப் புகழும் விடத்தகுவதென அறிவுறுத்தல் ஆய்ந்து பார்க்கத் தக்கதாகும். முதற்கண் சொல்லப்பட்ட வாழ்க்கைத் துணை, மக்கட்பேறு முதல், இறுதியில் சொல்லப்பட்ட புகழ்ப்பேறு வரையில் யாவற்றின் பற்றும் துறக்கத் தகுவதாமெனத் துறவற இயலின் தோற்றுவாய் தோற்றுவித்தலை ஆய்ந்தால் அறியலாம்.*

இவ்வாறு எல்லா வகையாலும் பற்றற வேண்டுதலை அறிந்த ஒருவன் எவ்வாறு பற்றறுப்பதென எண்ணநேரும். இதற்கும் ஞானிகள் உபாயம் உரைக்காமற் போனாரிலர். ஆன்மா ஒன்றைச் சார்ந்திருத்தலையே இயல்பாகப் பெற்றிருத்தல்போல, மனமும் ஒன்றைப் பற்றியே நின்று நினையும் இயல்பினதாம். ஆதலால், மனத்தை ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றிப் பாசக்கடற்குளே வீழாமல், பரிசுத்த நிலையைப் பற்றுமாறு பழக்கவேண்டும். சகலத்திற் சுத்தம் என்பது, சீவன் முத்தி - அதிகார முத்தி - போக முத்தி - லய முத்தி - பர முத்தி என ஐந்து வகைப்படும். நின்மல சாக்கிரம் முதலான ஐந்தும் இவற்றின் வேறு பெயராம். இவற்றின் செய்திகள் சிவஞான போதத்துள் சாதன இயல், பயனியல்களில் விவரிக்கப்பட்டுள. சுருங்கக்கூறின், சீவத்தன்மையைப் பற்றறுகை **சீவன் முத்தி** பயப்பதென்னலாம். உடற்பற்றை விடுதல் **அதிகார முத்தி**யாகும். உலகப் பற்றை ஒழித்தல் **போகமுத்தி** எனப்படும். மல மாயா கன்மங்களை விடுதல் **லய முத்தி** என்பர். **பர முத்தியாவது** பாசப்பற்றை விடுதலாம். இது "அயரா அன்பின் அரன்கழல் செலுமே" என்பதாற் கூறப்படுவது. எனவே, பாசநீக்கம் வேறு; பாசப்பற்று நீக்கம் வேறு என நன்குணர்ந்து கொள்ளல்வேண்டும். பற்று, ஆன்மாவினிடத்தில் என்றும் உள்ளது. அப்பற்று, பாசம் நீங்கினாலும் இருந்தே தீரும். அப் பற்றினால், விட்ட பாசத்தை மீண்டும் பற்றிவிடாமல், இறைவன் திருவடியை இடையறாது பற்றவேண்டும். "பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" எனத் திருக்குறள் இச்செய்தி செப்பலுறுவது காணலாம். பாசப் பற்று நீக்கத்தில் சிவனைப்பற்றி நிற்றலால், அது சிவப்பேறு எனவும் செப்பப்படும். இக்கருத்தினைத் திருநாவுக்கரசர் அருளிச்செய்துள்ள "அருந்துணையை" என்ற தொடக்கத்துத் திருத்தாண்டகத்தில் "பொருந்தணைமேல் வரும் பயனைப் **போக மாற்றி**" என்ற இடத்தாலும் அறியலாகும். இங்குள்ள **போக** என்ற சொல் பொருளின் நீக்கத்தையும், **மாற்றி** என்ற சொல் பற்று நீக்கத்தையும் குறிப்பன எனக் கூறுவர் பெரியோர். **சிவம், தன்னையே பற்றிப் பாவிப்பவனுடைய அறிவில் பிரிப்பின்றி விளங்கித் தோன்றுவன்**. அங்ஙனம் தோன்றும் முதல்வனால் உயிருடன் அனாதியாய்க் கூடி நின்ற பொது இயல்பாகிய ஆணவ மலப் பற்றைவிட்டு அவ்வுயிர் நீங்குதலுறும். மந்திர கருடனால் பாம்பின் விடம் நீங்குவதொக்கும் இச் செயல் என்பர். இவ்வளவையும் நமக்கறிவிக்கும் பொருட்டே **"பற்றை அறுப்பதோர் பற்றினைப் பற்றில் அப்பற்றை அறுப்பர்"** எனக் கூறினர் இவ்வுந்தியார்ப் பாடலில். மேலும், சிவோகம் பாவனையல்லாப் பிற போலி பாவனைகளால் மூல மலப் பற்றறாது என நமக்கு உணர்த்தும் பொருட்டே **"பாவிக்க வாரார்"** எனவும் எடுத்தோதியுள்ளனர் நாயனார்.

இக் கருத்துக்கள் பின்வரும் திருமந்திரப் பாக்களில் பொருளுதலும் காணலாகும்.

**தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்**
**இழைக்கின்ற தெல்லாம் இறக்கின்ற கண்டும்**
**பிழைப்பின்றி எம்பெரு மானடி ஏத்தார்**
**அழைக்கின்ற போதறி யாரவர் தாமே.**

**சார்ந்தவர்க் கின்பங் கொடுக்கும் தழல்வண்ணன்**
**பேர்ந்தவர்க் கின்னாப் பிறவி கொடுத்திடும்**
**கூர்ந்தவர்க் கங்கே குரைகழல் காட்டிடும்**
**சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர் வாரே.**

*மற்றும் இக்கருத்துக்களை*

**"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்"**

*என்ற குறளும் முடித்துக் கூறும். களிறு 31*

செய்யுள் - 16

**மவுன நிலை**

உழவா துணர்கின்ற யோகிக ளொன்றோடும்
தழுவாமல் நிற்பரென் றுந்தீபற
தாழ்மணி நாவேபோல் உந்தீபற.

## கருத்துக்கள்

1. ***அவத்தையில் அழுந்தாமை.*** *(அவத்தை - நிலை; வேதனை)*
2. ***தழுவாமல் நிற்றல்.***
3. ***மவுன நிலை.***

## தெளிவுரை

*உழத்தல் - தம்முணர்வால் பெரிதும் முயன்று உழைத்துப் பயனின்றி அயர்வடைதல்.*

*மனம், வாக்கு, காயம் என்பன முக்கரணங்களாம். நினைத்தல், சொல்லுதல், செய்தல் என்பன இவற்றின் தொழில்கள். இவற்றுள், நடு நிற்கும் வாக்கு (அல்லது)*

*பேச்சே ஒருவனைச் சிறைக்கூடத்துச் செல்விப்பதும் விடுவிப்பதுமான ஆற்றல் படைத்தது. மாற்றம் உண்டேல் வஞ்சம் உண்டு என்பது பழமொழி.* **உழவாது - கருவி கரணங்களால் முயன்று உழைத்தும் பயனின்றி அயர்வு அடையாமலிருத்தல்.** *"யாகவாராயினும் நாகாக்க; காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்பது குறள். நிராதார யோகம் நிலைபெறுதற்கு* **மவுனயோகம்** *உபாயமாகும்.* **மனம் ஏதொன்றையும் எண்ணாமையும், வாக்கு ஏதொரு சொல்லையும் பேசாமையும், உடல் ஏதொரு தொழிலையும் செய்யாமையும் மவுனம் எனப்படும். இவற்றுள் வாய் பேசாமையையே பெரும்பாலும் மவுனம் என்பர்.** *"சும்மா இரு சொல் அற" என்பதே ஆசாரியன் பக்கலில் மாணவன் பெறும் உபதேசமாகும். "சும்மா இருக்கச் சுகம் சுகம் என்று சுருதிகள் அம்மா நிரந்தரம் அறையும்" என்பதும் ஆன்றோர் வாக்காம். ''சும்மா இருக்கின்ற திறம் அரிது'' என்பதும் வாக்கு மவுனத்தின் அருமைப்பாடு தெரிவிப்பதாகும். தூர்த்தரைக் குறித்துச் சிலப்பதிகாரத்தே, "நெடுங்காலம் தவஞ்செய்து பெற்ற மக்கட் பிறப்பை ஒரு வார்த்தையின் இழந்து இழிபிறப்புற்றார்" என அடியார்க்கு நல்லாரால் நாவடக்க மின்மை பிறப்புட்படுத்தல் கூறப்பட்டுள்ளது. "காக்கப் படுவன இந்திரியம் ஐந்தனுள் நாக்கல்லதில்லை" என்பது வளையாபதி வாசகம்.* **மொழிதற்கு முன்னே நினைத்தல் நிகழ்ந்தே தீரவேண்டியிருத்தலாலும், மொழிந்தபின் செயல் நிகழ்த்தியே தீர வேண்டியிருத்த லாலும் மனமொழி மெய்களுள் மொழியடக்கம் இன்றியமையாதாயிற்று.** *சிவம் வாக்கு மனங்கட்கு எட்டாதது. அதனை ஞானதிருட்டியாற் கண்டு கூடிச் செயலற்றிருப்பதே* **சிவயோகமாம்.** *உரையிறந்து சிவனுடனே இரண்டற்றிருப்பவரே* **சிவயோகியர்** *ஆவர். ஆசாரியரும் இந்த மவுன யோகத்தை மாணவனுக்குப் பல்வகையாலும் வலியுறுத்தி உபதேசக்கின்றார். "தேகம் முதலியன உனக்கு வேறானவை; இவற்றோடு கூடாதே; கூடினால் கர்மம் விளையும்; அதனால் பிறப்பு வரும். ஞானமே உனது வடிவம்; தீட்சையில் இவ்வுடன்பாட்டுக்கு நீ இசைந்தாய்; மற்றும், நீ உடல், பொருள், ஆவி மூன்றையும் எமக்குத் தத்தம் பண்ணிவிட்டாய்; நமக்குத் தத்தம் பண்ணின பொருளைத் திரும்பவும் நீ உரிமை கொண்டாடி உபயோகிக்காதே'' என்றிப்படியெல்லாம் ஆசாரிய உபதேசம் நிகழ்கின்றது. உணர்த்தும் முறைமை அவத்தையாதிகளில் அழுந்தாமல் சிவனைத் தரிசிப்பதே சிவயோகியர் பண்பு. இச்சமயத்தே இடையிடையே பிராரத்துவத்தால் கன்மம் கூடும். அப்போதும் திருவடிஞானமே கண்ணாக நிற்க வேண்டும். சுட்டியறியும் ஏகதேச அறிவாகிய ஆன்ம போதத்துக்கு இடங்கொடுக்கலாகாது. யான், எனது என்னும் இருவகைப் பற்றும் அற்றவராய்ச் சிவங்காண அனுபவ மாத்திரையில் ஒழுகுவதே சிறந்த நிட்டையாம். இங்ஙனம் பற்றற்றான் பற்றினில் அழுந்திப் பற்றனைத்தும் விட்டவராய் ஒழுகுவாரே சிவானந்தத்துக்குரியர். இதுபற்றியே,* **உழவாது உணர்கின்ற யோகிகள் ஒன்றோடும் தழுவாமல் நிற்பர்** *என்று இப்பாட்டுள் கூறப்படுகின்றது.*

*மணியில் நாக்கு உள்ளது. அது தொங்கிக்கொண்டிருக்கும் வரையில் அசைப்புண்டு; ஓசை விளைத்துக் கொண்டே இருக்கும். இதனால் மணிக்கு அவத்தை தான். பலரும் அதனை அசைத்தேனும் அடித்தேனும் அவத்தைக்குள்ளாக்கியே*

*தீருவர். அவ்வாறின்றி, அந்த மணி, தொங்காமல் தரையில் வைக்கப்பட்டால், நாக்கும் தரையிற்படும், அசைய வழியிராது. ஆதலால், ஓசை எழும்பாது. அஃதே போன்று, உலக நிகழ்வுகளைப் பற்றித் தொடர்ந்து கிடக்குமளவும் மனம் நினைக்கும்; வாக்கு பேசும், உடம்பு தொழிற்படும். இதனால் ஐந்தவத்தை அல்லது மூன்றவத்தை நிகழ்ந்தே தீரும். இவ்வாறன்றிச் சிவத்தைப் பற்றித் திருவடி ஞானமே ஞானமாகக் கரைந்து கிடப்பின் சிந்தையாதிய மூன்றும் அசைவற்றுவிடும். இதனை உணர்த்தும்பொருட்டே,* **"தாழ்மணி நாவேபோல்"** *என்கிறார் ஆசிரியர். ஆடும் கடைமணிநா அசையாமல் காப்பதே செங்கோன்மைக்கு அழகு என்று பொருள் நூலும் புகலும்.*

**"பெருக்கப் பிதற்றில்என் பேய்த்தேர் நினைந்தென்**
**விரித்த பொருட்கெல்லாம் வித்தாவ துள்ளம்;**
**பெருக்கிற் பெருக்கும்; சுருக்கிற் சுருக்கும்;**
**அருத்தமும் அத்தனை ஆய்ந்துகொள் வார்க்கே".**

*என்பது திருமந்திரம். களிறு 32.*

### செய்யுள் – 17

### சிலம்பொலி

திருச்சிலம் போசை ஒலிவழி யேசென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற;
நேர்பட அங்கேநின் றுந்தீபற.

**சூர்ணிகை**

1. ***தற்போதக் களைவு.***
2. ***மயக்க விகற்ப மறுகை.***

**தெளிவுரை**

***செவியில் கேட்கும் அளவில் - ஓசை - பொருளற்ற சத்தம். உணர்வுக்குப் புலனாகும் நிலையில் - ஒலி - பொருளுடைய சத்தம். சிவானந்தமே நமது ராச்சியம். சிவமே நம் தந்தையார். சிவனருளே நம் தாய்.*** *ஆனால் நாம் இவ்வுணர்ச்சியொன்று மில்லாமல் கிடந்தோம்; இன்னமும் கிடக்கிறோம். இவ்வாறில்லாமல், சிவனருளால் சிவபோகமென்னும் இராச்சியத்தை நாமடைந்து சுகிக்கக் கடமை பூண்டுள்ளோம்.*

*இந்தப் போக பதவியை நாம் அடைய வொட்டாமல் நம்மைத் தடுப்பவரே நம் பகைவர். அவர்களை ஆணவம், மாயை, கன்மம் என்பர். இந்த மூன்று பகைவர்களையும் நாம் வென்று மீளவேண்டும். இவர்களை வெல்லும் பொருட்டே நமக்கு இறைவன், இந்தத் தேக, இந்திரிய, அந்தக்கரணங்களை அருளியுள்ளான். இதனோடு, தானும் ஆன்மாவினை உடலாகக் கொண்டு ஞானசொரூபியாக அகத்தே எழுந்தருளியும் நடத்துகின்றான்.* ***நமக்குத் தீயன உணர்த்தவும் நன்மைகள் விளைப்பவும் திரோதான, அருட்சத்திகளையும் பிரேரேபிக்கிறான்.*** *மேற்சொன்ன இவ்வளவு துணைப்படைகளையும் உதவியாகக்கொண்டே நாம் ஆணவாதி மும்மலப்பகைவர்களை அழியச் செய்து ஞானபக்தித் திருவருள் பெருக்கினை எய்திச் சிவபோக இராச்சியப் பிரவேசம் செய்யக் கடமைபூண்டுள்ளோம். இப்போரினை வெற்றிகரமாக நடத்தி நலம் துய்ப்பதற்கு வழி காட்டுதலில் துணைபுரிவோரே ஞானாசாரியர். இவர் சிவமேயாவர். ஆதலால், ஞானாசாரியருடைய உபதேசத்தைக் கேட்டும், சிந்தித்தும், தெளிந்தும், நிட்டைகூடியும் நிராதாரயோகம் என்னும் அணிவகுப்பை நடத்தவேண்டும்.* ***இடையிடையே, தளர்ச்சி நேரும்போதெல்லாம் சற்குருத்தியானம், பஞ்சாக்கர நினைவு முதலிய விசேட மருந்துட்கொண்டு வலிவு எய்தவேண்டும்.*** *இங்ஙனமெல்லாம் புவனக் களத்திலே நாம் போராற்றுவோமாயின், ஆணவாதி மும்மலப் பகைவர்களின் ஆரவாரங்கள் அடங்கலுறும். அதாவது உலக விருப்பம் தணியும் என்பதாம். இம்முயற்சியில் ஆன்மாக்களைத் தமது திருவுள்ளத்தே அடைத்துள்ள தம்பிரானார் துணையே பெரிதாம். இதனால் கருவி கரணாதிகள் விளைக்கும் பற்றுக்களின் ஆரவாரங்களும் ஓடும்; புறங்கொடுக்கும் இந்நிலையில் ஆன்மா இறைதிருவடியில் மனக்கசிவுடையதாகி முன்னேறவேண்டும். அங்ஙனம் செல்லுவதே வெற்றிப் பாதையாகும். இவ்வெற்றிப்பாதையிலே, போர்க்கருவிகளின் பெருமுழக்கமெல்லாம் தணிந்தொழிய வெற்றி வீரனாகச் செல்லச் செல்லச் சற்றுநேரத்திலே எதிர்கொண்டு வரவேற்பவருடைய மகிழ்ச்சி யாரவாரம் கேட்கத் தொடங்கும். அந்த ஆனந்த ஒலியின் வழியே சென்றால் சிவபோகராச்சியம் அடையலாகும். பேரரசனின் வாத்தியங்கள், வெற்றியோடு திரும்பும் வீரமகனை மங்கலமாக முழங்கி வரவேற்பது போலவே, நிராதாரயோக நெறியிலே செல்லும் ஆன்மாவினைப் பரமானந்த நிருத்தம் புரிந்து கொண்டிருக்கும் தம்பிரானார் வரவேற்கின்றார். இத்தருணத்திலே உலக ஆசாபாச ஆரவாரங்கள் யாவும் அற்றுப்போவதால் ஆன்மாவின் பிறவித்துயரம் அடியோடு கெட்டோடு மாறு தம்பிரானார் திருவடிக்கண் உள்ள பரவிந்து வடிவான சிலம்பினுள் பரநாதவடிவான பரல்கள் ஒலி எழுப்பி முழக்கும். இந்தப்பரநாதப் பறையொலியை ஆன்மா கேட்டுப் பெருங்கசிவுற்று அவ்வொலி வழியே செல்லின் தற்போதமெல்லாம் தவிரும். தம்பிரானார் திருவடியணுகும். அதுமுதல் தற்போதமென்பதே இராது. இதுதான், ஆசையொழிந்து ஞானமெய்திப்பத்தி மேலிட்டுப் பரமனருள் வெளியில் மூழ்கிக்களித்தல் எனப்படும். இவ்வளவும் நமக்கு ஏற்படவைப்பது சற்குருதிருவருளே*

*யாகும். ஆதலின் இச்செய்தியை நமக்குத் தெரிவித்தற் பொருட்டு, இப் பாடலகத்தே* **“திருச்சிலம் போசை ஒலிவழியே சென்று நிருத்தனைக்கும்பிடு”** *என ஆணையிட் டருளுகிறார் ஆசிரியர். இப்பரபோக விளைவினை,*

**“தானும் அழிந்து தனமும் அழிந்துநீடு**
**ஊனும் அழிந்து உயிரும் அழிந்துடன்**
**வானும் அழிந்து மனமும் அழிந்துபின்**
**நானும் அழிந்தமை நானறி யேனே”.**

*என்னும் திருமந்திரப் பாடலும் புலப்படுத்தும்.*

*இங்ஙனமன்றி, உலகப் பாச ஆரவாரங்களிலே அகப்பட்டுக் கொண்டே தம்பிரானார் திருவடிப் பேற்றினை எய்த விரும்புவதும், அவ்வாறு கூறும் போலிச் சமயத்தார் உரைகளைச் செவிமடுப்பதும், ஞானகுரு அல்லாதார் காட்டும் இருட்டு நெறி ஏகுவதும், சிவபோக இராசதானி செல்வதற்குரிய வழிகள் ஆகமாட்டா. இவையெல்லாம் கொள்ளைக் கூட்டத்தார் இடையிடையே பதுங்கியிருக்கும் மயக்க விகற்பமென்னும் பாலைப்படர் வழியாகும். குறுக்கும் நெடுக்குமாகச் செல்லும் பல ஒற்றையடிப் பாதைகள் வழிச் செல்வோர்க்கு மயக்கம் செய்வதைப் போலவே போலி மார்க்கங்களும் மயக்கும். ஆதலால், இத்துன்புடைய நரக ஏதுவான வழியே செல்லாமல், ஞானமார்க்கத்தே நாம் செல்லவேண்டும் என்பதையும் பக்கவழி படரலாகாது என்பதையும் வலியுறுத்தும் பொருட்டே ஆசிரியர்,* **“நேர்பட அங்கே நின்று”** *என்று கூறித் தெளிவுறுத்தலாயினர் என்னலாம். ‘‘செந்நெறிக்கே செல்விப்பானை’’ எனத் திருநாவுக்கரசர் அறிவுறுத்துவதும் இந்நன்னெறியேயாம் என்க. 21 ஆம் நூற்றாண்டு வரை இவ்வுலகில் பாதச் சிலம்பொலி கேட்கும் பேறு பெற்றவர்கள் 1. மாணிக்க வாசகர் 2. சேரமான் பெருமாள் நாயனார் 3. பதஞ்சலி 4. சேக்கிழார். களிறு 33.*

### செய்யுள் – 18

## திருவருளை மறவாமை

மருளும் தெருளும் மறக்கு மவன்கண்
அருளை மறவாதே உந்தீபற;
அதுவே இங்குள்ளதென் றுந்தீபற.

**கருத்துக்கள்**

1. *சிவத் தியானம்.*
2. ***அருளை மறவாதிருத்தல். அஃதொன்றே உயிர்கள் உய்வதற்குரிய பற்றுக் கோடாகும்.***

**தெளிவுரை**

*சித்தாந்த சைவம் புகலும் ஞான மார்க்கமே நேராய் முத்திக்குத் துணையாவது, ஏனைச் சமயங்கள் கூறுவன யாவும் இந்தச் சன்மார்க்கத்துக்குப் படிநிலைகளாகும். கோல் கண்ணாகத் தட்டி நடப்பது போல்வது பிற சமயநெறி. கண்ணே கண்ணாகப் பார்த்து நடப்பதை நிகர்ப்பது சன்மார்க்க நெறி. சன்மார்க்க நெறியறிந்து செல்லத் தொடங்குபவரையும் ஞானக் குறைபாடிருப்பின், பிற சமயநெறிகள் தாம் கூறுவனவே நன்னெறி யெனக் காட்டி* **மயக்கும்.** *கானலைத் தண்ணீரென மயங்குவது போல்வது இச்செயல். இதனைக் குறித்தற்கே* **"மருளும்"** *என்றார். சித்தாந்த சைவமல்லாத ஏனைய சமயங்கள் கூறும் முத்திநிலைகள் யாவும் தத்துவங்கள் முப்பத்தாறாகிய நிலம் முதல் நாதம் ஈறாகியவற்றுள் அடங்கிவிடும். அவற்றுள்,* ***உலோகாயதம்****, இவ்வுலகமே உண்மை. சுவர்க்க நரகமில்லை, இவ்வுலக சவுக்யமே சுவர்க்கம். இவ்வுலகத் துன்பமே நரகம். சிற்றின்பமே முத்தி எனக் கூறி மருட்டும்.* ***மீமாம்சம்****, வேதோக்தமான கன்மானுட்டானங்களைச் செய்து, இத்தேகம் நீங்கிய பின்னர் மறுமையில் திவ்விய தேகத்தைப் பெற்று சுவர்க்கலோக போகம் அநுபவித்தலே முத்தி எனச் சொல்லி மருட்டும்.* ***பௌத்தம்*** *ஐவகைக் கந்தங்களும் அடியோடு கெடுதலே முத்தி என்னும்,* ***சைனம்*** *எண்குணமும் அடைதலே முக்தி என்னும்,* ***வைசேடிகம்*** *சுக துக்கங்களும் அவற்றின் காரணமான ஞானமும் நீங்கப் பெற்று, கல்லைப்போல் ஓரறிவு கூட இல்லாதிருப்பதே முக்தி என்று கூறும்.* ***சாங்கியம்*** *பிரகிருதி, புருடன் இவை வேறு வேறு ஆனவை என்று அறிவித்து ஆன்மா பிரகிருதி விகாரங்களுக்கு வேறாகி யான், எனது என்பது நீங்கி நிற்பதே முக்தி என்னும்.* ***மாயாவாதம்*** *மாயையையும் பிரமத்தையும் விசாரித்து மாயையை நீக்குவதே முக்தி என்று கூறும்.* ***பாஞ்சராத்திரம்*** *திருமாலின் அருளால் இந்த உடம்பிலிருந்து நீங்கி அழியாத சுத்தசித்து ரூபியாய் விட்டுணுவுக்குரிய திவ்விய தேகம் பெற்றுச் சகல போகங்களும் மகாவிட்டுணுவைப் போலவே நித்தியமாகப் பெற்றிருக்கை முக்தி என்னும்.* ***சிவசமவாதம் முதலியவை*** *சிவத்தின் அருளால் ஆணவம் முதலிய மூன்று மலங்களும் நீங்க, சத்தியமும் சுத்தமும் ஆகிய ஆன்மாவினிடத்தில் ஞானக் கிரியைகள் பிரகாசிக்கப் பெற்று அவற்றின் பிரகாசத்தினால் சருவஞ்ஞத்துவாதி ஆறுகுணங்களும் விளங்கப்பெற்ற, சிவசமமாய் இருப்பதே முக்தி என்னும். இவை யாவும் பதமுத்திகளே. இவை உண்மை முத்தியோவென நம்மை மருளச் செய்யும்.* ***மருள் - மயக்கம்; தெருள் - தெளிவு, அறிவு.***

ஆனால், நாம் **சித்தாந்த சைவ சமயத்**தால் தெளியவேண்டிய முத்திப்பேறு மேலே கூறப்படுவன ஆகா. சிவமும், ஆன்மாவும் எப்போதும் பிரிப்பற்றே உள்ளன. ஆணவ மலம் ஆன்மாவின் அறிவைத் தடுத்திருப்பதால் அப்பிரிப்பின்மை தோன்றுவதில்லை. இந்த ஆணவமலம் அநாதியானது. இந்த மல உபாதியினால் அசத்தியமான போகங்களைச் சத்தியமென எண்ணி மயங்க நேருகிறது. காசம் படர்ந்துள்ள கண்களுக்கு உண்மை உருவமும் நிறமும் தெரிவதில்லை. காசம் நீங்கிய பிறகு அக்கண்கள் உண்மைக் காட்சியைப் பெறுகின்றன. படலத்தை உரித்துதவுபவன் வைத்தியன். இவ்வாறே சிவத்தின் அருளால் மயக்கம் (மருட்சி) நீங்கிய பிறகு ஆன்மாவானது சிவத்தோடு பிரிப்பில்லாதிருத்தலை அநந்நியமாக நின்று கண்டு சிவானந்த பரவசத்தினாலே முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த சிவபெருமான் திருவடிகளை அடையும். திருவடி என்பது இறைவனுடைய சித்துத் தன்மையாம். ''ஆறாறையும் நீத்து அதன்மேல் நிலையைப் பேறா அடியேன் பெறுமாறுளதோ'' என்ற வாக்கும், ''அடியெனுமதுவும் அருளெனுமதுவும் அறைந்திடில் நிர்க்குண நிறைவாம்" என்ற பாட்டும் இச் செய்திகளை யாவர்க்கும் அறிவிப்பனவாகும். ஒருவனுடைய அருமைக் குமரன் கடுமையான நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும்போது இழந்தவனாகக் கருதப்படுகிறான். அவனே குணமடைந்துவிட்டால் புதிதாகப் பெற்ற புதல்வனென எண்ணப்படுகிறான். உண்மையில் அம்மகன் எப்போதும் அத்தந்தையின் மகனாக உள்ளவனேயாவான். அதுபோல, யான் எனது என்னும் பற்றுடைய ஜீவ போதத்தினால் ஆன்மாவுக்குச் சிவனோடு பிரிப்பின்றி நிற்றல் விளங்காதிருந்தது. அப் போத அறுதியில் அச் சிவானுபவம் விளங்குகின்றது. இதனையே புதிதாக அடைந்த தெனக் கருதுகிறோம். இதுவே உண்மை. இங்ஙனம் அறிவதையே **தெருளும்** என்றார். இதனால் மற்றெல்லாச் சமயநெறிகளும் சைவத்திறத்தடைதற்கு வாயில்களாம்.

பிரபஞ்சக் காட்சியானது தன்னையுணரவொட்டாது தடைசெய்யும். பிரபஞ்சத்தை அறியும் கரணங்களைச் சிவகரணமாக மாற்றிச் சிவனை அறிவோமெனச் சிலர் கூறுவர். இக்கூற்று வெறும் பாவனையேயாகும். சிவனைக் கரணத்தாலறிவோ மென்பது கூடாது. கரணத்தாலறிவோமென்பது உண்மையை மறத்தலாகும். இதனால் **மறக்கும்** என்றார் ஆசிரியர். கரணங்களாற் காணுமளவும் பிரபஞ்சக் காட்சி நீங்காது. அப்பிரபஞ்சக் காட்சி நீங்கப் பெறாவிடில் பிறப்பு அறாது. பிறப்பு நீங்காமையால் ஆணவ மலமும் அறப் பெறுவதில்லை. கரணங்களால் காண முடியுமென மயங்குபவர் சிவ சங்கிராந்தவாதிகளாவர். இவர்கள் கூற்றை மறத்தலே தக்கதாம்.

பின்னர், சிவத்தை அடைவதுதான் எவ்வாறோ எனில், **கரணங்கள் யாவுங் கடந்த நிலையில் வருவதே அருள்** எனப்படும். இது சிவனருளாம். இச் சிவனருளால்தான் சிவத்தை அறிதல் நிகழும். சிவகரணங்களால் அறியப்படுவது சிவனது தடத்த நிலையாம். சிவனருளால் அறியப்படுவதே சிவசொரூப நிலை. இச் சிவசொரூப நிலையே நிராதார யோகப் பயன். இதனால் வருவதே சிவபோகம்.

*ஆகையால் ஆசிரியர்,* ***அவன்கண் அருளை மறவாதே*** *என்றார். சிவனருளே சிவனையறியும் கண்ணாகும். இக் கண்ணாலேயே சிவசொரூபம் அறியப்படும். ஆதலால் கண்ணாகிய சிவனருளை ஒரு காலமும் கைவிடாமல் கூடி நிற்க வேண்டும்.*

*சிவமாகிய ஒன்றையே அன்பு மீதூர்ந்து அறியப்பெற்று நிற்பது நெறி. அதாவது சிவஞானமெனப்படும் நிட்டையொன்றே பதார்த்தங்களைப் பார்க்க வராத சிறப்புடையது என்பதாம். காண்பானும், காட்சியும், காணப்படு பொருளும் ஆகிய பேதஞானம் அனுபூதி ஞானமன்று. இத் திரிபுடி ஞானம் தீரப்பெற்ற சீவன் முத்தர் சிவமொன்றே கண்டிருப்பாரன்றி ஏனைப் பதார்த்தங்களை நோக்கிப் பிராரத்துவ வாதனையிற் படமாட்டார். ''பரமே பார்த்திருப்பர்'' என்பது இந்நிலையாம். இதனால் பிராரத்தத்தின் வாதனை பற்றறக் கழியும் என்பது கருத்தாம். இது கருதியே,* ***அதுவே இங்குள்ளது*** *என்றார் ஆசிரியர். அதாவது, சிவனருளே கண்ணாகச் சிவமே கண்டிருப்பதன்றி வேறு ஒரு காரியமும் ஈண்டைக்குச் செய்யவேண்டுவதில்லை என்பது கருத்தாம்.*

**"சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை;**
**சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படும்;**
**சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்**
**சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே".**

*என்ற திருமந்திரம் இங்குச் சிந்தை செய்யத் தக்கதாகும். களிறு 34.*

### செய்யுள் - 19

## சிவ வெளிப்பாடு

கருது வதன்முன் கருத்தழியப் பாயும்
ஒருமகள் கேள்வன் என்றுந்தீபற;
உன்ன அரியனென் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. *அருளால் வெளிப்படுதல் சிவம்.*
2. *சிவத்தின் அருமைப்பாடு.*

### தெளிவுரை

*கேள்வன் - நாயகன். ஒருமகள் கேள்வன் - அம்மையப்பன். சூரியன் வேறு; அவனுடைய வெளிச்சம் வேறன்று. சூரியனுடைய வெளிச்சமே சூரியனைக்*

*காட்டுகிறது. வெளிச்சத்தை முன்னே கண்டவன் உடனே அவ்வொளியோடு கூடிப் பிரிப்பின்றியுள்ள கதிரோனைக் காண்கிறான். சிவம் வேறு; சத்தி வேறன்று. சத்தி என்பது சிவத்தினது அருளாகும். அவ்வருளில் நிற்போர் சிவத்தைத் தரிசித்தல் முறைமையாகும்.* **சிவமும் சத்தியும் பிரிப்பின்றி நிற்கும் நிலையை உணர்த்துவதே சித்தாந்த சைவநெறியாகும்**. *பாச ஞானங் கடந்து, அகம் பிரமம் என்னும் பசுஞானமும் கடந்தபின்னர் நிகழ்வது பதிஞானம். அதுவே அருள் வெளிப்பாடாகும். இவ்வருள் வழியிலே நிற்பார்க்கு அருளோடு பிரிப்பின்றி நிற்கும் சிவம் வெளிப்படுதல் ஒருதலை. இந்த அருள்வழி நிற்கும் நிலையில் நமக்கென்று தனித்து நிற்கும் ஜீவபோதமிலதாம். ஜீவபோதம் கரையக் கரையக் கருத்தழிந்துபோம். ஆதலால் கருதிப் பார்க்கும் அவசியமும் நீங்குகிறது. அதாவது, கருதுபவனுடைய கருத்துக்குள் கருத்தாய் நிற்பது திருவருளேயாகும் என்பதாம். அப்போது ஆன்மாவுக்குத் தனித்து ஒரு கருத்துமிராது. குகையில் செம்பை உருக்கிவைத்திருப்பதுபோல் உள்ளது இந்த நிலை. இந்த உருக்கின செம்பிலே குளிகை பாயுமாயின் உடனே செம்பின் காளிதம் அற்றுப்போய்ச் செம்பு, செம்பொன்னாகி விடுகிறது. இதில் காலக்கழிவு நிகழாது. அதுபோலவே, திருவருளிலே இடைவிடாது கூடிநிற்கும் நிலை ஆன்மாவுக்கு விளைந்ததும், ஆன்மாவின் அறிவென்னும் சோதிக்கு உட்சோதியாய் விளங்கும் முதல்வன் வெளிப்பட்டு இவனைக் கிருகித்துக் கொள்கிறான். சூரியனுடைய பெருவெளிச்சத்துள் சிறு விளக்கங்கள் அடங்கிவிடுவது போலும் நிகழ்வது இந்த நிலை. இங்ஙனம் ஆன்மாவினைக் கிருகித்துக் கொண்டதோடு அமையாமல், இவனுடைய கருத்தினையும் ஒழித்துத் தானும் தன்னுடைய கருத்துமேயாகி நிற்கிறான் பரமன். இதனை விளக்கும் பொருட்டே,* **“கருதுவதன் முன் கருத்தழியப் பாயும் ஒருமகள் கேள்வன்”** *என்றார் ஆசிரியர்.* **ஒருமகள் கேள்வன்** *என்றமையால் சத்தியும் சிவமும் பிரிப்பின்றி நிற்றல் உணர்த்தப்பட்டது.* **ஒருமகள்** *என்றமையால் அருட்சத்தி என்பது தெரியலாம். அருள்வழி நிற்றலே போதும் என்பார்* **கருதுவதன்முன்** *என்றார். உடனே நிகழ்ச்சியினை உணர்த்தும் பொருட்டே கருத்தழியப்* **பாயும்** *என்றார்.*

*இவ்விதமாக, அருள்வழி நில்லாமல் ஆன்மபோதத்தாலே சிவனைக் கருதுவாராயின் அச் சிவத்தினை அறிய இயலாது. கண்ணில்லாதவன் சூரியனைக் காண்டல் ஒருபோதும் இயலாது. இதுபற்றியே,* **“உன்ன அரியன்”** *என்றார் ஆசிரியர். “தோன்றி நின்ற சிற்பரமதனால்* **உள்ளச் செயலறுத்திட உதிக்கும் தற்பரம்**” *என்பது சிவப்பிரகாசம். “மேலாம் சிற்பரமதனைக் கூடில் சிவனையும் கூடலாமே” என்பதும் இஃதுணர்த்தும். எனவே, தத்துவங்களை அறியும் பசுஞானமொழியப் பெற்று, அகம் பிரமம் என்னும் பசுஞானமும் மடங்கப் பெற்று, அருள்வெளிப்பாடாகிய பதிஞான மேலீட்டால் சிவம் அறியப்படும் என்பது தெளியப்பட வேண்டும்.*

**"சத்திய ஞானத் தனிப்பொருள் ஆனந்தம்**
**சித்தத்தின் நில்லாச் சிவானந்தப் பேரொளி;**
**சுத்தப் பிரம துரியம்; துரியத்துள்**
**உய்த்த துரியத் துறுபே ரொளியே".**

*என்ற திருமந்திரம், ஒப்பில்லாத சத்தியஞான சத்தியினை அநவரதமும் பொருந்திக் கொண்டிருக்கத்தக்க நாயகன் உன்ன அரியன் என்பதனை உணர்த்துதல் காண்க. எவராலும் தம் அறிவினால் நினைதற்கு எட்டாத நிலையில் இருப்பவன் உன்ன அரியன். களிறு 35.*

செய்யுள் - 20

**சிவானந்தானுபவம் இடையறாமை**

இரவு பகலில்லா இன்ப வெளியூடே
விரவி விரவிநின் றுந்தீபற;
விரைய விரையநின் றுந்தீபற.

**கருத்துக்கள்**

1. ***இன்ப வெளியியல்பு.***
2. ***இன்பவெளியில் விரைந்து கூடுகை.***

**தெளிவுரை**

*'இரவு' என்பது, கருவி கரணங்கள் கூடாத நிலையில் உயிர்கள் ஆணவ மலத்தைப் பற்றி, அதனால் முழுமையாக மறைப்புண்டு இருக்கும் ''கேவல நிலை''யைக் குறிக்கும்.*

*'பகல்' என்பது, கருவி கரணங்களுடன்கூடிய நிலையில் உயிர்கள் மாயாகருவிகளைப் பற்றி, ஏகதேச அறிவு விளங்கிச் சுட்டியறியும் நிலை ஆகிய "சகலநிலை"யைக் குறிக்கும்.*

---

| | | |
|---|---|---|
| கேவலம் | - ஆணவமல மறைப்பு | - இரவு |
| சகலம் | - மாயாகருவிகளுடன் கூடிய நிலை | - பகல் |
| சுத்தம் | - பேரின்பநிலை | - இரவு பகலற்ற நிலை |

*இவ்விரு நிலைகளினின்றும் நீங்கி, பேரின்பப் பெரு வெளியில், சுத்தநிலையில் சிவபெருமானைக் கூடி நின்று, உயிர்கள் பேரின்பம் நுகரும் அந்நிலையில் உயிர்க்கு மீண்டும் சகல கேவல நிலைகள் ஏற்பட்டு விடாமல் இருக்கும் பொருட்டு, திருவருளை விட்டுச் சற்றும் பிரியாமல், உயிர்கள் நிற்க வேண்டும். அதுவே சுத்தநிலை அல்லது இரவுபகலற்ற நிலை.*

*'விரவி விரவி' என்னும் அடுக்குத் தொடரில், முதலில் வரும் 'விரவி' திருவருளை விட்டுச் சிறிதும் பிரியாத நிலையையும் அடுத்து வரும் 'விரவி' திருவருளோடு இடைவிடாது கலந்து இருக்க வேண்டுவதன் இன்றியமையாமையையும் குறிக்கும். 'விரைந்து விரைந்து' எனும் அடுக்குத் தொடர், இருவகைப் பற்றுக்களுக்கும் மீண்டும் இடங்கொடாது இருக்க வேண்டுவதன் அவசியத்தைக் குறிக்கின்றது. (களிறு : 36 & 37).*

*கிடைத்தற்கரியதொரு பொருள் (புதையல்) கிடைத்தால், அது கிடைக்கப் பெற்றவன் அப்பொருளையே பற்றிக் கிடப்பன். பகற்போதில் உணவு முதலியவற்றையும் உட்கொள்ளக் கருதான். இராப்போதில் சுக நிமித்தம் உறங்குதலும் செய்யான். அப் பொருளையன்றி வேறெதனையும் அவன் கருதுவதிலன். அதாவது, அப்பொருள் அவன் சிந்தனை முழுவதையும் தானே கிருகித்து நிற்கும் என்பதாம். இவ்வாறே, பாசஞானம் கடந்து, பசு போதம் ஒருவி, அருள்மேலீடுபெறுதல் அதாவது ஒரு மகள் கேள்வன் பாயப் பெறுதல் கிடைத்தற்கரிய விழுமிய பேறாம். இதனின் சிறந்த சிறப்பு வேறிலது. இதனை ஒருவன் ஞான தேசிகராலே அடையப் பெறுவானாகில் அப் பெறலரும் பேற்றினையே துய்த்துக் கிடக்கவேண்டுமே ஒழிய, அதனின் கீழ்ப்பட்ட சுகங்களை அனுபவிக்க நாட்டங் கொள்ளலாகாது. "கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே" என இம் மடமை ஆளுடை அரசரால் அறிவிக்கப்படுகின்றது.*

| | | | | |
|---|---|---|---|---|
| பூதாகாசம் | சூரியன் இருப்பிடம் | உதயம், அஸ்தமனம் உண்டு | பகல் இரவு நிகழும் | பகல்–விழிப்பு–மாயை இரவு–உறக்கம்–ஆணவம் |
| ஞானாகாசம் | சிவத்தை உடையது | மேற்காண் அவத்தை இல்லை | இல்லை | விழிப்பு–ஞானம் உறக்கம்–ஆனந்தம் |

**ஆகாசம் இருதிறப்படும். ஒன்று பூதாகாசம், மற்றது ஞானாகாசம். பூதாகாசம் சூரியனிருப்பிடம். ஞானாகாசம் சிவத்தினை உடையது.** பூதாகாசத்தில் உதயம் அத்தமயம் என்ற இரண்டு அவத்தைகள் நிகழும். ஞானா காயத்தில் இவ்வவத்தை இல்லை. எப்போதும் ஒரே நிலைதான் நிலவும். பூதாகாயத்தின் உதயாத்தமனங்களால் பகல் இரவு என்னும் காலபேதம் மாறிமாறி நிகழும். ஞானாகாயம் காலாதீதப்பட்டது. நாம், பூதாகாயத்துட்பட்ட இப்புவனத்தே (விசுவத்திலே) உடம்போடு வாழ்கிறோம். இதனால் பகலில் விழித்தும் இரவில் உறங்கியும் காலந்தள்ளுகிறோம். விழித்த காலத்தே மாயை வயப்பட்டு

ஒழுகுகிறோம். உறங்கிய காலத்தே (ஒடுங்கிய காலத்தே) ஆணவ மயப்பட்டு அறிவற்றுக் கிடக்கிறோம். இவ்வாறு ஆணவ மாயைகளின் வசப்பட்டுக் கருமச்சுழலில் சுழன்று பிறப்பிறப்புட்பட்டு அவதியடைகிறோம். ஆதலால், பூதா காசத்தைத் **துன்பவெளி** என ஞானிகள் கூறுவர். எனவே, விழிப்பும் உறக்கமும் ஆகிய மாயையும் ஆணவமும் நம்மை ஆள்கிற வரையில் நமக்கு இன்பம் இல்லை. ஞானாகாசம் ஞானமயமாவது. ஆனந்த இயல்பினது. இதனுட்பட்டார்க்கு வியாபக அறிவும் நிலைத்த இன்பமுமே நிகழும். **ஞானாகாயத்துட்பட்ட ஆன்மாவுக்கு விழிப்பெனப்படுவது ஞானமாம். உறக்கமெனப்படுவது ஆனந்தமாம்**. இந்த நிலையே சிவானந்த நிலை எனப்படும். நிராதார யோகத்தின் முடிவுநிலை இதுவே. இதனால் தூல சூக்கும பரங்களெனப்படும் மூவகை உடம்புகளின் தத்துவங்களும் அகன்று சுத்த சிவானந்தானுபவ நிலையே ஏற்படும். பாவ அபாவங் கடந்து ஞானமேயாய் நின்று பெறும் இந்த நிலை உண்மை நிலையாதலாலும் கிடைத்தற் கருமையானதாதலாலும் இந்த அனுபவத்தில் கலந்த கலப்பு நீங்கவிடுதல் கூடாது. அதாவது திரும்பவும் பிரபஞ்ச வாதனைக்குட்படுதல் கூடாதென்பதாம். ஆகையால் ஆசிரியர், இதனை “**இரவு பகல் இல்லா இன்ப வெளியூடே விரவி விரவி நில்**” என்று அறிவிக்கிறார். ஞானாசாரியராலே இந்தப் பக்குவ நிலையினைச் சாதித்துக்கொண்ட சீடன், பழைய பிரபஞ்ச வாசனையிலே பழக்கமிகுதியால் மனம் பற்றி மறுபடியும் இப் பிரபஞ்சப் பொருட்களையும், உடம்பையும், மனாதிகளுடைய பிடிப்பையும் மேற்கொள்ளுவானாயின் (மெய்யெனப் பற்றுவானாயின்) இச் சிவானந்தானுபவத்தை எய்தப் பெறாமல் மணியிழந்த நாகம்போல் துன்ப இருளிற்பட்டுச் சனன மரணங்களையே அடைவான். இதனால் இளைப்பாறுதல் இராது. உழத்தல்தான் ஓயாது நிகழும். இங்ஙனம் அவதிக்குள்ளாதல் கிடைத்த பொருளை நழுவவிடல் போல்வதாம்.

தாகங் கொண்டவன் தண்ணீர் எங்கே கிடைக்கும்? எப்போது கிடைக்குமென்று விரைந்தோடித் தேடி அது கிடைக்கப் பெற்றபின் அவசரமாய்ப் பருக முற்படுவான். அவ்வாறே, தேசிகரால் திருவருளில் அழுந்தும் நிலையினை எய்தப் பெற்றவன் விரைந்து அவ்வானந்தானுபவத்திலே கூடி நிற்க வேண்டும். இதனால் முப்பத்தொன்றும், நான்கும், ஒன்றுமாகிய தத்துவச் சேட்டைகள் தவிரும். இது காரணமாக, தன்னையும், ஞானத்தையும், சிவனையும் உணர்ந்த சிவ ஞானியாவான். ஆன்மாவின் தத்துவப் புசிப்பறும்; இளைப்பாறுதல் உறும். இதுபற்றியே, **விரைய விரைய நில்** என்கிறார் ஆசிரியர். இதனால், ஞானாசாரியராலே உணர்த்தப்பட்ட சுத்த நிராதார யோகநெறி நிற்கப் பெற்றவர், அந்நெறியால் நிகழும் சிவானந்தானுபவத்தை விரைந்து கூடி, கூடினபடியே அழுந்தி அனுபவித்துக் கிடக்கவேண்டும் என்பது பெற்றாம். இடையிலே, விரோதமாகிய பிரபஞ்ச வாதனைகட்கு இடந்தந்தால் இவ்வனுபவம் நிலைபெறாதெனத் தெளிதல் வேண்டும்.

**"இருளும் வெளியும் இரண்டையும் மாற்றிப்**
**பொருளிற் பொருளாய்ப் பொருந்த உள்ளாகி**
**அருளால் அழிந்திடும் அத்தன் அடிக்கே**
**உருளாத கன்மனம் உற்றுநின் றேனே".**

*என்ற திருமந்திரப் பாடலில் மேலே சொல்லப்பட்ட செய்திகள் அடங்கியிருத்தலைக் காண்டல் கூடும்.*

### செய்யுள் - 21

## ஆன்மபோதத்தப்பாலாம் அம்பிகை பாகன்

சொல்லும் பொருள்களும் சொல்லா தனவும்அங்
கல்லனாய் ஆனான்என் றுந்தீபற;
அம்பிகை பாகன்என் றுந்தீபற.

**கருத்துக்கள்**

1. ***ஆன்மபோதம் சிவனை அறியாது.***
2. ***சிவமே உண்மைப் பொருள்.***

**தெளிவுரை**

*சொல்லால் விளக்கத்தக்க, உள்ள பொருள்களாகவும், சொல்லால் விளக்க இயலாத, இல்லாத பொருள்களாகவும், இவை இரண்டு தன்மைகளும் அல்லாத பொருள்களாகவும் சிவபெருமான் திகழ்கிறான். அவனுடைய தன்மை ஒப்பும் உவமையும் இல்லாத தனித்தன்மை ஆகும். அவ்வாறு இருந்தும் உயிர்கள் மீது கொண்ட கருணையால் அவற்றுக்கு இரங்கிவந்து அருள்பாலிக்கிறான். ஏனெனில் அருளே வடிவான தனது சத்தியோடு நீக்கமின்றி நிற்கிறான் அப்பேரருளாளன்.*

*உலகப் பொருள்கள் யாவும் இன்னதெனச் சுட்டிச் சொல்லத்தக்கன. இல்லாத பொருள் என்பது சொல்லால் சுட்டவும் மனத்தால் நினைக்கவும் முடியாததாக இருக்கும். பரம்பொருள் ஆகிய சிவபெருமானே யாவையுமாய் அல்லனுமாய் விளங்குபவன். உரைப்பதற்கும் உள்ளுவதற்கும் அரியவன். மாணிக்கவாசகர் கூறுவது போல் அவன் வான் பழித்து இம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல். அது அவன் உயிர்களிடத்துக் கொண்ட பெருங்கருணையினாலேயே ஆகும்.*

சமயங்கள் பல. அவற்றை ஆறு ஆறாக நால்வகைப் பிரிவினுள் சித்தாந்தம் அடக்கியுரைக்கும். அவை, உலோகாயதம், மாத்துமிகம், யோகாசாரம், சவுத்திராந்திகம், ஆருகதம், வைபாடிகம் என்ற ஆறும் **புறப்புறச்சமயம்** எனப்படும். இனி, தருக்கம், மீமாஞ்சம், ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்ற ஆறும் **புறச்சமயம்** எனப்படும். மற்றும், பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கிய வாதம் என்ற ஆறும் **அகப்புறச் சமயம்** எனவுரைக்கப்படும். மேலும் பாடாண வாத சைவம், பேதவாத சைவம், சிவ சமவாத சைவம், சிவ சங்கிராந்தவாத சைவம், ஈசுர அவிகாரவாத சைவம், சிவாத்துவ சைவம் என்ற ஆறும் **அகச் சமயம்** எனப்படும். உலகின்கண் நிலவும் எவ்வகைச் சமயத்தையும் இப் பிரிவுகளுள் அடக்கிவிடலாம். இச்சமயங்களெல்லாம் கடவுளைப்பற்றியும், உயிரைப் பற்றியும், உலகைப் பற்றியும் பற்பல விதமாகக் கட்டுரைக்கும். ஒரு சமயக் கூற்றும் (சொல்லும்) பிற சமயக் கூற்றும் விரோதப்படக் காணும். ஒரு சமயஞ் சொல்லும் பொருளும், பிற சமயங்கள் சொல்லும் பொருளும் ஒவ்வாதனவெனப்படும். எல்லாம் முடிவில் ஒன்றே என்பது சித்தாந்தம். "பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும்போல்" என்பர் கம்பநாடரும். எவ்வெச் சமயக் கோட்பாடுகளும் தன்னுள் அடங்குவதாகக் கூறுவதே சித்தாந்த சைவம். தனித்தனி உலகாயத முதலிய கொள்கைகளின்படி ஆகாமல், யாவகைச் சமய நெறிகளையும் விரோதமற முடித்துக் காட்டும் சித்தாந்தக் கொள்கையின் வண்ணம் பொருந்துதல் கடவுளியல்பென உண்மைப் புலமுடையார்க்குப் புலப்படும். ஆதலால் **சொல்லும் பொருளும் அங்கல்லனாய் ஆனான்** எனலுற்றார் ஆசிரியர். கடவுள் நிலை வாக்கின் வரம்புக்குட்பட்டதொன்றன்று. வாக்குக்கு எட்டாதது சிவம். அறிவால் ஒன்றுபட்டனுபவிப்போரும் சொல்ல இயலாத பொருள் சிவம். பிரிப்பற நிற்கும் நிலையில் சிவம் தனித்துணரப்படாததாகும். ஆதலால், சொல்லொணாதது எனவும் படும். எனவே, சொல்லப்படாத பொருளாகவும் இருப்பவன் சிவன். இது குறித்தே, **"சொல்லாதனவும் ஆனான்"** என்றார் ஆசிரியர்.

**பிரபஞ்சம் முதல்வனுக்குத் திருமேனியாகவும், மாயைசத்தியாகவும் விளங்கு மென்பது சித்தாந்தக் கூற்று**. இந்நிலையிலும் எப்பொருளும் சிவம் என்பது தெரியலாகும். "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி" என்னும் தாண்டகக் கருத்தும் இஃதுணர்த்தும். இங்ஙனமாயினும், நம்மனோரால் இதுகுடம். இஃது ஆடை எனச் சுட்டறியப்படுவதுபோல முதல்வனால் பிரபஞ்சம் சுட்டி யறியப்படுவதாய் வேறு நில்லாது. இனி, வாக்கால் உரைக்கப்படுவதான சொரூபாதிகளாய் உள்ள பொருள்களும், உரைக்கப்படாத முயற் கோடு போன்ற இல்லாத பொருள்களும் ஆகிய இந்த இரண்டுமல்லாத பொருள் சிவம் என்பதும் தேறப்படும். பெத்த நிலையினும் சரி, முத்தி நிலையினும் சரி உயிரோடு பிறப்பற இருப்பது சிவம். இதனை அத்துவித நிலை என்பர். தனு கரண புவன போகங்கள் மாயா காரியமாய் **முதல்வன் அருளி**னாலே தோன்றுவன. உயிருக்கு அம்முதல்வன் அருளையின்றிச் செயலில்லை. இறைவன் அருள்வழி நிற்பின் வினை ஒழியும். சுகானுபவங் கூடும். ஆகையினால், இப்பிரிப்பற்ற நிலையினை நமக்குணர்த்துதற் பொருட்டு **"அம்பிகை பாகன்"** என்றார் ஆசிரியர்.

*இதுகாறும் கூறிய முறையால், ஆதாரயோக நெறிமேற்கொண்டு மனமடங்கப் பெற்றுச் சமாதி நிலைப்பழக்கம் கைவரப்பெற்றுப் பின் நிராதாரயோக நெறிபற்றி ஞான தேசிகர்பால் கேட்டும், சிந்தித்தும், தெளிந்தும், நிட்டை கூடவேண்டும். இந் நிட்டை நிலையில் கலைவு ஏற்படாதிருத்தற் பொருட்டுச் சற்குருத்தியானம், பஞ்சாக்கரத்தியானம், மவுனயோகம் முதலிய முறைகளை மேற்கொண்டு பிராரத்துவத்தாக்குதற்கு ஆளாகிப் பிரபஞ்ச வாதனையில் மீளாமல் திருவருளில் அழுந்தவேண்டும். மனங்கசியவேண்டும். அன்பு மீதூரும், சிவம் வெளிப்படும். சிவஞானத்தால் சிவனைக்காணுதல் எனப்படும் நிலை நணுகும். அதாவது தற்போதம் அறவே நீங்க, பற்றில்லாநிலை ஓங்க. நின்றாங்கறியும் சிவம் காணுதல் உதவி புரியச் சுகத்தில் அழுந்த நேரும். இவ்வழுந்திய நிலையிலேயே ஒன்றுபட்டுக் கிடப்பதே நிராதாரயோகத்தின் முடிந்த பயனாகும். இதுவே மக்கட் பிறப்பெடுத்ததன் பயனும் ஆகும். ஆதலால், இந்நெறிநின்றேனும் சிவானந்த நிலை அடையுமாறு ஆசிரியர் எட்டாம் செய்யுள் தொட்டு இச் செய்யுள் வரை கூறலுற்றார் ஆவர்.*

**"முத்திக்கு வித்து முதல்வன்தன் ஞானமே**
**பத்திக்கு வித்து பணிந்துற்றுப் பற்றலே**
**சித்திக்கு வித்து சிவபரந் தானாதல்**
**சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே".**

*என்பது திருமந்திரம். களிறு 38 முதல் 40 வரை.*

### செய்யுள் - 22

## வாயுவும் மனமும்

காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினுள்
ஆற்றுவ தாற்றலென் றுந்தீபற;
அல்லாத தல்லதென் றுந்தீபற.

**கருத்துக்கள்**

1. *கருத்தடக்கும் ஆற்றல்.*
2. *இளைப்பாறுதல்.*

**தெளிவுரை**

*மனம் சலன சுபாவமுள்ளதோர் அந்தக்கரணம். எப்போதும் ஓடிக் கொண்டிருக்கும் இயல்புடையது. குரங்கின் சுபாவம் போல்வது மனத்தின் இயல்பு*

*என்பர். "காடும் கரையும்* **மனக்குரங்கு** *கால்விட்டு ஓட" என்பர் தாயுமானார். மனம் ஓடுகிறவரையில் பிரபஞ்சக் காட்சிகளே நிகழும். பிறப்பும் இறப்பும் மாறிமாறி வந்துகொண்டே இருக்கும். ஆனால், இந்த மனத்தை வசப்படுத்தித்தான் ஆன்மா கரையேற வேண்டியுள்ளது. ''மனம் எனும் தோணி பற்றி'' என்பர் திருநாவுக்கரையாரும், "ஓடும் மனத்தை ஒடுக்கிடல் முத்தி; விடுக்குதல் பிறப்பே" என்பர் பெரியோர். "நெஞ்சே! உன்னை அறப்பெறுகிற்பனேல் பெற்றேன் மற்றீண்டு துறக்கம் திறப்பதோர் தாள்" என்பர் நீதி நூலாரும். மனம் வெளியே ஓடும்போது உலகமே காணப்படுகிறது. சற்று மடங்கி உள்முகமானால் ஆன்மக் காட்சியே நிகழ்கிறது. முற்றும் அடங்கி முனைப்பற்று விடுமாயின் சிவக்காட்சி விளைகிறது. உலகப் பொருள் மற்றும் நிகழ்வுகளை ஆன்ம அனுபவத்துக்கு எட்டச் செய்து சித்தவிகாரம் விளைப்பதில் மனமே முதலில் தொழிற்படுகிறது. எனவே, சித்தவிகாரக் கலக்கம் மனத்தின் அலைவேகத்தின் தாக்குதலால் நேருவதாம். கலங்கியோடிக் கொண்டிருக்கும் தண்ணீரின் உள்ளே உள்ள பொருள் கண்ணுக்குத் தெரியாது. தெளிந்து அசைவற நிற்கும் நீர்நிலையினடியிலுள்ள நுண்ணிய பொருளும் கண்ணிற்படும். சலன சுபாவம் படைத்த மனத்தை நிறுத்துவதே ஆற்றல் எனப்படும். இந்த ஆற்றல் பெறாமல் மற்றெந்த நன்னெறி கைகூடப் பெற்றாலும் பயனில்லை. ஒவ்வொருவரும் மனத்தை நிறுத்தும் ஆற்றல் பெற்றே தீரவேண்டும். இதை நன்றாக ஆராய்ந்துணர்ந்த மேலோர்கள் மனத்தை அடக்குதற்கும் ஒருபாயத்தைக் கண்டு அனுபவித்துக் கூறி வைத்துள்ளனர். குதிரையைக் கடிவாளத்தால் அடக்குகிறோம்.* **அவ்வாறே மனத்தைச் சுவாசத்தால் அடக்கவேண்டும். 'வாயு நிற்ப மனம் நிற்கும்'** *என்பர் மேலோர். உயிர், சுவாசத்தைப் பற்றி நிற்கிறது. சுவாசம் மனத்தை ஓட்டவும் நிறுத்தவும் வல்ல கருவியாகவுள்ளது. சுவாசம் வெளியிடுவதும் உள்ளிழுப்பதுமாக நடைபெறுவது. இச்சுவாசம் இடது வலது நாசிகளின் வழியாகப் போதலும் வருதலும் செய்கிறது. பொதுவாக நோக்கின் நமது சுவாசம் வெளியே 12 அங்குலம் சென்று எட்டங்குலமளவு மாத்திரம் உள்ளே மீளுகிறது. இதனால் ஒவ்வொரு மூச்சு விடுகையிலும் நாலங்குல சுவாசம் வீணாகிறது. இந்த வீணாதல் கணக்கிடப்பட்டு முடிவில் ஆயுட்காலம் தீர்ந்து போகிறது. இந்த நாலங்குலக் குறைப்பைச் சரிக்கட்டினால் ஆயுள் நீளும். இந்த நீண்ட ஆயுளால் இப்பிறப்பொன்றிலேயே பிறப்பறுக்க வழி செய்துவிடலாம். இச்செய்தி, "கூடமெடுத்துக் குடிபுக்க மங்கையர் - ஓடுவர் மீளுவர் பன்னிரண்டங்குலம் - நீடுவர் எண்விரற் கண்டிப்பர் நால்விரல் - கூடிக் கொளிற்கோல அஞ்செழுத்தாமே" என்ற திருமந்திரப் பாடலிற் கூறப்படுவது காணலாம். இங்ஙனம் முயன்றோர் பற்றிக் கூற நேர்ந்த பெரியோர்கள், "தறிபோல் உடலம் நேரிருந்து தயங்கு மருங்கின் இருநாடி - நெறிபோய் மீளும் வளியதனை நிறுவி நடுநாடியிற் செலுத்தி - அறிவோர் சிறிதும் சலியாமல் அன்னப்பெயர் மந்திரம் மாறிக் - குறிபோயிருந்த ஒரு குறியைக் குறித்துக் கொண்டங்கிருந்தனரால்" எனவும், "வாயு நிற்ப மனம் நின்று மனந்தான் நிற்பப் பொறிநின்று - பாய பொறிகள் நிற்ப இடர் படுபுலன்கள்*

*நின்றனவால் - ஆயபுலன்கள் நின்றமையால் அகிலம் தோன்றாதுள்ளத்தே - தூய பரமானந்த பரம்சோதி தோன்றக் கண்டிருந்தார்" எனவும் கூறிக் காட்டியுள்ளனர். பிராணவாயு சலிக்கும் வரையில் மனமும் ஆன்மாவும் ஒன்றுபட்டுச் சீவிக்கும். ஆகையால் இப்படிச் சலித்துப் புறப்படுகிற வாயுவானது பன்னிரண்டங்குலம் புறம்பே சலியாமல் உள்ளேயே கவறும்படி ஆசாரியன் சொல்லிய முறையே அப்பியசிக்க வேண்டும். இடது நாசி வழியாய்ச் சுவாசத்தைப் பதினாறு மாத்திரை உள்ளே வாங்கி, அறுபத்து நான்கு மாத்திரையளவும் உள்ளேயே நிறுத்தி முப்பத்திரண்டு மாத்திரை வலது நாசி வழியாக வெளியே போகவிடவேண்டும். "வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே - ஏமுற்ற முப்பத்திரண்டும் இரேசித்துக் - காமுற்ற பிங்கலைக் கண்ணாக இவ்விரண்டு - ஓமத்தாலெட்டெட்டுக் கும்பிக்க உண்மையே" என்பது மந்திரம்.*

| | |
|---|---|
| சாதாரணமாக வெளியே செல்வது பன்னிரண்டங்குலம் | |
| திரும்பி வருவது எட்டங்குலம் | |
| 16 மாத்திரை பூரித்தால் உள்ளே வருவது | $8/12 \times 16 = 10\frac{2}{3}$ |
| 64 மாத்திரை கும்பித்தால் சேருவது | $4/12 \times 64 = 21\frac{1}{3}$ |
| மொத்தம் | 32 |
| 32 மாத்திரை மூச்சு விடுவதால் வெளிச் செல்வது | 32 |

*இவ்வாறு செய்வதால் 4 அங்குலம் வீணாவதில்லை என்பது காணலாம். இங்ஙனம் வாசி வீண்போகாமல் வசஞ் செய்தல் வேண்டும். இதனால் சரீர சித்தி உண்டாகும். இதனால் மரணம் ஒதுங்கும். இதுவே நோற்றலின்* **ஆற்றல்** *எனப்படும். "கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு" என்பது குறள். "காற்றைப் பிடிக்கும் கணக்கறிவார்க்குக் - கூற்றையுதைக்கும் குறியது வாமே" என்பது மந்திரம்*

*வாசி என்பது சுவாசமாம். 'வா' நெடில். 'சி' குறில். ஒரு சுவாசம் பன்னிரண்டங்குலமாயின் 'வா' என்னும் நெடிலுக்கு எட்டாங்குலமும் 'சி' என்னும் குறிலுக்கு நாலங்குலமும் கணக்காம். பன்னிரண்டங்குலம் வெளியே போனால் திரும்பி வருவது எட்டங்குலமே. அதாவது 'வா' மாத்திரம் வருகிறது. 'சி' பிரிகிறது என்பது கருத்தாம். 'சி' பிரிந்து போகாது செய்தால் 'சிவா' என்று திரும்பும். இதுதான் சிவ - சிவ என்னும் எண்ணிக்கையாம். விட்ட எழுத்தாகிய சிகரத்தை விடாத எழுத்தாகிய வாவோடு கட்டவல்லவர் உயிரைக் காக்கவல்லவர் ஆவர். எழுத்தை அழுத்தும் எழுத்து என்றும் இம்முறை பேசப்படும். இவ்வாறு காற்றை வீண்போக விடாமல் மாற்றினால் மனம் கட்டுப்படும். இங்ஙனம் செய்தல் எளிதன்று. குரு வசனப்படியே இது செய்தல் நன்றாம். இதனாலேயே,* **காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினுள் ஆற்றுவது ஆற்றல்** *என்றார் ஆசிரியர். மனத்தைக் காற்றினால் கட்டி நிறுத்தினால் அது அவிகாரத்தே செல்லும். அதாவது கருத்துக்குக் கருத்தாய் இருக்கும் தம்பிரானார் திருவடியிலே கூடியிருக்கலுறும்.*

*இதனால் இளைப்பு நீங்கும். வெயிலில் அலைந்தோன் நிழலை அடைந்தாற்போல்வது இது.* ***வெயிலில் நடக்கும்போது கூடவே வந்த அவனது நிழல், மர நிழலை அடைந்ததும் விட்டுப் போவது போலத்*** *தம்பிரானார் திருவடியிலே மனம் லயித்ததும் மனத்தினது சலன விகாரம் அற்றுப்போம். எனவே, வாசிவித்தையால் மனத்தை நிறுத்தலே முதன்மையாக வேண்டுவதாமெனத் தெரியலாம். அடியிலிருக்கும் பாண்டத்தைத் தள்ளினதும் அதன்மேல் அடுக்கப்பட்ட எல்லாப் பாண்டங்களும் விழுந்து நொறுங்கிவிடும். மனத்தின் நிலையிலும் இதுவே நெறி. இதனால் ஆன்மா சிவனது சீபாதத்தை அணையும் என்பதாம். இந்த நெறியாக மனத்தை அடக்காமல் வேறு எந்த வழியாக முயன்றாலும் மனம் நிலைபெறாது. மனம் நிலைபெறாது சலிக்குமாயின் சிவயோகம் சித்திக்காது. இதனாலேயே ஆசிரியர்,* ***'அல்லாதது அல்லது'*** *என்றார். ஆதலால், குரு வசனத்தைக் கேட்டுணர்ந்து அவ்வழியே வாயுவை நிறுத்தினால் மனமடங்கும். மனமடங்கினால் பிரபஞ்சம் தோற்றாது. இறைவனடி நணுகும் என நாமறிதல் தக்கதாம்.*

**"கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி**
**வீணாத் தண்டூடே வெளியுறத் தானோக்கிக்**
**காணாக் கண்கேளாச் செவிஎன் றிருப்பார்க்கு**
**வாணா ளடைக்கும் வழியது வாமே".**

*என்பது திருமந்திரம். ''துள்ளுமறியாம் மனது பலிகொடுத்தேன்'' என்பது தாயுமானார் வாக்கு. களிறு 38 முதல் 40 வரை.*

### செய்யுள் - 23

## வீடு பேற்றுக்கு எளிய வழி

கள்ளரோ டில்ல முடையர் கலந்திடில்
வெள்ள வெளியாமென் றுந்தீபற;
வீடும் எளிதாமென் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. *ஆன்மா ஒரு வழிப்படல்.*
2. *வீடுபேறு.*

### தெளிவுரை

*சிவபெருமான், உயிர்களின் பெத்த நிலையில் மறைந்து நின்றே உயிர்களுக்கு*

*அறிவுறுத்துகிறான். எனவே 'கள்ளன்' எனப்படுகிறான். **"உள்ளம் கவர் கள்வன்"** என்பது சம்பந்தர் வாக்கு.*

*பெத்த நிலையில் உயிர்கள் உடம்போடு கூடி வாழ்கின்றன. உடம்புக்கு உயிர்கள் இல்லம் போன்றவை. எனவே 'இல்லம் உடையார்' என்பது பெத்த நிலையில் உள்ள உயிர்களைக் குறிக்கும்.*

*இந்நிலையில் சிவபெருமானின் பெருங்கருணைத் திறத்தை எண்ணி உயிர்கள் அவனோடு கலந்த அன்பாகிக் கசிந்து உள்ளுருகி ஒன்றாகி நிற்குமாகில், உயிர்க்குள்ள மலமறைப்பு நீங்கி, இருவினை ஒப்பு வாய்க்கப்பெற்று, சத்திநிபாதம் எய்தி இறையருளில் கலக்கும். அந்நிலையில், மறைப்பாற்றலாகி நின்ற அருளாற்றல் உயிர்க்கு முத்திப் பேற்றினைத் தந்தருளும். உயிர் பேரின்பப் பெருவெளியில் நின்று வீடு பேற்றினை எளிதில் பெறும். "வெள்ள வெளி" என்பது, பரவெளி ஆகிய வியாபகத்தைக் குறிக்கும். களிறு, 42 & 43.*

*கண் ஒரு பொருளைக் காணும்போது தானே காணாது. உயிரால் காட்டப்பட்டுக் காணும். பொருளைக் காணுங் கண்ணானது கண்ணின் இயல்பையும் அறியாது; காண்பித்துக் கருத்தவாய் நிற்கும் உயிரையும் அறியாது. இவ்வாறே தன்னை யாரெனத் தேர்ந்தறியும் உயிர், தானே தேர்ந்தறியாது, முதல்வன் மறைந்து நின்று அறிவிக்க அறியும். இவ்வாறு முதல்வனால் அறியும் உயிர், மேலே சொல்லப்பட்ட கண்ணைப் போலவே தன்னியல்பையும் அறியாது; தனக்கு அறிவித்து நிற்கும் முதல்வனையும் அறியாது. உயிர், கண்போல சடமன்று. அறிவுப் பொருளாம். என்றாலும், அவ்வறி வினிடத்தும் முதல்வன் உடனாய் நின்று அறிவித்து மறைந்து நிற்கிறான். ஆதலால் முதல்வனைக் கள்வன் என்பர். ஆயினும், அம்முதல்வனை அவனருளால் ஆன்மாவிடத் துண்டாகும் தெளிந்த அறிவால் நாடித் தெளியலாம். முதல்வன் ஆன்மாவினது தேர்ச்சியறிவின் கண்ணும் கலந்து நின்றும் உயிருக்குத் தோன்றுவதில்லையாதலால் முதல்வனைக் கள்வன் என்பர். "என் உள்ளம் கவர் கள்வன்" என்பது திருப்பாடல். கள்வன் என்பது குறிப்பு மொழியாம். உயிருக்கு உள்நோக்கும் தன்மை உண்டு. ஆதலால், தோன்றாது மறைந்து நிற்கும் கள்ளம் தீர்ந்து தம்மையும் முதல்வனையும் உயிர்கள் காண்டல் கூடும்.*

*உடம்பு வீடு போல்வது. இதனில் வாழ்வது உயிர். இவ்வுயிரினிடம் சஞ்சிதப் பொருள்கள் அளவிலவாக உள. இவ்வளவையும் எடுத்தாகவேண்டும். இவைகள் அத்துவாக்களாகிய அறைகளுக்குள் பந்தித்து வைக்கப்பட்டுள. வீட்டுக்குள் பல பொருள்கள் இருக்கின்றன. அவற்றைக் கள்வனொருவன் விடாமல் கவர எண்ணுகிறான். அவன் முதலில் தன்னைக் கள்வனாகக் காட்டிக்கொள்வதில்லை. அதாவது, சொரூபத்தைப் பேதித்துக் கொள்ளுகிறான். களவு நூலின் வழியே கவரத் தொடங்குகிறான். வீட்டுக்குடையவனை மந்திரத்தாலும், மருந்தாலும், தியானத்தாலும் பேதகப்படுத்தி வசஞ்செய்து கொள்ளுகிறான். பிறகு அவ்வீட்டுக்குடையவனும் சம்மதிக்க அவனிடமுள்ள எல்லாப் பொருள்களையும்*

*கவர்கின்றான். இந்த நிலையில் கள்வனும் வீட்டுக்குடையவனும் ஒரே மனப்பாடுடையவர்களாக ஆகி விடுகின்றனர். வீட்டுக்குடையவன் கள்வன் வசப்பட்டவனாகிவிடுகிறான். ஆதலால், தானும் ஒருப்படுகின்றான்.*

*இவ்வாறே, ஆன்மாவினுள் தம்பிரானார் மறைந்துறைகின்றார். ஆன்மாவின் அநாதியான மல சம்பந்தத்தால் இந்த மறைவு ஆன்மாவுக்குப் புலப்படுவதில்லை. ஆன்மாவுக்கு வேண்டாதன நீக்கி வேண்டுவதைத் தருவதற்காகவே இறைவன் இங்ஙனம் உடன் உறைகின்றான். இந்த நிலையிலேதான் முதல்வன் கள்வனை நிகர்க்கிறான். இருவினை ஒப்பு, மலபரிபாகம் உண்டான அவசரத்திலே தம்பிரானார் ஆன்மாவினுக்கு ஏற்றதானதொரு திருமேனியில் பிரகாசித்து (வெளிப்பட்டு) திருநீறு என்னும் மருந்தளித்து திருவைந்தெழுத்து என்னும் திருமந்திரம் கூறி; சொரூபமென்னும் தியானத்தால் பேதித்துத் தன்வசமாக்கிக் கொள்ளுகிறார். பிறகு, கள்வன் அறைகளைச் சோதிப்பது போல, ஆறத்துவாக்களையும் சோதனை செய்கிறார். கள்வன் பழமையானது முதல் எல்லாப் பொருள்களையும் கவர்வதுபோலத் தம்பிரானாரும் ஆன்மா நெடும் பிறவிகளாகச் சேமித்துவைத்த எல்லாக் கன்மங்களையும் எடுத்துவிடுகிறார். இதற்கு ஆன்மாவும் சம்மதித்தே ஒழுகுகின்றது. அவ்வாறு ஒன்று பட்டேயாகவேண்டும். பிறகு ஆன்மாவிடம் ஒருமுதலும் இருப்பதில்லை. இவ்வான்மாவினை உடையவனது இதயம் பரவெளியாகிவிடும். இதனையே, நம் ஆசிரியர் "***கள்ளரோடு இல்லம் உடையார் கலந்திடில் வெள்ள வெளியாம்***" என்று கூறியுள்ளார்.*

*ஆன்மாவே வீடடையும் தகுதிவாய்ந்தது. அதனோடு கூடியுள்ள மாயா காரியங்களாகிய ஐம்புல மாதியன வீடு பேற்றுக்குரியனவல்ல. இவை மாயையுட் கிடப்பனவாம். வீடு, வீட்டைக் கிரயம் பெற்றவனுக்குச் சொந்தமுடையதாகும். அதில் குடியிருப்பவனுக்குச் சொந்தமாகாது. இவ்வாறே முத்திவீடும் ஆன்மாவுக் குரிமையுடையதாம். தாத்துவிகங்கட்கு உரிமையுடையதன்று. எனவே, ஐம்புல வேடர்களாகிய கள்ளர்கட்கு ஒருபோதும் கிட்டாத இயல்புடைய முத்திவீடு ஆன்மாவுக்குக் கிட்டுகின்றது. வருத்தமின்றிக் கிடைக்கின்றது. ஆகையால் **வீடும் எளிதாம்** என்றார் ஆசிரியர். ஒருவேளை ஆன்மா, பற்று நீங்காமல் பலபல பிறவி எடுப்பினும், சிவம் அவ்வான்மாவினைக் கைவிடாது பற்றி எடுத்து நிட்டையிலே கூட்டிச் சாயுச்சியத்தைத் தரும் என அறிதல் தக்கதாம். இதனால், முதல்வன் இடையறாத காருண்ய சத்தியினை அநவரதமும் உடையவன் என்பது தெரியலாம்.*

**"தானே புலனைந்தும் தன்வச மாயிடும்**
**தானே புலனைந்தும் தன்வச போயிடும்**
**தானேபுலனைந்தும் தன்னில் மடைமாறும்**
**தானே தனித்தெம்பிரான் தன்னைச் சந்தித்தே"**

*என்ற திருமந்திரக் கருத்து சிந்திக்கத் தகுவதாம்.*

## செய்யுள் - 24

## விசுவாதீதமாய் நிற்றல்

எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்கொண் டேநின்றார்
விட்டா ருலகம்என் றுந்தீபற;
வீடே வீடாகும்என் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. *ஆன்மயோகம்.*
2. *வீடுபேறு.*

### தெளிவுரை

*சூரியன், சந்திரன், நிலம், நீர், தீ, காற்று, வான், உயிர் என்னும் எட்டுப் பொருள்களின் அகத்தும், புறத்தும், சிவபெருமான் அது அதுவாய் வியாபித்து இருக்கிறான். இவ்வாறு இறைவன் எட்டுப் பொருள்களிலும் வியாபித்து இருப்பதை, "அட்டமூர்த்தம்" என்கிறோம். இவற்றைத் திருமேனியாகக் கொண்டு, திகழும் சிவபெருமானை இடைவிடாது பேரன்பினால் பற்றி நிற்பவர்கள், உலகப் பொருள்களோடு பொருந்தி நின்றார்களாயினும், அவற்றுள் சிவபெருமானையே காண்பதால், அவர்கள் உலகப்பற்றை அறவே விட்டவர்களே ஆவர். இவ்வாறு* ***இறைப்பற்றுக் கொண்டு, உலகப்பற்றை அறவே நீத்தவர்களே, சீவன் முத்தர் எனப்படுவர்.*** *இவர்களுக்கு உலகத்தில் எந்தவிதத் துன்பமும் நேருவதில்லை. இதனை* ***"இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை"*** *என்னும் அப்பர் வாக்கினால் அறியலாம். எனவே உலகப்பற்று அற்றுப்போகவே, திருவடிப்பற்றுடைய அவர்கட்குப் புகலிடம் வேறு இல்லை, ஆகவே, இவ்வுலகில் வாழும்போதே அவர்கள் வீட்டின்பத்தை அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். 'வீடே வீடாகும்' என்பது, இவ்வுலகே அவர்கட்குத் திருவடிப் பேறு ஆகும் என்பதைக் குறிக்கிறது. (களிறு : 44-45).*

*சிவத்தை நாம் காணமுடிவதில்லை. என்றாலும் சிவத்தின் அமிசமாய்ச் சிவத்தின் வடிவாய் நிற்கும் பொருள்களைச் சிவமெனவே நாம் காணலாம். தெரிந்ததுகொண்டு தெரியப்படாததை அறிதலே எளிய முறையாகும். அறிவு சுருக்கமுற்றுப் பற்றுமயமா யிருக்கையில் எந்தப் பொருளையும் சிவாமிசமென நம் மனம் கருதாது. அறிவு அருளால் விரிய விரிய எப்பொருளும் சிவாமிசமென்பது விளங்கும். சூரியன் எழ எழ எப்பொருளும் அதனியல்பும் வடிவும் நமது கண்ணுக்கு விளக்கமாகும். கண்கள் இருளில் அழுந்திக் கிடக்கையில் பிற பொருளையும் காணா; கண்களை உடையானையும் காணா. ஆன்மா, தன்னை முதலில்*

அறிந்துகொள்ளவேண்டும். தன்னையறியாமல் தலைவனை அறிதல் நிகழாது. தனை அறியும் அறிவே அறிவின் விரிவெனப்படும். தான் ஒரு முதல் இருப்பதை ஆன்மா அறிய அவாவிய பின்னர், தனக்குச் சார்பான இன்றியமையாத பொருள்களாக என்னென்ன உள்ளன என்று காண வேண்டும். ஆன்மாவுக்கு அறிவு விளக்கம் ஏற்படும் பொருட்டு உள்ள பொருள்கள் ஏழாம். இவற்றோடு ஆன்மாவினையும் கூட்டினால் மொத்தப் பொருள்கள் எட்டாகும். சூரியன் இல்லாமல் உயிர்கள் வாழ இயலாதென்பதை எவரும் அறிவர். இதனாலேயே சூரியனை எந்த நாட்டினரும் கொள்கையினரும் புகழலுற்றனர். சூரியனால்தான் உலகம் நிலைபெறுகிறது. கடவுட் காட்சி கூறவந்த நக்கீரர் பெருமானும், "உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு பலர்புகழ் **ஞாயிறு**" என்று கூறியிருத்தல் காணலாம். "ஞாயிறு போற்றுதும்" என்கிறார் இளங்கோ அடிகள். திறல் படைத்த வேந்தர்களைப் புகழ நேர்ந்த புலவர்களும் "செஞ்ஞாயிற்றுக் கவினை" என உவமித்துக் கூறியுள்ளமை காணலாகும். இவற்றால் கதிரோன், ஆன்ம அறிவு விளக்க வழியில் உதவும் ஒரு பொருளாகும் என நாம் உணரவேண்டும். சூரியன், வானில் இருந்து உலகின் எப்பகுதியிலும் எப்போதும் விளக்கம் செய்ய இயலவில்லை. அதன் மறைவு இரவு எனப்படுகிறது.

இரவில் ஒளி தருவதற்கும், சூரியனால் ஏற்பட்ட வெம்மையைத் தணித்தற்கும், ஓஷதி முதலான உயிர்களுக்கு வளர்ச்சியமுதூட்டவும் சந்திரன் பாடுபடுகிறது. நிலாவுக்குக் களிக்காத உயிரில்லை. மதியம் போல் முகம் என்று உவமிக்குமிடங்களில் சந்திரன் இயல்பு உணரப்பட்டிருத்தலைக் காணலாம். ஆதலால், சந்திரன் ஆன்மாவுக்குரிய அறிவு வளர்ச்சிப் பாதையில் துணைசெய்யும் ஒரு பொருளெனநாம் தெரியலாம். இதனால் **சந்திரன்** ஆன்மாவுக்கு உறுதுணையாகும் இரண்டாம் பொருள் என்னலாம். மற்றும், ஆன்ம அறிவுக்குறு துணையாக இருந்து இடமளித்தும், உயிர்ப்பாகியும், பாகம் செய்தும், உணவாக்கி உணவாகியும், தாங்கித்தந்தும் உதவுவனவே ஐம்பூதங்களாம். **நிலம், நீர், தீ, காற்று, வான்** என்பன ஐம் பெரும் பூதங்கள். இவையெல்லாம் இயற்கைப் பொருள்கள் எனப்படும். எவரும் உயிரோடு வாழ்ந்து தான் அறிவு அடையவோ வளர்க்கவோ வேண்டியுள்ளது. உயிர் வாழ்க்கை அறிவு வளர்ச்சிக்கு அடிப்படை. மேற்கூறப்பட்ட சூரியன் முதலிய ஏழுபொருள்களின் உதவிகளைக் கொண்டு அறிவு வளர்ச்சிக் குழைப்பனவே உயிர்கள். இவ்வுயிர்களுள் மனிதன் சிறந்த பிறப்புடையவன். எனவே இவ்வான்மாவினையும் சேர்த்தால் பொருள்கள் எட்டாதல் தேறலாம். ஆன்மா இலதேல், பிற ஏழுபொருள்கட்கும் தேவையே இல்லை. ஆன்மா, நித்தியப் பொருளென்பது யாவர்க்கும் உடம்பாடாம். இது, அறிவு கட்டுப்பட்டுக் கிடந்து பிறகு சிறிதளவு அறிவு விளக்கம்பெறத் தொடங்கிப் பின் சத்குரு அருளால் அறிவு விரிவு அடைந்து விடுதலை பெறுகிறது. அறிவு விளக்கத்துக்கென உதவும் சூரியன் முதலிய பொருள்களை நாம் படைத்துக் கொள்ளவில்லை. அவை நமக்காகப் படைப்புண்டுள்ள பொருள்களாம். அவ்வப் பூதத்தின் திறமும் அவற்றிற்கு நம்மால்

தரப்படவில்லை. இதனாலேயே இவற்றை இயற்கைப் பொருள்கள் என்கிறோம். **கதிரோனாதி ஏழு பொருள்களும் உயிரில்லாதன. ஆதலால், இவற்றை ஆக்கியும் ஊக்கியும் அளித்தும் ஏதோ ஒரு பேராற்றல் செய்து வருகிறது. அப்பேராற்றல் பொருளிடம் யாவகை ஆற்றலும் தேக்குண்டு கிடக்கவேண்டும். இந்த ஆற்றற் பெருநிலையமே சிவம் எனப்படுவது**. இச்சிவத்தின் ஆற்றலே (ஒளியே) கதிரோனாதி ஏழு பொருளகத்தும் உள்ளது. ஆன்மாவிலேயும் இப்பொருள் ஒன்றாய் வேறாய் உடனாய் மன்னி நடத்துகின்றது முன்பே கூறப்பட்டுள்ளது. ஆகையால் மேற்குறித்த **எட்டுப் பொருள்களும்** சிவாமிசமே ஆம். அதாவது சிவமேயாம். "வானாகி மண்ணாகி" முதலிய வாசகங்கள் இக் கருத்துணர்த்துவனவாகும். மண் முதலான பொருள்களைக் காட்சி உணர்ச்சி முதலிய உபாயங்களால் அறிகிறோம். இந்தப் பழக்கம் முதிர்ந்தால் ஞானமெனப்படும். இந்த ஞானப் பேற்றினால்தான் தன்னையும் தலைவனையும் அறியும் திறமை விளைகிறது. இந்த விளைவும் தம்பிரானார் அருளாலேதான் தோன்றி வளர்கிறது. இந்த உறுதியான எண்ணமே **ஆன்மயோகத்தின்** அடி நிலையாகும்.

சூரியன் முதல் ஆன்மாவரையிலுள்ள எட்டுப் பொருள்களகத்தும் புறத்தும் சிவம் வியாபித்திருத்தலை நாம் மறவாமல் கருதவேண்டும். அப்போதுதான் நமது மனம் இறைவயப்பட்டு அறிவு விரிவடைய நேரும். இதுவே **ஞானயோகத்தில்** சரியை, கிரியை, யோக நிலைகளெனக் கூறப்படும். ஆன்மயோக வளர்வு பதம் இதுவேயாம். இது மெய்த்தவமெனவும் கூறப்படும். இதனை, "பாய ஆருயிர் முழுவதும் பசுபதி அடிமை - ஆய எவ்வகைப் பொருள்களும் அவனுடைப் பொருள்கள் - மேய இவ்வணமலது வேறின்றென உணர்ந்த - தூய **மெய்த்தவத் தடியவர்** துணையடி தொழுவாம்" என்னும் திருத்தணிகைப் புராணப் பாடல் இனிதுணர்த்தும். இதனாலேயே, **"எட்டுக் கொண்டார் தமைத் தொட்டுக்கொண்டே நின்றார் விட்டாருலகம்"** என ஆசிரியர் கூறியுள்ளார். கண்கள் இரண்டானாலும் ஒன்றையே நோக்கும். அவ்வாறே, பிரபஞ்சம் இறைவனடி என்னும் இரண்டிடத்தையும், ஒருசேர எப்போதும் பற்றிக் கிடக்கும் பெற்றி உள்ளத்துக்கு இல்லை, ஒன்றைவிட்டே ஒன்றைப் பற்றவேண்டும். அதாவது, பிரபஞ்சக் காட்சியில் ஈடுபட்டுக் கடவுட் சிந்தையற்றில்லாமல், கடவுட் காட்சியில் ஈடுபட்டுப் பிரபஞ்சப் பற்றினை அற்றிருப்பதாகும். இவ்வாறு கூறுவதன் கருத்து யாதெனில் அட்ட மூர்த்தமாகவே இறைவனைக் கருதிக் கிடத்தலாம். இதனால் பிரபஞ்சமும் சிவமயம் என்ற உறைப்பு உண்டாகும். எல்லாம் தானாகக் காண்டல் என்பதும் இதுவே. எல்லாம் சிவமெனக் காண்பவர்க்கு விரோதம் இராது. இது பரிபூரண நோக்கெனவும்படும். பிரபஞ்சக் காட்சியானது துன்பத்தையும், எல்லாம் தானாக (அதாவது) சிவமாகக் காணும் காட்சி இன்பத்தையும் விளைத்தலால் இன்ப நாட்டமுடையோர் தமது சிந்தையைப் பிரபஞ்ச முகமாகும் போது கூடச் சிவத்தின் அட்ட மூர்த்தமாகக் கருதிக் கருதி ஒன்றுபடுவர். இதனாலேயே "**தொட்டுக் கொண்டே நின்றார்**" என்றார் ஆசிரியர். "தாதிமனம் நீர்க்குடத்தேதான்" என்ற

உவமையும் இக்கருத்தை விளக்கவல்லதே. எல்லாம் சிவமயம் என்ற சாதனையால் பிரபஞ்ச வாதனை விட்டுப்போகிறது. "மறத்திற்கும் அன்பே துணை" என்பது போல்வது இந்த எல்லாம் சிவமயம் என்ற பாவனை. சிவம் கதிரோனாதி திருமேனி கொண்டு எழுந்தருளியிருப்பதைத் திருவருளாலேதான் அறிய முடியும். அங்ஙனம் அறிந்ததும், தானும் அவரைப்போலே சிநேகம் புரிந்து கூடவேண்டும். இங்ஙனம் கூடுவோர்க்கு எல்லாம் சிவன் செயல் என்றேபடும். ஆதலால், **"விட்டார் உலகம்"** என்றார். இந்த முயற்சியில் கருத்து எப்போதும் ஒருவனையே பற்றி ஓரகத்திருத்தலே முக்கியமாம். கருத்துச் சலனம் கூடாது. எந்த நிலை மாறினும் எண்ணத்தின் திண்ணம் ஒரே மாதிரி நிகழவேண்டும். இதற்குச் சாக்காளிப் புழுவின் சிந்தனை உவமையாகக் காட்டப்படும். விஞ்ஞானநூல்களிலும் இப்புழு பறக்குநிலை அடையும் விதம் கூறப்படுதல் காணலாம். பறக்கும் திறனேயின்றிச் சிறகுகளில்லாமல் தரையையே பற்றி ஊர்ந்து செல்லும் இவ்வகைப் புழுக்கள், பறக்கும் பட்டாம் பூச்சியாகுமுன், தம்மைத் தாமே கூட்டுப் புழுக்களாக்கிக் கொண்டு புழுவாம் சிந்தனையின்றிப் பறவையாம் சிந்தனையொன்றே கொண்டு தவம் கிடக்கின்றன. பிறகு கூட்டை உந்திக்கொண்டு பறக்கின்றன. இப்போது நிலத்தைவிட்டு ஆகாயத்தே சஞ்சாரம் செய்கின்றன. பிரபஞ்சம் விட்டுப்போவதும் இப்படித்தான் என இந்த உவமை காட்டும். புழு, கூட்டுக்குள் கட்டுப்பட்டுக் கருத்து மாறுபட்டுப் புழுவாம் நிலையை நினையாது. பறக்கும் நிலையே எண்ணி அந்த நிலை அடையுந்தனையும் செத்தாற்போல் கிடக்கின்றது. அவ்வாறே ஆன்மயோகியரும் ஞான மேம்பாடு எய்தி எல்லாம் அவன் செயல் என்ற கருத்தொருமை உடையராகிப் பிராரத்துவம் தொலையுமளவும் தேக விசுவமென்கிற கூட்டுக்குள்ளே கிடக்கிறார்கள். கருத்து வேறு பூண்டுகிடத்தலால் விசுவத்திற்படுதலிலர். இவ்வளவும் அருளால் நிகழ்வதாம். குடம்பையைத் தனிக்கவிட்டுப் பறவை வெளியேறியபின் எங்ஙனம் குடம்பைப் பற்று அற்றுச் சஞ்சரிக்குமோ அங்ஙனமே விசுவத்துள் உடம்பினுள் பட்டுக் கிடக்கும்போதும் ஞானிகளின் உயிர் விசுவாதீகப் பட்டுக் கிடக்கும் என்பது வள்ளுவர் வாய்மொழி. அதாவது எண்குணத்தான் தாளே பற்றிக் கிடக்கும் என்பதாம். "எண்ணிய எண்ணியாங்கு எய்துப; எண்ணியார் திண்ணியராகப் பெறின்" என்னும் குறட்கருத்தும் ஈண்டைக்கு ஏற்பதே.

வீடு என்பது விடுதலையாகும். "இம்மூன்றும் **விட்டதே** பேரின்பவீடு" என்பதே ஔவை வாக்கு. விடுதலாவது ஒன்றிற் பராக்காயிருத்தலும் பிறிதொன்றில் பற்றிக் கிடத்தலுமாம். ஆன்மஞான யோகியர் விசுவத்தை அருட்கண்ணால் கண்டு அவை பொய்யென நீங்கி நிற்கின்றனர். இந்த நீக்கமே வீடு எனப்படும். கண்பாவு நெற்றிச் சுடரான் கழலிணையே அவர்தம் கருத்தாதலால் அத்திருப்பாதமே அவர்கட்குப் புகலிடமாம். கடற்பறவைக்குக் கடற்பரப்பில் வங்கத்தின் கூம்பே பற்றுக்கோடு. அவ்வாறே பிறவிக்கடல் கடப்போராகிய ஞானியர்க்கும் எட்டுக்கொண்டாரைத் தொட்டுக் கிடத்தலே பற்றுக்கோடாகும் என்க. இதுகுறித்தே **"வீடே வீடாகும்"** என்றார்.

"அறிவறி வென்றங் கரற்றும் உலகம்
அறிவறி யாமையை யாரும் அறியார்
அறிவறி யாமைகடந் தறிவானால்
அறிவறி யாமை அழகிய வாறே"

*என்ற திருமந்திரம் ஏக சித்தமாய்ச் செறிதலை உணர்த்தும்.*

### செய்யுள் - 25

## இருவினை ஒப்புநிலை

சித்தமும் தீய கரணமும் சித்திலே
ஒத்ததே ஒத்ததென் றுந்தீபற;
ஒவ்வாத தொவ்வாதென் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. *இருவினை ஒப்புநிலை.*
2. *சீவகரணம் சிவகரணமாம் நிலை.*
3. *வினைகள் துலையொவ்வாத உயிர்களுக்கு இறைவன் திருவடியினைக் கூடுதல் ஒவ்வாது.*

### தெளிவுரை

*சித்தம் - உயிர்; சித்து - திருவருள். சிவம் சச்சிதானந்தப் பரிபூரணப் பொருளாகும். இச்சிவம் குணகுணி ஒற்றுமையாகிய தாதான்மியம் பற்றி அருளினின்று நிற்பதாம். இவ்வருளெல்லையிலே வியாப்பிய முற்றிருப்பது சுத்த தத்துவ ஞானம். இதுவே ஆன்ம சொரூபம். இவ்வான்மா, தனது சொரூபத்தை உணரும்பொருட்டுதவுவனவாகிய கருவிகளே கரணங்கள் எனப்படும். இக் கரணங்கள் அகம், புறம் என இருதிறப்படும். இக் கரணங்கள் உள்ளும் புறம்பும் ஒடுங்கவும் ஓடவும் வல்லன. இவை புறத்தே சஞ்சரித்தால் பிரபஞ்சமே தோன்றும். அகமுகமாயின் ஆன்ம பக்குவமடையும் வரை நிலைத்துப் பின்னர் அருள் வயப்பட்டதும் சிவகரணமெனப் பெயர் மாற்றமுறும். பிரபஞ்ச ஞானம் நீங்கிச் சிவஞானமுறுதலே முத்திநிலை எனப்படும். இடைநின்ற பசுஞானம் கரணங்களின் வழி வெளியே செல்லுகையில் பாச ஞானத்துடன் ஒன்றி உண்மையுணராது மருளும். உள்முகமாகிப் பதிஞானத்துடன் கரைந்து ஒன்றுபடின் முத்தியின்ப அனுபவத்துள் அழுந்திவாழும். தன்னளவிலே (ஆன்ம அளவிலே) நிற்குமாயின்*

*ஆன்மானந்த அளவிலே சுகிக்கும். இந்தச் சுகிப்பு உண்மை முத்தியன்று என்பதே சித்தாந்தத் துணிபு. எல்லா வேதாகமங்களும் இச்செய்தியை நன்கு கூறுகின்றன. இதனில் தெளிவு அடைதலே சித்தாந்தமாம். பெரும்பாலும் கரணங்கள் பகிர்முகப்பட்டுக் குற்றங்களையெல்லாம் குணமென நம்மை நம்பவைக்கின்றன. இவற்றை அடக்கியாளுதலே மதயானையை அடக்கி நடத்துவதுபோலாம். எனவே, நாம் கரணங்களைப் புறத்தே செல்லவிட்டு அவை காட்டும் தீய நெறிப்பட்டு அவத்தைக்குள்ளாகாமல் ஒழுகவேண்டும். இதனால் பசுகரணபாவம் கெடும். மனத்தை இதன் முதற்பாட்டிற் கூறியபடிச் சிவத்தினிடமாக அமைத்து விடவேண்டும். சித்தம் பசுஞான எல்லை கடந்து திருவருள் நெறிப் படர்கையில் கசிந்து கரையும். அங்ஙனம் கரையக் கரையக் கரணங்களெல்லாம் சிவகரணமாகமாறும். அதாவது ஏது தொழில் புரிய நேரிடினும் யாவும் சிவன்செயல் என எண்ணிக்கிடக்கும் நிலை எய்தும். இத்தகையோர் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர் ஆவர். இவர்களைக் குறித்து நம் சேக்கிழார் பெருமான் 'காரண பங்கயம் ஐந்தின் கடவுளர்தம் பதம் கடந்து - பூரணமெய்ப் பரஞ்சோதி பொலிந்திலங்கு நாதாந்தத் - தாரணையாற்* ***சிவத்தடைந்த சித்தத்தார்*** *தனிமன்றுள் - ஆரண காரணக் கூத்தர் அடித்தொண்டின் வழியடைந்தார்' எனத் திருத்தொண்டர் புராணத்தே திருவாய் மலர்ந்தருளியுள்ளார். கருவிகட்கு எட்டா நிலைகள் ஐந்து. இந்நிலைகளில் முறையே பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆகியோர் வீற்றிருப்பர். இந்த ஐந்து நிலைகளையும் கடந்து நிற்பது சுத்தசிவம். இந்த சோதி நிலையையும் கடந்து ஒளிர்வது சிவசோதி. இந்தச் சோதி நிலையையும் கடந்து நிற்பது சுத்தசிவம். நாததத்துவங் கடந்த தாரணையில் சுத்தசிவம் விளங்குவது. இச் சிவத்தின்பால் மனம் பதியப்பெற்றவர் செயல்கள் யாவும் இறைவன் செயலாகவே மதிக்கப்படும். இச்செயல்கள் உலகத்தார்க்கு நல்லன என்றும் தீயன என்றும் காணப்படினும் பெரியோர்க்கு இறைபணியாகவே தோன்றும். பெரிய புராணத்து ஒரு சிலர் நாயன்மார்களாவார் செயல்கள் இங்ஙனம் மதிக்கப்படுவதன் காரணம் ஈதாம். இவர்கட்குத் தம் உடம்பு என்ற எண்ணமே இருப்பதில்லை. இவர்களுடைய போதம் சிவபோதத்துடன் ஒன்றாகிக் கிடப்பதாம். இதுபற்றியே,* ***"சித்தமும் தீய கரணமும் சித்திலே ஒத்ததே ஒத்தது"*** *என்றார் ஆசிரியர். நன்மை தீமைப் பாகுபாடு இவர்களறிவிற்படாதாதலால் இவர்கள் இருவினை ஒப்புடையவர் ஆவர். வீடும் வேண்டா விறலினர் என்றுகூட இவர்கள் புகழப்படுவர். இன்ப துன்பங்களில் சமபுத்தி பண்ணுகை இவர்தம் இயல்பாம். இவர்களைத் துலையொத்த ஆன்மாக்கள் என்பர்.*

*இவ்வாறான இருவினையொப்பு ஏற்படாதவர்களுக்கு மலபரிபாகம் விளையாது. சத்திபதிதல் (அருளூற்றம் ஏற்படுதல்) நிகழாது. எனவே சற்குரு கடாட்சமிலதாம். ஆதலால் இத்தகையதோர் சித்தம் பலகவர்பட்டுப் பிரபஞ்சமுகமாக ஓடும். கரணங்கள் விபரீத உணர்வே பயக்கும். ஆதலின் தம்பிரானார் திருவடி அடைதல் கூடாது. இதனாலேதான்,* ***ஒவ்வாதது ஒவ்வாது*** *என்றார் ஆசிரியர்.*

**"இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி**
**குருவென வந்து குணம்பல நீக்கித்**
**தருமெனு ஞானத்தால் தன்செய லற்றால்**
**திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே"**

*என்ற திருமந்திரப் பாடல் இங்கு ஒப்பிடத்தக்கதாம்.*

## செய்யுள் - 26

## ஆனந்தாமிர்தம்

உள்ளும் புறம்பும் நினைப்பறின் நின்உள்ளே
மொள்ளா அமுதாம்என் றுந்தீபற;
முளையாது பந்தம்என் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. *நினைப்பறுகை.*
2. *அமுத அனுபோகம்.*

### தெளிவுரை

*சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகளில் சரியை, கிரியை ஆகியன புறத்தே செய்யும் வழிபாடுகள்; யோகம் அகத்தே செய்யும் வழிபாடு. இவ்விருவகை வழிபாடுகளும் பொதுவாக ஏகதேச நினைவோடு செய்யப்படுவனவாகும்.* ***'ஏகதேச நினைவு' என்பது கருவி கரணங்களோடு நாம் செய்கிறோம் என்னும் நினைவுடன் செய்வதாகும்.***

*அவ்வாறு ஏகதேச நினைவோடு செய்யும் நினைப்பை விட்டு, உள்ளும் புறமும் ஆகிய எவ்விடத்தும் சிவமே நிறைந்துள்ளது என்னும் வியாபக உணர்வுடன் சரியை முதலிய வழிபாடுகளைச் செய்ய வேண்டும். இவ்வாறு இறைவழிபாடுகளைச் செய்து வந்தால், எவராலும் பெறுதற்கு அரிய சிவானுபவம் உனக்கு உண்டாகும். அதன் பயனாக, ஏகதேச உணர்வு ஆகிய குறைவுணர்வினால் வரும் தொடர்பு ஒருபோதும் உன்னிடத்தில் தோன்றாது. "மொள்ளா அமுது" என்பது எவராலும் முகந்து கொள்ளப்படாத சிவானுபவம் ஆகும்.* ***"குறைவிலா நிறைவே கோதிலா அமுதே"*** *என்பது திருவாசகம். 'பந்தம் முளையாது' என்பது, ஏகதேச நினைவு*

*ஆகிய குறைவுணர்வினால் ஏற்படும் பந்தபாசம்.* **"பந்தபாசம் அறுக்க வல்லார்களே"** *என்பது சம்பந்தர் வாக்கு. (களிறு: 51-52).*

*நினைத்தற்குரிய கருவி மனம். இந்த மனம் வெளிமுகமாகவும் உள்முகமாகவும் செல்லும் இயல்பினது. வெளிமுகமாகும்போது உடம்பின் பொறிகளை வாயில்களாகக் கொண்டு உலகப் பொருள்களைப் பற்றி, ஆன்மாவினை ஆசை முதலிய ஆபாசங்கட் குட்படுத்தும். உள்முகமாகும்போது ஆன்ம தரிசனமளவும் சென்று அகம்பிரமமென அகங்காரம் அடைவிக்கும். எனவே, இவ்விரண்டு நெறிகளிலும் மனம் செல்லும்போது நினைப்பற்று நின்றுவிட வேண்டும். ஜீவபோதத்தையும், உடம்பையும் கைவிடாதிருப்பின் உள்ளம் இரண்டுபடும். ஆன்ம அறிவு பேதித்து மருளும். ஆகையால், பிண்டப் பிரமாண்டங்களையும் தத்துவங்களையும் ஆன்ம போதத்தையும்* **உருவம், தரிசனம், சுத்தி** *என்னும் நெறிபற்றி அருளாக்கவேண்டும். அருள்வழிப்பட்டதும் இரண்டுபட்டு நடக்கும் ஜீவபோதம் ஒரு நீர்மையதாகும். அதாவது ஞானமேயாகும். இவ்வாறு ஞானமேயானதும் ஆன்மா நினைப்பின் நீங்கிவிடும். நினைப்பற்ற நிலையை ஆன்மா எய்தியதும் பரமசிவன் தன்னுடைய காருண்ய சக்தியுடன் கைம்மாறு கருதாமல் 'தோன்றித் தன்மயமாக்கிப் பிரகாசிப்பான். இந்நிலையில் ஜீவபோதமே இராது. அனுபவிக்கிறோம் என்ற எண்ணமும் விடுபடும். இதுவே* **ஞானநெறி***யாம். இந்த இன்பம் வெளியிட்டுரைக்க இயலாதது. எல்லையில்லாதது. இன்பமே மயமாக இருப்பது. அமுதக் கடலில் அழுந்திய நாவுக்கு அனுபவம் எவ்வாறிருக்குமோ அவ்வாறிருப்பது. ஆதலால் ஆசிரியர்,* **'உள்ளும் புறம்பும் நினைப்பு அறின் நின் உள்ளே மொள்ளா அமுதாம்'** *என்றார். அளவுகடந்த அன்புடைமையாலும் இந்நிலை ஏற்படும். இப்பேரன்பு, கருத்தினை உருக்குதலும் கருத்தழித்து சிவத்துடனே ஒரு நீர்மையாகி விடும். இதனைப்* **பக்தியோக***மெனக் கூறுவர். கண்ணப்ப நாயனார் முதலியவர்களின் இன்ப நிலை இத்தகையதாம். இந்நிலை எய்தியவர்க்கும் நினைப்பு அறவே இராது. இன்பமே இருப்பதாம். இந்தப் பத்தியின்பங்களும் பிறரறியவோ தான் தனித்திருந்தறியவோ முடியாது. இதனாலேயே, "கண்ணப்பர் தாமறிதல் காளத்தியாரறிதல் அல்லது மற்றாரறியும் அன்பு அன்று அது" எனப் பாராட்டப்பட்டுள்ளது. ஒரு நெல்லே பரிணமித்துக் கதிராதல் போல் நினைப்பறுகை ஒன்றுமே பரத்தின் அருளால் பரமானந்தமாகிவிடும். இவர்கட்கு எவ்வகைப் பந்தமும் இராது. ஆதலால் பிறப்பும் இல்லை. இது பற்றியே,* **'முளையாது பந்தம்'** *என்றார். இவ்வாறே,*

**"எல்லாம் தன்னுட்புக யாவுளும் தானாகி**
**நல்லாம் துரியம் புரிந்தக்கால் நல்லுயிர்**
**பொல்லாத ஆறாறுட் போகாது; போதமாய்ச்**
**செல்லாச் சிவகதி சென்றெய்து மன்றே"**

**"வித்தினி லன்றி முளையில்லை அம்முளை**
**வித்தினி லன்றி வெளிப்படு மாறில்லை**
**வித்தும் முளையும் உடனல்ல வேறல்ல**
**அத்தன் மைத்தாகும் அறநெறி தானே"**

*என்ற திருமந்திரச் செய்யுட்களும் இங்கு எண்ணுதல் தக்கதாம். இதனால், இத்தவத்தைப் பெற்றோமென்று கர்வியாமல் இடைவிடாமல் ஞானமாய் நின்றே சாதித்துப் பிறகு இந்த ஞானத்தில் உறுதலால் ஞானமானதும் தலைமறையப் பலிக்கத்தக்க சிவபோகத்திலே அழுந்தியனுபவிப்பதே நெறி எனக் கொள்ளுதல் வேண்டுமென அறியலாம்.*

**செய்யுள் - 27**

## அல்லல் நீங்குகை

அவிழ இருக்கு மறிவுட னின்றவர்க்
கவிழுமிவ் வல்லலென் றுந்தீபற;
அன்றி யவிழாதென் றுந்தீபற.

**கருத்துக்கள்**

1. ***அறிவு பாகமாதல்.***
2. ***அல்லல் அறுதல்.***

**தெளிவுரை**

*அவிழ் - பக்குவம். அவிழ இருக்கும் அறிவு - இயல்பாகவே பாசங்களின் நீங்கி நிற்கும் இறைவனது திருவருள் ஞானம்.*

*இறைவன் இயல்பாகவே பாசங்களின் நீங்கி நிற்பவன்; எனவே அவனுக்கு அல்லல் இல்லை, உயிர்கள் பாசத் தொடர்பு காரணமாக அல்லல் உறுகின்றன. அல்லல் - துன்பம், உலகில் வாழும்போது துன்பங்கள் இல்லாமல் வாழ விரும்புபவர்கள், திருவருளின் வழியே அடங்கி நிற்க வேண்டும். அந்நிலையில், உயிர்க்குள்ள துன்பத்தைத் திருவருள் போக்கும்.*

*திருவருள்வழி அமைந்து ஒழுகும்போது உயிர்க்குள்ள அறியாமை நீங்கும்; அறியாமையே துன்பத்திற்குக் காரணம். ஆகலின், அறியாமை நீங்கவே, அல்லலும் தீரும். வேறு எந்தவழியில் நின்றாலும், உயிர்க்குள்ள துன்பம் நீங்குதற்கு இடமே*

இல்லை. **"என்றும் அல்லல் தீரும்; அவலம் அடையாவே"** (1-26-11) என்பது சம்பந்தர் வாக்கு. "அவிழ இருக்கும் அறிவு" என்பது, ஊழ் வலியை வெல்ல வல்ல திருமுறை ஞானத்தைக் குறிக்கும். திருமுறைப் படனம் எல்லாத் தீங்குகளையும் நீங்கச் செய்யும். **இஃது எனக்குற்ற அனுபவ உண்மை**. உயிர்க்குள்ள அறியாமையைப் போக்கும் வல்லமை, திருவருளின் வடிவாகிய திருமுறைகளுக்கு உள்ளது. (களிறு: 53-56 வரை)

நாம் துன்பத்துட்பட்டே கட்டுப்பட்டுக் கிடக்கிறோம். காராக் கிருகவாசம் போல்வது இது. மூட்டைக்குள் கட்டுண்டு கிடக்கும் பொருள் கட்டவிழ்த்து விட்டாலன்றி வெளிப்படாது. சிறைக்குள் இருக்குமொருவன், சிறைக்காவல், பூட்டு, விலங்குகள் நீக்கப்பட்டாலன்றிச் சுதந்தரனாக இயலாது. நம் உயிர்க்கு ஆணவம் முதலிய கட்டுகள் உள்ளன. இக்கட்டுகள் அறுதற்குக் கட்டற்றவர் துணைவேண்டும். கட்டற்ற பொருளே சிவம். இச்சிவமே ஆன்மாவின் பக்குவமறிந்து கட்டறுத்தற்கு அருளுருவாகிய ஆசாரியனாகிப் பந்த நிவிர்த்தி செய்கின்றது. கண், இருட்டுக்குட்பட்டுக் கிடக்கின் ஒன்றையும் அறிவதில்லை. ஆதித்தன் உதிப்பின் அவன் சந்நிதியில் கண் ஒளியும் ஆதித்தனொளியும் ஒன்றுபடுவதால் கண்கள் இருட்டாகிய கட்டறுகின்றன. இங்ஙனமே, ஆன்மாவுக்குள்ள அந்தகாரமானதும், அநாதியாகவே பற்றும் விகற்பமும், மயக்கமும் செய்வதுமான ஜீவபோதம் அடங்கப் பெறவேண்டும். கண்ணுக்கு உதயமும் சூரியனொளியும் உண்மைக் காட்சிக்கு உறுதுணை செய்வதுபோல, அருளால் உண்டாகும் பரஞானமும், பக்தியால் உண்டாகும் பதிஞானமும் துணைபுரிய உண்மை நிலையை ஆன்மா அடைய முடிகின்றது. இதனால் ஒளிமுன் அந்தகாரம் போலப் பதிஞானத்தின் முன் ஜீவபோதம் அறுகின்றது. அதாவது, கட்டுவிட்டுக் கழன்றுபோகின்றது. இதனால் ஆன்மாவானது, சர்வமும் எங்ஙனம் நடைபெறுகின்றதென்பதையும், ஒன்றையும் அறியாமே பரமானந்த மயமாய் யாவற்றினும் உளதாய் நின்றே அவற்றில் படாமல் எப்போதும் நின்று பிரகாசிக்கும் சொரூபத்தைப் பெற்று, இங்ஙனம் புரியும் ஆசாரியனுடைய அநுக்கிரகமே கண்ணாகக் கூடிநின்று கட்டற்றுவிடும். சூரியன் சந்நிதியில் அந்தகார நினைவு கண்ணுக்கு அறுவதுபோலவே, ஆன்மாவுக்குப் பதிஞான ஆதித்த உதயம் ஆனபோது பாசவிகற்ப அந்தகார நினைவு அறும். பிறப்பு இறப்புக்கு ஏதுவான இவ்விருள் போனவழி தெரியாமல் அகன்றுபோம். எனவே, ஆன்மா, பாச விகற்பங்களை நீக்கும் நோக்குடன் தத்துவக் கருவிகள் தானல்ல என்று தெரிந்து, பிறகு ஆன்மாவாகிய தானே கருத்தா என்ற கருவிதமும் நீங்கப்பெற்று, அருளால் (ஆசாரியனால்) விளையும் பரஞானம் தன் ஜீவஞானத்தை விழுங்கவும், தான் பதிஞானத்தால் விழுங்கப்பட்டுப் பேரின்ப மயமாகக் கிலேசமற்றிருப்பதே ஞானயோக முறையாம். இதனாலேயே, **"அவிழ இருக்கும் அறிவுடன் நின்றவர்க்கு அவிழும் இவ்வல்லல்"** என்றார். இதனால், ஜீவபோதம் தலைநிமிர்ந்திருக்குமளவும் அல்லல் இருந்தே தீரும் என்பதாம். இப்படியாகப் பரஞான பதிஞானத்துளே பசுஞானம் கரைந்தொன்றுபடுவதேயன்றிப் பரமானந்தானுபவப் பேற்றினுக்கு வேறு எவ்வகை உபாயமும் இலது. பிறசமயங்கள்

*கூறும் எவ்வகை உபாயமும் உண்மையின்பினை விளைப்பன ஆகா. கவர்வழி காணப்பெற்றவன் அவ்விடத்தேநின்று, தன்னூர்க்குப்போகும் வழிதெரிந்தா னொருவனை உசாவி அவன் கூறும் உண்மைவழி துணிந்து சென்றாலன்றித் தன்னிடம் சேர இயலாது. தானே கேளாமல் துணிந்து சென்றபின் சென்ற வழியெல்லாம் மீண்டுவந்து அப்பால் ஒருவரைக் கேட்டுச் சென்றடைதல் சிரமம். கிலேச அநுபவத்துக்கும் இடமாம். ஆதலால், குருமுகப்பட்டு அவனருள்வழி யொழுகிப் பதிஞானம் கண்ணாக உதவ அவ்வல்லலற்ற இன்பத்தே அழுந்தியிருப்பதே கடன் என நமக்குத் தெரிவித்தற் பொருட்டே* ***"அன்றி அவிழாது"*** *என்றார் ஆசிரியர். பசு பாச விகற்பங்களாகிய கிலேசம் தீர்வதற்கு இதுவே உண்மைநெறியாம்.*

**"பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்**
**பசுக்களைக் கட்டிய பாசமூன் றுண்டு**
**பசுத்தன்மை நீக்கியப் பாசம் அறுத்தால்**
**பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே"** எனவும்,

**"பதியும் பசுவொடு பாசமும் மேலைக்**
**கதியும் பசுபாச நீக்கமும்காட்டி**
**மதிதந்த ஆனந்த மாநந்தி காணும்**
**துதிதந்து வைத்தனன் சுத்த சைவத்திலே"**

*எனவும் உள்ள திருமந்திரங்கள் படித்துணரத்தக்கனவாம். களிறு 53-56*

## செய்யுள் - 28

## சத்திய ஞான ஏற்பு - பாச பசு ஞான புறக்கணிப்பு

வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டவர்
பித்தேறி னார்களென் றுந்தீபற;
பெறுவதங் கென்பெணே உந்தீபற.

**கருத்துக்கள்**

1. *பிறப்பிற்குக் காரணமாக முளைக்குந் தன்மையாகிய பாச நிகழ்வுகளை விடுதல்.*
2. *பெறும் பேறு.*

**தெளிவுரை**

*இறைவனின் திருவருளே முத்திக்கு வித்தாகும். அத்திருவருளினை நாடிப் பாசமுளையைக் கைவிட்டவர்களே பேரன்பினால் விளைந்த அருள்திறம் உடையவர்கள் ஆவார்கள். இதனைவிடப் பெறுவதற்குரிய பேறு வேறு எதுவுமில்லை.*

*'முத்திக்கு ஒரு வித்தே' என்று இறைவன் அடியார்களால் புகழப்படுகிறான். அந்த வித்தினைத் தேடி இப்பொழுது நம் கைவசப்பட்டிருக்கின்ற பிறப்பு என்னும் முளையைக் கைவிடுதல் வேண்டும். ஏனெனில் இது பாசமுளை. முளைதான் உள்ளதே வித்து எதற்கு என்று கருதுகிற உயிர்கள் இப்பாச முளையினால் விளைவது இறப்பும் பிறப்புமாகிய அல்லல்களே என்று உணராதவர்கள். உணர்ந்தவர்கள் இந்த முளையைப் பேணி வளர்ப்பதினும் உயர்ந்தது முத்திக்குரிய வித்தினைத் தேடுவதே என்று இதனை விட்டொழிப்பார்கள்.*

*இறைவன் மீது ஆராத அன்பு பூண்டவர்கள் உலகவர் இயல்பிற்கு மாறாக நடப்பதனால் பித்தேறியவர்கள் போல் காட்சியளிப்பார்கள்.*

*"பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்*
*பித்தனிவன் என என்னை ஆக்குவித்துப் பேராமே*
*சித்தமெனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த*
*வித்தகனார் விளையாடல் விளங்கு தில்லைக் கண்டேனே".*

*என்று மாணிக்கவாசகர் கூறுகின்ற உண்மை இங்கு நினையத்தக்கது. பித்தேறுதல் இங்கு இறைவன் மேல்கொண்ட பத்திமையின் சிறப்பைக் குறித்தது.*

*இளையான்குடிமாற நாயனார், அடியவராக வந்த இறைவனுக்கு அமுதூட்டும் பொருட்டுப் பகலில் வித்திய வித்தினைத் தேடி எடுத்து பாசப் பழி முதல் பறித்த வரலாற்றை இப்பாடல் நினைவுறுத்துகிறது.*

*உந்திபறத்தல் மகளிர் விளையாட்டில் பாடப்படும் பாடல் என்பதை "என்பெணே" என்ற சொற்கள் குறிக்கின்றன. என்பெணே - என்ன பெண்ணே.*

*பரமானந்தத்தை ஆன்மா அடைதற்கு இரண்டே தொழில்கள் தேவை. அவற்றுள் ஒன்று தொடுதலும், மற்றொன்று விடுதலும் பற்றியவையாம். அதாவது* ***மெய்யுணர்வை*** *அடையவேண்டும்; பாச விகற்பங்களை விடவேண்டும். இவ்விரண்டின் பயன் முத்திப் பேறாம். ஞானத்தை நாம் விரும்பிப் பெறவேண்டும். இந்த ஞானமே சற்குரு அருளால் தரப்படுவது. இந்த ஞானத்தைப் பெற்றும் பாசப்பற்றிருக்குமாயின் ஞானம் பெற்றும் பயனிலது. இன்ப துன்பங்களில் சமநோக்குப் பெறுதல் முதலான பக்குவம் அடைந்தாலன்றி முதல்வன் அருள் கிட்டாது. அதாவது குரு வெளிப்பாடு நிகழாது என்பதாம். இக் குருவெளிப்பாடு எளிதில் வாய்ப்பதன்று. அதனை அடைதற்கான பற்பல முயற்சிகளையும்*

மேற்கொள்ளவேண்டும். இங்ஙனம் முயலவேண்டும் என்பதை அறிவித்தற் பொருட்டே **தேடி** என்கிறார். வித்து என்பது மெய்ஞ்ஞானமாம். பசியுடைய எவரும் அது நீங்கி இன்பமுறுதற்கு உணவினை உட்கொள்கின்றனர். உணவாவது வித்துக்களேயாம். வித்துக்களைத் தேடி உண்டுதான் பசியாறுகிறோம். வித்தினை உட்கொள்வதால் பசியாகிய துன்பம் நீங்கி இன்பம் பெறுகிறோம். ஒவ்வொரு விதத்திலும் முளை உண்டு. முளை என்பது ஆசை எனப்படும் பாசமாகும். மேலும் மேலும் பிறப்பெடுக்க வழி செய்வதே முளையாகும். மக்களுக்குப் பிறப்பொழிகையே பேரின்பம். இந்தப் பேரின்பம் ஞானகுருவால் அறியுமாறு தரப்படும் ஞானத்தால் வருவதென்பதை **வித்தினைத் தேடி** என்பதால் அறியலாம். ஞானம் பெற்றவர்கள் பிறப்புக்கு ஏதுவான பாசப் பற்றினை விடவேண்டும். முளையை நீக்கிவிட்டால் வித்து முளைக்காது. உணவுக்காகக் குற்றுதல் முதலிய பக்குவம் செய்யும்போது முளைதான் நீக்கப்படுகிறது. முளையை நீக்கி வித்தினை உட்கொள்வதால் பசித்துயர் அகற்றி இன்புறுகிறோம். இவ்வாறே பாசத்தினை நீக்கினாலன்றிக் குருவருளால் அரிதிற் பெற்ற மெய்யுணர்வு பயன்படாது. ஆகையால், இப்பாசப் பற்றினை முற்றும் நீக்கவேண்டும் என நமக்குத் தெரிவித்தற்கும், அஃதற்றால் பிறப்பறும் என்பதை உணர்த்தற்கும் எண்ணியே ஆசிரியர் **முளையைக் கைவிட்டவர்** என்றார். பசி மிக்கவனுக்கு உணவின்மீது ஆசை ஓடும். இவ்வாசையால் நல்லனவெல்லாம் கெடும்; அல்லனவெல்லாம் வந்தமையும். “குடிப் பிறப்பழிக்கும் விழுப்பங் கொல்லும்.... பசிப்பிணி என்னும்பாவி’’ எனப் பசிபடுத்தும் துயர் மணிமேகலை நூலிற் கூறப்படுகிறது. மற்றும் “மானம் குலம் கல்வி... பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்” என ஔவையாராலும் இச் செய்தி கூறப்படுகிறது. பசி ஒழிந்தவன் சாந்தமடைகிறான். ஆசையை விடுகிறான். இன்பம் துய்க்கிறான். அவன் உள்ளம் விருப்பு வெறுப்பற்று அடுத்த பசிவேளை வருமளவும் அமைதி பெறுகிறது. இவ்வாறே, பற்றின் பற்றற்றவர்களும் விருப்பும் வெறுப்புமின்றி இருவினை ஒப்பு இயல்பினராய் ஒழுகுவர். ஆகையால், இத்தகையோரைப் **பித்தேறினார்கள்** என்றார் ஆசிரியர். எனவே, வித்தெனப்படும் மெய்ஞ்ஞானத்தைக் குருவருளால் தேடி அடைந்து, அது நிலைத்தற் பொருட்டும் கன்மம் கழன்று பிறப்பு நீங்குதற் பொருட்டும் முளை எனப்படும் பாசப் பற்றற்று நாம் ஒழுகுவோமாயின் பித்தரைப்போல் விருப்பும் வெறுப்புமற்றவராகிச் சிவ போகத்துக்கு ஆளாவோம் எனத் தெரியலாம். விருப்பு வெறுப்பு அற்ற நிலையினரைக் குறித்தற்கே பித்தரை உவமை கூறுவர். சித்தாந்த நூலுள், ‘உன்மத்தர்’ எனச் சித்தியார் நூலில் கூறப்படுதல் காணலாம். இங்ஙனம் சத்திய ஞானத்தில் விருப்பமும், பாச பசு ஞானங்களில் புறக்கணிப்பும் கொள்ளாதார் பேரின்ப போகம் அடையமாட்டாராகலின் **பெறுவதங்கு என்** என்றார். இவர்கள் கன்மச் சுழலுட்பட்டுப் பிறப் பிறப்பெய்தி வருந்துவர் என்பது இதன் கருத்தாம். **பெண்ணே** எனக் கேட்போரை ஆசிரியர் விளித்திருத்தலின் நயம் இந்நூலின் இரண்டாம் செய்யுளின் தெளிவுரைக்கண் தரப்பட்டிருத்தல் காணலாம். இவ்விளியால், ஆசிரியர் நமக்குள்ள பேதைமையினை

*நினைவூட்டி மேதைமை அடைய வேண்டும் எனக் குறிப்பிடுகிறார் என்னலாம். இதனால் மெய்ஞ்ஞானமே பொருள்; பாச விகற்பங்கள் பொருளல்ல; விருப்பு வெறுப்பற்ற நிலையே முத்திக்கு வழி என்று நாமறிதல் வேண்டும்.*

*இனி, இச் செய்யுட்கு வேறு ஒருவகையாகவும் கருத்துரைப்பர். அது வருமாறு. இப் பொருளில் வித்துச்சொல் சிவனுண்மையையும், முளைச்சொல் ஞானத்தி னுண்மையையும், பித்து எனும் சொல் ஞானத்தைப் பெற்றுச் சிவனைக் கூடப்பெறாத பாக்கிய ஈனத்தையும் குறிக்குமெனக் கொள்ள வேண்டும்.*

*நெல் முதலான வித்துக்கள் அங்குரிக்கும்போது முளையோடு இரண்டுபட நில்லாமல் முளையளவும் வியாப்தமாய்ப் பரிணமித்து, முளைத்தநாள் முதல் கதிரை விரும்பியிருந்தவர்களுக்கு முதிர்ச்சியடைந்த காலத்திலே வெகுவாய்ப் பலித்து உணவாகி இன்பத்தைப் பயக்கும். அவ்வாறே, வித்தான சிவமும் பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்குக் கருணைத் திருமேனி தாங்கி எழுந்தருளி வந்து தம்மளவிலே சினேகிக்கும்படித் திருவுளத்தடைந்து உண்மையைப் பிரகாசிப்பித்து ஞானசுக ரூபத்திலே ஆன்மாக்களைக் கூட்டி நிறுத்தி இந்தநிலை முதிர்ச்சியிலே தன்னுடைய பேரின்பத்திலே இவர்கள் அனுபவித்துச் சம்பூரணத்தை அடையும்படி வெகு பலமாகக் கொடுக்கும்.*

*இந்த வித்தாகிய சிவனுண்மையும், முளையாகிய ஞானத்தினுண்மையும் உணருமிடத்து, நெல்லு முதலியவற்றின் முளைகளை வித்தின் பரிணாமமென்றும், இந்தப் பரிணாமத்திலே அந்த வித்துக் கலந்திருக்குமென்றும், முளையின் பரிணாமம் முதிர்ந்தபோதே அந்த வித்தே வெகுவாய்ப் பலிக்குமென்றும், இதனை விரும்பிக் கொண்டிருந்து பலிப்பிக்கும் காலங்களிலே பலன்கொள்ள அறியாமல், முளை பரிணமிக்கும்போது வித்துத் தோன்றாமை கொண்டு இப் பரிணாமத்தில் வித்தினைக் கண்டிலோமென்று எண்ணி, அப்பரிணாமத்தையும் கைவிட்டு அதனுடைய பிரயோசனத்தையும் இழந்துவிடுவர் பவுத்தர் ஆவர். இத்தகையோர், தரிசித்து ஞானத்திலே நின்று சாதித்து ஞானமேயாய் ஞானத்துக்கு முதலாகிய சிவனைக் கூடிப் பேரின்பத்தைப் பெறமாட்டாமல், அந்த ஞானத்தைத் தரிசித்த அளவிலே இவ்வளவே பயன் என்றெண்ணிச் சிவரூபத்தினுண்மையை அறியாமல் அந்த ஞானத்தையும் கைவிட்டுவிடுவர். இவர்கள் சிவபோகத்தை இழந்தவராவர்.*

*நெல்லு முதலியவற்றின் முளையிலே வித்துக் கலந்திருக்குமென்று தெரிந்தவர்களும், பயன்படுமளவும் அந்தப் பரிணாமத்தைப் பேணியிருந்து பிரயோசனப் படுங்காலத்தே பயனைக்கொள்ள மாட்டாமல் அசட்டையால் அப் பயனைப் பிறர் அடையவும் தாம் இழந்த ஈனர்கள் ஆவர். சிவனைத் தாரகமாகக் கொண்டாலன்றி ஞானம் பிரகாசியாதென்று தெரிந்தவர்களும் அந்த* ***ஞானத்தைக் கைவிடாமல் நின்று, விசுவத்தைக் கைவிட்டு*** *அந்த ஞானமாகவே சாதித்து இந்த ஞானத்தின் ஐக்கியத்தாலே சிவனைப் பெற்றுப் பேரின்பமே அனுபவித்துத்*

*திருப்தியடையமாட்டாமல் வாதனை மிகுதியால் பராமுகராய்த் தாம்பெற்ற ஞானத்தினைப் பிற்பாடு அனுபவித்துக் கொள்ளலாமென்ற நித்தத்துவம் பெற்றிருப்பவரைப் போலப் பேதைமையால் எண்ணி நெகிழ்ந்திருந்து தமக்குப் போதமான சிவபோகத்தை இழந்துவிடுவர். ஆகையால், இடைவிடாமல் ஞான சாதனம் செய்து ஞானமும் மறைய விளையும் சிவபோகத்திலே அழுந்தவேண்டும் என அறிதல் தக்கதாம்.*

**"தன்னை யறிந்திடும் தத்துவ ஞானிகள்**
**முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்**
**பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்**
**சென்னியில் வைத்த சிவனரு ளாலே"**

*என்ற திருமந்திரப் பாடலும் இங்கு ஒப்புக் காணத்தக்கது. களிறு 57.*

### செய்யுள் - 29

### சிவசொரூப அவதாரம்

(குருவின் துணை முக்கியத்துவம்)

சொல்லும் இட மன்று சொல்லப்புகும் இடம்
எல்லை சிவனுக்கென் றுந்தீபற;
என்றால்நாம் என்செய்கோம் உந்தீபற.

**கருத்துக்கள்**

1. *சிவசொரூபக் காட்சி எல்லை.*
2. *சொல்லொணா நிலை.*

**தெளிவுரை**

*இறைவனோடு உயிர் கூடுவதற்குரிய இடம் எது? எனக் கேட்பின், அதனை வரையறுத்துச் சொல்ல இயலாது. ஞானாசிரியன் வழிகாட்டக் கண்டு அவன் உணர்த்துகின்ற நெறியில் உறைத்து நின்று, கைவரப் பெறுகிற ஞானமே சிவபரம் பொருளைக் கூடுமிடம். இவ்வாறு இருக்க இதற்கு மேற்கொண்டு எப்படி அவ்விடத்தைச் சொல்லால் விளக்க இயலும்?*

*சிவபெருமான் எங்கும் நிறைந்திருப்பவன், உள்ளும் புறமும் பரந்து நின்றும்*

*உயிர்கள் அவனை உணருமாறு இல்லை. அத்தன்மையனாகிய இறைவனை எவ்விடத்துச் சென்று கூடுவது என்பது வினா? அவ்விடம் சொல்லுக்கு எட்டாதது.* **எங்கே சொல்லின் ஆற்றல் முடிகிறதோ அதுவே இறைவனைக் கூடுமிடம்.**

*ஞானாசிரியன் பரம்பொருளை உணர்த்தும் போது சொல்லால் உணர்த்துவதில்லை. ஞானாசிரியன் உணர்த்தினாலன்றி உயிர்களும் பரம்பொருளைக் கூடுமிடத்தையும், நெறியையும் உணர்ந்து கொள்ள இயலா. இத்தகைய நிலையில் நாம் செயலற்று இருப்பதைத் தவிர வேறு எதுவும் இயலாது.*

*ஆலமர் செல்வனாகிய சிவபெருமானே தலைசிறந்த ஞானாசிரியர். அவனுக்கு மாணவர்களாக வாய்த்த முனிவர்கள் நால்வரும் நான்மறையும் ஆறங்கமும் முற்றக் கற்றும், கேட்டும் தெளிந்தவர்கள். அவர்களுக்கு ஞானத்தை உணர்த்துவதற்கு இறைவன் சொல்லைப் பயன்படுத்தாமல் குறிப்பையே பயன்படுத்தினான் என்பதனை,*

**"கல்லாலின் புடைஅமர்ந்து நான்மறை**
**ஆறங்கமுடன் கற்ற கேள்வி**
**வல்லார்கள் நால்வருக்கும் வாக்குஇறந்த**
**பூரணமாய் மறைக்கு அப்பாலாய்**
**எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை**
**இருந்தபடி இருந்து காட்டிச்**
**சொல்லாமல் சொன்னவரை நினையாமல்**
**நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்"** *(திருவிளை - 14)*

*என்ற பாடல் நன்கு உணர்த்தும்.*

*ஞானம் சிவசொரூபத்தைத் தரிசிக்கவைக்கப் பயன்படுவது. என்றாலும், ஞானம் மறைதலும் சிவசொரூபம் விளைகிறது. ஞானம், அருளின் விளைவாம். அவ்வருள் சிவத்தின் குணமே. வாசனையை நுகர்ந்து அது காரணமாக மலரையோ பழத்தையோ அனுபவிக்கிறோம். அருள் வெளிப்பாடே சிவ வெளிப்பாட்டுக்கு ஆதாரம். இவ்வருளில் அழுந்துவதே தற்போதம் (அல்லது) ஆன்மபோதம் நீக்கும் இடம். ஆன்மபோத நீக்கத்தின் பின்னர் நினைப்பு, பேச்சு, செயல்கள் நிகழ வழியில்லை. நினையாமை நேரிட்ட பின்னர் பேசாமையே நிகழும். ஆகவே, நினைவு அறப்பெற்றுத் திருவருளில் அழுந்தி, மெய்ஞ்ஞானம் தலைநிற்க அவ்வழியே செல்வார் ஏதும் தம்மனுபவத்தை எடுத்துரைக்க இயலாது. இதனால் சிவசொரூபம் ஆன்மபோதத்தால் உணர்ந்து வாக்குகளால் இன்ன இடத்தது என உரைக்கத்தக்க அவதரமுடையதன்று. சொல்லுதற்கு ஆன்மா துணியுமேல் உணர்த்த உணருமியல்புடையது ஆன்மாவாதலால் உணரமாட்டாது. இதனால் ஆசாரியன் உணர்த்த உணருவதானபடியை உணர்த்த உணருவதான எல்லையில் அவன் உணர்த்துகின்ற தன்மையை அவனாலே உணரின் அவ்விடமே சிவனைப் பெறுதற்குரிய எல்லையாயின இடமாம். இதனையே ஆசிரியர்,* **"சொல்லும்**

**இடமன்று; சொல்லப்புகும் இடம் எல்லை சிவனுக்கு**" என்கிறார். சொல்லப் புகுமிடமென்றதே வாக்கிறந்த இடமாம். ஆதலால் சொல்லொணாதது என்க. **சிவ வெளிப்பாட்டில் எல்லா ஆரவாரங்களும் அடங்கிவிடும்**. எல்லாமடங்கிய இடமே சிவவெளிப்பாடு கூடுமிடமாம்.

இந்த நிலையை எய்திய ஆன்மாவுக்கு யான் எனது என்ற எண்ணமே இராதாதலால் அஃது எவ்வகையாலும் தனித்திருந்து சிவசொரூபத்தை ஆன்ம போதத் தாலறிந்து பிறருக்கு உணர்த்த இயலாதென்க. இதனை, என்றால் **நாம் என் செய்கோம்** எனக் கூறியருளினர் நாயனார். இதனால் சிவாநுபவம் சுவாநுபூதிகம் அன்றி வாக்கினால் வருணிக்கத் தக்கதன்று என்பதாம்.

**"பரம குரவன் பரமெங்கு மாகித்**
**திரமுற எங்கணும் சேர்ந்தொழி வற்று**
**நிரவு சொரூபத்துள் நீடும் சொரூபம்**
**அரிய துரியத்து அணைந்துநின் றானே"**

என்பது திருமந்திரம்.

### செய்யுள் – 30

### வினை ஏறாமை

(எந்நிலையிலும் சிவத் திருவருளோடு இன்புறலாம்)

வீட்டில் இருக்கில் என் நாட்டிலே போகில்என்
கூட்டில் வாட் சாத்திநின் றுந்தீபற;
கூடப்படா ததென் றுந்தீபற.

**கருத்துக்கள்**

1. *இருவகை நிலை பயனின்மை.*
2. *திரோதாயி நீங்கிய நிலை.*

**தெளிவுரை**

திருவருள் வழியிலே சென்று தன்முனைப்பு அற்றவர்களுக்கு அல்லாமல் மற்றையோர்க்கு சிவப்பேறு கைகூடாது என்க.

இத்திருவுந்தியாருக்கு இணையான திருக்களிற்றுப்படியார்ப் பாடலில் தக்கன் இயற்றிய வேள்வி குறிப்பிடப்படுகிறது. தக்கன் தன்முனைப்போடு இயற்றிய வேள்வி

*அவனுக்கு நற்பயனைத் தாராது தீமையையே விளைவித்தது. ஏனெனில் அவனது தன்முனைப்பு அவனுக்கே தீங்காய் முடிந்தது.*

*தன்முயற்சியின்றி உறையில் இடப்பட்ட வாள் போல இருப்பவர்கள் இறைவன் திருவருள் வழிப்பட்டு ஒழுகுபவர் ஆவார்கள். மலையே வந்து வீழினும் அவர்கள் நிலைகலங்குவதில்லை.*

*எனவே,* ***தன்முனைப்பற்றவர்களுக்கு மட்டிலுமே இறைவன் திருவருள் கைகூடும் என்பதும் அல்லாதவர்களுக்குக் கைகூடாதென்பதும் இப்பாடலில் விளக்கப்பட்டன****.*

*திருவருள் ஞானத்தைத் துணை எனக் கொள்ளாமல், துறவறத்தில் நின்றால் என்ன? மனையறத்தில் நின்று, சிவபூசை முதலியன நடத்தி, மூர்த்தி தலம் தீர்த்தம் என்று பல்வேறு தலங்களுக்குச் சென்று தரிசித்தால் என்ன? திருவருளை விட்டு, எந்நிலையில் நின்றாலும், சிவபெருமானை அடைய முடியாது.* ***திருவடி ஞானம் என்பது ஒரு வாளைப் போன்றது. ஆன்மா, அவ்வாளினைச் சாத்தும் உறைபோன்றது. இங்கு ஆன்மாவைக் கூடு (உறை) என்றார்****.*

*திருவருளின் துணை இன்றி, வேறு எந்த வகையாலும், சிவானுபவம் ஆன்மாவுக்குக் கூடாது என்பதைக் "கூடப்படாதது" என்று கூறினார். எனவே, ஆன்மாக்கள் துறவற நெறியில் நின்றாலும் சரி, இல்லறநெறியில் நின்றாலும் சரி எந்நிலையில் நின்றாலும், திருவருள் துணைக்கொண்டு நின்றாலன்றி சிவபெருமானைக் கூடி இன்புறமாட்டா. (களிறு; 63-64).*

*பொன், ஆபரணமாயிருப்பினும், கட்டியாயிருப்பினும் பூமியினுள்ளே மண்ணோடு கலந்திருப்பினும் தன் மாற்று ஒன்றேயாய் விளங்கும். "சுடினும் செம்பொன் தன்ஒளி கெடாது" என்பது அரசரொருவரின் அநுபவ மொழி. பொன், எந்த நிலையிலிருப்பினும் அதன் மாற்று மாற்றமின்றி ஒரு நிலையதாயிருப்பதுபோலவே, மக்கள்,* ***இல்லறம் - துறவறம்*** *என்ற எந்த நிலையினராயிருப்பினும் 'கருத்தாவின் செயல் யாவும்' என்பதை மறவாத சிந்தையராக இருக்கவேண்டும். இந்த எண்ணம் கைவரப் பெறாதவர்கள் எல்லாம் விட்ட துறவறத்திலே இருந்தும் பயனில்லை. நமது மனம், வாக்கு, காயம் ஆகிய இவற்றின் செயல்கள் யாவும் இறைவன் செயலே எனவும், நாம் இறைவன் கையிலுள்ள ஓராயுதத்தை நிகர்ப்பச் சுதந்தர ஈனராக உள்ளோம் எனவும், இச் சுதந்திர ஈனமும் கருத்தாவின் திருவுள்ளத்தின் விளைவே எனவும் திடமாக எண்ணி இறைவன் வசப்பட்டே "நானோ இதற்கு நாயகமே? என்னதோ இங்கு அதிகாரம்" என்ற முறையில் ஒழுக வேண்டும். ஆன்மாவே இறைவனுடைய சரீரம். எனவே இறைவனே நமது பிராணன். அந்தப் பிராணனுடையதே ஞானம். இதுவே மெய்யுணர்வு. இந்த மெய்யுணர்வே தேசிகன் கடாட்சித்துணர்த்த நாம் உணர்வது என்ற உறுதி உள்ளத்தே ஊன்றப் பெறவேண்டும். எந்தச் செயலையும் தன்னாலே செய்யப்பட்டதாகக் கருதலாகாது. எல்லோரும் போற்றும்வண்ணம்*

*அருச்சனாதிகளிலும் தீர்த்த தரிசனங்களிலும் உழன்றாலும் மேற்சொல்லிய தற்போத கர்விதமின்மையே முக்கியமாய் வேண்டுவதாம். ஓரரசன் ஆணையின்படி பலர் கூடிக் கோயிலைக் கட்டினாலும், அரண்மனையைக் கட்டினாலும் உலகத்தார் அரசனாலாகிய கோயில் எனவும் அரசன் மாளிகை எனவுமே கூறுவர். ஏவுதற் கருத்தாவுக்கே இயற்றுதற் கருத்தாவினும் உரிமை உண்டு. தட்சப் பிரசாபதி யாவருக்கும் இதமான யாகத்தைச் செய்தான். ஆனால் சிவபெருமானாகிய கருத்தாவை நினைந்திலன். இதனால் விரோதமே விளைந்தது. சண்டேச நாயனார் யாவரும் வெறுக்கும் பிரமகத்திச் செயலே புரிந்தார். ஆனால் தன் செயலறக் கருத்தாவின் வசத்திலே நின்று செய்தலானார். இச் செயல் சிவன் செயலாகவே மாறி இதமே விளைந்தது. ஆதலால், சர்வமும் கர்த்தாவின் செயல் என்றே கொள்ள வேண்டும். தன்னுடைய செயல் என்றே கருதித் தவத்துறையிலே நின்றாலும் அங்ஙனம் நினைவதற்கு வினை ஏறியே தீரும். "ஐயன் அங்கதுகேட்டு அறனல்லவும் எய்தினால், 'அது செய்க' என்றேவினால், மெய்ய! நின் உரைவேதம் எனக்கொடு செய்கை அன்றோ அறஞ் செய்யுமாறு'' என இராமன், கோசிகரிடம் கூறியதாகவுள்ள இக் கம்பர் பாடலின் கருத்தும் ஈண்டைக்குப் பொருத்தமாகக் காணலாம். இதனாலேயே,* ***வீட்டில் இருக்கில் ஏன்? நாட்டிலே போகில் ஏன்? கூட்டில் வாட் சாத்தி நில்*** *என்றார் ஆசிரியர். இங்ஙனம் 'எல்லாம் உன்னடிமையே; எல்லாம் உன் உடைமையே; எல்லாம் உன்னுடைய செயலே;' என்ற ஆன்றோருரையின் வண்ணம் நடவாவிடில் மோட்சம் கைகூடாது.* ***கூடப்படாதது,*** *என ஆசிரியர் கூறியுள்ளதன் கருத்து இதுவாம். இதனைத் திருமந்திர ஆசிரியர்.*

**"ஞானந்தன் மேனி கிரியை நடுவங்கம்**
**தானுறும் இச்சை உயிராகத் தற்பரன்**
**மேனிகொண் டைங்கரு மத்துவித் தாதலான்**
**மோனிகள் ஞானத்து முத்திரை பெற்றார்களே"**

*எனத் தெரிவித்துள்ளனர் என்னலாம்.* ***'உன்தொழி லெல்லாம் அரன்பணி என்றுகொள்'*** *என்பது சாத்திரம்.*

**செய்யுள் - 31**

## சைவ சித்தாந்தத் திறம்

(சித்தாந்த சைவச் சிறப்பு)

சாவிபோ மற்றச் சமயங்கள் புக்குநின்
றாவி யறாதேயென் றுந்தீபற;
அவ்வுரை கேளாதே யுந்தீபற.

### கருத்து

*சைவ சித்தாந்த உயர்வு.*

### தெளிவுரை

*சாவி போதலாவது, நிலத்தில் விதைத்த பயிர் வளர்ந்தும் தன் பயனாகிய நெல் முதலிய மணிகள் முதிர்தலின்றிப் பதராய்ப் போதல். சைவ சமயம் ஒன்றே விளைந்த நெற்கதிர் போல விளங்குகிறது. மற்றையச் சமயங்கள் பதர்களைப் போலக் களையெடுக்கப்பட வேண்டியன. உள்ளீடு அற்ற புறச்சமயங்கள் வீடு பேற்றைத் தராமல் வாழ்நாளை வீணாக்குவன. எனவே பிற சமயங்களில் புகுந்து உழல்வதை விட்டுவிடுக. பிற சமயங்கள் கூறும் கருத்துக்களையும் கேளாது இருப்பாயாக.*

*உலகத்தில் பல்வேறு வகைப்பட்ட சமயங்கள் வழக்கில் இருந்து வருகின்றன. இவற்றை ஆறு வகைப்படுத்திக் கூறுவதுண்டு. முதலில் வழங்கி வந்த வழக்கு சார்வாகம், சாங்கியம், வைசேடிகம், நியாயம், யோகம், மீமாம்சை என்பன. இதன் பின்னர் வழிபடு தெய்வத்தின் பெயரால் சைவம், வைணவம், சாக்தம், காணாபத்யம், கௌமாரம், சௌரம் என்று ஆறாகச் சொல்லுவதுண்டு.*

*மாதவச் சிவஞான முனிவர், புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்று நால்வகையாகப் பகுத்துக் கொண்டு ஒவ்வொரு பிரிவிலும் ஆறு சமயங்கள் உண்டு எனக் கூறி இந்த இருபத்துநான்கு சமயங்களுக்கும் அப்பாற்பட்டதாகச் சைவ சித்தாந்தத்தை எடுத்துரைக்கிறார்.*

*இந்த வகையான பகுப்புகள் எல்லாம் மரபு வழிப்பட்டவை. இன்றைய உலகில் இவற்றினும் மிகுதியாகப் பல்வேறு வகைப்பட்ட சமயங்கள் உள்ளன. அவற்றை எண்ணிக் கணக்கிட்டுச் சொல்வது என்பது இயலாது.*

***சமயத்தின் குறிக்கோள் வீடுபேற்றுக்கு வழிகாட்டுதல் ஆகும். சைவ சித்தாந்தம் ஒன்றே எடுத்த இப்பிறவியிலேயே வீடு பேற்றுக்கு வழிகாட்டும் தகைமை உடையது.** ஆதலால் அதனைக் கதிர்முற்றிய நெல்களுக்கு ஒத்ததாகக் கூறினார் ஆசிரியர்.*

*மற்றைச் சமயங்கள் உய்வுக்கு வழிகாட்டுவன போலத் தோற்றமளித்தாலும் உண்மையில் அவ்வாறு வழிகாட்டும் தன்மை அற்றன ஆகையினாலே, வெளிப்பார்வைக்கு நெல் போலத் தோற்றமளித்தும் உள்ளீடு இல்லாத சாவி போன்றன அவை என்று கூறினார்.*

*பிற சமயங்களில் புக்கு ஒழுகுவதனால் வீடுபேறு என்னும் குறிக்கோளை எட்ட இயலாமல் வாழ்நாள் வறிதே கழிவதனால் ஆவி அறாதே என்றும் 'அவ்வுரை கேளாதே' என்றும் ஆசிரியர் வலியுறுத்தினார்.*

*உலகில் மதங்கள் பல உள, எல்லா மதங்களும் உயிரின் ஈடேற்றத்துக்கே வழியாக உள போலும், ஒவ்வொரு மதமும் நற்கதியின் படிகளாகவே ஏற்றத்துக்கு வழிகோலுகின்றது போலும் தோன்றும். ஆனால் எல்லாச் சமயங்களும்*

*வேதாகமங்களின் ஒரொரு கூற்றினைத் தழுவிப் பொதுமை காணாது பொருது வாழ்கின்றன. அவ்வச் சமயத்தார்க்கும் அவ்வச் சமயநெறியே மேலதென்ற எண்ணம் உண்டாவதால் சமய உயர்வு தாழ்வுகள் பற்றி வாதப் பிரதிவாதங்கள் நிகழ இடமாகின்றது. நடுவு நின்றாய்வார்க்கு எல்லாச் சமயக் கொள்கைகளையும் விரோதம் நீக்கி எடுத்துரைக்கும் உண்மைச் சமயம் யாதெனக் காணும் எண்ணம் உதிக்கும். இங்ஙனம் உதிக்கப்பெற்ற மேலோர்கள் ஆய்ந்து முடிந்த முடிபாகக் கண்டு கூறியுள்ள கொள்கைகளின் சமுதாயமே சைவ சித்தாந்தம். எனவே,* ***எச்சமயத்துச் சிறந்த கொள்கைகளும் தன்பால் கொண்டுள்ளதும், யாவரும் மேற்கொள்ளத் தக்கதும், எளிதின் அநுட்டிக்க வல்லதும், மிகவும் பழமை வாய்ந்ததும், தருக்கத்துக்கு ஒத்துள்ளதும் ஆகிய பல்வகைச் சிறப்புக்களையும் பெற்றுள்ள நற்சமயம் சித்தாந்த சைவமேயாகும்***. *எவ்வகையான சந்தேக விபரீதங்கட்கும் இதனில் இடமில்லை.* ***அரசவீதிபோல விளங்கி, எல்லாச் சமயத் தெருவுகளும் முடிவில் தன்பால் வந்து கூடத் தானே கோயிற்கு உகந்த வழியாக அமைந்துள்ளது***. *இச் சமயத்தின் சிற்சில சிறந்த கொள்கைகள் யாவரும் போற்றத் தகுவன.* ***சற்காரிய வாதம் இதன் முக்கியமான பண்பாம்***. *உள்ளதுதான் காரியப்படும். காரியம் ஒடுங்கும்போது அதன் முதற்காரணத்தே ஒடுங்கும். இலயித்தல் எனப்படுவதெல்லாம் ஒடுங்குதலையே குறிக்கும்.* ***ஒடுங்கியது மீளவும் தோன்றும்***. *ஒடுங்கிய அவத்தையிலுள்ள மாயையிலிருந்தே உலகம் தோன்றும். இல்லது தோன்றாது.* ***உயிருக்கு மாறிப் பிறத்தல் உண்டு. உயிர்க்குச் சகசமலம் உண்டு***. *அது ஞானத்தின் தொழில் நிகழ ஒட்டாது மறைப்பது. இவ்வாறு பற்பல சீரிய முடிபுகளைச் சைவ சித்தாந்தம் எடுத்துக் கூறுகிறது.* ***இப் பிறப்பிலேயே முத்தி பெறுதற்கான உபாயங்களை இச்சமயம் நன்கு அனுபவ ரீதியாகும்படித் தெளிவாய்க் கூறுகின்றது***. *குடியானவர்கள் பயிர்களை நிலங்களில் பாடுபட்டு விளைக்கிறார்கள். பயிர்களும் 'பசபச'வென வளர்ந்து வருகின்றன. குடியானவன் நல்ல அறுவடை செய்யலாம் என நம்புகிறான். கதிர்களும் தோன்றுகின்றன. ஆனால் போதுமான பாலுரம் இல்லாமையால் மணிபிடிக்காமல் சாவிக் கதிர்களாக நின்றுவிடுகின்றன. இவ்வாறான பயிரை வளர்ப்பதற்குப் பட்டபாடு வீண் ஆகிறது. பிறகு உழவர்களும் பிறரிடத்தே உணவுக்காகக் கடன் வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. இப்படிப்பட்ட நிலங்களை நம்பி எப்படி வாழமுடியும்? இந்த நிலைமையில் உள்ளனவே பிற சமயங்கள். இதனையே,* ***"சாவி போம் மற்றச் சமயங்கள்"*** *என்கிறார் ஆசிரியர். இத்தகைய சமயங்களில் புகுவதால் உயிருக்கு உய்தி இல்லை. பிறவிக் கடலுட்பட்டு வருந்துவதே கதியாகிவிடும். ஒருமரத்துக்குப் பயன் பழம்; அதுவும் இனிய உணவுக்கான சத்தளிக்கும் பழமே. வெறும் தழையும் பூவும், பிஞ்சும், காயும் மாத்திரமே தருவதான தருக்கள் பயனற்றவை. பழந்தரு மரம் நிகர்ப்பதே சித்தாந்த சைவம். உயிருக்கு உய்தியளிப்பதில் இச் சமயம் எச் சமயத்தும் தவறாது. திருநாவுக்கரசு சுவாமிகள், தமது வாழ்க்கையில் இவ்வுண்மையைத் தாமே அனுபவித்துக் காட்டியுள்ளார். ஆதலால், மற்றச் சமயங்களில் புக்குப் பிறகு கானல் நீரெனக் கண்டு மீளும் மானினம்*

*போல்வதில் சிரமம் அதிகம். ஆதலால் நன்றாய் ஆராய்ந்து* ***சைவமே மெய்ச் சமயமென*** *உள்ளத்துள் உறுதியாகக்கொண்டு அருட்குரு உபதேச வழி ஒழுகிச் சிவபோகம் துய்ப்பதே பிறவிப் பயனாம். இது பற்றியே,* ***"மற்றச் சமயங்கள்புக்கு நின்று ஆவி அறாதே"*** *என்று ஆசிரியர் நம்மனோரை எச்சரிக்கை செய்கிறார் என்னலாம். சாக்கிய நாயனார் முதலியவர்கள் தமது சமயங்களின் பலவீனத்தை ஆராய்ந்து உண்மைச் சைவநெறி நின்று உய்தியுற்றமை யாவரும் அறிவோம். சைவ மெய்ச்சமயத்தில் புண்ணிய வசத்தால் பிறந்து வைத்தும், அற்பமான சிற்சில காரணங்களால் பிற சமயத்தார் கூற்றுகட்கு ஆராய்ச்சியின்றி வசப்பட்டு அல்லலடைதலும் ஒரு சிலர் எய்துகின்றனர். இதுவும் கூடாது.* ***முயல்விட்டுக் காக்கைப் பின் போனவாறாகும்*** *இச் செய்கை. ஆதலால், ஆசிரியர் இச் செய்யுளின் இறுதியில்,* ***"அவ்வுரை கேளாதே"*** *என்று அறிவுரை வழங்கியுள்ளார். இங்ஙனம் கூறுதலால் பிற சமயங்களின்மேல் வெறுப்புக் காட்டுவது சைவம் என எண்ணலாகாது.* ***எல்லாச் சமயத்து நல்லனவும் இதன்பால் உள என*** *அறிவுறுத்தும் பொருட்டே சைவாகமம் இங்ஙனம் விதந்து கூறலுற்றது. "எல்லாப் பொருளும் இதன்பாலுள; இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்" எனத் திருக்குறள் நூலுக்குக் கூறப்படும் ஏற்றம் முற்றும் இச் சைவ சமயநெறிக்கு ஏற்பதாகும் என்பது திண்ணமான உண்மை.*

**"கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்**
**முற்பத ஞான முறைமுறை நண்ணியே**
**சொற்பத மேவித் துரிசற்று மேலான**
**தற்பரம் கண்டுளோர் சைவ சித்தாந்தரே"**

*எனத் திருமந்திரம் கட்டுரைத்துக் காட்டுதல் காணலாகும். களிறு 65-68.*

## செய்யுள் - 32

## உண்மைத் துறவு

துரியங் கடந்தஇத் தொண்டர்க்குச் சாக்கிரம்
துரியமாய் நின்றதென் றுந்தீபற;
துறந்தா ரவர்களென் றுந்தீபற.

**கருத்துக்கள்**

1. *தற்போத நீக்கம்.*
2. *பரமதுரிய ஞானம்.*
3. *கலியாணர் நிலை.*

## தெளிவுரை

*நாம் உலகினைக் காணும் இந்நிலை* **விழிப்பு நிலை** *எனப்படும். இது சாக்கிரம் எனவும் சாற்றப்படும். தூங்குகையில் கனவும் காண்கிறோம். இது* **கனவு நிலை** *அல்லது சொப்பனம் எனச் சொல்லப்படும். நம்மை அறியாமல் தூங்கிவிடுகிறோம். இந்த நிலைக்குச்* **சுழுத்தி நிலை** *என்பது பெயர். இதற்குமேல் இப் பிராண வாயு மாத்திரம் சஞ்சரிக்க மூர்ச்சையுற்றிருக்கும் நிலையும் நிகழும். இது* **துரிய நிலை** *எனப்படும். இதன் மேல் இப் பிராணவாயுவும் இயங்காமல் மூர்ச்சித்தலும் உண்டு. இதுவே* **துரியாதீத நிலை** *எனப்படும். இந்த ஐந்தையும் ஐந்தவத்தைகள் என்பர்.* **அவத்தை** *- நிலை (அ) வழி.* **சாக்கிரம்** *எல்லாக் கருவிகளோடும் கூடி நிற்கும் அவத்தையாம்.* **சொப்பனம்** *- சில கருவிகள் தொழிற்படாமல் (தூலதேகம் தொழிற்படாமல்) கனவொடு நிற்கும் அவத்தையாம்.* **சுழுத்தி** *- கனவுமில்லாமல் உறங்கி விழித்தபிறகு ''ஒன்றுமறியேன்; சுகமாய்த் தூங்கினேன்'' என்று சொல்லப்படும் அவத்தை ஆகும்.* **துரியம்** *- பிராணவாயு இயக்கத்துடன் மூர்ச்சையாய்க் கிடந்து தெளிந்தபின் ''ஒன்றும் தெரியவில்லை'' என்று சொல்லப்படும் அவத்தையாம்.* **துரியாதீதம்** *- பிராணவாயு இயக்கமும் இன்றி மூர்ச்சையாய்க் கிடக்கும் அவத்தை என்பர்.* **சாதாரணமாக ஆன்மா இந்த ஐந்தவத்தைகளிலும் போக்குவரவு புரியும்.** *ஆன்மாவானது தூலம், சூக்குமம், குணம், கஞ்சுகம், காரணம் என்னும் ஐந்து சரீரங்களைப் பொருந்தி நிற்கும் முறையில் மேற்கூறிய சாக்கிரம் முதலான ஐந்தவத்தைப்பட்டு நிற்கும். இவ்வைந்து சரீரங்களும் ஐந்து கோசங்கள் எனவும் கூறப்படும். இம்முறையில் காரண சரீரம் ஆனந்தமய கோசமாகும். வேடங்கட்டி ஆடுவோர் கட்டிய வேடத்துக்குரியவராய் நின்று நடித்து அவ்வேடத்தின் வேறின்றி நிற்பது போலவே ஆனந்தமய கோசமாகிய காரண சரீரத்தை ஆன்மா செலுத்துங்கால் அவ்வான்மா அவ்வானந்தமயமாய் அதனின் வேறின்றி நிற்கும். வேடங்கட்டி ஆடுங்கால் ஆடுவோன் அறிவோடு அகத்தில் தங்குவன். ஆகவே இது சூக்குமம் எனப்படும். துரியமும் துரியாதீதமும் சித்தமும் செல்லா நிலையனவாகலின் கருதவும் வாராதனவாம். துரியங்கடவாதார்க்கு நாதம் முதலான தத்துவங்களும், பஞ்ச மலங்களும் வாதனை செய்தல் புலப்படும். ஆனால் துரியங் கடந்தவர் அருள்வசப் படுபவராதலால் இவற்றை ஆன்மாவின் வேறானவை எனக் கண்டு நீங்குவர். ஆன்மாவாகிய தன்னையும் தரிசித்து ஞானோதயக் காட்சியால் தன்னையும் பொருளன் றெனத் தெரிவர். அப்போது இவர்தம் அறிவு இறைவன் திருவடியிலேயே (ஞானத்திலேயே) பொருந்தி நிற்கும். இதனால், இவர்கட்குப் பிராரத்தம் அனுபவித்தல் உணர்வுக்கு வாராது.*

*ஒருவேளை விழிப்பு நிலையாகிய சாக்கிரம் கூடினாலும் இவர்கள் பார்வைக்கு இவர்கள் ஏறி நின்ற பரமதுரிய ஞானமே பிரகாசிக்கும். நன்றாய்த் தூங்கினவன் விழித்ததும் தூக்க நிலையே தொடர்ந்து காணப்படுவதுபோல நிகழ்வது இந்நிலைமை. இதனாலேயே,* **"துரியம் கடந்த இத் தொண்டர்க்குச் சாக்கிரம்**

***துரியமாய் நின்றது"*** *என ஆசிரியர் கூறலுற்றார். தொண்டரென்றமையால் இவர் தங்களை அடிமைப் பொருளெனவே கருதி நிற்பர் என்பது தெரியலாம். இதனால் பிராரத்த அனுபவ வேகம் தாக்குவது இவர்கட்குத் தணிந்தே காட்டும். ஆதலால், இவர்கள் சாக்கிர நிலையிலும், துரியாதீதப் பட்ட நினைவாக இருத்தலின் பிரபஞ்சத்துடன் கூடார் எனத் தெரியலாம்.*

*உலகியல் உணர்வற்றுத் தன் உணர்வுமற்று சிவன் திருவருளையே நோக்கி நிற்கும் மெய்யடியாருக்கு நனவிலேயே மேலாகிய நிலை கைகூடும். இவர்களே உண்மையான துறவிகள்.*

*இவ்வாறு சாக்கிரத்தும் துரியாதீதப் பட்டே நிற்போரே பிரபஞ்சத்தையும் தற்போதத்தையும் துறந்தவராவர். அதாவது இவர்கள் தற்போதமற்றவராய்ப் பரபோகத்தையே துய்த்து நிற்பர் என்பதாம். ஆகையால் இவர்களே உண்மைத் துறவமைந்த* ***கலியாணர்கள்*** *எனப்படுவர். இதுபற்றியே,* ***துறந்தார் அவர்கள்*** *என்றார் ஆசிரியர். இந்த ஞானிகளே சீவன் முத்தர்கள்.*

**"தொம்பதம் தற்பதம் சொல்முத் துரியம்போல்**
**நம்பிய மூன்றாம் துரியத்து நற்றாமம்**
**அம்புவி உன்னா அதிசூக்கம் அப்பாலைச்**
**செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே"**

*என்பது திருமந்திரம். களிறு 69-75.*

## செய்யுள் - 33

## பெத்த முத்தி

பெற்றசிற் றின்பமே பேரின்பமா யங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற;
முளையாது மாயைஎன் றுந்தீபற.

### சூர்ணிகை

1. *பெத்தத்தில் முத்தியனுபவம்.*
2. *மாயை நீக்கம்.*

### தெளிவுரை

*குரு திருவருளால் ஒருவன் பிரபஞ்சத்தையும், தன்னையும் பற்றிய*

*உண்மைகளை அறிகிறான். பின்னர் அருளில் அழுந்துகிறான். ஞானம் மிகப் பெறுகிறான். இந்த நிலையில் ஆன்மாவின் அறிவிச்சை செயல்கள் யாவும் இறைவன் அறிவிச்சை செயல்களில் ஒன்றுபடுகின்றன. இதனால் அந்த ஞானமும் மறையவே ஆனந்த அனுபவத்தில் அழுந்துகின்றது ஆன்மா. இதுவே பெத்தத்தில் முத்தியை அனுபவிக்கும் சிவபோக நிலை எனப்படும். அதாவது பெத்த நிலையில் இறைவன் உயிராக நின்று அறிகிறான். முத்தி நிலையில் உயிர் இறைவனுடன் நின்று அறிகிறது என்பதாம். இதனால் இறைவன் உயிராக நிற்கும் பெத்தத்தில் வினைப் பயன்களை உயிர் அனுபவிக்கின்றது. உயிர் இறைவனாக நிற்கும் முத்திநிலையில் முதல்வனை அனுபவிக்கும் சிவானுபவம் நீங்கிய வினைப்பயன்கள் இறைவனுக்காமென்க. இறைவனே தானாய் நிற்கையில் தான் செய்யும் வினை, தன்னைக் கட்டுப்படுத்தாது. இதனாலேயே உலகில், ஒன்றை ஈவாரும் ஏற்பாரும் சிவார்ப்பணம் எனக் கருதவேண்டுமெனவும், தான் கொடுத்ததாகவும், தனக்குத் தந்ததாகவும் கருதினால் குற்றம் உண்டாகும் எனவும் ஆகமங்கள் கூறலுற்றன. எல்லாம் சிவமயமாகவே தோன்றப் பெற்றவர்க்கு வினைப் பயனின் தாக்குதல் இல்லை. எல்லாம் சிவானந்தமாகவே விளங்கும். "எத்தனுவில் நின்றும் இறையார்க் கில்லைவினை - முற்செய்வினையும் தருவான் முன்" என்பது 10-ஆம் சூத்திரத்து இரண்டாம் அதிகரணம், இத்தகையோர் பெத்தத்தில் எத்தெய்வத்தைக் காண நேரினும் அவர்கட்கு அத்தெய்வம் மாதொரு பாகனாகவே காட்சிப்படும். "எல்லாம் சிவமாய் இருந்ததே" என்பது அநுபவ மொழியாம்.*

*இங்ஙனம் சிவபோக அநுபவமுற்றவர் பிராரத்த அநுபவம் காரணமாகச் சாக்கிர நிலைக்கு வருதல் கூடும். அங்ஙனம் வருங்காலத்தும் உலகத் தத்துவங்களில் அதாவது நிலை நில்லாத சுகங்களில் உள்ளம் அழுந்தமாட்டார்கள். இந்த அற்ப சுகத்தை மதிக்க மாட்டார்கள். நல்ல சுவையைச் சுவைத்த நாக்குக்கு அதனின் குறைந்த சுவையைச் சுவைக்கையில் சுவைமிக்குத் தோற்றாமல் சுவையற்றதாகவே தோன்றும். அவ்வாறே பரம சுகானுபவத்தே ஈடுபட்டிருந்த இவர்கட்கு இச் சிற்றின்பமும் சிற்றின்ப சுகமாகத் தோன்றாது. சர்க்கரையுடன் கலந்த மாவும் சர்க்கரையாகவே சுவைப்பதுபோலும் இந்த நிலை. இத்தகையோர் அற்ப சுகங்களை அனுபவிக்க நேரிட்ட காலத்திலே இச் சிற்றின்பத்திலே அழுந்தாமல், இந்தச் சுகத்தையும் கன்மத்தையும் கருவி கரணாதிகளையும் தன்னையும் கூட்டிப் புசிப்பிக்கின்ற திருவருளை அது கண்ணாகவே உணருவார்கள். இதனால் இவர்கட்குப் பேரின்பானுபவமே இடையறாது நிகழும். இதனால் இவர்கட்குச் சனனம் ஏறாது. கன்மமும் தொலைவுறும். ஞானப் பார்வையோடு நிற்கையால் அற்ப சுகமும் பரமசுகமாம். இதனை உணர்த்தும் பொருட்டே,* **"பெற்ற சிற்றின்பமே பேரின்மா யங்கே முற்றவரும் பரிசு"** *என்றார் ஆசிரியர்.* **துன்பத்தையே இன்பமாகக் கொள்பவனுக்குத் துன்பமே இராதென்பதும், இன்பமே வாய்த்தபோது அது பேரானந்தம் நல்கும் என்றும் பெரியோர் கூறுவதும் இங்குக் கருதத்தக்கதே.**

*இவ்வாறு, பிரபஞ்ச முகப்பட்ட காலத்தும் முதல்வன் திருவடி நினைவாகவே இருத்தற் குபாயமாகவே அடியார் கூட்டுறவு, ஆலயத்தையும் அரனெனக் கருதல், சற்குருத் தியானம், சிவ சின்னங்களைச் சிவமாக மதித்தல், பஞ்சாக்கர சிந்தனை முதலியன வகுக்கப்பட்டுள. இவையெல்லாம் பெற்ற சிவபோகத்தை அங்ஙனமே அனுபவித்துக் கொண்டிருக்க வழி காட்டுவனவே ஆகும். இவ்வாறு சாக்கிர நிலையிலும் சிவம் உணர்த்துவதாகும் உணருவதாகவுமே கருதிக்கிடப்பின் மாயையால் விளையும் ஏகதேச அனுபவங்கள் விளையமாட்டா. எனவே மலம் மாயை, கன்மங்கள் அங்குரிக்கமாட்டா என்க. இதுபற்றியே, இங்கு "**மாயை முளையாது**" என்றார் ஆசிரியர். அதிலும் **முளையாது** என்னும் சொல்லை முந்திக் கூறியுள்ளமை "கண்டேன் சீதையை" என்பதுபோலும் நயமான பிரயோகம் ஆகும்.*

**"மலமில்லை மாசில்லை மானாபி மானம்**
**குலமில்லை கொள்ளும் குணங்களு மில்லை**
**நலமில்லை நந்தியை ஞானத் தினாலே**
**பலமன்னி அன்பிற் பதித்துவைப் போர்க்கே"**

*என்னும் திருமந்திரமும் இதனை உணர்த்துவதே. களிறு 76*

### செய்யுள் - 34

### ஞானாந்த அனுபவநிலைபேறு

பேரின்ப மான பிரமக் கிழத்தியோடு
ஓரின்பத் துள்ளானென் றுந்தீபற;
உன்னையே ஆண்டானென் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. ***சுகதுக்க ஒழிவு.***
2. ***பேரின்ப நிலைபேறு.***

### தெளிவுரை

*கிழத்தி - உரிமையுடையவள். பிரமக்கிழத்தி - சத்தி. கரும்பிரசம் இனிப்பானது. இதன் இனிப்பை இந்த இரசத்தைக் குடிப்பவரே அறிவர். இந்த இரசத்தைக் கண்ணாலே பார்த்திருப்பவர் அனுபவிக்க இயலாது. கரும்பை ஆட்டி இரசங் கொள்ளும் முயற்சி செய்தவன், இரசத்தைக் கண்ணாலே மாத்திரம் பார்த்திருப்பானாயின் அவன் அதன் சுவையை அனுபவித்தனாகமாட்டான்.*

*அதைப் பருகினால் சுவை கண்டவனாவான். அவ்வாறே, தத்துவங்களைக் களைந்து, ஆன்ம தரிசனத்தையும் கடந்து, முதல்வனோடு இரண்டறக் கலக்கும் பேரின்ப அனுபவத்தைப் பெறும்பொருட்டு நீங்காத அன்பு உடையவனாகி, அந்த அன்பின் பயனாக ஞான சொரூபமான சக்தியினால் ஞானம் லயிக்கப் பெற்றதும் அவ்வளவோடு நின்றுவிடலாகாது. அந்த ஞானந்தானே போதுமென்ற அமைதி சொரூபத்தைக் கூட்டிடாது. சுகரூபமான சிவத்திலே அழுந்தவேண்டும். இவ்வாறு அளவிடப்படாத பரமானந்தமான பரம சத்தியுடனே இடைவிடாத சுகரூபமாயிருப்பவனான பரமேசுவரனை முறைமையாகக் கூடி அந்தப் பரமானந்தத்தை அனுபவிக்கவேண்டும். அப்போதுதான் சிவனை உள்ளபடி அறிவான். இதனால் ஞான சொரூபமான சக்தியோடு பிரிப்பற இருப்பவன் சுகரூபமான சிவன் என நாமறிதல் வேண்டும். இதனையே இப்பாடலில்,* **''பேரின்பமான பிரமக் கிழத்தியோடு ஓரின்பத்துள்ளான்''** *எனக் கூறி உணர்த்துகின்றார் ஆசிரியர். இங்ஙனம் அமுதமுண்பார்போலச் சிவானந்தத்தே அழுந்தினால் அவ்வானந்தமே சுகத்தை அறிவுறுத்தும். இதனை,* **"உன்னையே ஆண்டான்"** *என்று கூறித் தெளிவுறுத்தலானார் ஆசிரியர். இந்த நிலையினை எய்திய சிவயோகியரே சிவனை உண்மையில் அறிந்தவராவர். இதனால் பிரம சத்தியில் கூடி ஞானானந்தத்திலே சேர்ந்து அடிமைப்பட வேண்டும் என்பது தெளியலாம். இதனை,*

**"இருக்கும் சேமஇடம் பிரமம் ஆகும்;**
**வருக்கம் சராசர மாகும் உலகம்**
**தருக்கிய ஆசார மெல்லாம் தருமே**
**திருக்கமில் ஞானத்தைத் தேர்ந்துணர்ந் தோர்க்கே"**

*என்னும் திருமந்திர நூற் கூற்றானும் உணரலாகும்.*

## செய்யுள் - 35

## பாவனை பாவக ஒருமை

பெண்டிர் பிடிபோல ஆண்மக்கள் பேய்போலக்
கண்டாரே கண்டாரென் றுந்தீபற;
காணாதார் காணாரென் றுந்தீபற.

**கருத்து**

***சிவத்தின் வசமாதல்.***

**தெளிவுரை**

*பாவனை - நடத்தை. பாவகம் - இயல்பு, கருத்து. பேயால் பிடிக்கப்பட்ட பெண்டிர் போல உயிரைக் காணுதல் வேண்டும். அப்பெண்டிரைப் பிடித்த பேயினைப் போல இறைவனைக் காண வேண்டும். இவ்வாறு காண வல்லவர்களுக்கு இறைவனின் அருள் அனுபவம் வாய்க்கும். இப்படிக் காண இயலாதவர்களுக்கு அருள் அனுபவம் வாய்க்காது.*

*“முருகு மெய்ப்பட்ட புலத்தி போல” என்று சங்க இலக்கியம் கூறுகிறது. பேயால் பிடிக்கப்பட்ட பெண், தான் ஒரு பெண் என்பதையே மறந்து விடுகிறாள். அவளுடைய சொல்லும் செயலும் பேயின் சொல்லும் செயலுமாகவே தோன்றும். அதுவரை இல்லாத வலிமையும், ஆவேசமும் பேய் பிடித்த பெண்ணுக்கு ஏற்பட்டு விடும். பெண் தன்மை மறந்து பேய் என நிற்கின்ற தன்மையே காணப்படும்.*

*இறைவன் ஒருவரிடத்து ஆவேசித்த போது அவருடைய செயலை ஒழித்துத் தன் செயலே விளங்குமாறு நிற்பான். இந்த நிலையைக் கைகூடியவரே தற்போதத்தை இழந்து சிவ போதத்தில் நிலைபெற்றவர் ஆவர். இந்நிலை கைவரப்பெறாதவர் இறைவன் திருவருளை உணரமாட்டார்கள். ஆண்மக்கள் என்பது பன்மை ஆயினும் இறைவனைக் குறிக்கும் இவ்விடத்தில் அதனை ஒருமையாகவே கொண்டனர் பெரியோர்.*

*ஓர் ஆன்மா பெண் பிறப்படைந்திருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது பெண் என்றே பேச்சாலும் செயலாலும் நினைவாலும் அவ்வான்மா யாவராலும் உருவம் நோக்கிக் கருதப்படுகிறது. அப்பெண், பேயால் பிடிப்புண்டால் அப் பெண் சொரூபம் வேறாகமல் இருக்க, மனமும் வாக்கும் செயலும் பேயின் வசத்ததேயாகின்றமையால் ‘பெண்ணாக நானிருக்கிறேன்’ என்னும் எண்ணத்தை மறந்து தன்னை மறந்து பேய்த் தன்மையாகவே ஒழுக நேரிடுகிறது. பெண்ணின் செயல்யாவும் இப்போது பேயின் செயலாகவே ஆகிவிடுகின்றன. இவ்வாறே, நாயகரான தம்பிரானார் ஆன்மாவினைத் தன் வசமாக்கிக் கொள்வாராயின், அவ்வான்மா வெளித் தோற்றத்திற்குச் சாமானிய உலகினர் போலக் காணப்படினும், அத்தேகியினுடைய செயலைச் சிவபிரானார் அழித்துத் தன்னுடைய செயலே பிரகாசிக்கும்படிச் செய்கிறார். இதனால் பாவனையோடு பாவகமும் ஒன்றுபட்ட நிலை ஏற்படுகின்றது. இந்தவிதமாகச் சிவாவேசம் பெற்றவர்களே சிவனை உள்ளபடி*

*கண்டு கூடியவராவர். இதுபற்றியே,* **பெண்டிர் பிடிபோல ஆண் மக்கள் பேய்போலக் கண்டாரே கண்டார்** *என்கிறார் ஆசிரியர்.*

*இங்ஙனம் சிவாவேச வசப்படாமல் பிரபஞ்சமுகராகி நிற்பரேல் அது கான்ற சோற்றினைத் திரும்ப உண்பது போன்றதாகும். இவர்கள் குருடர்களை நிகர்ப்பர். இதனாலேயே,* **காணாதார் காணார்** *என்றார் ஆசிரியர். உயிரைப் பெண்ணாகவும், இறைவனை ஆணாகவும் உவமை கூறியிருப்பதற்குக் காரணம், உயிர்க்கு இன்பம் வழங்கி உயிர்களை ஆள்பவர் என்பதனாலாகும்.*

**"நனவில் அதீதம் பிறந்தார் கிடந்தார்;**
**நனவில் துரியம் நிகழ்ந்தார் தவழ்ந்தார்;**
**நனவில் சுழுத்தி நடந்தார் வளர்ந்தார்**
**நனவிற் கனவோட னன்செய்தி யானதே"**

*என்பது திருமந்திரம். களிறு 78, 79.*

**தொகுப்பு 22–35**

*இங்ஙனம் இந்நூலாசிரியர் 22-ஆம் பாடல் முதல் இந்த 35-ஆம் பாடலளவும் சிவபோகத்தில் இப்பிறப்பிலே அழுந்துதற்கு உபாயத்தைப் படிப்படியாகக் கூறலுற்றுச் சுவாசத்தை மாற்றி மனத்தை அடங்கச் செய்யவேண்டுமெனவும், பிறகு சிவனது அறிவிச்சை செயல்களோடு தன் அறிவாதியவை அடங்கி ஒன்றுபட்டு இதயத்தைப் பரவெளியாக்க வேண்டுமெனவும், முதல்வனை விட்டுச் சாக்கிரத்துவம் நினைவு மாறாதிருத்தற் பொருட்டுச் சிவத்தினை ஆன்மாவாதி எட்டு வடிவமாகவும் கருதி நிற்கவேண்டுமெனவும், இருவினையொப்புடையராய் ஒழுகவேண்டுமெனவும், இங்ஙனம் ஒன்றுபட்டார் அமுதவெள்ளத்தை நுகர்வரெனவும், தாம் அடைந்த திருவருட் பயனாகிய ஞானத்தைக் கைவிடலாகாதெனவும், இங்ஙனம் ஞானமயமாயின் சொல் ஒடுங்குமெனவும், இந்த அதீத நிலையிலேயே நிலைத்திடல் வேண்டுமெனவும், இவ்வளவும் சைவ சித்தாந்தத்தே மயக்கமறக் கூறப்படுதலால் இதர சமயக் கோட்பாடுகளைக் கேட்டுச் சலனமடைதல் கூடாதெனவும், இவ்வாறு சாக்கிரத்தே துரியம் நிகழுமாறு ஒழுகுபவர்க்கு மல மாயா கன்மங்கள் விளைய வழியில்லை எனவும், இத்தகையோரே கலியாணர்களாவாரெனவும், இவர்கள் பிரபஞ்ச முகப்படினும் அவ்வற்ப சுகங்களையும் பேரின்பமாகவே கொள்வரெனவும், இவர்தம் செயல்களெல்லாம் சிவன் செயலேயாம் எனவும் முடித்துக்காட்டியுள்ளார் ஆவர். இனி அடுத்து ஓருபாயங்கூறத் தொடங்குதல் காணலாம்.*

## செய்யுள் - 36

## பரமாகாசத்து அழுந்தல்

நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடின்
நாலாம் நிலையாம்என் றுந்தீபற;
நாதற் கிடமதென் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. *பரமாகாசத் தழுந்துகை*
2. *சிவனுடைய உண்மை.*

### தெளிவுரை

*நிலம், நீர், நெருப்பு, காற்று, வான்வரை கூறப்பட்ட ஐம்பூதங்களிலே நான்காவது பூதம் காற்று ஆகும். நாலாய பூதம் என்றது, ஐம்பெரும் பூதங்களுள் ஒடுக்க முறையில் நான்காவதாக வைத்து எண்ணப்படும் காற்றினை; உயிர்களுக்குப் பிராணவாயுவாக விளங்குவது இக்காற்றே. காற்றால் உந்தப்பட்டுத் தோன்றுவதே வாக்கு. இது முதலில் நுண்மையான சூக்குமை வாக்காகத் தோன்றிப் பின்னர் பைசந்தியாகவும், மத்திமையாகவும், வைகரியாகவும் மலரும் என்பர். நாலாம் நிலை - சாயுச்சியம்.*

*அருளாசிரியரால் உணர்த்தப்பட்டு பிராணனும் நாதகலையும் ஒன்றிடும் போது, முத்தி நிலையில் நான்காவதாகிய சாயுச்சியம் எய்தப்பெறும். அந்நிலையே சிவபெருமானாகிய நாதனுக்கு உரிய இடமுமாகும்.*

*யோக நிலையின் அடிப்படையிலேயே இந்தப் பாடல் அமைந்துள்ளது. எனவே இதனை வேறும் ஒரு வகையிலே பொருள் கொள்வர். நாலாவது என்று சொல்லப்படுவது நின்மலத் துரியம் என்னும் அருள்நிலை என்று கொள்வர். பிராணவாயு சுழுமுனை வழியே நாதகலையுடன் கூடி உச்சியில் சென்று சேர்வதே அருள்நிலை என்று கொள்வர்.*

*குதிரை இலாயத்தில் மூன்று கட்டுகளுடன் நடப்பதற்கும் சுதந்தரம் இல்லாது நிற்கின்றது. வண்டியில் பூட்டப்பட்டபோது கடிவாளம் போடப்படுகிறது. காற் கட்டுகளில்லை; ஆதலால் ஓடுவதற்கு முடியும்; ஆனால் இஷ்டப்படி ஓட முடியாது. அதனை வண்டிக்குள் வண்டிக்காரனாகிய எசமானன் இருந்து செலுத்துகிறான். அவன் குதிரையை இழுக்கவேண்டியும் தன் கருத்தின்படி ஓட்டவேண்டியும்*

*கடிவாளத்தின் இருபுறக் கயிறுகளையும் ஒன்றாகக் கையில் பிடித்துக் கொள்ளுகிறான். எனவே வண்டிக்காரனும் அவன் கைக் கயிறும் செலுத்தும் வழியில்தான் குதிரை ஓட வேண்டியுள்ளது. இவ்வாறு ஓடுவதால் வண்டிக்கும் பழுதில்லை. குதிரைக்கும் அபாயமில்லை. நல்லமுறையில் அது பணியாற்றுவதால் தீனி முதலிய சுகங்களை அனுபவிக்கிறது.*

*சிவனும் அந்தந்த முறைமைகளாய் நிற்பது தெரியலாம். சிவன் அநாதியே தன்னுடைய சொரூபம் தோன்றாமல் ஆன்மாவாய் நிற்கிறான். அப்படியே ஆன்மா ஆன்மபோதம் தோன்றாதபடி சிவனாகவே நிற்கவேண்டும். இங்ஙனம் நிற்பவர்க்கே சிவனுண்மை விளங்கும். இதுவே கர்த்தாவாகிய சிவன் எழுந்தருளி யிருக்கும் பரமாகாச இடம் என்பர். இதுவே அவனைக் கூடுமிடமாம். இதுபற்றியே,* ***நாதற்கு இடம் அது*** *என்றார் ஆசிரியர். இதனால்* ***பிராணநாத பிரமரந்திரப் பரமாகாச நிலையாகிய*** *உபாயம் கூறப்பட்டதென்க.*

**"விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடில்**
**சந்தியி லான சமாதியிற் கூடிடும்;**
**அந்த மிலாத அறிவின் அரும் பொருள்**
**சுந்தரச் சோதியும் தோன்றிடும் தானே"**

*என்பர் திருமூலரும். களிறு 80, 81.*

**செய்யுள் - 37**

**சிவனுபகாரம்**

சென்ற நெறியெல்லாம் செந்நெறி யாம்படி
நின்ற பரிசறிந் துந்தீபற;
நீசெயல் செய்யாதே உந்தீபற.

**கருத்துக்கள்**

1. *சிவனுபகாரம்*
2. *தற்செயலின்மை.*

**தெளிவுரை**

*இறைவனின் திருவருள் செலுத்தும் வழியிலே செல்லுகின்ற ஒருவனுக்கு, அவன் சென்ற நெறியெல்லாம் செம்மையான நெறியேயாம். இந்தத் தன்மையை அறிந்து அதன் வழியிலே நிற்க. தன் முனைப்போடு செய்யப்படுகின்ற செயல்கள் யாவும் நல்வினைக்கும் தீவினைக்கும் இட்டுச் சென்று மீண்டும் இறப்பு பிறப்புகட்கு உட்படுத்தும். ஆதலால் நீயாக எச்செயலையும் செய்யாதே.*

*வாழ்கிற காலத்தில் செய்யப்படும் செயல்கள் யாவும் யான் எனது என்னும் முனைப்போடு இயற்றப்படுமானால் விருப்பும் வெறுப்பும் தலைதூக்கும். அவ்விருப்பு வெறுப்புக்கள் நேரிய பாதையிலிருந்து வழுவச் செய்யும். எவ்வளவுதான் செம்மை நெறியிலே நிற்பதாகக் கருதினாலும் செருக்கினால் விளைவது உயிர்க்கு நலம் பயவாது.*

*இதற்கு மாறாக இறைவன் திருவருளை முன்னிட்டுக் கொண்டு தனக்கென விருப்பும் வெறுப்பும் இல்லாமல், எல்லாம் சிவன் செயல் என்று ஒழுகுவார்க்கு அவர் சென்ற நெறியே செம்மையான நெறியாகும். இறைவன் அருளைப் பற்றி நிற்பது இத்தகைய பயனைத்தரும் என்பதை மாணிக்கவாசகப் பெருமான் 'சித்தம் சிவமாக்கி செய்தனவே தவமாக்கும் அத்தன் எனக்கு அருளியவாறு யார் பெறுவார் அச்சோவே' என்று கூறியதிலிருந்து அறியலாம்.*

*நெறி என்பதைச் சமய ஒழுக்கம் என்று பொருள்கொண்டு பல்வேறு சமயங்களும் படிமுறையாக உயிர்களை இட்டுச் சென்று இறுதியில் இறைவன் திருவடியிலே கொண்டு சேர்க்கும் என்று பொருள் கொள்வதுண்டு. இது அப்பர் பெருமான் திருவாக்கில் "ஆறு சமயத்து அவரவரைத் தேற்றும் தகையன, தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே ஏற்றும் தகையன, இன்னம்பரான் தன் இணையடியே" என்று உணர்த்தப்படுகிறது. செந்நெறி என்பது சிவநெறியைக் குறிக்கும்.*

*நம்முடைய மன முதலிய கருவிகள் நமது விருப்பு வெறுப்புகளால் விளைந்த கன்மங்களுக்குத் தக்கவாறு துணை செய்வனவாம். இதனால் மனம் முதலியவை ஐம் பொறிகளாகிய விலக்கடியும் சந்துமான வழியே சென்று கன்மங்களில் அழுந்துகின்றன. இதனால் நன்மை தீமைகள் உண்டாகி மறுமைக்கு வித்தாகிய குற்றங்கள் விளைந்து தேகம் கூடுகின்றது. தேகத்தே திரும்பத்திரும்பக் கூடுவதனால் கன்மங்கள் வற்றாமல் பெருகுகின்றன. ஆகையால் தற்போதம் தலையெடுத்தாடுகின்றது. இறைவனை அடைதற்கான முறையினைக் கனவிலும் நினைக்க முடிகிறதில்லை. இந்திரிய கரணங்கள் ஆட்டிவைக்கும் போலி நாடகமே வாழ்க்கையாக முடிகிறது. போதம் சலித்த வண்ணம் சங்கடப்படுகின்றது. நமக்கே*

*நம்முடைய வாழ்க்கையின் துன்ப விளைவுகள் பெரும் அருவருப்பை உண்டாக்குகின்றன. வழிதுறை தெரியாமல், இரவில் இருளில் புயலில் மாலுமியில்லாமல் நடுக்கடலுட்பட்ட கப்பலில் உள்ளவர்கள்போல் கலங்க நேரிடுகிறோம்.*

*இந்தக் கலக்கத்தைப் போக்கி அச்சந்தவிர்த்து ஆட்படுத்து வைப்பதே குருமூர்த்தியின் திருவருளால் நிகழ்கின்றது. சற்குருவின் தீட்சையாலும் ஞானோபதேசத்தாலும் கரையேற வழி ஏற்படுகின்றது. அத்தேசிகர் அருளிய நெறியே நடப்பதால், தம்பிரானார் சந்நிதியிலே கூடிச் சீவிக்கும் முறைமையும், அருட்கண்ணால் கண்டு தன் செயலற நிற்கு நெறியும் புலப்படுகின்றன. இதனாற் பிராரத்தமும் தொலையலுறுகின்றது. ஆகாமியமும் ஏறுவதில்லை. தேகாந்தத்திலும் திருவடியிலே கூடுகைக்கு வாய்ப்பாகிறது. ஆதலால் முற்செய்யுளில் கூறியாங்குப் பரமாகாசத்திலே அழுந்திப் பக்கம் நோக்காமல் ஒரு நிலையிலே நிற்க வேண்டும்.*

*இரும்பைக் காந்தம் இழுப்பது யாவர்க்கும் தெரிவதே. ஆனால் காந்தத்தின் சந்நிதிப்பட வேண்டும் இரும்பு. காந்தம் இருக்கும் இடமன்றி வேறிடத்தே இரும்பிருந்தால் காந்தத்தால் கவரப்படாது. இரும்பைக் காந்தத்தின் எதிர்முகமாக ஒருவர் அமைக்க வேண்டும். அவ்வாறே சற்குரு திருவருள் ஆன்மாவினைத் தம்பிரானார் சந்நிதியிலே ஆட்படுத்துகின்றது. காந்தம் இரும்பை இழுத்துக் கொள்வது போலப் பரமாகாசத்தில் அழுந்திய ஆன்மா இறைவன் திருவடியிலே அழுந்தி அடங்குகின்றது. இரும்பாம் இயல்பில்லாவிடில் காந்தம் இரும்பைக் கவராது. அவ்வாறே தற்போதம் கழன்று திருவருள் ஞானவசப்பட்டாலல்லது இறையருள் கிட்டாது. இதுபற்றியே,* **“சென்ற நெறியெல்லாம் செந்நெறியாம்படி நின்ற பரிசு அறி”** *என்றார் ஆசிரியர். இவ்வாறு செயலற நிற்பதே சிறந்த வழியாகும்.*

*இவ்வாறன்றித் தற்போதம் தலையெடுத்து நிற்கத் தற்செயலாலே இறைவனைக் கூடக் கருதுவோமாயின் அது ஒருபோதும் கிட்டாது. இதனால் சனன மரணங்களிலே அழுந்தும்படி நிகழும். ஆகையால் எல்லாம் சிவன் செயல் என அவ்வழி ஒழுகுதலே சிறந்த உபாயமாகும். இதனை உணர்த்தவே,* ***நீ செயல் செய்யாதே*** *என்கிறார் ஆசிரியர்.*

**“புறத்து ளாகாசம் புவனம் உலகம்**
**அகத்து ளாகாசம் எம்மாதி அறிவு**
**சிவத்து ளாகாசம் செழுஞ்சுடர்ச் சோதி**
**சகத்து ளாகாசம் தானஞ்ச மாதியே”**

*என்ற திருமந்திர சிந்தனை இங்குப் புரிதல் ஒல்லும். களிறு 82, 83.*

## செய்யுள் - 38

## விகற்பமறுகை

பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்
அக்கொழு நீயறிந் துந்தீபற;
அறிந்தறி யாவண்ண முந்தீபற.

### கருத்துக்கள்

1. *தேசிகனருள்வழி நிற்றல்.*
2. *உணராதே உணர்ந்து நிற்றல்.*

### தெளிவுரை

*விகற்பம் - வேறுபாடு. மனக்கோணல். தவறு. பொன்னால் கலப்பை செய்து யாரும் நிலத்தை உழமாட்டார்கள். பொற்கலப்பை மதிப்பு மிக்கது. அதனைப் போற்றுவதே செய்யத் தக்கது. அதனைக் கருதாமல் நிலத்தில் நாட்டி உழுவதால் பொன் தேய்வடையும். நிலமும் பண்படாது. கலப்பை வீணாகி மதிப்பறும். அதிலும், வரகு விதைப்பதற்காக அக்கலப்பை கொண்டு உழுவது அறிவில் செயலாகும். பொன்னினும் வரகு பெருமதிப்புடையதன்று. இங்ஙனம் பொற்கலப்பை கொண்டு வறண்ட நிலத்தை வரகு விதைப்பதற்கு ஒரு குடியானவன் உழுவானாயின் அவனை யாவரும் இகழ்வர். உழுபவனுடைய பலமும் குன்றும். மிகுந்த சேதம் விளையும். உழவு பயனளிக்காது. இவ்வாறே, நாம் தேசிகர் அருளிய சன்மார்க்கம் (அல்லது) ஞானத்தை இறைவனையடைதற்கான வழியிலே செலுத்தாமல், தற்போத மிகுதியால் உலக சுகபோகங்களை அடைவதற்கே பயன்படுத்துவோமாயின் பெருத்த லாபத்தை இழந்தவர்களாவோம். பிழையே பெருக்குவோம். சனன மரணங்களிலே அழுந்தித் துன்புறுவோம். இந்திரியங்களில் அழுந்திக் கிடந்து அல்லலே அநுபவிப்போம். ஆகையால், தேசிகரிடமாகப் பெற்ற திருவருளைத் தம்பிரானார் திருவடிகளை அடைதற்கான நெறியிலே பயன்படுத்துவதே அறிவுடைமையாம். தற்போதமின்மைக்கு இதுவே முதற்படியாம்.*

*முன்பு தோன்றாமலே இருந்து திருவருள் நமக்கு உபகரித்த முறைமையை உணரவேண்டும். இப்போது அத் திருவருள் தோன்றி நின்றுபகரிப்பதைப் பெரிதாக மதிக்கவேண்டும். நித்திய தரித்திரனொருவனுக்குப் பெரும் புதையல் கிடைத்தாற்போல இத்திருவருளைக் கருதலே தக்கதாம். பின்பு அத்திருவருளே*

*கண்ணாகக் கூடி அழுந்தவேண்டும். இதனால் பிறப்பிறப்பு நீங்கும். சுகதுக்க வேதனைகள் நீங்கும் எப்போதும் நீங்காத பரமானந்தமே விளையும். ஆகையால் தன் செயலற்று "ஆட்டுவித்தபடி ஆடும் நிலை" ஒப்பத் திருவருட் குறிப்பின் வழியே நிற்பதுதான் நிலை. இவ்வாறன்றிப் பயனற்ற தற்போத நெறி கூடாதென்பதை உணர்த்தும் பொருட்டே* ***"பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்? அக்கொழு நீ அறி"*** *என்றார் ஆசிரியர்.*

*ஆதலால், சிவமே சிவமாக நினைந்திருப்பது தக்கதாம். அந்தச் சொரூபமே சொரூபமாக இருக்க வேண்டும். விகற்பம் கூடாது. உள்ளபடியே உண்மையறிந்த சிவயோகிகள், ஆன்மாவும் சிவமும் இரண்டாயிருப்பதெனவும், சிவமென்று ஒருமுதலில்லை ஆன்மாத் தானே சிவமென்றும், சிவமும் நீயும் வேறில்லை; உபாதிகள் நீங்கினபோது நீதானே சிவமாகின்றாய் என்றும், நான் சிவனுடனே கூடிச் சிவனாய் விட்டேனென்றும் ஒருபோதும் தற்போதத்தால் நினைக்கமாட்டார்கள். நினைப்பற நிற்பதே இவர் நிலையாம். ஆதலால், ஆசிரியர்* ***"அறிந்தறியா வண்ணம் நில்"*** *என்று கூறியுள்ளார். எனவே, இப் பொருளை உணராதே உணர்ந்து நிற்பது நன்னெறியாம்.*

**"அதீதத்து ளாகி அகன்றவன் நந்தி**
**அதீதத்து ளாகி அறிவிலோன் ஆன்மா**
**மதிபெற் றிருள்விட்ட மன்னுயிர் ஒன்றாம்**
**பதியிற் பதியும் பரவுயிர் தானே"**

*எனத் திருமந்திரம் ஓதுதல் காணத்தக்கதாம். களிறு 84*

## செய்யுள் - 39

## சிவபாவனை

அதுஇது என்னா அனைத் தறிவாகும்
அதுவிது வென்றறிந் துந்தீபற;
அவிழ்ந்த சடையாரென் றுந்தீபற.

**கருத்துக்கள்**

*1. ஆன்மா பாவனை நீங்குகை.*

*2. சிவ பாவனையில் நிற்றல்.*

**தெளிவுரை**

*அது என்றும் இது என்றும் ஒரு பொருளைச் சுட்டி அறியும் உயிர்களைப் போல் அன்றி, எல்லாப் பொருள்களையும் ஒருங்கே அறியும் பேரறிவுடைப் பொருளாக இருப்பவன், சிவபெருமான். அத்துணை பெரும் பொருளாகிய சிவபரம்பொருளே, குருவடிவில் எழுந்தருளி வந்து, நமக்குப் பேரருள் புரிந்து உயிர்க்கு அறிவுறுத்துகிறான் என்பதை அறிவாயாக.*

*சிவபெருமானின் சடை, ஞானத்தை உணர்த்துகின்றது. ஞானத்திரளாய் நிற்கும் அவன், "சடையான்" எனப்படுகிறான். அவனது ஞானம் எங்கும் பரந்து விரிந்துள்ள சிறப்பை விளக்கவே "அவிழ்ந்த" சடையான் எனப்பட்டான். எனவே, "அவிழ்ந்த சடையான்" என்ற தொடர், ஞானமே வடிவாகிய சிவபெருமானின் வியாபகத் தன்மையைக் குறித்து நின்றது.*

*முதலில் உள்ள ''அது இது'' என்பது, உயிர்களால் சுட்டியறியப்படும் பொருள்களைக் குறிக்கும். அடுத்துள்ள "அது இது" என்பது, குரு வடிவில் வந்த அவன், வியாபகப் பொருள் என்பதைக் குறிக்கும். (களிறு : 85 முதல் 91 வரை).*

*ஆன்மாவுக்கு அநாதியே உள்ளது ஆணவமலம். மாயையும் கன்மமும் வந்து பொருந்தியவை. இவை மேலும் பிறப்புகளெடுக்கவே வழி செய்வன. இவற்றால் ஆன்மா இந்திரிய வியாப்தனாகிறது. உலக நிகழ்வுகளிலே பொருந்தித் தோய்கின்றது. ஒவ்வொரு பொருளாக அறிகிறது. யாவற்றையும் சேர அறிய இயலுவதில்லை. ஒவ்வொரு பொருளாக அறியும் போது அது இது என்று சுட்டியறிகிறது. ஒன்றிலும் நிலைத்து நில்லாமல் அறிவு சலிக்கிறது. மயக்க விகற்பங்கள் மாறி மாறி வருகின்றன. பொய்யை மெய்யெனக் கருத நேரிடுகின்றது. தன்னைப் பற்றிய உண்மை விளங்குவதில்லை. கருவிகள், தத்துவங்களின் மயமாகத் தன்னை ஆன்மா கருதிவிடுகிறது. இரவுப் பகலும் கொண்ட ஆகாயம்போல அவத்தையுள் அழுந்துகின்றது. இங்ஙனம் மதிமயங்காமல் தேசிகருடைய உபதேச வழியில் நிற்பதே மெய்ஞ்ஞான நெறியாகும். இதனால், இறைவன் அநாதியே கருணை மிக்கவனாகி ஆன்மாக்களுடைய மலமாயை கன்மங்களைத் தொலைப்பதற்கு எவ்வளவு பரம உபகாரம் புரிகிறான் என்பது புலப்படும். தடுத்தாட்கொண்ட பின்னரே சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தம்மானை அறியலானார் என்பது வரலாறு. இங்ஙனம் ஆன்மாக்களைத் தடுத்தாட்கொள்ளும் பொருட்டே தம்பிரானார் தமது இச்சையினால் ஆன்மாக்களுக்கு அநாதி தொட்டுப் பிராணனாய் நிற்கிறார். அவற்றின் கன்மங்களைத் திருவுளத் தடைத்து*

*ஈடு செய்கிறார். ஒரு காலத்திலே சேர உணர்ந்தும், உணர்த்துவித்தும், புசிப்பித்தும், பிரிப்பித்தும், ஒடுக்குவித்தும் செய்கிறார். அது இது என்று சுட்டிப் பற்றி நின்று சலியாதிருக்கச் செய்கிறார். தன்னுடைய அருளாலே ஆன்மாவினை நடத்துகிறார். தான் ஒழிவற நிறைந்து மயக்க விகற்பமின்றி அசைவற நிற்கும் முறையைத் திருவருளால் ஆன்மாவினை உணரச் செய்கிறார். திருவருளிலே அழுந்தவைக்கிறார். இதனால் தம்பிரானார் அநாதியே ஆன்மாவாய் நிற்கும் முறைமை உணர்த்தப்படுகிறது. இவ்வுணர்வால் ஆன்ம பாவனை நீங்குகிறது. தற்போதம் தளர்ந்து கெடுகிறது. சிவ பாவனை ஏற்படுகிறது. யாவும் சிவமயமாய் ஒன்றுபட நிற்கும் ஞானமேற்படுகிறது. இவ்வளவும் சற்குரு கருணையினால் ஆன்மா படிப்படியாக அறியலுறுகிறது. இதுதான் சுட்டற்ற கட்டற்ற மெய்ஞ்ஞானமாம். இதனை இச் செய்யுள், "**அது இது என்னா அனைத்து அறிவாகும்**" என்கின்றது. முதலில் அது இது என்று சுட்டறிவுட்பட்டிருந்தது ஆன்மா. இதனை, **அது இது என்றறிந்து** என்ற இடம் புலப்படுத்துகின்றது. இங்ஙனம், ஆன்மாவினை அகப்படுத்து நிற்கும் பொருள் சிவமேயாவன். ஆன்மஞானம் இறைஞானத்துட்பட்டு வியாப்பியமடைகின்றது. இதனால் ஞான விரிவு ஏற்படுவது பயனாம். இதனை **அவிழ்ந்த சடையார்** என்ற சொற்றொடர் தெரிவிக்கிறது. இதனால் சுட்டறிவு நீங்கிக் கட்டற்ற இறையறிவில் அழுந்துவதே சிவபோக நெறி என்பது தெளியலாகும்.*

**"முன்னை முதல்விளை யாட்டத்து முன்வந்தோர்**
**பின்னைப் பெருமலம் வந்தவர் போர்த்திட்டுத்**
**தன்னைத் தெரிந்துதன் பண்டைத் தலைவன்தான்**
**மன்னிச் சிவமாக வாரா பிறப்பே"**

*எனத் திருமந்திர உபதேசம் புகலுவதும் போற்றப்படும்.*

## செய்யுள் - 40

## சிவனருள்

அவனிவ னான தவனரு ளாலல்ல
திவனவ னாகானென் றுந்தீபற;
என்று மிவனேயென் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. *சிவனது காருண்யம்.*
2. *ஆன்மாவின் அடிமை நிலை.*

### தெளிவுரை

*அவன் - சிவபெருமான்; இவன் - ஆன்மா. உயிர்க்குள்ள ஆணவமல மறைப்பைப் போக்கும் பொருட்டு சிவபெருமான் உயிர்க்குத் தனுகரண புவன போகங்களை அருளிச் செய்தான். அவனருள் இன்றி உயிர்கள் ஏகதேச அறிவையேனும் பெற்றிருக்க மாட்டா.*

*உயிரின் பெத்த நிலையில் உயிர்க்கு உதவியது இறைவன் அருளே ஆகும்; அதே அருள்தான் ஆன்மாவின் முத்தி நிலையிலும் ஆன்மாவுக்குப் பேருதவி புரிகின்றது. ஆக, இறைவன் திருவருளின் உதவியின்றி, ஆன்மா சிவமாதல் இல்லை என்பது பெறப்படும். அன்றும், இன்றும், என்றும் உயிர் திருவருளின் உதவியின்றி உய்வதில்லை.*

*ஆன்மாவைச் சிவம் ஆக்கி, சிவானந்தத்தை அனுபவிக்கச் செய்யும் திருவருள். ஒன்றே ஐந்தொழில் ஆற்றுகின்றது. சிவானுபவம் ஒன்றினுக்கு மட்டுமே உரிய ஆன்மா, ஐந்தொழில் ஆற்றுவதில்லை. எனவே,* ***ஆன்மா என்றும் சிவபெருமானுக்கு அடிமையே ஆகும்****. “இவன் அவன் ஆகான்” என்பது, உயிர் என்றும் சிவம் ஆகாது; அது என்றும் சிவத்திற்கு அடிமையே என்பதைக் குறிக்கும். (களிறு 92)*

*பூமியிலிருந்து எடுக்கப்படும் செம்பு பொன் போன்றதொரு உலோகமே எனினும் களிம்புக் கலப்புடையதாக உள்ளது. இவ்வாறே ஆன்மாவும் வியாபகப் பொருளே யாயினும் ஆணவத்தால் விரவப்பட்டு நிலை குன்றிக் கிடக்கின்றது. செம்பினைக் குகையிலிட்டுத் தட்டான் உருக்குகிறான். அவ்வாறே இறைவன் ஆணவத்தாற் கட்டுண்ட ஆன்மாவினைப் பிறப்புட்படுத்துகின்றான். செம்பு காய்ந்து உருகுகிறது. அங்ஙனமே பிறப்புற்ற ஆன்மா ஏகதேச அறிவு முதலியவற்றால் பற்பல இந்திரிய அனுபவங்கட்கு உள்ளாகித் தான், உடம்பு முதலிய தத்துவப் பொருளன்றெனத் துன்ப அனுபவத்தால் சிறிது அறிவு விளக்கம் அடைகின்றது. உருகிய செம்பில் அதன் பக்குவங் கண்டு குளிகை பாய்ந்ததும், செம்பு காளிதமகன்று பொன்னாக மாறுகிறது. அதுபோலவே, ஆன்மா, தனு கரண புவன போகப் பற்றுகளில் உவர்ப்படைந்து உண்மைக்கு அவாவி நிற்கும் பக்குவத்தில் சத்தி நிபாதம் எனப்படும் திருவருட் பதிவு இறைவனருளால் (குருமுகமாக)*

*ஏற்படுகிறது. அப்போது, ஆன்மா, தன்னை அறிகிறது. தலைவனை அறிந்து அவனடியில் அடங்கும் வழியெல்லாம் அறிகிறது. அவ்வழியிலே ஒழுகத் தொடங்குகிறது. இவ்வாறு தம்பிரானார் திருவருளால் மெய்யறிவு ஏற்படுதல் அல்லாமல் வேறு எவ்வகையாலும் (தன் செயலால்) ஏற்படுதல் இல்லை. இதனை உணர்த்தவே,* **அவன் இவனானது அவன் அருளால் அல்லது இவன் அவன் ஆகான்** *என்றுள்ளார் ஆசிரியர். எனவே, தம்பிரானார் பிரகாசித்து ஆன்மாவினைத் திருவடியிலே கூட்டிக் கொள்ளும் பொருட்டுத் தமது தடப் பெருங் கருணைத் திறத்தினால் இவனாக எழுந்தருளி நிற்கிறார். இதனால் சிவன் ஆன்மாவாகிவிடுகிறார் என்பது கூடாது.*

*ஆன்மாவும் தம்பிரானார் திருவடியிலே (ஞானத்திலே) ஒன்றுபட்டுப் பரமானந்தத்தை அனுபவித்துக் கிடக்கும். இவ்வாறன்றிச் சிவனாலாய பஞ்ச கிருத்தியங்களைத்தான் நடத்தாது. சாயுச்சியமென்பது சிவபெருமான் திருவடியில் இரண்டறக் கலந்து சிவானந்தத்தை அநுபவித்தலே ஆம். இந்நிலையில் சிவனது காணுமுபகாரம் ஒன்றுமே நிகழ்வதாகும். முத்தி நிலையினும் ஆன்மாவிற்கு அறிவின் விளக்கம் முதல்வனையின்றி அமையாது; முதல்வன் போலத் தனித்து நில்லாது; ஐந்தொழில் செய்யாது; வியாப்பியமாய் நிற்கும். முத்தி நிலையிலும் முதல்வன் வியாபகமும் ஆன்மா வியாப்பியமும் ஆம். விளக்கொளி வியாபகமும் கண்ணொளி வியாப்பியமும், ஆவது போல்வது இது. சிவன் தம்முடைய கருணையினால் ஆன்மாவாகியும் சிவனாகியும் நிற்கவல்லர். ஆன்மா என்றும் தன் உண்மை குன்றாமல் (ஒன்றைச் சார்ந்து நிற்பதாய்) கூடினதொன்றிலே அதுவாய் நிற்கும். இதனாலேதான், பாடலில்,* **“என்றும் இவனே”** *என்றார் ஆசிரியர்.*

**"ஆவ தறியார் உயிர்பிறப் பாலுறும்**
**ஆவ தறியும் உயிர்அருட் பாலுறும்**
**ஆவ தொன்றில்லை அகம்புறத் தென்றகன்**
**றோவு சிவனுடன் ஒன்றுதல் முத்தியே”**

*என்னும் திருமந்திரம் முத்தியில் ஒன்றுபடும் நிலை கூறுவது காணலாம். களிறு 92.*

## செய்யுள் - 41

## விக்கின நீக்க உபாயம்

முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்ததென் றுந்தீபற;
அப்பழ முண்ணாதே யுந்தீபற.

### கருத்துக்கள்

1. *அஞ்ஞானத்தின் செயல்.*
2. *முத்திப் பழமருந்துகை.*

### தெளிவுரை

*முத்தி - முத்தி ஆகிய கனி. முதலுக்கு - (விளைவதற்கு) முதல் ஆகிய ஆன்மா. மோகக்கொடி - அஞ்ஞானம் என்னும் கொடி. அத்தி பழுத்தது - 'அவா' என்னும் பழம் பழுத்தது. பிறவிக்கு வித்து ஆகிய அக்கனியை ஆன்மா உண்ணக்கூடாது. அவ்வாறு 'அவா' என்னும் கனியை ஆன்மா உண்ணாமல் இருந்தால்தான், முத்தி ஆகிய கனி விளையும்.*

*முத்திக்கனி பழுக்க வேண்டிய ஆன்மா என்னும் முதற்கொடியிலே, மோகம் என்னும் கிளைக்கொடி படர்ந்து, ஆன்மா என்னும் முதற்கொடியை மூடி மறைத்தது; அதன் பயனாக 'அவா' என்னும் பழம் பழுத்தது. பிறவிக்கு வித்து ஆகிய 'அவா' என்னும் கனியை ஆன்மா உண்ணாமலிருந்தால், முத்திக்கனி (ஆன்மாவுக்குக் கிட்டும்) விளையும். இச்செய்யுளின் உருவக அணி அமைப்பு கூர்ந்து நோக்குதற்குரியது. (களிறு 93-94).*

*நல்ல உண்ணற்கினிய பழத்தைத் தரவல்ல மரம் ஒன்றிலே அற்பமான புல்லுருவிக் கொடி தோன்றிப் படருமாயின், நாளடைவில் அந்த மரத்தை வளர வொட்டாமல் தடுத்துத் தான் வெகுவிதமாய்ச் செழித்து வளர்ந்து மரத்தினை முற்றச் சூழ்ந்து எப்புறமும் படர்ந்து தனக்குரிய உண்ணத்தகாத பழமே பழுக்கும். அதுபோல, ஆன்மா ஆகிய பரபோகமென்கிற பழத்துக்கு அருகதையான மரத்திலே அநாதியே மறைக்கத்தக்க ஆணவ மலத்தின் காரியமான அஞ்ஞானம் என்னும் கொடி படர்ந்து நன்மை தீமையையும், பொய் மெய்யையும், இதம் அகிதத்தையும் விளைத்து அவற்றைப் புசித்தற்கேதுவான மாயையாலமையும் பூதகாரிய உடம்பை*

*உண்டாக்கிச் சனனந் தோறும் தள்ளும். ஆதலால், இந்த நச்சுப் பழமான பிறப்பளிக்கும் கொடியைப் படர விடலாகாது. இதனால் மரத்துக்கே மோசம் விளையும். அதாவது ஆன்மா முத்தியடைய இயலாது. இதுபற்றியே நம்மை எச்சரித்தற் பொருட்டு,* **முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்து அத்தி பழுத்தது; அப்பழம் உண்ணாதே** *என்கிறார் ஆசிரியர். இங்ஙனம் மும்மல முயற்சியே புரியின் நரகத்துக்கே ஏதுவாகும். அவ்வாறின்றி, ஆசாரியன் கருணையாலே கிடைத்த திருவருளாகிய ஞான வாளினாலே ஆணவ மலமான மூல வேரினை அறுத்துவிடவேண்டும். அங்ஙனம் ஆணவம் அற்றுவிட்டால் பற்றற்றுப் போம். பரமனருளாலே மேலான ஞானம் உதிக்கும். இதன் பயனாகப் பரமானந்தத்தை அனுபவித்துச் சிவனுடனே ஒரு தன்மையாய் விடுதல் கூடும். ஆதலால், ஆணவமென்னும் மூல மலத்தினை (விக்கினத்தினை) நீக்க முயல வேண்டுமென்பது பெறப்படும்.* "**ஞான சுடர்வாள்** *கண்டாயடா அந்தகா! வந்துபார் சற்று என்கைக் கெட்டவே" என்பர் அருணகிரியாரும்.*

**"கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை**
**எட்டியும் வேம்பும் இனியதோர் வாழையும்**
**கட்டியும் தேனும் கலந்துண்ண மாட்டாதார்**
**எட்டிப் பழத்துக் கிளைக்கின்ற வாறே"**

*எனக் கூறித் திருமந்திரப் பாடலும் நமக்கு ஆமாறு கூறி எச்சரித்தல் காணலாம்.*

## செய்யுள் - 42

## பரிபூரணத்துவம்

அண்ட முதலாய் அனைத்தையும் உட்கொண்டு
கொண்டத்தைக் கொள்ளாதே உந்தீபற;
குறைவற்ற செல்வமென் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. *அண்ட பேரண்டம்*
2. *நின்மல பரமாகாசம்.*
3. *அகண்ட பரிபூரணத்துவம்*

### தெளிவுரை

*அண்டம் என்று சொல்லப்படுவது சக்கர வாளகிரியும், மகா மேருவும், அண்ட கோளகையும், அட்டகுல பருவதங்களும், திக்கயங்களும், அட்ட நாகங்களும், சப்த சமுத்திரங்களும், சப்த மேகங்களும், 224 புவனங்களும், தேவர், அசுரர், சித்தர், வித்தியாதரர், கின்னரர், கிம்புருடர், மற்றுமுள்ள அண்டர் முதலாக உள்ள பேதங்களும், சந்திர சூரியரும், பஞ்ச பூத பரிணாமங்களும், பேய்த்தேர் போன்ற வியாபாரங்களும் பொதிந்த திரட்சியாகும். இப்படிக்கோடி அண்டங்களும், ஒவ்வோர் அண்டங்களையும் பத்துமடங்கு பொதிந்த சலமும், அந்தச் சலத்தைப் பதின்மடங்கு பொதிந்த அக்கினியும், இந்த அக்கினியைப் பதின்மடங்கு பொதிந்த வாயுவும், இந்த வாயுவைப் பதின்மடங்கு பொதிந்த ஆகாசமும், இவையாவற்றையும் பொதிந்த பேரண்டத்தையும் இவற்றிற் கெல்லாம் மேற்பட்டு நின்மலமாய் நிற்பதான நாதசொரூபத்தையும் இதற்கும் அப்பாற் பட்டதான நின்மலமாகிய எல்லைப்படாத பரமாகாசமான பெருவெளியையும் உணர்த்திய வண்ணமே அவ்வுணர்த்தியருளிய சொரூபம் உடம்பாகிநின்று, ஆன்ம போதத்தையும் மேற்கூறிய தத்துவ பரிணாமங்களையும் அடியோடு நினைவற விடவேண்டும். இவ்வாறு நினைவற்றுவிட்டால் அதுவே அகண்ட பரிபூரணத்துவம் நல்கும். பிருதிவி முதலாய பிரபஞ்சமனைத்தையும் ஆன்மா ஜடமெனக்காண்டல் வேண்டுமென்பார்* **அண்டமுதலாய் அனைத்தையும் உட்கொண்டு கொண்டத்தைக் கொள்ளாதே** *என்றார். "கொண்டது" என்றது, உயிராகிய தன்னைப் பிணித்துக் கொண்டுள்ள உடல்கருவி உலகு நுகர் பொருள்களாகிய மாயா காரியத்தினை. கொண்டதையெனற்பாலது கொண்டத்தை எனத் திரிந்து நின்றது. சூரியப் பிரகாசத்துள் அடங்கி அதற்கு வேறாய்த் தோன்றுதலும் அதுவாய் ஒழிதலுமில்லாத நட்சத்திரங்கள் அச்சூரியனாலே ஒளியை உடையவா மாறு போலச் சிவபெருமான் அறிவிக்க உணர்ந்து அவருக்கு வேறாதலும் ஒன்றாதலும் இன்றி அவருள் அடங்கி உடனாய் நிற்பதே சிறப்பாம். தத்துவங்கடந்த சிற்பர வெளியில் அடங்குதலே சிறந்த செல்வமாகும். ஆதலால்,* **குறைவற்ற செல்வம்** *என்றார் ஆசிரியர்.*

**"அன்றிய பாச இருளும்அஞ் ஞானமும்**
**சென்றிடு ஞானச் சிவப்பிர காசத்தால்**
**ஒன்றும் இருசுடராம் அருணோ தயம்**
**துன்றிருள் நீங்குதல் போலத் தொலைந்ததே"**

*எனத் திருமந்திரமும் அண்டங் கடந்த அப்பாலாம் ஞான பரிபூரண நிலையையும் அதன் பலனையும் தெரிவித்தல் காணலாம். களிறு 95, 96.*

### செய்யுள் - 43

## பயனற்ற ஆன்மாக்கள்

காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
மாயக்கள் உண்டாரென் றுந்தீபற;
வறட்டுப் பசுக்கள்என் றுந்தீபற.

### கருத்துக்கள்

1. *நரக ஏது.*
2. *பரமானந்தத் தேன்.*

### தெளிவுரை

*சிவபெருமான், நமது உடலையே இடமாகக் கொண்டு எழுந்தருளி உள்ளான். இதனை,* ***"இறைவனே, நீ என் உடல் இடம் கொண்டாய்"*** *என்னும் மணிவாசகம் மெய்ப்படுத்துகின்றது. எனவே, உயிர்கள் தத்தம் உடலில் இடங்கொண்டருளிய சிவபெருமானின் திருவடித் தாமரையில் ஊற்றெடுத்துப் பெருகும் பேரின்பத் தேனை உண்டு, இரண்டறக் கலந்து நிற்க வேண்டும். இந்த மெய்ஞ்ஞானத் தேனை உண்ணாமல், மாயா காரியமாகிய உலக வாழ்வை இன்பம் எனக்கருதி மயக்கம் உற்றவர்கள், பயனற்றவர்கள் ஆவர். அஃதாவது, பால் சுரக்காத வறட்டுப் பசுக்களைப் போல அவர்கள் பிறவிப்பயனை அறியாமல், தமக்கும் பிறர்க்கும் பயன்படாமல் ஒழிவர்.*

*"மெய்ஞ்ஞானக்கள்" என்பது சிவபெருமானுடைய திருவடி ஞானம் ஆகிய அருளமுதம் ஆகும். "மாயக்கள்" என்பது, நிலையில்லாத மாயாகாரியங்கள் ஆகிய தனுகரண புவன போகங்கள் ஆகும். இந்த இடத்தில்,*

**"காயத்துள் அமுது ஊற ஊற, நீ கண்டு கொள்
என்று காட்டிய சேய மாமலர்ச் சேவடி" (581)**

*என்னும் மணிவாசகம் நினைவுகூர்தற்குரியது. (களிறு : 97-99)*

*மாணவன் எழுத்தறிந்து படித்து அறிவடையும் பொருட்டுக் குருவானவர் கத்தியும் எழுத்தாணியும் தந்து ஓலைவாரி எழுதிக்கொள்ளச் சொல்லியும், அம்மாணவன் கத்தியால் அறுத்துக்கொண்டும், எழுத்தாணியால் குத்திக்கொண்டும் வாதைப்படுவானாயின் அறிவற்றவனாகக் கருதப்படுவான். துன்பம் அடைந்து*

*பின்னரே தெளிதலுறுவான். இவ்வாறே நமக்கு உடம்பு முதலிய தத்துவங்களும் சிற்றறிவும் தரப்பட்டுள்ளன. இவற்றைச் சரிவரப்பயன்படுத்தி உண்மை நூல்களை ஓதிச் சரியை, கிரியை, யோகநெறி நின்று, ஞானநெறி பற்றிக் கற்றல், கேட்டல், சிந்தித்தல், நிட்டை கூடலாதி நன்னெறி பற்றினால் இவற்றின் பயனான இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் முதலிய ஏற்பட முடிவிலே திருவருளில் அழுந்தி ஞானமேற்பட்டுச் சிவனோடொன்றிப் பரபோகம் துய்க்கலாகும். இங்ஙனம் தேகத்துள் நிற்கின்ற தேகியான சிவனுடைய சத்தியஞானமான திருவடித் தாமரையில் உண்டாகும் பரமானந்தத்தேன் என்கிற மதுவைப்பருகித் தேக விசுவங்கள் தெரியாமல் தன்னையும் சிவனையும் அறியாதபடி சீவேசுவரத்திலே அடைவதே சிறந்த பயனாம். இவ்வாறன்றி, மிகவும் பசியெடுத்தவன், கையில் உள்ள பால்சோற்றினை வீசி எறிந்துவிட்டு முழங்கையினை நக்கிப் பசிதீரக் கருதுவானாயின் அஃது அவனது குற்றமேயாகும். "அயினியின் குற்றம் அன்றே" என்று பட்டினத்தார் கூறுவதும் இங்குக் கருதத் தக்கதாம். இங்ஙனம் முழங்கை நக்குவோர் போன்றவரே, தத்துவங்களை மெய்யெனக் கருதிப் பேய்த்தேர் போன்ற விசுவத்தையும் இந்திரசாலம் போன்ற வாழ்வையும் விரும்பி நரக ஏதுவான விஷய சமூகங்களில் உண்டாகும் இதாகிதம் புசிப்பவராவர். இதனையே* ***காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ணமாட்டாதே மாயக்கள் உண்டார்*** *எனக் கூறியுள்ளார் ஆசிரியர். வறட்டுப் பசுக்களை வளர்ப்பதால் பாலாகிய பயன் கொள்ள இயலாது. பசுவுக்குப் பயன் பால்தான். அஃதில்லாவிடத்துப் பசுவாற் பயனில்லை.* ***அது போலவே பிறப்புக்குப் பயன் சிவபோகம் துய்த்தல்****. அஃதில்லாக்கால் பிறப்பு பயனற்றதேயாகும். இதனையே,* ***வறட்டுப் பசுக்கள்*** *என்ற சொற்றொடரால் அறிவுறுத்துகின்றார் ஆசிரியர்.*

**"கற்ற பசுக்கள் கதறித் திரியினுங்**
**கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினு**
**முற்ற பசுக்கள் ஒருகுடம் பால்போது**
**மற்றைப் பசுக்கள் வறள்பசு தானே".**

**"மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்**
**மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா**
**மனவாக்குக் கெட்டவர் வாதனை தன்னால்**
**தனைமாற்றி யாற்றத் தகுஞானி தானே"**

*என்னும் திருமந்திரச் செய்யுட்களும் மனவாக்குக் காயங்களைப் பயன்படுத்த வேண்டிய நெறியை நமக்கு அறிவுறுத்தல் தெரியலாம்.*

## செய்யுள் - 44

## குரு திருவடி வாழ்த்தல்

சிந்தையி னுள்ளும் என்சென்னியிலும் சேர
வந்தவர் வாழ்களன் றுந்தீபற;
மடவா ளுடனேஎன் றுந்தீபற.

### கருத்துக்கள்

*குரு திருவடி பற்றிக் கிடத்தல்.*

### தெளிவுரை

*சிவபெருமான், குருமூர்த்தமாக எழுந்தருளி வந்து தன் திருவடித் தாமரை மலர்களை, எனது தலை உச்சியின் மீதும், எனது சிந்தையின் மீதும் சூட்டியருளினான். அவ்வாறு குரு வடிவாக வந்தருளிய சிவபெருமானை வாழ்த்துகிறேன். "**கோகழி ஆண்ட குரு மணிதன் தாள் வாழ்க**" என்பது மணிவாசகம். எனக்குத் திருவடி சூட்டியருளிய எம் பெருமான், என்னைப் போன்றார்க்கும் மெய் உணர்வு அளித்தருளிச் செய்யும்படி அவரை வாழ்த்துகிறேன். அவன் அருளே வடிவாக எழுந்தருளியுள்ளமையால் அருளாகிய அம்மையுடனே இன்று போல் என்றும் இருந்து வாழ்வானாக.*

*உச்சியில் திருவடி சூட்டியருளியது, தீக்கையின்போது ஆசிரியத் திருமேனி கொண்டு எழுந்தருளியபோது. சிந்தையில் திருவடி சூட்டியருளியது, அடியேன் தியான நிலையில் அமர்ந்து இருக்கும்போது. முன்னது உருவத்திருமேனியும் பின்னது அருவத் திருமேனியும் ஆகும். (களிறு-100)*

*பிறப்பின் பயன் பேரின்பம் அடையப் பெறுதல். இப்பேரின்ப நெறி குரு திருவருளால் தீட்சை, உபதேசம், நெறிநிறுத்தல் மூலமாக அருளப்படுவது. இக் குருவாவார் சிவபெருமானேயாவர். இக்குரு அருளால் விளையும் ஞானமே பிரிப்பற நிற்கும் சிவசத்தியாம். எனவே, சிவமும் சத்தியும் பிரிப்பற ஆன்மாவினுள் நின்று நன்னெறியிலே செலுத்தித் திருவடியிலே சேர்த்தருள்கின்றனர் என்க.*

*ஒழிவற நிறைந்த தம்பிரானார் தாம் அநாதியே ஆன்மாக்கட்குப் பிராணனாவார். ஆன்மா அநாதியே மலத்தோடு கூடிச் சனன மரணங்களிலே*

*உழன்று போக்குவரவு புரிந்து திரிகின்றது. இந்த நிலைக்குத் தம்பிரானார் இரக்கங்கொண்டு கருணைத் திருமேனியுடனே எழுந்தருளி வந்து மலமாயை கன்மங்களும் சனன மரணங்களும் கூடாதபடி பொல்லாத புலால் தலையிலே யாவராலும் குறித்தற்கு அரிய சிவகந்தத்தை உடையதாகிய திருவடித் தாமரையைச் சேர்க்கிறார். அதுபோது அத் திருவடி சிந்தையினுள்ளும் சேர்க்கப்படுகிறது. இதனால் சிவனே பிராணன் என்ற முறைமை தெரிகிறது. சித்தம் சலிப்படையாது. இவ்வாறே அத் திருவடியுடன் விட்டு நீங்காது ஒரு வழிப்படவேண்டும். இதனால் வேறற நிற்றல் ஏற்படும். துக்க சாகரத்திலிருந்து கரையேறலாம். இப்படியெல்லாம் குருவாகி வந்து அருள்புரிபவர் சிவமேயாவர் என்பதே சித்தாந்தம். இதனைத் தமது ஆசிரியரை வாழ்த்து முகமாக ஆசிரியர்,* **சிந்தையி னுள்ளும் என் சென்னியிலும் சேர வந்தவர் வாழ்க** *என்று போற்றி உணர்த்துவாராயினர். இந்தக் குருபரனருளே ஞானம். ஞானமே குரு திருமேனி. அதுவே கருணைத் திருமேனி. அதுவே அருட்சத்தி. இவ்வாறு சத்திசிவம் பிரிப்பற நின்று ஆட்கொள்ளுந் திறத்தினை நினைந்தே ஆசிரியர்* **மடவாளுடனே வாழ்க** *என்று கூறிப் போற்றுகிறார். குருவாழ்க! குருவே துணை. சற்குரு திருவருள் வாழ்வதாக!*

**"ஆறொடு முப்பதும் அங்கே அடங்கிடில்**
**கூறக் குருபரன் கும்பிடு தந்திடும்**
**வேறே சிவபத மேலாய் அளித்திடும்**
**பேறாக ஆனந்தம் பேணும் பெருகவே"**

*என்பது திருமூலர் திருமந்திரம்.*

**செய்யுள் - 45**

## பாயிரம்

(நூலின் பெருமை)

வைய முழுது மலக்கயம் கண்டிடும்
உய்ய வந்தானுரையென் றுந்தீபற;
உண்மை உணர்ந்தாரென் றுந்தீபற.

**கருத்துக்கள்**

1. *உய்யவந்த தேவர் தெளிவின் பெருமை.*
2. *உய்யவந்த தேவர் மெய்ஞ்ஞானி எனல்.*

**தெளிவுரை**

*ஆன்மாக்கள் ஈடேறும் பொருட்டு இந்நூலைத் திருவாய் மலர்ந்தருளியவர், உய்ய வந்த தேவ நாயனார் ஆவர். இந்நூலினைக் குருமுகமாகக் கேட்டுச் சித்தாந்த சைவ மரபு அறிந்து, அவ்வழியே ஒழுகுதல் வேண்டும். அவ்வாறு ஒழுகுபவர் அனைவர்க்கும் இந்நூல் மும்மல நீக்கத்தைச் செய்யும்.*

*''வையம் முழுதும்'' என்பது, உலகமக்கள் அனைவர்க்கும் என்பதாகும்.* **“மலக்கயம்” என்பது, ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலத் தொடர்பினை நீக்குதலைச் செய்வது ஆகும்**. *“கண்டிடும்” என்பது (உலகமக்கள் அனைவரும்) காண்பர் என்பதாகும்.*

*ஆக, இந்நூலைக் கற்று உணர்ந்தவர்கள், மெய்ப் பொருளின் உண்மையினை உணர்ந்து, பிறவிப் பெருங்கடலில் நீந்தித் திருவடி நெடுங்கரையில் சேர்ந்து பேரின்பம் நுகர்ந்து இருப்பார்கள். “உண்மை உணர்ந்தார்” என்பது, முப்பொருள் உண்மை உணர்ந்து, திருவடிப் பேற்றின் உண்மையை உணர்வார் என்பதைக் குறிக்கும். இப்பாடற் கருத்தைத் திருக்களிற்றுப் படியார் 96 ஆம் பாடலில் வைத்துக் காணலாம்.*

*இஃது ஓர் அனுபவ சாத்திரமாகும். இதனைக் குருமுகமாகக் கேட்டுச் சித்தாந்த சைவ சம்பிரதாயமறிந்து அவ்வழியே ஒழுகுவார் அநாதியே தம்மை மயக்கிக் கெடுக்கும் தேக விசுவங்களின் அஞ்ஞான சாகரத்தைக் கடந்து கரையேறுவார். இதனை* **வைய முழுதும் மலக்கயம் கண்டிடும்** *என்ற வாசகத்தால் உணர்த்தினர் ஆசிரியர் என்னலாம். இங்ஙனம் தேசிகரருளால் இந்நூலுணர்ந்து நெறிபற்றி நின்றவர்கள் உண்மையுணர்ந்து திருவடியாகிய நெடுங் கரைசேர்ந்து பரமானந்தமே அனுபவிப்பர் என்பது நிச்சயமாதலால்* **உண்மை உணர்ந்தார்** *எனக் கூறியுள்ளார் ஆசிரியர். “திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே” என்ற பட்டினத்தார் வாக்கும் நெஞ்சிற் பதித்துணரத் தக்கதேயாம். “பிறவிப் பெருங்கடல் நீந்துவர் இறைவனடி சேர்ந்தார்” என்பது தமிழ்மறை. ஆகவே, நாம் பிறப்பின் உறுதி பெற வேண்டின் இந்நூல் உணர்த்துவனவற்றைத் தேசிகருடைய கருணையாலறிந்து அவ்வழி ஒழுகுதல் வேண்டும் எனத் தெரிவோம்.*

**"கருடன் உருவம் கருதும் அளவில்**
**பருவிடம் தீர்ந்து பயங்கெடு மாபோல்**
**குருவின் உருவம் குறித்தஅப் போதே**
**திரிமலம் தீர்ந்து சிவனவ னாமே"**

*என்பது திருமந்திரம்.*

**உய்யவந்த தேவ நாயனார் திருவடி வாழ்க!**

**பிற்சேர்க்கை–1**

உ

சிவமயம்

# செய்யுள் முதற்குறிப்பு அகர வரிசை

| | பக்க எண் | செய்யுள் எண் | | பக்க எண் | செய்யுள் எண் |
|---|---|---|---|---|---|
| அகளமாயாரும் | 1 | 1 | சித்தமுந்தீய | 82 | 25 |
| அஞ்சேயஞ் | 40 | 10 | சிந்தையினுள்ளும் | 121 | 44 |
| அண்டமுதலா | 117 | 42 | சென்றநெறி | 108 | 37 |
| அதுஇதுவென் | 112 | 39 | சொல்லும்பொரு | 70 | 21 |
| அவனிவனானது | 114 | 40 | சொல்லுமிட | 92 | 29 |
| அவிழவிருக்கும் | 86 | 27 | தாக்கியேதாக்க | 42 | 11 |
| ஆக்கிலங்கே | 38 | 9 | திருச்சிலம் | 60 | 17 |
| ஆதாரத்தாலே | 34 | 8 | துரியங்கடந்த | 99 | 32 |
| இரவுபகல் | 67 | 20 | நஞ்செயலற் | 24 | 6 |
| உழவாதுணர் | 58 | 16 | நாலாயபூத | 106 | 36 |
| உள்ளமுருகி | 29 | 7 | பழக்கந்தவிர | 9 | 2 |
| உள்ளும் புறம்பு | 84 | 26 | பற்றையறுப்ப | 55 | 15 |
| எங்ஙனிருந்த | 18 | 4 | பெண்டிர்பிடி | 104 | 35 |
| எட்டுக்கொண் | 78 | 24 | பெற்றசிற்றின்ப | 101 | 33 |
| ஏகனுமாகி | 21 | 5 | பேரின்பமான | 103 | 34 |
| ஓட்டற்றுநின் | 50 | 13 | பொற்கொழு | 110 | 38 |
| கண்டத்தைக் | 14 | 3 | மருளுந்தெருளும் | 62 | 18 |
| கருதுவதன் முன் | 65 | 19 | முத்திமுதலுக்கு | 116 | 41 |
| கள்ளரோடில்ல | 75 | 23 | மூலையிருந்தாரை | 45 | 12 |
| காயத்துள் | 119 | 43 | வித்தினைத்தேடி | 88 | 28 |
| காற்றினைமாற்றி | 72 | 22 | வீட்டிலிருக்கிலென் | 94 | 30 |
| கிடந்தகிழவியை | 52 | 14 | வையமுழுதும் | 122 | 45 |
| சாவிபோமற்ற | 96 | 31 | | | |

**பிற்சேர்க்கை–2**

உ

*சிவமயம்*

# திருஉந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும்
# ஒத்த பாட்டெண்கள்

| உந்தியார் | களிற்றுப்படியார் | உந்தியார் | களிற்றுப்படியார் |
|---|---|---|---|
| 1 | 4 – 5 | 23 | 42 – 43 |
| 2 | 6 – 7 | 24 | 44 – 45 |
| 3 | 8 | 25 | 46 – 50 |
| 4 | 9 – 10 | 26 | 51 – 52 |
| 5 | 11 | 27 | 53 – 56 |
| 6 | 12 – 13 | 28 | 57 |
| 7 | 14 – 21 | 29 | 58 – 62 |
| 8 | 22 | 30 | 63 – 64 |
| 9 | 23 – 24 | 31 | 65 – 68 |
| 10 | 25 | 32 | 69 – 75 |
| 11 | 26 | 33 | 76 |
| 12 | 27 – 28 | 34 | 77 |
| 13 | 29 | 35 | 78 – 79 |
| 14 | 30 | 36 | 80 – 81 |
| 15 | 31 | 37 | 82 – 83 |
| 16 | 32 | 38 | 84 |
| 17 | 33 | 39 | 85 – 91 |
| 18 | 34 | 40 | 92 |
| 19 | 35 | 41 | 93 – 94 |
| 20 | 36 – 37 | 42 | 95 – 96 |
| 21 | 38 – 40 | 43 | 97 – 99 |
| 22 | 41 | 44 | 100 |